திரு. சி. கோபால் : தலைவர் அவர்களே, தற்சமயம் அதிகமாகக் கடன் வழங்க முடியாத நிலைமையில் அந்தச் சங்கம் இருக்கிறது என்று சொன்னாலும் வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கின்ற அந்தச் சங்கத்தோடு செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சில கிராமங்கள்—அங்கே உள்ள நிர்வாகிகளுக்குத் தேவையான ஊர் என்ற காரணத்தினாலே—சேர்க்கப்பட்டு அவர்களுக்கும் கடன் வழங்குகிற முறையிலே அந்த ஜூரிஸ்டிக்ஷனிலே சேர்த்து இருப்பதுபற்றி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை.

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் வறண்டு கிடக்கும் கிணறுகள்.

*வினா எண் 803—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதியில் வறண்டு கிடக்கும் பம்பு செட்டு கிணறுகளை ஆழ்கிணறு, குழாய் இறவை திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை ஏதேனும் அரசு எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : இல்லை.

திரு இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விடை இல்லை என்று சொல்லி விட்டார்கள். அது முற்றிலும் உண்மை. ஏனென்றால் இந்தக் கேள்வி விவசாய அமைச்சர் அல்லது சட்ட அமைச்சருக்குத்தான் வர வேண்டும். ஆனால் தொழிலாளர் நலத்துறை அமைச்சருக்குப் போட்டுவிட்டதால் இல்லை என்று அவர்கள் சொல்லி விட்டார்கள். ஆகவே, இந்தக் கேள்வியை மாற்றியமைத்தால் எனக்குப் பதில் நல்ல முறையில் கிடைக்கும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குடிநீர் சம்பந்தப் பட்ட கேள்வி ; விவசாயத்திலே வராது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் வறட்சி மாவட்டம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. ஆனால் இந்த வறட்சி மாவட்டத்திற்கு ஒதுக்கப் பட்ட நிதியில் ஸ்ரீவில்லிப்புத்தூர் பகுதி சேராத காரணத்தால், அங்குள்ள மக்கள் குடிதண்ணீருக்குச் சிரமப்பட்டுக் கொண் டிருப்பதால் ஆழ் கிணறுகளை அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேற்படி தொகுதியிலே வறண்டு கிடக்கும் திறந்த வெளிக் கிணறுகளுக்குப் பதிலாக ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்து அபிவிருத்தி செய்யும் திட்டம் குறித்து செயற்குறிப்பு ஏதும் குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் சம்பந்தப்பட்ட ஊராட்சி யினரிடமிருந்து முன் வைப்புத் தொகை திட்டத்தின் கீழ் மேற் கூறிய பகுதிகளில் வறண்டு போன திறந்தவெளிக் கிணறுகளுக்குப் பதில் ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுக்கும் படி வாரியத்திடம் தொகை செலுத்த முன் வந்தால் இது குறித்து குடிநீர் வடிகால் வாரியம் பரிசீலனை செய்யும்.

இந்திய மருந்து விற்பனையாளர்கள் சங்கம் அரசிடம் அளித்துள்ள கோரிக்கை.

*வினா எண் 804— திரு. கே. ரமணி : மாண்புமிகு தொழி லாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) மருந்து விற்பனை மற்றும் பல பொருட்களின் விற்பனை ஏஜண்டுகளை தொழில் தகராறு சட்டத்தின் கீழ் தொழிலாளர்கள் என்று நிர்ணயிக்கும் திருத்தத்தைக் கொண்டு வர அரசுக்கு உத்தேசமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அத்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர உள்ளது ?

(இ) இது குறித்து இந்திய மருந்து விற்பனையாளர்களின் சங்கம் அரசுக்குக் கோரிக்கை சமர்ப்பித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) பரிசீலனையில் உள்ளது.

(இ) ஆம்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, மருந்து மக்களுக்கு மிகவும் தேவையான முக்கியமான பொருளாக இருப்பதால் அதை விற்கக்கூடிய ஏஜண்டுகள் ஏராளமான பேர்கள் கம்பெனி களின் சார்பிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்தவிதமான சர்வீஸ் கண்டிஷனும் அவர்களுக்கு இல்லாமல் படுமோசமான நிலையில் இருப்பதை அமைச்சரவர் கள் அறிவார்களா? அது ஆலோசனையில் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதில் உள்ள விஷயங்கள் என்னென்ன என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றிச் சட்டத்திருத்தம் கொண்டு வருவதாக மத்திய அரசு சொல்லியிருக்கிறது. இருப்பினும், தொழிற்சங்கம் கோரிக்கை வைத்ததன் பேரில், வற்பனை மேம்பாட்டுத் தொழிலாளர்கட்கும் பொருந்துமாறு மேற்கு வங்க அரசு, 1947ஆம் ஆண்டு தொழிற் தகராறு சட்டம் பிரிவு 2 (S)ல் திருத்தம் செய்துள்ளது. அதைப்போல இந்த அரசும் தொழிலாளர் சட்டக் குழுவின் ஆலோசனை பெற்று, தொழிற் தகராறு சட்டத் திருத்தம் கொண்டுவருவது பற்றி பரிசீலிக்கலாம் என்று தொழிலாளர் துறை ஆணையர் ஆலோசனை கூறியுள்ளார். மேற்கு வங்க அரசின் சட்டத் திருத்தத்தின் நகல் பெறப்பட்டுள்ளது. இதுபற்றி மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இந்த ஊழியர்களுக்குப் பாதுகாப்பளிக்க நடவடிக்கை எடுக்க முன் வந்துள்ளது வரவேற்கத்தக்க விஷயம். ஆனால் சட்டத் திருத்தம் கொண்டுவந்து அதை அமலுக்குக்கொண்டு வரும் வரையில் அவர்களுடைய பிரச்னைகளைத் தீர்க்கத் தொழி லாளர் நல இலாகா மூலம் அவர்கள் நடவடிக்கை எடுத்தால், அணுகினால் அதற்குரிய நடவடிக்கைகளைத் தொழி லாளர் நல இலாகா எடுத்துக்கொள்ளுமா? எந்த முறையில் அவர்கள் அணுக வேண்டுமென்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதில் சிக்கல் இருக்கின்ற காரணத் தினால், இந்த இலாக்கா வெற்றிபெறாத காரணத்தினால், மேற்கு வங்க அரசு இதற்குச் சட்டம் திருத்தம் கொண்டு வந் திருக்கிறது. அந்தத் திருத்தம் Section 2 (S)ல் After the word "technical" tne words "sales promotion" shall be inserted. அந்த

1931 ஏப்ரல் 20]

செக்ஷனில் Workman means "any person including an apprentice employed in any industry to do any skilled or unskilled manual supervisory, technical"

என்பதுதன் மேற்கு வங்க அரசு எடுத்த முயற்சியைத் தமிழக அரசும் எடுக்க வேண்டுமென்பதற்காக இந்தப் பில்லை வரவழைத்திருக்கிறோம். மத்திய அரசு கொண்டு வருவதில் தாமதம் இருந்தால் மாநில அரசு விரைவாகவே செயல்படும்.

திரு க. பரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருந்து விற்பனை போன்ற தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களைக் காரணம் ஏதுமின்றி நான்கைந்து ஆண்டுகளுக்குப் பிறகு விடுவித்து விடுவதால் அவர்கள் அரசுத் துறையிலே வேலை வாய்ப்பைப் பெற முடியாத அளவிற்கு அதற்கான வயதைத் தாண்டிவிடுகிறார்கள். ஆகவே, இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்கள் இருந்தால் அவர்களுக்கும் நன்மை பயக்கும் விதத்தில் அமைச்சரவர்கள் கொண்டு வர உத்தேசித்திருக்கின்ற சட்டத் திருத்தத்தை (retrospective effect) கொடுத்து கொண்டு வர அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்துறையுடன் ஆலோசித்து ஆவன செய்யப்படும்.

ஊத்துக்குளி ஒன்றியப் பகுதியில் பழுதடைந்துள்ள மின் இறைப்பான்கள்.

*வினா எண் 805—திரு தி. க. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி ஒன்றியத்தில் பழுதடைந்து குடிநீர் வாரியத்திற்குக் கொண்டு வந்த மின் இணைப்பு மேட்டார்கள் எத்தனை?

(ஆ) அவை எத்தனை மாதங்களாக, நாட்களாக பழுது பாக்கப்படாமல் இருக்கின்றன, ஏன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (அ) மற்றும் (ஆ) 33 மின் இறைப்பான்கள். அவற்றில் 24 மின் இறைப்பான்களில் பழுதுகள் நிவர்த்தி செய்யப்பட்டு விட்டன. மீதமுள்ள 9 இறைப்பான்களில் பழுதுகள் செப்பனிடப் பட்டு வருகின்றன. இவை விரைவில் முடியும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மின் இறைப்பான்கள் செப்பனிடப்பட்டு 9 மின் இறைப்பான்கள் இன்னும் செப்பனிடப்படாமல் இருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 1 வருடம், 2 வருடம் என்று இப்படி வருடக்கணக்கில் இருக்கிற காரணத்தால், குடிதண்ணீருக்காக மக்கள் மிகவும் அவதிப்படுகிற நிலையிருக்கிறது. ஆகவே, உடனடியாக அவற்றைப் பழுதுபார்த்து மின் இணைப்புக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் அடிப்படையிலே, விரைவிலே, அவைகளை ரிப்பேர் செய்வதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

ஐயாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

*வினா எண் 806—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் பாதர்பேட்டை அருகே ஐயாற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம் ஆய்வு செய்து அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) சுமார் 5,100 ஏக்கர் நிலங்களுக்கு புஞ்சைப் பாசன வசதி அளிக்கும்படியான இத்திட்டம் விரிவான ஆய்வில் உள்ளது என தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.

திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 5,100 ஏக்கர் புஞ்சை நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வரும் திட்டத்தின் கீழ், அணைக்கட்ட பரிசீலனையில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். பரிசீலனை எந்த அளவில் இருக்கிறது? பரிசீலனை முடிந்து இந்த ஆண்டே மேற்படி அணையைக் கட்டும் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன்வருமா?

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, இத்திட்டம் பற்றிய தள அளவிலான, விரிவான ஆய்வுகள் 'இன்வெஸ்டிகேஷன் ஸ்டேஜிலே' தானிருக்கின்றன. அது முடிந்ததற்குப் பிறகுதான் அதன்மீது முடிவு எடுக்கப்படும். ஆனால், பொதுவாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஓரளவுக்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கொட்டகுடி ஆற்றில் அணை கட்டும் திட்டம்.

* வினா எண். 807—திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடித் தொகுதியில் கொட்டகுடி ஆற்றில் கொம்புதூக்கி அருகில் அணை கட்ட அரசினால் ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) வைகை சுருளியார் படுகையின் நீரியல் ஆய்வின்படி கொட்டகுடியாற்றில் அணைகட்டி போடி பகுதி நிலங்களுக்கு பாசன வசதி அளிக்கப் போதுமான உபரிநீர் இல்லாததால், இத்திட்டத்திற்கான சாத்தியக்கூறு இல்லை என தலைமைப் பொறியாளர் (பாசனம்) தெரிவித்துள்ளார்.

போளூர் வட்டாரத்தில் புதிய தாதுப் பொருள்கள்.

*வினா எண். 808 :—திரு. இல. பலராமன் : மாண்புமிகு தொழில்அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் போளூர் வட்டாரத்தில் புதிய தாதுப்பொருள்கள் யாது கிடைக்கின்றன?

(ஆ) இது குறித்து அரசு ஆராய்ந்ததா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :—(அ) மற்றும் (ஆ) : வடஆற்காடு மாவட்டம் போளூர் வட்டத்தில் அண்மைக் காலத்தில் புதிய கனிப்பொருள்கள் எதுவும் கிடைக்கவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மாதிரி ஒரு செய்தி கிடைத்த காரணத்தாலேதான் இந்த வினாவே எழுப்பப்பட்டது. அண்மையிலே

அது மாதிரி ஏதாவது ஆராய்ச்சி நடைபெற்றதா? அப்படி ஆராய்ச்சி நடைபெற்றதனுடைய கண்டுபிடிப்புகள் ஏதாவது வந்துள்ளதா? இல்லையென்றால், இனிமேலாவது, கண்டுபிடிக்க, அத்தகைய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய புவியியல் பிரிவு 1972—லேயும், 1975-76-லேயும் அந்த பகுதியிலே ஆய்வுகளை மேற்கொண்டது. அந்த அடிப்படையிலேதான் இரும்புத் தாதும் சல்ஃபைட் தாதும் அங்கே இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டது. ஆனால், அவற்றின் தரம் மிகக் குறைந்த அளவிலே இருக்கிற காரணத்தினாலேயும்—சல்ஃபைட் அமைப்பு முறையிலே மேல் மட்டத்திலேயிருக்கிறது—வியாபார ரீதியாக அவற்றை 'மைன்' பண்ணுகிற பொழுது லாபகரமாக இருக்காது என்ற காரணத்தாலேயும் மேற்கொண்டு நடவடிக்கைள் எடுக்கப்படவில்லை.

தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி.

* வினா எண். 809—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி 1980-81ல் குறையுமென்று எதிர்பார்க்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதற்கு என்ன காரணம்?

(இ) 1979—80 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தி எவ்வளவு?

(ஈ) அதற்கு முந்தின ஆண்டை விட 1979—80ம் ஆண்டு உற்பத்தி குறைந்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ), (ஆ) மற்றும் (இ) : 1979-80-ல் தமிழகத்தின் சர்க்கரை உற்பத்தி 3.67 இலட்சம் டன்கள். 1980—81-ல் சர்க்கரை உற்பத்தி 3.92 லட்சம் டன்கள் கூடுதலாக 25,000 டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடும்.

(ஈ) 1978—79 ஆம் ஆண்டு சர்க்கரை உற்பத்தியைக் காட்டிலும் 1979—80 ஆண்டு உற்பத்தி 1.25 இலட்சம் டன்கள் குறைவு.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அந்த 1979-ம் ஆண்டில் குறைந்ததற்கு என்ன காரணம்? விவசாயிகளுக்குக் கரும்பு விலையை நியாயமாக அந்த சமயத்தில் உயர்த்திக் கொடுக்காததனால் ஏற்பட்டதா? அல்லது தங்களுடைய உற்பத்தி கெப்பாசிடியை முழுவதும் உபயோகப்படுத்தாததனால் அந்தக் குறைவு ஏற்பட்டதா?

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு ; தலைவர் அவர்களே, 1975–76 ஆம் ஆண்டில் மொத்த சர்க்கரை உற்பத்தி 1.80 லட்சம் டன்னாக இருந்தது. அதற்குப் பின்னாலே படிப் படியாக 4.92 இலட்சம் டன் வரை சென்றது. 1978–79 ஆண்டைப் பொறுத்த வரையில் அந்த ஆண்டு உற்பத்திக் குறை வாக இருந்ததற்குக் காரணம், மத்திய அரசினுடைய கொள்கை யின் அடிப்படையில் சில குறைபாடுகள் ஏற்பட்டன. 35 சத வீதம் வெளி மார்க்கெட்டிலேயும், 65 சதவீதம் லெவி முறையி லேயும் கொடுக்கப்பட்டு வந்த முறை 1978 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. அதன் அடிப்படையில் ஏற்பட்ட நட்டத்தின் காரணமாகவும், வியாபாரிகளுக்கு அதிகமான விலை கொடுக்க முடியாத காரணத்தினாலும், அந்த ஆண்டு அதிகமாகக் கரும்பு பயிரிடாத காரணத்தினாலும், அதனாலே மில்களுக்கு அதிகமான கரும்பு கிடைக்காத காரணத்தாலும், உற்பத்தியிலே குறைவு ஏற்பட்டது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இப்போது 1981–82 ஆம் ஆண்டு என்ன உற்பத்தியை அரசு எதிர்பார்க்கிறது? மேலும் இது போன்று சர்க்கரை விலை ஏற்றமும், தட்டுப்பாடும் இருக் கின்ற சமயத்தில் உற்பத்திக் குறையாமல் இருப்பதற்கு, ஏற் கனவே கிடைத்த அனுபவத்தைக் கொண்டு, உற்பத்தியைத் தொடர்ந்து அதிகப்படுத்திச் செல்வதற்கு என்ன வழிவகைகளை அரசு கண்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர் களே, 1980–81 ஆம் ஆண்டு உற்பத்தி 3.92 இலட்சம் டன்னாக இருக்கிறது. இந்த ஆண்டு இன்னும் 25 ஆயிரம் டன்கள் கூடுத லாக உற்பத்திச் செய்யக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி எதிர்பார்ப்பதற்கு காரணம் மாநில அரசு 175 ரூபாயாக கரும்பு விலையை, பயிரிடுபவர்களுக்கு உயர்த்திக் கொடுத்து கரும்பு பயிரிடுகின்றவர்களுக்கு உற்சாகத்தை உண்டாக்கி அவர்கள் கரும்பை அதிக அளவில் பயிரிடும் வாய்ப்பை உண்டாக்கி இருக்கின்றது. அதன் அடிப்படையில் மில்களுக்குக் கரும்பு அதிக மாகக் கிடைக்கும் வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், உற்பத்தி அதிகமாகக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு தொழில்துறை மானியத்தில் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற சமயத்தில், நாங்கள் திருப்பித் திருப்பி கரும்புக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்திய நேரத்தில் கூட, நாங்கள் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம். 125 ரூபாய்க்கு மேலும் கொடுக்கும்படி கேட்டிருக்கிறோம் என்றுதான்

சொன்னாரே தவிர, எவ்வளவு கேட்டிருக்கிறோம், அது 150-ஆ, 160-ஆ, அல்லது 180-ஆ, என்று சொல்லவில்லை, சொல்லவும் அவர்கள் தயாராக இல்லை. அப்படியின்றி தமிழ்நாட்டு அரசாங்கம் அப்போது 180 ரூபாய் அல்லது 200 ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற நிலை எடுத்திருக்குமானால், இன்று கரும்பு அதிக விலை கிடைத்து இருக்கும். அதிகமான பேர்கள் உற்சாகமாக கரும்பு உற்பத்தி செய்திருப்பார்கள். இந்த நிலைக்குக் காரணம் தமிழ் நாட்டு அரசாங்கத்தினுடைய கொள்கைதான் என்பதும், சர்க்கரை உற்பத்தி குறைவதற்கு அதுதான் காரணம் என்பதும் அமைச்சர் அறிவார்களா ?

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை என்று முதலிலே மறுப்பதற்கு நான் கடமைப்பட்டு இருக்கிறேன். சென்ற ஆண்டு துணை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது பேசுகின்ற நேரத்தில் அவர்கள் கேட்டார்கள்—எந்த அளவிற்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறீர்கள் என்று. நான் அப்போது எந்த அளவிற்குக் கேட்டிருக்கிறோம் என்பதைச் சொல்லவில்லை. நான் அப்போது சொன்னது—உயர்த்திக் கேட்டு இருக்கிறோம், ரூ. 125-க்கு மேல் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம், எவ்வளவு ரூபாய் உயர்த்திக் கேட்டிருக்கிறோம் என்று நான் சொல்லவில்லை. அப்படிச் சொல்லாததற்குக் காரணம் மத்திய அரசிடமிருந்து நாம் அதிகமாக எதிர்பார்த்ததுதான். ஆனால் மத்திய அரசாங்கம் ரூ. 125 என்பதை ரூ. 130 என்கிற அளவிற்குத் தான் உயர்த்திக் கொடுத்தது. ஆனால் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் அதை ரூ. 175 என்கிற அளவிற்கு உயர்த்தினால்தான் அது விவசாயிகளுக்குக் கட்டு ராடியாகின்ற விலையாக இருக்கும், உற்பத்தி அதிகமாக ஊக்கம் அளிப்பதாக இருக்கும் என்று சொல்லி, அந்த அளவிற்கு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டு இருக்கிறார்கள். ஆகவே, அரசின் கொள்கையில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. கரும்பு பயிரிடுகின்றவர்களுக்குத் தான் அரசு உதவி செய்து இருக்கிறது.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது விவசாயிகளுக்கு ரூ. 175 கிடைக்கும் வகையில் கரும்பு விலை உயர்த்தப் பட்டுள்ளது என்று சொன்னார்கள். இப்போது விற்கின்ற விலை

யில் அவர்கள் உற்பத்திச் செலவைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் டன் ஒன்றுக்கு ரூ. 200 முதல் 210 வரை வருகிறது. ஆகவே, அந்த அளவிற்கு விலையை உயர்த்திக் கொடுத்து, உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா? மேலும் அவர்களுக்குத் தேவையான விவசாயக் கருவிகள், மற்றும் உரங்கள் ஆகியவற்றையும் குறைந்த விலையில் கொடுத்து ஊக்குவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய கேள்வியிலே பெரும்பாலான கேள்விகள் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேட்கப்பட வேண்டியதாகும். இருந்தாலும் சொல்கிறேன், ரூ. 175 கொடுக்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்போது தான் உத்தரவிட்டு, அந்த விலை உயர்த்திக் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக பொது மக்களிடத்தில் இருந்து பங்குப் பணத்தை வசூலித்து, கூட்டுறவு முறையில் புதிய சர்க்கரை ஆலைகளை நிறுவ அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டியது அல்ல.

தஞ்சை மாவட்டத்தில் புதிய சர்க்கரை ஆலை நிறுவும் திட்டம்.

*வினா எண். 810—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் புதிதாக சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்த இடத்தில் ஆரம்பிக்க முடிவுசெய்யப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) மாயூரம் பகுதியிலோ அல்லது சீர்காழி பகுதியிலோ ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாயவரம், சீர்காழி பகுதியில் புதிய சர்க்கரை ஆலை நிறுவுவதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மாயவரம், குத்தாலம் பகுதியில் கரும்பு அதிகமாக விளைவதால், மாயவரம் பகுதியில், குத்தாலத்திற்கு அருகில் சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல், திருத்தணியில் 1,250 டன் பிழிதிறன் கொண்ட பெரிய சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவவும். 500 டன் பிழிதிறன் கொண்ட சிறிய, சர்க்கரை ஆலை ஒன்றை முறையே தஞ்சை மாவட்டத்திலும் மதுரை மாவட்டத்திலும், புதுக்கோட்டை மாவட்டத்திலும் நிறுவ அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தஞ்சைப் பகுதியில் அந்த ஆலையை எங்கே நிறுவலாம் என்பது குறித்த ஆய்வினை அதிகாரிகள் அந்தப் பகுதிக்குச் சென்று சுற்றிப் பார்த்து, கரும்புப் பயிரிடும் இடங்கள் மற்றும் பல்வேறு வாய்ப்புகள் ஆகியவற்றை ஆய்வு செய்து, தருகின்ற அறிக்கையின். பேரில் முடிவு எடுக்கப்படும். நிச்சயமாக நல்ல இடமாகத் தெரிந்தெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில்—குறிப்பாக மாயவரம் பகுதியில் ஆரம்பிக்க இருக்கும் சர்க்கரை ஆலை எவ்வளவு டன் சர்க்கரை உற்பத்தி செய்யும் திறன் உள்ளதாக இருக்கும்? அந்தச் சர்க்கரை ஆலை எந்த ஆண்டு துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 500 டன் பிழி திறன் கொண்ட சர்க்கரை ஆலை நிறுவுவதற்கு அரசு முடிவு செய்து இருக்கிறது. அதற்கு ஏறத்தாழ $2\frac{1}{2}$கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த ஆலையை அமைப்பதற்காக ஆய்வு வேலைகளைச் செய்ய இப்போதுதான் அதிகாரிகள் அனுப்ப இருக்கிறோம். ஆய்வுப் பணிகள் வெகு விரைவிலே முடிக்கப்பட்டு திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 எப்ரல் 20]

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மதுரை மாவட்டத்தில் சிறிய சர்க்கரை ஆலை அமைக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அது எங்கே ஆரம்பிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டியது அல்ல.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் துவங்கப்படவிருக்கிற சிறிய சர்க்கரை ஆலையை 500 டன் பிழிதிறன் கொண்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செய்வதுதான் செய்கிறோம், பெரிய சர்க்கரை ஆலையாக 1,200 டன் பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலையாக அமைப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, ஏற்கெனவே தஞ்சை மாவட்டத்தில் தனியார் துறையில் ஒன்றும், அரசுத் துறையில் ஒன்றுமாக இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. மேலும் 1,200 டன் பிழிதிறன் கொண்ட ஒரு சர்க்கரை ஆலையை நிறுவினால் ஏற்கெனவே இருக்கிற ஆலைகளுக்குக் கரும்பு கிடைக்காமல் அவைகளின் வேலைகள் பாதிக்கும் என்று அவர்களுடைய சங்கத்தின் மூலமாக எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே அவர்களுக்கும் பாதிப்பு இல்லாமல், அரசின் எண்ணமும் நிறைவேறுகின்ற வகையில் சிறிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்கும் நோக்கத்துடன் அங்கே 500 டன் பிழிதிறன் கொண்ட சர்க்கரை ஆலையைத் தொடங்க இருக்கிறோம்.

செங்கற்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தை இடம் மாற்றுதல்.

*வினா எண். 811—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்—மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) செங்கற்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு நிலையத்தை காஞ்சீபுரத்திற்கு மாற்ற வேண்டும் என கோரிக்கை உள்ளதா ?

(ஆ) இது பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, காஞ்சீபுரம் துணை வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து வேலைக்கு ஆட்களை 'கால் பார்' செய்யும்போதெல்லாம் சென்னையிலிருக்கின்ற வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து தான் ஆட்களை வரவழைக்கிறார்கள். அதனால் காஞ்சீபுரத்தில் பதிவு செய்யக் கூடியவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்க வில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, தற்போது அதுபற்றிய விவரங்கள் இல்லை. ஆனால் அது, குறித்து அரசு பரிசிலித்து ஆவன செய்யும்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : தலைவரவர்களே, இதைப் போன்ற வேலை வாய்ப்பு அலுவலகங்களைப் புதிதாக திறக்க அரசுக்கு உத்தேசம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பிரிவுத் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம் மேட்டூரில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகமும், இராமநாதபுரம் மாவட்டத்தில் விருதுநகரில் ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகமும் திறக்கப்படுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்

பவானி எஸ். எஸ். எம். நூற்பாலையில் வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என்.வி.என். சோமு, அ. ரகுமான்கான் ஆகியோர் "சேலம் மாவட்டம் பவானி எஸ். எஸ். எம். நூற்பாலையில் நடைபெறும் வேலை நிறுத்தத்தினால் 15-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கைது

செய்யப்பட்டிருப்பதும் அதனால் அங்கு பதட்ட நிலை எழுந்துள்ளது குறித்தும் விவாதிக்க பேரவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவர திரு. என். வி. என். சோமு அவர்கள் அனுமதி கேட்டுள்ளார்கள். திரு. அ. ரகுமான்கான் அவர்களும் அனுமதி கேட்டுள்ளார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத் தலைவரவர்களே, எஸ்.எஸ்.எம். குரூப்பினுடைய போக்கு நிர்வாகம் இன்றைக்கு தொழிலாளர்களுக்கு விரோதமானகளை அங்கே கையாண்டுக் கொண்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய 1,200-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தங்களுடைய நியாயபூர்வமான, சட்டப்பூர்வமான கோரிக்கைகளை வலியுறுத்தி, தொடர்ந்து ஒரு மாதத்திற்குமேலாக போராடி வருகிறார்கள். அந்தப் போராட்டத்தினுடைய அடிப்படையை மறைக்கின்ற நோக்கத்தோடு இன்றைக்கு அந்த நிர்வாகம் வன்முறையைத் தூண்டிவிட்டிருக்கிறது; குண்டர்களை ஏவிவிட்டு அங்கே முற்றுகை நடத்திக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல. இன்றைக்கு இந்த எஸ்.எஸ்.எம். குரூப்பிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு சட்டரீதியாக எந்தவிதமான உரிமையும் வழங்கப்படவில்லை. இன்றைக்கு இருக்கின்ற தொழில் சட்டப் பிரிவின்கீழ் அவர்களுக்கு பிராவிடன்ட் வசதி இருக்கிறதா என்றால் இல்லை; அவர்களுக்கு ''கான்டீன்'' வசதி உண்டா என்றால் இல்லை; இ.எஸ்.ஐ. மருத்துவ வசதி உண்டா என்றால் இல்லை; அவர்களுக்கு கூலி உயர்வு உண்டா என்றால் அதுவும் இல்லை. இன்றைக்கு அங்கே ஒரு மஸ்டர் ரோல் கூட கிடையாது. அந்தத் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் இன்றைக்கு அங்கே கொத்தடிமைகளாக இருக்கிறார்கள். அவர்களைக் கொத்தடிமைகளாக வைத்து, அவர்களுடைய உழைப்பை அந்த நிர்வாகம் சுரண்டிக்கொண்டிருக்கிறது.

அந்தத் தொழிலாளர்கள் நியாயமான கோரிக்கைகளை வைக்கும் போது, அந்தக் கோரிக்கைகளை மறுப்பது மட்டுமல்லாமல் அவர்களை மிரட்டுவதற்காக வேறு சில கூலி ஆட்களை வைத்துக்கொண்டு, வன்முறையைத் தூண்டிவிடுகிறார்கள். அரசாங்கமும் நிர்வாகத்திற்கு ஆதரவாக இருந்து, போராட்டத்தை ஒடுக்குகின்ற முறையில் போலீசை அனுப்பியிருக்கிறது. இன்றைக்கு 150-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு, மத்திய சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 15 பேர்தான் என்று நீங்கள் ஏற்கெனவே கொடுத்த தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

திரு அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, நான் தீர்மானம் கொடுத்தது 4—4—1981 அன்று. தாங்கள் 16 நாட்களுக்குப் பிறகு இதை இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் தொடர்ந்து கைதானவர்கள் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. இந்தத் தொழிலாளர் பிரச்சினை சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு போகின்ற வழியிலேயே பவானி நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தில் செயலாளர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்றால் இது எந்த விதத்திலே நியாயம்?

இன்றைக்கு டி.எஸ்.பி. முதல் போலீஸ் வரை பலபேர் அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் எல்லாம் மாற்றப்பட்டிருக்கிறார்கள். நான் ஒரு கடுமையான குற்றச்சாட்டைச்சொல்ல விரும்புகிறேன். எஸ்.எஸ்.எம். குரூப் நிர்வாகம் சட்டரீதியான தொழிற்சங்க ரீதியான உரிமைகளை அந்தத் தொழிலாளர்களுக்குத் தராமல் அங்கே இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குச் சட்டத்திற்கு விரோதமான முறையில் அவர்கள் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பலாத்காரத்தைக் கையண்டு அவர்களைக் கைது செய்கின்ற நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். கன்சிலியேஷன் என்ற வகையிலே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. அதன் அடிப்படையிலே ஒப்புக்கொள்ளப்பட்ட நியாயமான செட்டில்மெண்ட்படி கூட அதனை நிறைவேற்றுவதற்கு அந்த நிர்வாகம் முன்வரவில்லை. அதற்குக் காரணம் இன்றைக்கு ஆளும் கட்சியின் ஆதரவு அதிகமாக இருக்கின்றது என்பதுதான். அங்கே நியாயமான முறையிலே நடந்துகொண்ட போலீசார் கூட அந்தப் பகுதியிலே இருந்து அந்த நிர்வாகத்தின் சம்மதத்தின் பேரிலே அந்த நிர்வாகத்தினைக்காப்பாற்றவேண்டும் என்ற விதத்திலே மாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் பல பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து இருந்துகொண்டு இருக்கின்றது. ஆகவே இந்தப் பகுதியிலே பதட்ட சூழ்நிலை ஏற்படக்கூடிய வகையிலும் வன்முறையைத் தூண்டுகின்ற வகையிலும் காரியங்கள் நடைபெறுகின்றன. ஆகவே இன்றைக்குத் தொழிலாளர்களுக்கு அடிப்படை உரிமையைக் கொடுக்காத அந்த நிர்வாகத்திற்கு சர்க்காரின் ஆதரவு இருப்பதால், ஆளும் கட்சியின் ஆதரவு இருப்பதால், நம்மை யாரும் அசைக்க முடியாது என்று

அந்த நிர்வாகம் கருதிக்கொண்டிருக்கின்ற காரணத்தால் அவர்கள் போலீசாரை தங்களது கைக்குள்ளே வைத்துக் கொண்டு தொழிலாளர்களுக்கு நியாயமான உரிமையை வழங்க மறுக்கிறார்கள். ஆகவே இன்றையதினம் அங்கே பதட்ட மான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதன் காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்துவிட்டு இது குறித்து விவாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே சேலம் மாவட்டம் குமாரபாளையத்தில் பல்வேறு நிறுவனங் கள் பவர்லூம், எம்பிராய்டரி, பிராசசிங் தொழிலில் ஈடு பட்டுள்ளன.

அம்மாதிரி நிறுவனங்கள் பலவற்றிற்கும் சேலம் மாவட்ட திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், சேலம், வேலை நிறுத்த நோட்டீஸ்களை அனுப்பியிருந்தது.

மேற்கூறிய நிறுவனங்களில் பின்வரும் நிறுவனங்களுக்கும், வேலை நிறுத்த நோட்டீஸை தொழிற்சங்கம் அனுப்பியது.

1. வீணா கேலண்டரிங் மில்ஸ்.
2. எஸ்.எஸ்.எம். பிராசசிங் மில்ஸ்.
3. எஸ்.எஸ்.எம். ஷைனிங் சென்டர்.
4. எஸ்.எஸ்.எம். பிரதர்ஸ் (பி) லிமிடெட்.
5. வீணா டெக்ஸ்டைல்ஸ் (பி) லிமிடெட்.
6. புருஷோத்தம் இண்டஸ்ட்ரீஸ்.
7. லட்சுமி அம்மாள் இண்டஸ்ட்ரீஸ்.

இந்தத் தொழிற்சாலைகளில் சுமார் 688 தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள்.

சேலம் மாவட்ட திராவிட பஞ்சாலையைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் தனது கோரிக்கைகள் நிறைவேற்றப்படா விடின் 5—3—1981 முதல் வேலைநிறுத்தம் செய்வதாக அறிவித்திருந்தது.

தொழிலாளர்களுக்கு டைம்கார்டுகள் வழங்குதல், ஊதிய உயர்வு, பஞ்சப்படி அதிகரிப்பு, ஹீட் அலவன்ஸ், இடைக்கால நிவாரணம், வேலை நிரந்தரம், சில தொழிலாளர்களை மீண் டும் வேலைக்கு அமர்த்துவது, சீருடை, ஓய்வு விடுதி, வீட்டு வசதி தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்ட தண்டனைகளைத் திரும்பப் பெறுவது, பிடித்தம் செய்யப்பட்ட சம்பளப் பணத்தைத் திருப்பி அளிப்பது போன்ற கோரிக்கைகளை முன் வைக்கப்பட்டன.

[திரு. இராகவானந்தம்]

இந்தத் தொழிற்தகராறு மீது சேலம், தொழிலாளர் துறை துணை ஆணையர் 6—2—1981 மற்றும் 19—2—1981 தேதிகளில் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். இதற்கிடையில் 10—2—1981 முதல் மேற்கூறிய தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் ஆரம்பித்தனர். 16—2—1981 அன்று நடந்த பேச்சுவார்த்தைகளில், சேலம், தொழிலாளர் துறை துணை ஆணையர் வழங்கிய அறிவுரைப்படி, தொழிலாளர்கள் 17—2—1981 முதல் வேலைக்குத் திரும்பினர்.

இந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதாகக் கருதிய நிர்வாகத்தினர், வேலை நிறுத்தம் செய்த ஒவ்வொரு தொழிலாளியின் சம்பளத்திலும், 8 நாட்களுக்கான சம்பளப் பணத்தைப் பிடித்தம் செய்வதாக அறிவித்துள்ளனர்.

மேலும் நிர்வாகம், வேலை நிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட 52 தொழிலாளர்களை விசாரணையை எதிர்நோக்கி தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளார்கள்.

52 தொழிலாளர்களின் தற்காலிக வேலைநீக்கம் மற்றும் 8 நாள் சம்பளப் பிடித்தம் ஆகிய பிரச்சினையில் பரிகாரம் தேடி, தொழிலாளர்கள் 6—3—1981 முதல் மீண்டும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். இதன் சார்பாக, சேலம் தொழிலாளர் துறை துணை ஆணையர் அவர்கள் முன் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தைகள் தோல்வியுற்றதால் அவர் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 12 (4)-ன் கீழ் தனது சமரச முறிவு அறிக்கையை அரசுக்கு 30—3—1981 அன்று அனுப்பியுள்ளார்.

தொழிலாளர்களின் வேலை நிறுத்த நடவடிக்கையை கவனத்தில் கொண்டு, இத் தொழிற்தகராறு, சென்னை தொழிலாளர் துறை இணை ஆணையர் அவர்களால், பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. 7—4—1981 அன்று நடந்த பேச்சு வார்த்தைகளின் போது தொழிலாளர் துறை இணை ஆணையர் இருதரப்பினருக்குமிடையே சுமுக உறவு ஏற்படுத்தும் வகையில், தொழிலாளர்கள் தவறுக்கு வருத்தம் தெரிவிக்கும் பட்சத்தில் 8 நாள் சம்பளப் பிடித்தம் மற்றும் 52 தொழிலாளர்களின் தற்காலிக வேலை நீக்கம் ஆகியவைகளின் சார்பான உத்தரவுகளை ரத்து செய்யப்படலாம் என ஆலோசனை கூறினார்கள். நிர்வாகத்தினர் 8 நாள் சம்பளப் பிடித்தம் விஷயத்தைப பொறுத்த மட்டும், தொழிலாளத் துறை இணை ஆணையர் அவர்களது ஆலோசனையை ஏற்றுக்கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளார்.

[திரு. எஸ். இராகவானந்தம்]

52 தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் சார்பாக நிர்வாகத்தினர் தொழிலாளர் துறை இணை ஆணையர் அவர்களின் ஆலோசனையில் சில மாறுதல்களைக் கோரினார்கள். அதாவது தற்காலிக வேலை நீக்கத்திலுள்ள 52 தொழிலாளர்களில் மிகக் கடுமையான குற்றச் சாட்டுகள் கொண்ட தொழிலாளர்களைப் பொறுத்த மட்டும் தற்காலிக வேலை நீக்கம் தொடரும் எனவும் மிகச் சாதாரணமான குற்றச்சாட்டுகள் கொண்ட தொழிலாளர்களைப் பொறுத்தவரை தற்காலிக வேலை நீக்கம் ரத்து செய்யப்பட்டு அவர்கள் திரும்ப வேலைக்கு அனுமதிக்கப்படுவார்கள் என்றும் கூறினார்கள். இதன் அடிப்படையில் பார்க்கும்போது 52 தொழிலாளர்களில் சுமார் 20 அல்லது 25 தொழிலாளர்கள் தற்காலிக வேலை நீக்கம் ரத்து செய்யப்பட்டு வேலைக்குத் திரும்ப வாய்ப்பு உள்ளது என அறியப்பட்டது.

மீண்டும் 18—4—1981 அன்று பேச்சு வார்த்தை நடத்தினார். நிர்வாகத் தரப்பில் வன்முறை இருந்த காரணத்தால் மேலும் சுமார் 35 தொழிலாளர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்யவேண்டுமெனக் கருத்து தெரிவித்தனர். எல்லோரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென சங்கத்தின் சார்பில் கூறப்பட்டது. கோரிக்கைகளைப் பற்றி பின்னர் விவாதிக்கலாமெனக் கூறப்பட்டது. 40 சதவிகித தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பி விட்டதாக நிர்வாகத்தின் தரப்பில் கூறப்பட்டது. பேச்சு வார்த்தை தொடர இருக்கிறது. நாளைக்கு இங்கே டிமான்ட் இருப்பதால் அதை முடித்துக் கொண்டு, இன்னும் இரண்டு மூன்று தினங்களில் நானே சென்று பேச்சு வார்த்தை நடத்துவதாக இருக்கிறேன். ஆகவே, சமரசம் ஏற்படுத்தும் வகையில் அதிக வாய்ப்பு இருக்கிற காரணத்தால், அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுபிப்னர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது,**

என்று சில வரிகளைக் கூறினார்கள். அவைகள் அவைக் குறிப்பில் இருக்கலாமா என்பது குறித்து பரிசீலிக்க வேண்டும் என்றுகேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், **

மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. துரைமுருகன்]

சார் மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்களுக்கு அனுமதி அளித்தீர்கள். பேசும்பொழுது பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தீர்கள். எங்களுக்கு மட்டும் அனுமதி கிடையாதா? தாங்கள் சொல்வதையும் முழுவதும் கேட்டுக் கொள்ளுங்களேன். எனவே நான் சொல்கிறேன் **

நாங்கள் நிரூபிக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த வாதங்களை எல்லாம் 6 மணிக்கு மேலே வைத்துக் கொள்ளுங்கள் **

என்ற வார்த்தை அவைக் குறிப்பில் வேண்டாம். (குறுக்கீடு) திரு. ரகுமான்கான் அவர்கள் அப்படிச் சொல்லியிருந்தால்தான் நீக்கப்படும். இல்லையென்றால் நீக்க வேண்டிய பிரச்சினையே இல்லை.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தால் அனுமதி மறுக்கப் பெறுகிறது.

சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

3. தகவல் கோரல்.

உரிமைப் பிரச்சினைக்கு விளக்கம் தருவது.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடுகள்)

[முற்பகல் 10—10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரகுமான்கான், நீங்கள் உட்காருங்கள். அன்றைக்கு நீங்கள் இடத்தில் இல்லாதது தால் பதிலை எழுதி கடிதம் மூலம் அனுப்புங்கள் என்று சொன்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

னேன். உங்கள் பதிலை அனுப்புங்கள். என் அனுமதியின்றி விவாதத்திற்குரிய பிரச்சினையாக அதை இன்றைக்கு ஆக்காதீர்கள். நான் அதை அனுமதிப்பதற்கில்லை. (குறுக்கீடுகள்)

திரு. அ. ரகுமான்கான் : உரிமைப் பிரச்சினைமீது விளக்கம் தர எனக்கு வாய்ப்பளிக்க வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பதிலை முதலில் எழுத்து மூலமாகக் கொடுங்கள். பிறகு பார்க்கலாம். அன்றைக்கு தங்களைக் கூப்பிட்டபோது தாங்கள் அவையில் இல்லை. இன்றைக்கு அது பற்றி பேச முடியாது. பேசினால் அவைக் குறிப்பில் ஏறாது.

திரு. துரை முருகன் : வெரி இம்பார்ட்டன்ட் பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நான் அனுமதிக்கவில்லை. (கூச்சல் குழப்பம்)

டாக்டர் மு. கருணாநிதி : ஒருவர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி அதைத் தாங்கள் அனுமதித்து அந்த ஒழுங்குப் பிரச்சினையை அவர் எடுத்துச் சொன்ன பிறகு அது ஒழுங்குப் பிரச்சினையா இல்லையா என்றுசொல்கிற அதிகாரமும் உரிமையும் படைத்தவர் தாங்கள். இங்கே நண்பர் சமரசம் அவர்கள் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசியதையொட்டி ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். அதைத் தாங்கள் அனுமதித்தீர்கள். அவர்கள் சொன்ன பிறகு அது ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்று சொன்னீர்கள். அதே போல் திரு. துரை முருகன் அவர்களும் இங்கே ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்புகிறார்கள். அது என்ன என்று தாங்கள் கேட்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் சமரசம் அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள். திரு. துரை முருகன் அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள். திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினார்கள். இந்த மூன்று பாயின்ட் ஆப் ஆர்டர்களையும் நான் அனுமதித்தேன். திரும்பவும் நான்காவது பாயின்ட் ஆப் ஆர்டர் என்று வரும்போதுதான் அனுமதி மறுத்தேன்.

[பேரவைத் தலைவர்] [1981 ஏப்ரல் 20

நான் எப்படி சபையை நடத்துவது? பத்து நிமிடத்திற்கு ஒரு முறை ஒரு 'திங்கிங்' (Thinking) வந்தால், அதை நான் அனுமதிக்க முடியுமா? அவர் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டார். உடனே அனுமதித்தேன். சமரசம் அவர்கள் பேசியதில் துரை முருகனுக்கு உணர்ச்சி வருமென்று தான் அவரை அனுமதித்தேன். திரும்பத்திரும்ப உணர்ச்சி வந்தால், அதை நான் எப்படி அனுமதிப்பது?

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, துரை முருகன் இங்கே எழுப்பியதாகக் கருதியது, கூற முன்வந்தது தங்களுடைய செயலாளரிடமிருந்து வந்த ஒரு கடிதத்தைப் பற்றியது. அதற்குத் தாங்கள் அவரைக் கேட்டுத் தீர்ப்பளித்திருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கடிதத்தைப் பற்றி என் அறையிலே பேசலாம். அப்படிப் பேசுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அந்தக் கடிதத்தைப் பற்றி ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் கொண்டு வர வேண்டாம். கொண்டுவர வேண்டிய நெசசிடி இல்லை.

டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுவாக சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரும்போது, தாங்களோ அல்லது அலுவல் ஆய்வுக் குழுவில் நாங்களோ பேசுகின்ற நேரத்தில் அவை முன்னவர் அவர்கள் இப்படிப்பட்ட யோசனையைச் சொல்லி, எதிர்க் கட்சி வரிசையில் இருக்கின்ற நாங்களும் யோசனை சொல்லி, பட்ஜெட்மீது பொது விவாதம் நடைபெறுகின்ற போது எல்லாவற்றையும் பற்றிப் பேசலாம் என்பதால் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரவேண்டிய அவசியமில்லை, எடுத்துக் கொள்ளப்படுவதில்லை என்று சொல்லப்பட்டது. அப்போதுகூட, மிக அத்தியாவசியமான, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்து கொள்வது இந்த அவையின் மரபாக இருந்து வருகிறது. ஆனால், சங்கரன்கோயிலில் நடைபெற்ற ஒரு பெரிய அமளியைக் குறித்து துரை முருகன் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்த போது, காவல் துறை மானியம் வரும்போது பேசிக் கொள்ளலாம் என்று பதில் அனுப்பப்பட்டது. காவல் துறை மானியம் எப்போது வருமென்று தெரியாது. அதன் தேதி பல தடவைகள் மாற்றப்பட்டிருக்கிறது ; அடுத்த மாதம் வருவதாக இருக்கிறது. இப்படி 5, 6 தடவைகள் தேதி மாற்றப்பட்டிருக்கிறது. அதனால், இந்தத் தீர்மானம் மானியம் வருகிறவரையில் காத்திருக்க முடியாது என்பதால், இந்தத் தீர்மானம் எழுப்பப்படுகிறது. அதைத் தாங்கள் நாளையோ அல்லது நாளைய மறுநாளோ எடுத்துக் கொள்ளலாம் என்பது என் வேண்டுகோள். (குறுக்கீடு)

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பக்கங்களிலிருந்து நான் யாரையும் அனுமதிக்கப் போவதில்லை. உட்காருங்கள். ஒரு ஒழுங்குப் பிரச்சினையில் எவ்வித விவாதத்தையும் அனுமதிக்க இயலாது. ஒரு பிரச்சினையை விவாதிக்க எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இன்றைக்கு 3 பேர்களுக்கு, ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதித்தேன். திரும்பத் திரும்ப ஒழுங்குப் பிரச்சினை வரும்பொழுதுதான் வேண்டாம் என்று சொன்னேன் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கவனிக்க வேண்டும். விஷயம் என்னவென்றால், என் அறையிலே வந்து சொல்வதில் ஆட்சேபணை இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்பதைவிட என்னிடம் தனியாக வந்து கேட்கலாம். முந்தாநாள்கூட என். வி. என். சோமு அவர்கள் ஒரு பிரச்சினை விவாதிக்க அனுமதி வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில், இன்றைக்கு எடுத்துக் கொண்டோம். ரகுமான்கான் அவர்களைப் பேச அனுமதிக்கவில்லையா ? பதில் வந்தால், அனுமதிக்கிறேன். எனக்கு அதிலே என்ன கஷ்டம் இருக்கிறது? (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை முடிந்துபோய்விட்டது. விளக்கம் வேண்டாம். திரும்பவும் ஏதாவது பிரச்சினை வரும். ஏதாவது யோசனை இருந்தால், என் அறைக்கு வந்து சொல்லுங்கள்.

[முற்பகல் 10-20]

4. கவன ஈர்ப்புகள்

(அ) கீழக்கரை மீனவர்கள் நிலை

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,

"8—4—1981 அன்று கீழ்க்கரை மீனவர்கள் மீது நடந்த தாக்குதல் குறித்த". அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 8—4—1981-ல் எவ்வித அசம்பாவிதமும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஆனால், கீழக்கரையைச் சார்ந்த திரு. முகமது இப்ராகிம் ஷாவின் மகன் முத்து முனியன் என்பவர் 5—4—1981 நாளன்று இரவு 7-30 மணி சுமாருக்கு மண்டபம் காவல் துறை நிலையத்தில் புகார் மனு ஒன்று கொடுத்து இருக்கிறார். அதில், தன்னை சீனியப்பா தர்கா எனும் இடத்தில் 4—4—1981 அன்று இரவு சுமார் 11·00 மணிக்கு நெடுமரைக்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

காட்டைச் சேர்ந்த மாணிக்கம், களஞ்சியம் என்ற இருவரும், மற்றும் பெயர் தெரியாத மூவரும் கையாலும், கம்பாலும், அடித்துத் தாக்கியதாக கூறியுள்ளார் என்று அறியப்படுகிறது. இந்தப் புகார் மனுவை மண்டபம் காவல் நிலையத்தில் உள்ள துணை உதவி ஆய்வாளர் விசாரித்தார். பின்னர், முத்து முனியனால் கொடுக்கப்பட்ட புகார், இ. பி. கோ. 323-வது பிரிவின்படி பிடியாணை வேண்டும் குற்றமாக (Non-cognizable offence) இருப்பதால், நடவடிக்கைக்கு அனுமதி வழங்கி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றத்திற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பியுள்ளார் என்றும் தெரிகிறது. தற்போது அங்கு சகஜ நிலைமை நிலவுவதாகவும் அறியப்படுகிறது.

*திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8 ஆம் நாளில் கொடுக்கப்பட்ட இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம், இன்றைக்கு 20 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. நீண்ட காலதாமதத்திற்கு பின்னாலே இப்படிப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப் படுவதின் காரணமாக பல விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையை மாற்றி உடனடியாக அவசரத் தீர்மானங்கள் வரக்கூடிய நேரத்தில், மிக முக்கியமான தீர்மானமாகக் கருதி காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும். கால தாமதத்தின் காரணமாக இன்றைக்கு கிழக்கு இராமநாதபுரத்திலே பல இடங்களில் தீ பிடித்து எரிந்து கொண்டிருக்கின்றன. பல பேர்கள் இறந்திருக்கிறார்கள். அதற்கு எல்லாம் காரணம் காலதாமதம் தான். அந்த நிலைமை வரக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். கீழக்கரைப் பகுதியிலே கொடுக்கப்பட்ட கம்ப்ளெயின்ட்டுகள் உடனடியாக விசாரிக்காததின் காரணமாக இன்றைக்கு மீண்டும் குமுறல் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் மீனவர்களுக்கிடையில் அமைதியில்லாத நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. வசதியுள்ளவர்கள் பல ரௌடிகளை கூட்டிக்கொண்டு வந்து திடீர் திடீரென்று தாக்குதல் நடத்துகிறார்கள். அதன் காரணமாக மீனவர்கள் கடலிலே சென்று மீன் பிடிக்க முடியாத நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல விசைப்படகுகாரர்கள், சாதாரண படகுக்காரர்களை தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விசைப் படகுகள் போவதின் காரணமாக வலைகள் சின்னாபின்னமாக அழிந்து விடுகின்றன. அதன்காரணமாக அவர்களிடத்தில் அடிக்கடி மோதல் ஏற்படுகின்றன. இதையெல்லாம் ஒழுங்கு படுத்துகிற முறையிலே கொடுக்கப்பட்ட கம்ப்ளெயின்ட்டுகள் உடனடியாக விசாரிப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிக்கையிலே குறிப்பிட்டேன். 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5ஆம் நாள் அன்று இந்த புகார் கொடுக்கப்பட்டது. அதன்மீது இ.பி.கோ. 323 பிரிவின்படி போலீசார் வழக்கு பதிவு செய்து வழக்குமன்றத்திலே நீதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள, நீதி மன்றத்திற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பியுள்ளார். ஆகவே சட்டப்படி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ. விழுப்புரம் வட்டம் அய்யன் கோவில்பட்டு கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் வட்டம், அய்யன் கோவில்பட்டு கிராமத்தில் மட்பாண்ட தொழிலாளர் இல்லங்கள் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் அன்று தீ விபத்துக்கு உள்ளானது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர், அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம் அய்யன்கோவில்பட்டு கிராமத்தில் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் அன்று இரவு சுமார் 8 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. 22 குடியிருப்புகள் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டன. தீ விபத்து தற்செயலாய் ஏற்பட்டது. உயிர்ச் சேதமோ, கால்நடைச் சேதமோ இல்லை. மொத்த சேத மதிப்பு சுமார் ரூ. 42,360 முழுதும் பாதிக்கப்பட்ட 22 குடியிருப்புக்களுக்கும் தலா ரூ. 200 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. வேட்டி, புடவை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தீ விபத்தில் உள்ளான அந்த குடும்பங்கள் அனைத்தும், நிலமற்ற ஏழை மட்பாண்ட தொழிலாளர்கள் என்பதாலே அவர்களுடைய தொழில் கருவிகளான சக்கரம், கல், பலகை எல்லாம் அழிந்திருக்கின்றன. இப்போது சித்திரை திருவிழா நாட்களிலே வியாபாரத்திற்காக வைத்திருந்த மட்பாண்டங்

[திரு. கு. பழனியப்தன்] [1981 எப்ரல் 20

களும், பொம்மைகளும் முழுவதும் அழிந்து விட்டன. அவர்கள் தொழில்கள் நசிந்து விடக்கூடாது என்ற காரணத்திற்காக அவர்களுக்கு தொழில் கருவிகளை உடனடியாக மானியமாக வழங்க அரசு முன் வருமா ? அதே நேரத்தில் அந்த தொழில் நடைபெறுவதற்கு சௌகரியமாக தீ பிடிக்காத 'அஸ்பெஸ்டாஸ்' கொட்டகை ஒன்று போட்டு அதன் அடியிலே அவர்கள் தொழிலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா ? என்பதை அறிவிப்பதோடு, அங்கே விழுப்புரத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு உட்பட்ட மெயின் ரோடிலே இருக்கிற அந்த கிராமம் பலமணி நேரம் தீயுடன் போராட வேண்டிய நிலைமை ஏற்பட்டதின் காரணமே, அங்கு தண்ணீர் இல்லாதது தான். எனவே உடனடியாக ஒரு குடிதண்ணீர் கிணறும், ஒரு குழாய் கிணறும் அமைத்துத் தர அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தீ விபத்தினால் ஏற்பட்ட சேதம் முழுவதையும் நீக்குகிற அளவுக்கு நிவாரணம் அளிப்பது அல்லது மானியம் அளிப்பது குறித்து அரசாங்க விதிமுறைகளில் அல்லது நடைமுறையில் இல்லை. ஓரளவிற்கு விதிமுறைகளின் அடிப்படையிலே நிவாரணம் அளித்து வருகிறோம். பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வீடுகளைப் புதுப்பித்துக் கொள்வதற்கும், தொழில்களைப் புதுப்பித்துக் கொள்வதற்கும் விரும்புவார்களானால் இரண்டாயிரம் ரூபாய் தக்காவி கடன் வழங்குகிற முறை இருக்கிறது. அவர்கள் முறைப்படி அதைப் பெறுவதற்கு முயற்சி செய்யலாம். ஆறேகால் வட்டியில் அந்தக் கடன்கள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆதிதிராவிட மக்களாக இருப்பார்களானால் வட்டியில்லாத கடனாக இரண்டாயிரம் தரப்படுகிறது. அந்த முறையிலே கடன்களைப் பெற்று தொழில்களை அவர்கள் புதுப்பித்துக் கொள்ளலாம். வறட்சியின் அடிப்படையிலே எங்கெங்கே குடிநீர் கொடுக்கிற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோமோ, அந்தப் பகுதியிலே என்ன சாத்தியக்கூறு அதற்கு உண்டோ அதைச் செய்ய அரசு ஆவன செய்யும்.

திரு. கு. பா. பழனியப்பன் : அங்கே வேட்டி ,சேலை போன்றவற்றைக் கொடுப்பதற்குகூட அரசு முன்வரவில்லை. இதுவரையிலே வழங்கப்படவில்லை, அரிசியும் வழங்கப்படவில்லை. குடிநீர் தேவை என்று பல மனுக்களைக் கொடுத்தும், கிட்டதட்ட அதற்காக அவர்கள் போராட்டத்தை நடத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருந்தும்கூடமாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அதற்கான உத்திரவு வரவில்லை என்று பஞ்சாயத்து யூனியன் கமிஷன் தெரிவித்திருக்கிறார். ஆகவே உடனடியாக நடவடிக்கை எடுத்து

பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் — அவர்கள் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல — கொடுப்பதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வேட்டி, புடவை வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முயற்சி எடுத்து வருகிறார். வழங்கப்பட்டது என்று சொல்லவில்லை, இதுவரையில் கொடுக்கப்படவில்லை, அதற்கான முயற்சிகளை அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். குடிநீர் பற்றி ஏற்கெனவே நான் சொன்னேன். அந்த முறையிலே அதைத் தனியாகப் பரிசீலிக்கவேண்டும். இரண்டாயிரம் வேண்டுமென்று யார் யார் விண்ணப்பிக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யும்.

5. அரசினர் சட்டமுன்வடிவு

தொழில் நிறுவனங்கள் (தொழிலாளருக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்டமுன் முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. வரவு செலவுத் திட்டம் 1981-82வாக்கெடுப்பு—தொடர்ச்சி அ. கோரிக்கை எண் 20—வேளாண்மை

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 66,23,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,23,36,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. ரா. கிருஷ்ணன் :—தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாய விலை கிடைக்க ஒழுங்குமுறை விற்பனை கூடத்தை சீர்படுத்தி விவசாயிகள் பயன்படுத்தும் விதத்தில் செயல்படுத்தாமலிருப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,23,36,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

திரு. தி. கா. நல்லப்பன் : தலைவர் அவர்களே, வருடா வருடம் நிலக் கடலை பயிருக்கு கம்பளிப் புழு விழுந்து பயிர்களை நாசம் செய்வதை, சரியான காலத்தில் விவசாயிக்குத் தெரிவிப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 66,23,36,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும். "

(ஆ) கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" மானியக் கோரிக்கை எண். 48—வேளாண்மை, குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,78,78,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

1981 ஏப்ரல் 20]

திரு. சு. பாலன் : தலைவர் அவர்களே, கொள்கைபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'' மானியக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,78,78,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

முற்பகல் 10–80

திரு. கே. ஆர். சுந்தரம் : தலைவரவர்களே, வடஆற்காடு மாவட்டத்தில் விதைப் பண்ணைகள் ஆரம்பிக்க வேண்டும் என்ற அவசியத்தைப் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகின்றேன் :

''மானியக் கோரிக்கை எண். 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,78,78,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையில் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்னுரையாக ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே ஏற்கனவே வேளாண்மை பற்றி வழங்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பை நான் பேசியதாகக் கருதி, குறிப்பேட்டிலே ஏற்றிட வேண்டுகின்றேன். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய எண்ணங்களை இங்கே எடுத்துரைக்க வேண்டுகிறேன். அவர்கள் தங்களுடைய கருத்துகளை எடுத்துச் சொல்வதற்கு முன்னால் ஒரு அறிவிப்பினை அரசாங்கத்தின் சார்பாக நான் வெளியிடக் கருதுகிறேன்.

27—3—1981 அன்று இம்மாமன்றத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதுபற்றி விவாதிப்பதற்காக ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் வந்தது. அப்பொழுது பேசுகையில் போராட்டத்தை நிறுத்தவும், பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்தவும் ஆவன செய்துள்ளதாகக் குறிப்பிட்டேன். பேச்சுவார்த்தையில் எடுக்கப்பட்டுள்ள முடிவை இம்மன்றத்திற்கு அறிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக உயர்த்தப்பட்ட உதவிப் பேராசிரியர்கள் 1—12—1977 அன்று

127 ம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

பத்தாண்டுக் காலப் பணியை முடித்திருந்தால் அவர்களுக்கு ரூபாய் 700-40-1100-50-1200 என்ற சம்பள விகிதத்தில் ரூபாய் 1,100 என்ற சம்பளம் நிர்ணயிக்க வேண்டுமென்ற கோரிக்கை 17-4-1981 அன்று நடந்த பேச்சுவார்த்தையின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த முடிவு 1-12-1977 முதல் செயல்படுத்தப்படும் என்றாலும் பணப்பயன் 1-4-1978 முதல்தான் என்று முடிவு செய்யப்பட்டது. இந்தப் பணித் தொகுதியில் அடங்கிய மற்றவர்களுக்கு அவர்கள் பத்தாண்டுக் காலப் பணியைமுடித்தவுடன் அவர்களுடைய சம்பளமும் ரூபாய் 1,100இல் நிர்ணயிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதை ஆசிரியர்கள் பிரதிநிதிகள் முழுமனதோடு ஏற்றுக்கொண்டு அரசுக்கு நன்றியைத் தெரிவித்துவிட்டுச் சென்றுள்ளார்கள் என்கிற அறிவிப்பைத் தெரிவித்து, வேளாண்மைபற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துக்கூற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக்கொடுக்கப்பட்டிருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து நான் சில கருத்துக்களைச் சொல்ல விழைகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்-தலைமை.)

வேளாண்மையைப் பொறுத்தமட்டில் இந்த மாநிலம் ஒரு காலத்திலே உணவுப் பற்றாக்குறை மாநிலமாக விளங்கிக் கொண்டிருந்த காலத்திலேதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் விவசாயிகளுக்குச் செய்யப்பட வேண்டிய சலுகைகளை அளித்து ஊக்கப்படுத்துகின்ற வகையிலே பல இலட்சக்கணக்கான ரூபாய்களை விவசாயிகளுக்குக் கடனாகத் தந்து, புதிய கிணறுகளை எடுக்கவும், மின்சார மோட்டார் அமைக்கவும், ஆயில் என்ஜின்களை அமைக்கவும், நிலத்தைப் பதப்படுத்துகின்ற வகையிலே பல்வேறு வசதிகளை விவசாயிகளுக்குச் செய்து, பசுமைப் புரட்சியை உண்டாக்குவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக இந்த மாநிலம் மற்றைய மாநிலங்களைவிட உணவு நிலைமையில் தன்னிறைவு பெற்று, கேட்கின்ற வட மாநிலங்களுக்கெல்லாம் உணவு அளிக்கின்ற வகையிலே அமைந்திருந்தது என்பதை யாரும் மறந்துவிட முடியாது.

ஆனால், இன்றையதினம் நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகும்கூட, இரண்டாண்டுக்காலம் உணவுப் பற்றாக்குறை இல்லை என்றுகூட நீங்கள் சொல்லிக் கொண்டிருந்தீர்கள். அதற்குக் காரணம் ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழகம்

1981 ஏப்ரல் 20]

[திரு. பெ. சு. திருவேங்கடம்]

பல்வேறு வசதிகளை விவசாயிகளுக்குச் செய்ததன் காரணமாக அந்த நிலைமை இருந்தது. இந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டு விட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படி வறட்சி ஏற்பட்டபிறகுகூட, இந்த அறிக்கையிலேயே கூட மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் படித்துப்பார்த்தேன். வறட்சி ஏற்பட்டிருக்கின்ற நேரத்தில், தமிழகத்திலே இருக்கின்ற மற்றைய மாவட்டங்களானாலும்சரி, குறிப்பாகக் கிணற்றுப் பாசனத்தை நம்பியிருக்கின்ற வடார்க்காடு மாவட்டம் போன்ற மாவட்டங்களில் மிகக் கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கின்றது. இதில் அரசாங்கம் விவசாயிகளுக்கு என்ன சலுகைகளை அளித்திருக்கிறது அல்லது என்னென்ன உதவிகளைச் செய்திருக்கிறது என்று படித்துப் பார்த்தேன். ஆனால், அதில், வறட்சி பணிகள் நடைபெறுகின்றன என்பதைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர, குறிப்பாகச் சிறு விவசாயிகளுக்கு அல்லது பெரிய விவசாயிகளுக்கு, அல்லது நடுத்தரக் குடும்பத்திலே உள்ள விவசாயிகளுக்கு ஏதாவது தனிச் சலுகை இந்த வறட்சிக் காலத்திலே அளிக்கப்பட்டிருக்கிறதா என்றால் அதைப்பற்றிச் சொல்லப்படவில்லை; அளிக்கப்படவில்லை என்பதை மெத்த வருத்தத்தோடு இந்த அரசாங்கத்திற்குத் தலைவரவர்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சிக் காலங்களில் ஏற்கனவே இருந்த அரசு கிணறுகளை ஆழப்படுத்தும் பணிகளுக்காகத் தக்காவிக் கடன்களை அளித்து அந்த நேரத்தில் விவசாயிகளைக் காப்பாற்றியதே அந்தக் காரியங்களை நீங்கள் செய்யக்கூடாதா? மாண்புமிகு முதலமைச்சரவர்கள்கூட என்னுடைய தொகுதிக்கு வந்த நேரத்தில் நான் சொன்னேன். கவனிக்கிறேன் என்று சொன்னார்கள். ஆனால், இதுவரையிலே கவனிக்கப்படவில்லை. இன்றையதினம் விவசாயிகள் அல்லது விவசாயக் கூலிகளாக விளங்குகிறவர்களுக்குக் கூட விவசாய வேலையில்லாத நேரத்தில், நடுத்தர குடும்பங்களில் இருக்கிற விவசாயிகள்தான் கிணறுகளை ஆழப்படுத்தி, அவர்களுக்கும் வேலை கொடுத்து, அவர்களையும் காப்பாற்றுகின்ற ஒரு பணியினை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடுவதற்கில்லை. ஆனால், நீங்கள் ஒன்று கேட்கலாம், வட ஆற்காடு மாவட்டத்திலே விவசாயிகளுக்கு ஒன்றுமே செய்யவில்லையா என்று. எங்களுடைய மாவட்ட ஆட்சித் தலைவர், குடிப்பதற்கு நீர் இல்லையேயென்றால், பார்க்கிறேன், மெஷின் இல்லை என்கிறார். அரிசி ஆலைகளில் வேலை இல்லையேயென்றால், யோசித்துப் பார்க்கிறேன் என்று சொல்கிறார். ஆனால், ஒன்றுமட்டும் தீவிரமாகச் செய்கிறார்கள். பல்வேறு

மாவட்டங்களைப் போன்று வட ஆற்காடு மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டாலுங்கூட, அம்மாவட்டத்தை மட்டும் வறட்சி மாவட்டம் என்று அறிவிக்க மறுக்கிறீர்கள்.

நேற்றையதினம் வட ஆற்காடு மாவட்டத்தினுடைய பத்திரிகைகளைப் பார்க்கும்போது, மாவட்ட ஆட்சித் தலைவருடைய அழகான படத்தைப் போட்டு, ஒரு விளம்பரத்தை அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது. விவசாயிகளை நீங்கள் பொருட்படுத்தவில்லை. அவர்கள் வறட்சியால் அவதிப்பட்டாலும் எங்களுக்குக் கவலையில்லை; அவர்கள் சாகிறார்கள் என்றாலும் எங்களுக்குக் கவலையில்லை; அவர்கள் இங்கு வாழ முடியாமல் அண்டை மாநிலங்களுக்குச் சென்றாலும் எங்களுக்குக் கவலையில்லை, என்ற ரீதியில், நீங்கள் விவசாயிகள் உடனடியாகக் கட்ட வேண்டிய கடனை, 7 நாட்களுக்குள் கட்ட வேண்டும், கட்டத் தவறினால் கடுமையான நடவடிக்கை என்ற விளம்பரங்களைத்தான் நீங்கள் பத்திரிகையிலே கொடுத்து, நொந்து போயிருக்கிற விவசாயிகளை நீங்கள் மேலும் பயமுறுத்துகிறீர்கள் என்று நான் மெத்த வருத்தத்துடன் சொல்லிக்கொண்டு, இந்த அரசாங்கத்தை அதற்காக நான் கண்டிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு அப்படிப்பட்ட பத்திரிகைகளில் விளம்பரங்களில் சொல்கிறார்கள், ஏதோ 10 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் வைத்துள்ள விவசாயிகள் கரும்பையெல்லாம் பயிரிட்டு, ஏராளமாகப் பயிரிட்டு, ஏராளமான லாபம் சம்பாதித்து, கடனை கட்ட மறுக்கிறார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்கிறார். வட ஆற்காடு மாவட்டத்திலே 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துப் பயிரிடுகிற விவசாயிகள் எத்தனை பேர்கள்? சென்ற ஆண்டு பயிரிட்டவர்கள் எத்தனை பேர்கள்? இந்த ஆண்டு பயிரிடுகிறவர்கள் எத்தனை பேர்கள்? அதில் கரும்புப் பயிரிடுகிறவர்கள் எத்தனை பேர்கள்? அந்தக் கரும்புப் பயிரிட்டவர்களில் சாவியாகிவிடாமல், வெட்டியவர்கள் எத்தனை பேர்கள்? நெல்லைப் பயிரிட்டவர்கள் எத்தனை பேர்கள்? அதில் லாபம் சம்பாதித்தவர்கள் எத்தனை பேர்கள்? என்ற விவரங்களை வெளியிட்டு, அவர்கள் இவ்வளவு இலாபம் சம்பாதித்தார்கள் என்று சொல்வீர்களானால், ஒரு விதத்திலே, நீங்கள் சொல்வது நியாயம் என்று சொல்லலாம். ஆனால், எனக்குத் தெரிந்த வரையிலே, என்னுடைய தொகுதியிலே நான் பார்த்தேன், 10 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கிற விவசாயிகள்கூட, இன்றையதினம் ரேஷன் கார்டைக் காண்பித்து, அரிசி வாங்கிச் சாப்பிடுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதே நிலை இன்னும் தொடர்ந்தால் சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் அந்த மாவட்டத்தை விட்டுப் போய்க் கொண்டிருக்கிற சூழ்நிலை இன்னும் அதிகமா

[திரு. பெ. சு. திருவேங்கடம்]

ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையில் கடனைக் கொடுங்கள் என்று, ஜப்தி போன்ற நடவடிக்கைகளை எடுப்பது மிகத் தவறான காரியமாகும். நீங்கள் பட்ஜெட்டிலே சொன்னீர்கள், ஜூன் மாதம் 1ஆம் தேதிக்குள் பெரிய விவசாயிகள் அசலைச் செலுத்தினால் அவர்களுக்கு அபராத வட்டியில்லை என்று. சிறிய விவசாயிகள் கடனைக் கட்டினால், அவர்கள் அபராத வட்டியும் கட்ட வேண்டாம், தண்ட வட்டியும் கட்ட வேண்டாம், நியாயமான வட்டியும் கட்ட வேண்டாம், அசலை மட்டும் கட்ட வேண்டுமென்று சொன்னீர்கள். அது என்ன புத்திசாலித்தனமான அறிவிப்பு என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. மழையே இல்லை. வட மேற்குப் பருவ மழை இல்லையென்று நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். தென் மேற்குப் பருவ மழை இல்லையென்றும் நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் மணிலா காய்ந்து விட்டது என்று சொல்லியிருக்கிறீர்கள். சம்பா தீய்ந்து விட்டது, என்று சொல்லியிருக்கிறீர்கள். நவரை இல்லையென்று சொல்லியிருக்கிறீர்கள். பிறகு ஜூன் மாதத்திற்குள் கடனைக் கட்டுங்கள், வட்டி கட்ட வேண்டாமென்றால், நீங்கள் தெரிந்துதான் சொன்னீர்களா? அல்லது இதனை உங்களுக்கு யார் சொன்னார்கள் என்று கேட்க விரும்புகிறேன். இதுதான் வட ஆற்காடு மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிற பயங்கரமான சூழ்நிலை.

ஒருங்கிணைந்த திட்டங்கள், ஊரக வளர்ச்சித் திட்டங்கள் எல்லாம் செயல்படுத்துகிறீர்கள். அந்தத் திட்டத்திற்கு மாநில அரசு பாதியும், மைய அரசு பாதியும் நிதி உதவி செய்கின்றன. நீங்கள் அதைப் பயன்படுத்துகிறீர்கள். அதன்மூலம் சிறு விவசாயிகள் ஓரளவுக்கு லாபம் அடைகிறார்கள். ஆனால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். அதிலே சிறுவிவசாயிகள் பெரு விவசாயிகள் என்று நீங்கள் பிரித்துவிட்ட காரணத்தாலே, கொடுக்கப்படுகிற உரங்கள், பூச்சி மருந்துகள் ஒழுங்காக விநியோகிக்கப்படவில்லை அதிகாரிகள் தவறுகள் செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. எல்லா அதிகாரிகளும் என்று கூட நான் சொல்ல மாட்டேன், பல அதிகாரிகள் தவறு செய்ய வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

[முற்பகல் 10-40

உங்கள் கட்சியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்டாலும் சொல்வார்கள். அப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுகின்றன. வியாபாரிகள் சிறு விவசாயிகளைப் பயன்படுத்தி வாங்கிக் கொள்கிறார்கள். அதனால் ஏராளமான ஊழல்கள் நடைபெறுகின்றன. எனவே சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள்

என்ற பிரச்சினையே இல்லாமல் எல்லா விவசாயிகளுக்கும் உரமும், பூச்சி மருந்தும் கொடுக்க வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் கூறி இருக்கிறீர்கள். உலக வங்கியில் ஏராளமான கடன் பெற்று பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டத்தை 1–7–1981 முதல் முதல் கட்ட மாவட்டத்திலேயும் 1—7—1982 முதல் பாக்கி இருக்கிற மாவட்டங்களிலேயும் இந்தத் திட்டத்தை செயல்படுத்த போவதாக நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். உலக வங்கியிடம் இருந்து கடன் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அதிலே சிறு விவசாயிகளுக்கும், பெரு விவசாயிகளுக்கும் சலுகைகள் இருக்க வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களிலே கடந்த 15 ஆண்டுகளாக வேளாண்மைத் துறை அலுவலர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விவசாயிகளுக்கு நல்ல முறையிலே உதவி செய்து கொண்டு இருக்கிறார்கள். எந்தக் காலங்களில் பொருக்கு விதைகளைப் பயன்படுத்துவது, எந்தெந்தக் காலத்திலே விதைகளைப் போடுவது, எந்தெந்தக் காலங்களிலே பூச்சி மருந்துகளை அடிக்கலாம், எந்தெந்த நேரங்களில் மகசூல் செய்யலாம் என்று அவர்கள் மிக நன்றாக அறிந்து இருக்கிறார்கள். நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள், ஆயிரம் குடும்பங்களுக்கு அல்லது 800 குடும்பங்களுக்கு ஒருவர் நியமிக்கப் படுவார். அவர்கள் விவசாயிகளைச் சந்தித்து விவசாயம் எப்படி செய்வது என்று சொல்லுவார்கள் என்றும் சொல்லியிருக்கிறீர்கள் நிச்சயமாக இந்தத் திட்டம் நல்ல பலன் தரும் திட்டமாக இருக்காது என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன், காரணம் நமது விவசாயிகளே ஓரளவுக்கு இவைகளை அறிந்து இருக்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது). அதே நேரத்தில் எந்தெந்தக் காலத்தில் என்னென்ன உரத்தைப்போட வேண்டும் என்றும், எப்போது பூச்சி மருந்து தெளிக்க வேண்டும் என்றும் சாதாரண விவசாயிகள் படிக்காத பாமர விவசாயிகள் நன்றாக இன்றைய தினம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதிலே ஒன்றும் அவர்களுக்குக் குறை இல்லை. ஆனால் அவர்களுக்கு வசதி இல்லை. காரணம் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு விவசாயிகளுக்குப் போதிய விலை இல்லை. அவர்கள் விளைவிக்கின்ற நெல்லுக்குப் போதிய விலை தருவார்களேயானால், அவர்கள் அரசாங்கத்தின் கடனைக்கூட கட்ட முடியும். அப்படிக் கட்டுவதற்கான எண்ணம் கூட ஏற்படும். அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் போது இந்தக் காரணத்திற்காக மட்டும் அந்த ஊழியர்களை நியமித்து அந்தப் பணத்தை செலவழிக்காமல் சிறு விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் இவர்களுக்கு எல்லாம்

1981 ஏப்ரல் 20]

[திரு. பெ. சு. திருவேங்கடம்]

போதிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அவர்களுக்கு குறைந்த விலையில் உரத்தையும், கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லி இருக்கிறீர்கள். இங்கே பல் வேறு குழுக்கள் இருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே ஒரு குழு. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலேயே ஒரு குழு முன்னாள் பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் ஒரு குழு இப்படிக் குழுக்களை நியமித்து விட்டால் மட்டும் விவசாயி களுடைய பிரச்சினைகள் தீர்ந்து விடாது. அடிக்கடி அந்தக் குழுக்கள் கூடி, அதனுடைய ஆலோசனைகளைக் கேட்டு அதை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக வேளாண்மைத் துறையிலும், மற்றத் துறைகளிலும் பணியாற்றுகின்ற அதிகாரிகளானாலும் சரி, அவர்கள் பல கோரிக்கைகளைக் கொடுக்கிறார்கள். அரசாங்கம் அவர்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் ஊதிய உயர்வு கொடுக்கட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அரசாங்கம் பல தவறுகளைச் செய்கின்றது. அவர்கள் தங்களுடைய கோரிக்கை களில் பதவியின் பெயர்களை மாற்றச் சொல்லி கேட்கிறார்கள். உடனே அரசாங்கம் சம்பளத்தை அதிகமாகக் கொடுத்தால், அர சாங்கத்தின் நிதி நிலைமையை பாதிக்கின்றது என்பதை கருத்தில் கொண்டு, பெயர் மாற்றத்தை உடனடியாகக் கொடுத்துவிடு கின்றது. உதாரணமாக கிராம சேவக் என்று முன்பிருந்தார்கள் இன்றைய தினம் அவர்களுடைய பெயரை மாற்றிவிட்டார்கள். ரூரல் வெல்பேர் ஆபிசர் என்று அவர்கள் தற்போது என்ன நினைக்கிறார்கள் என்றால் நாம் அதிகாரிகளாக ஆகிவிட்டோம். எனவே நாம் ஏன் வேலை செய்ய வேண்டும். நமக்குக் கீழே உள்ளவர்கள் செய்யட்டும் என்று முன்பு செய்திருந்த வேலை களைக் கூட செய்வதில்லை. எனவே கிராம சேவக்குகளாக இருந்த அவர்கள் செய்துகொண்டிருந்த பணி பாதிக்கப்படுகிறது. அதே போன்று "பீல்டு மேன்" என்பவர்கள் நிலத்திலே இறங்கி பூச்சி மருந்து அடிப்பது போன்ற வேலைகளைச் செய்து காட்டுவார்கள். அவர்களை தற்போது அசிஸ்டன்ட் அக்ரிகல் சுரல் ஆபீசர்கள் என்று மாற்றிவிட்டார்கள். அவர்கள் தற் போது என்ன சொல்லுகிறார்கள் என்றால் நாங்கள் ஆபிசர்களாக ஆகிவிட்டோம் ஏ.ஏ.ஓ. ஆக ஆகிவிட்டோம். நாங்கள் ஏன் சேற்றில் இறங்கி வேலைகளைச் செய்ய வேண்டும். எங்களுக்கு எங்கே காவலர்கள் என்றெல்லாம் சொல்லுகிறார்களே தவிர, வேலைகள் அடியோடு பாதிக்கப்படுகின்றன என்பதை சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. பெ. சு. திருவேங்கடம்]

மேஸ்திரி என்பவருக்கு "எப். டி. ஓ." என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. போகின்ற போக்கைப் பார்த்தால், வாட்ச்மேன் என்பவருக்குக் கூட "ஆபீசர்" என்கிற முறையில் ஏதேனும் பெயர் வைத்து விடுவார்கள் போல் இருக்கிறது. இப்படிப்பட்ட பெயர் மாற்றங்களை வேண்டாம் என்று சொல்லவில்லை. அவர்களுக்கு சம்பளம் அதிகமாகக் கொடுப்பதைப் பற்றி ஆட்சேபனை இல்லை. ஆனால் எல்லோரையும் ஆபீசர் என்ற முறையில் சொல்லிவிட்டால், அவர்கள் எல்லாம் அறை வேண்டும், அலுவலகம் வேண்டும், கீழே பணியாற்ற பணியாளர்கள் வேண்டும் என்று சொல்வார்கள், அப்புறம் யார் நிலத்தில் இறங்கி விவசாயிகளுக்கு அறிவுரை தருவது, பூச்சி மருந்து தெளிப்பது என்பதைத் தான் நான் கேட்க விரும்புகிறேன். ஆகவே, இதை கவனத்தில் கொண்டு அரசாங்கம் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறியியல் துறையைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். அதை நல்ல முறையில் இயங்கச் செய்ய வேண்டும். அதனுடைய தலைமை அலுவலகத்தை மதுரைக்கு மாற்றியிருக்கிறீர்கள். எந்த அரசுத் துறையின் அலுவலகமாக இருந்தாலும் அது நல்ல முறையில் இயங்க வேண்டும் என்று சொன்னால், சென்னையில் தான் இருக்க வேண்டும். அந்தத் துறையில் ஏராளமான டிராக்டர்கள் வாங்க வேண்டும். துளை போடும் கருவிகள் வாங்க வேண்டும். தனிப்பட்டவர்களிடத்தில் ஏராளமான பணத்தைக் கொடுத்து விவசாயிகள் துளை போட வேண்டியிருக்கிறது. தோட்டா போடுவதற்கு ரூ. 4—5 செலவாகும் என்று சொன்னால், தனியார் ஒரு தோட்டா போடுவதற்கு கிராமப் புறங்களில் 17 ரூ. வாங்குகிறார்கள். ஆகவே, கிராம மக்களுக்கு நன்மை செய்கிற வகையில் துளை போடும் கருவிகளையும், டிராக்டர்களையும் அரசாங்கம் வாங்கி வைக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நல்ல முறையில் செயல்படவில்லை. அதற்கு தேர்தல் நடத்தப்படும், அதற்கான சட்டம் கொண்டு வரப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அது வரவில்லை. ஆகவே, உடனடியாகச் சட்டங்களைக் கொண்டு வந்து, அதற்கான தேர்தல் நடத்தி, அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் நல்ல முறையில் இயங்க வழி வகை செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே அறிக்கையிடப்பெற்ற எள், தனியா, உளுந்து போன்றவை அறிக்கையில் இருந்து நீக்கப்பட்டு இருக்கிறது என்று அறிகிறேன். அது அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்

[திரு. பெ. சு. திருவேங்கடம்]

பட்டு இருக்கிறதா என்பது எனக்குத் தெரியவில்லை. அதை நிறுத்தி வைத்ததற்காக பல இலட்சக்கணக்கான ரூபாயை பல அதிகாரிகள் கையூட்டாகப் பெற்று இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். அப்படி ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பொருள்களை நீக்கக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

* **திரு. இரா. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இந்த அரசு வேளாண்மை அபிவிருத்திக்காக பல திட்டங்களைத் தீட்டி, உணவு உற்பத்தியைப் பெருக்கும் வகையில் பல கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அந்த வகையில் சில முக்கியமான விஷயங்களை இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். வேளாண்மைத் துறை மற்றும் பொதுப்பணித்துறை மூலமாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நீர்ப்பாசனத் திட்டம், வீரிய விதைகள் வழங்கு திட்டம், உர வினியோகம், நோய் தடுப்பு-பாதுகாப்புத் திட்டங்கள் ஆகியவற்றை உரிய நேரத்தில் அளிக்கப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய கடன் வசதிகள், ஆகியவை செய்து தரப்படுமானால் விவசாயிகள் நிச்சயமாக நல்ல முறையில் உணவு உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்பை பெற்று, அதன் மூலம் உணவு உற்பத்தியைப் பெருக்குவார்கள் என்பதை நான் கூறிக் கொள்கிறேன்.

நானும் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன் என்ற காரணத்தால் முதன் முதலில் கூறிக்கொள்ள விரும்புவது, நீர்ப்பாசன வசதிக்காக நம்முடைய அரசு பல திட்டங்களைத் தீட்டி, பல வகைகளில் அரசுத் துறையில் உள்ள அதிகாரிகளை அனுப்பி, நேரடிப் பார்வையில் அவற்றைக் கண்காணித்து வருகிறது என்பதை நான் அறிவேன். நீர்ப்பாசன வசதியைப் பொறுத்த வரையில் பெரிய, நடுத்தர நீர்ப்பாசன திட்டங்கள் மேலும் மேலும் அபிவிருத்தி செய்வதற்கு பதிலாக, விவசாயிகளுக்கு மிகவும் தேவையாக உள்ள சிறிய பாசன திட்டங்கள் அதிகம் ஏற்படுத்துவதன் மூலம் கிராமப் பகுதியில் நல்ல உணவு உற்பத்தியை ஏற்படுத்த முடியும் என்பதால், ஆங்காங்கு உள்ள ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் ஆகியவற்றை அவ்வப்போது செப்பனிட்டுத் தர அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் அதிகமாக குழாய் கிணறுகள் மூலம் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்யப்படுவதால் இந்தத் துறையிலே கிணறு வெட்டுவதற்கு அரசு தரப்பிலே ஆயிரக் கணக்கில் ரூபாய் கடன் வழங்கப்படுகிறது. 7,000

[திரு. இரா. சண்முகம்]

ரூபாய்; 10,000 ரூபாய் என்று கடன் கொடுத்தாலும் அவர்கள் கிணறு வெட்டும்போது நிச்சயமாகத் தண்ணீர் கிடைக்கும் என்ற நிலை இல்லாமல் சஞ்சலத்திற்கு உட்பட்டு, கிணறு வெட்டு கிறார்கள். அந்தக் கிணற்றில் தண்ணீர் கிடைத்தால் அதன் மூலம் விவசாயம் செய்து, பெற்ற கடனைத் திருப்பிக் கட்டு கிறார்கள். ஆனால் அந்தக் கிணற்றில் தண்ணீர் வரவில்லை என்றால் பெற்றக் கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் அந்த விவசாயிகள் மேலும் அவதிக்கு உட்பட்டு, கடனிலே செத்து மாள்கிறார்கள். இந்த கஷ்டத்தைப் போக்குவதற்கு, அந்த விவசாயிகள் கூட்டுறவுத் துறையின் மூலம் கடன் வாங்கி கிணறு களை எடுத்து, அந்தக் கிணற்றில் தண்ணீர் வந்தால் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கும், அந்தக் கிணற்றில் தண்ணீர் வரவில்லை என்றால் கடனைக் கட்டாமல் அந்தக் கடனை ரத்து செய்வதற்கும் உரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-50.]

செங்கற்பட்டு மாவட்டத்தில் கிணற்றிலிருந்து மின்சாரம் மூலம் தண்ணீரை மேலே ஏற்றித்தான் பெரும்பாலும் விவசாயம் செய்கிறார்கள். அதற்காக இப்போது 6 மணி நேரம்தான் மின் சாரம் கொடுக்கப்படுகிறது. அந்த 6 மணி நேரத்தில் விவசாயி எத்தனை ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்ச முடியும், பயிர் செய்ய முடியும் என்று தெரியவில்லை. ஆகவே தொடர்ச்சியாக குறைந்தது 10 மணி நேரத்திற்கு மின்சாரம் கொடுக்க வேண்டும். 10 மணி நேரத்திற்காவது மின்சாரம் கொடுத்தால்தான் இன்றைய நிலையில் செங்கற்பட்டு மாவட்ட விவசாயப் பெருங் குடி மக்கள் ஓரளவுக்கு திருப்தியாக இருப்பார்கள்.

இப்போது செய்கின்ற சாகுபடியை செய்யலாமா, செய்ய வேண்டாமா, மின்சாரம் கிடைக்குமா, கிடைக்காதா என்ற அச்சத்தில் நாற்றங்கால் உழுவதை தள்ளிவைத்திருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஆகவே நிச்சயமாக 10 மணி நேரமாவது மின்சாரம் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றைக்கு விவசாயிகள் பயன்படுத்து கின்ற கருவிகளை குறைந்த விலைக்கு கொடுக்கவில்லை என்றாலும் அவைகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்குக் கொடுத்து விற்பனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அதைப்போல விவசாயத்திற்குப் பயன்படுத்துகின்ற டிராக்டர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும்; உதிரிப் பொருட்களுக்கும் விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திரு. இரா. சண்முகம்]

மேலும் விவசாயிகள் பயிர் செய்கின்ற நிலத்தில் ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அல்லது பயிருக்கு ஒருமுறை-வருடத்தில் சாதாரணமாக இரண்டு பயிர் செய்கிறார்கள்—சுழர்ச்சி மூலம் விவசாயி தன்னுடைய நிலத்தில் என்ன சத்து இருக்கிறது என்பதைக் கண்டறிவதற்கு 'மொபைல் டெஸ்ட் யூனிட்'' மூலம் மண்பரிசோதனை செய்து, மண்ணிலே என்னென்னவளம் இருக்கிறது என்னென்ன தேவை என்று சொன்னால் அதன்படி செய்து, விவசாயிகள் சிறந்த முறையில் பயிர் செய்ய வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு பாசனத்திற்கு 150 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது. அதை நாம் நிச்சயமாக வரவேற்றாக வேண்டும். அதன் மூலம் 20,500 ஏக்கர் நிலம் புதிதாக பாசனம் பெறுவதற்கும், 20,500 டன் புன்செய் தானியங்கள் விளைவதற்கும் ஏற்பாடு செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

மின்சார வாரியத்தின் மூலம் இந்த ஆண்டு 30,000 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். அதையும் பாராட்டி, கடன் பெற்றிருக்கிற விவசாயிகளுக்கு இதிலே முன்னுரிமை தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகள் கடனைப் பெற்றுவிட்டு, கிணறை எடுத்துவிட்டு, எப்போது மின்சாரம் வரும் என்று காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் பெற்ற கடனை உரிய நேரத்தில் திருப்பிக் கட்டமுடியாமல் அவதிப்படுகிறார்கள். கடனுக்கு வட்டிமேல் வட்டி ஏறிக்கொண்டு போகிறது. ஆகையால் அவர்களுக்கு சீனியாரிட்டி என்று பார்க்காமல் கடன் பெற்றிருக்கிற விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய நாட்டில் உணவுக்குப் பயன்படுத்துகிற எண்ணெய்க்கு தட்டுப்பாடு இருப்பதால் 'பாமாலின்' என்ற ஒரு வகை பனைமரங்களை வளர்ப்பதற்கு ஒரு புதிய திட்டத்தை இந்த வேளாண்மை துறை ஊக்குவித்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

மேலும் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை உலர வைக்க வேண்டுமென்றால் இப்போது போதிய வசதி இல்லை. ஆகவே, சமுதாய தானியங்கள் உலரவைக்கும் களம் அமைக்க அரசு தனியாக பணத்தை ஒதுக்கி, பல ஊர்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிற இடங்களில் தானியங்களை உலரவைக்க 4, 5 ஏக்கர் அளவில் சமுதாய களங்களைக் கட்டித்தர அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. இரா. சண்முகம்]

மருத்துவத் துறையில் எப்படி காலரா, வைசூரி, பிளேக் போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தி ஒரு சாதனையை அரசு புரிந்திருக்கிறதோ அதுபோல் விவசாயத் துறையிலே விவசாயி களைத் துன்புறுத்திக்கொண்டிருக்கிற இலைச் சுருட்டுப்புழு, புகையான் பூச்சி போன்றவற்றை நீக்குவதற்கு அரசு ஒரு திட்டத்தை வகுத்து ஏற்பாடு செய்யவேண்டும் என்று இத்தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய பகுதியில் விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற அக்ரோ சர்வீஸ் செண்டர்களை எல்லாம் இயக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். என்னுடைய தொகுதியிலே திருவாலங்காடு அக்ரோ சர்வீஸ் மற்றும் கடம்பத்தூர் சர்வீஸ் ஆகியவை இரண்டரை ஆண்டுக்காலமாக அங்கே எம். டி. இல்லாத காரணத்தால் இயங்கவில்லை. அந்த சர்வீசின் மூலமாக சிறு விவசாயிகளுக்கு பயன்படுகின்ற பொருட்களை வழங்க இயலும். அது குறித்து அந்தப் பகுதியிலே இருப்பவர்கள் எல்லாம் ஏன் இன்னும் அங்கே எம். டி. போடவில்லை, அந்த ஆக்ரோ சர்வீஸ் ஏன் இன்னும் இயங்கவில்லை என்று கேட்கிறார்கள். நான் இங்கே அந்தத் துறையின் டைரக்டரிடம் இதுபற்றிச் சொன்னபோது இன்னும் 10 நாட்களில் எம். டி. போட்டு விடுகிறோம் என்று சொன்னார்கள். இப்படிப் பலமுறை சொல்லப்பட்டும் அந்த இரண்டு செண்டர்களும் இயங்காமல் இருக்கின்றன. ஆகவே விரைவில் அவற்றைத் துவக்கி அவை விவசாயிகளுக்குப் பயன் தருகிற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, பேரம்பாக்கம் கிராமத்தில் மூன்று ஆண்டுகளாக கேட்கப்பட்டு வருகின்ற ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை ஏற்படுத்தித் தரவேண்டும். ஏனென்றால் அந்தப் பகுதியிலே அதிகமான அளவில் விவசாயம் நடைபெறுகின்றது. அந்தப் பகுதியிலே ஒழுங்குமுறை விற்பனை கூடம் ஏற்படுத்துவதைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு, அடுத்த ஆண்டு என்று காலம் கடந்து கொண்டு சென்று இந்த ஆண்டு கூட அங்கே ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் திறப்பதற்குரிய வாய்ப்பு இல்லை என்று நினைக்கிறேன். ஆகவே உடனடியாக அந்த வாய்ப்பை பெற்றுத் தரும்படி இந்த அரசை நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, விவசாயத்திற்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகக் கடன் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கூட்டுறவுச் சங்கங்கள் இன்று செயலற்ற நிலையில் இருக்கின்றன. சிறிய விவசாயிகள் கடனைப் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாத முறையில் பெரிய விவசாயிகள் தாங்கள் பெற்றிருக்கக்கூடிய கடனைத் திருப்பிக் கட்டாமல் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக்

1981 ஏப்ரல் 20]

[திரு. இரா. சண்முகம்]

கழகத்தின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது அந்தக் கடன்களை வசூலிப்பதில் கெடுபிடி செய்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் 75 ஆண்டுகாலமாக சிறந்த முறையில் செயலாற்றிக்கொண்டிருந்த சங்கங்கள் இன்றைக்கு பழுதடைந்த நிலையிலே இருப்பதற்குக் காரணம். பெரிய விவசாயிகள் தாங்கள் பெற்றக் கடனை திருப்பிக் கொடுக்காததுதான். இந்த நிலையில் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றுகின்றவர்களுக்குக் கூட சம்பளம் கொடுக்க முடியாத நிலைமை இருந்துகொண்டிருக்கின்றது. ஆகவே நிச்சயமாக பெரிய விவசாயிகள் பெற்றிருக்கக்கூடிய கடனை வசூல் செய்து சிறிய விவசாயிகளுக்குக் கொடுப்பதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்தத்தருணத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவுகின்ற வகையில் 5 அல்லது 6 மைல் சுற்றுப்புறத்தில் இருக்கக்கூடிய 5 கிராமங்களை ஒன்று திரட்டி புதிய பயிர்களை விளைவிக்கின்ற வகையில் அதுபற்றிய நிகழ்ச்சிகளை அவர்களுக்கு எடுத்துச்சொல்கின்ற வகையில் எந்தெந்த வகையிலே பயிர்பாதுகாப்பு செய்ய வேண்டும் என்ற வகையில் எத்தனை நாட்களுக்கு நாற்றங்காலிலே என்னென்ன பாதுகாப்புக்களை செய்யவேண்டும் என்பது போன்றவற்றை விளக்குகின்ற வகையில் புத்தறிவுப் பயிற்சி முகாமை ஏற்படுத்தித் தந்து அந்த விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து திருவள்ளூர் வேளாண்மை கோட்டத்தின் மூலம் இந்த ஆண்டு 69,500 எக்டேர் நிலப்பரப்பில் உணவுப் பயிரும், 3,500 எக்டேர் நிலப்பரப்பில் பயிறு வகையும் 27,100 எக்டேரில் கடலை போன்ற பயிர்களும் செய்து ஒட்டுமொத்தமாக அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையில் குருத்துப்புழு, பியூரடான், புகையான் பூச்சி போன்றவற்றை ஒழிப்பதற்குரிய வகையில் பி.எச்.சி.10 சதவீதம் டெமிக்ரான் 50 சதவீதம் ஆகியவற்றை மானியமாகக் கொடுத்து அதன் மூலம் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் நல்ல முறையிலே பயிர் செய்தார்கள். அதற்காக அந்தப்பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் திருவள்ளூர் வேளாண்மை கோட்டத்திற்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடலைக்காய் பயிரைப் பொறுத்தவரையில் கூட குறித்த நேரத்திலே அவர்கள் இலைச் சுருட்டுப் புழுவைப் போக்குவதற்கு மருந்து கொடுத்து உதவி இருப்பதற்காக அந்தக் கோட்டத்தில் பணிபுரிகின்ற அதிகாரிகளுக்கு நன்றி சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே வேளாண்மையை சிறப்பாக ஆக்குகின்ற இந்த மானியக் கோரிக்கையினை ஆதரித்து வாய்ப்புத் தந்த அவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்

[முற்பகல் 11-00]

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவசாய மானியத்தில் பேச வாய்ப்புக் கிடைத்தமைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நம் நாட்டு விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுடைய கஷ்டம் இன்னும் தீர்ந்தபாடில்லை. கட்டுபடியாகக் கூடிய அளவிற்கு சாகுபடி இல்லை என்ற நிலைமையை அரசும் அறியும், மற்றவர்களும் அறிவார்கள்.

உதாரணமாக ஐ.ஆர். 8 போன்ற விதைகளை பயன்படுத்தித் தான் உற்பத்தி ஓரளவு அதிகரிக்கப்பட்டிருக்கிறதே ஒழிய, வேறு எந்தவிதமான நவீன முறைகளும் விவசாயத்தில் பயன் படுத்தப்பட்டு, உற்பத்தி பெருக்கம் ஏற்படவில்லை என்ற நிலைமைதான் இருந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே அதில் அரசு கவனம் செலுத்தி, தரமான விதைகளையும், சரியான அளவிற்கு பூச்சி மருந்துகளையும், பொருத்தமான உரங்களையும் நவீன முறைகளில் இன்னும் தீவிரமாக செயல்படுத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

நவீன விவசாயத்தில் நவீன விவசாயக் கருவிகளை உபயோகப்படுத்த வேண்டியது மிக மிக அவசியம் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று, ஆனால் இன்று தமிழ் நாடு இருக்கிற நிலைமையைப் பார்த்தால், உச்ச வரம்பு சட்டத்தின் கீழ் அரசு விவசாயிகளுடைய நிலங்களின் உடைமைகளை குறைத்திருக்கிற நேரத்தில் பெரிய பெரிய இயந்திரங்கள் வாங்குவது—டிராக்டர்கள் வாங்குவது விவசாயிகளுக்கு கட்டுப்படியாகாத நிலைமையில் இருக்கிறது. 30, 35 ஹார்ஸ் பவர் உள்ள டிராக்டர்கள் வாங்குவது என்றால் அவர்களால் அதன் விலை கட்டுப்படியாகவில்லை. அப்படியே வாங்கினாலும், அதற்காக வாங்கிய கடனை அவர்களால் திருப்பிச் செலுத்த முடியவில்லை. ஆகவே அரசாங்கம் இதை பரிசீலனை செய்து நமது நாட்டிலுள்ள சிறு நில உடைமையாளர்களான விவசாயிகளுக்கு தகுந்த அளவிற்கு, சிறு சிறு இயந்திரங்களை, அறிமுகப்படுத்த வேண்டியது பழக்கத்திற்கு கொண்டு வர வேண்டியது மிக மிக அவசியம்—அதற்கான வழி வகைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அண்மையில் ஜப்பான் சென்றிருந்தபோது, அங்கேயுள்ள விவசாயிகளின் டிராக்டர்களைப் பார்க்கும்போது, அவைகள் மிகச் சிறிய அளவில் இருந்தன. நம் நாட்டில் இருக்கும்படி

[திரு. உ. சுப்பிரமணியன்]

யான பெரிய டிராக்டர்களை அங்கே காணவே முடியவில்லை. மிகச் சிறிய அளவில் 10 ஹார்ஸ்பவர் அளவே உள்ள டிராக்டர் களை அங்கே உள்ள சிறிய விவசாயிகள் உபயோகப்படுத்து கிறார்கள். அதேபோல சிறிய அளவிலே இயந்திரக் கலப்பை களையும் கதிர் அடிக்கிற இயந்திரங்களையும் வைத்திருக்கிறார் கள். ஆகவே அப்படி சிறிய அளவிலே இருந்தால்தான் அவர் களால் வாங்க கட்டுப்படியாகக் கூடும். நம்நாட்டிலே பெரிய இயந்தி ரங்களின் உபயோகங்கள் விவசாயத்தைப் பொருத்த மட்டில் சரியாக வராது என்ற அளவிலே, தமிழகத்திலோ அல்லது இந்திய அளவிலோ, அப்படிப்பட்ட சிறிய இயந்திரங்களை உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையில் அரசு ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்று தமிழ்நாட்டில் பெரும் பகுதி வறட்சியால் பாதிக்கப் பட்டிருக்கிறது. வறட்சிப் பகுதிகளின் மிகப் பெரிய பிரச்சினை குடிதண்ணீராக இருந்தாலும் கூட, நீர்ப்பாசன வசதியும் மிக மிக அவசியமான அத்தியாவசியமான ஒன்று என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். நீர் இல்லாவிட்டால், விவசாயி எந்த விதத்திலேயும் முன்னுக்கு வரவே முடியாது. ஆகவே இப்போதுள்ள நீர்ப்பாசன வசதிகளை பெருக்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். தனிப்பட்ட விவசாயிகளுடைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கோ, அல்லது ஆழ் குழாய்களை போடு வதற்கோ, போதுமான இயந்திரங்கள் இல்லை. அப்படிப்பட்ட இயந்திரங்களை போதுமான அளவிற்கு வாங்கி, பாசன வசதி இல்லாத இடங்களில் நீரைக்கொண்டு வரக்கூடிய அளவிலே ஏற்பாடு செய்ய அரசு முன் வரவேண்டும். தனிப்பட்ட விவசாயிகளுக்கு மானிய உதவியும் அளிக்க வேண்டும். ஏனென்றால், இத்தனை கருவிகளையும் உபயோகப்படுத்தி னால்தான், நீர் கிடைக்கும். அவைகளை வாங்கி அதிக செலவு செய்ய விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாது. ஆகவே இது போன்ற கருவிகள் வாங்க மானிய உதவியோ கடன் உதவியோ கொடுத்தால்தான் நீர் பாசனத்திற்கான முழு பலனும் ஏற்படும்.

அடுத்து விதைகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு நம் தமிழகத்தில் விவசாயத்திற்கு உபயோகப்படுத்துகின்ற விதைகள் சரியான முளைப்புத் திறன் கொண்டவையாக இல்லை என்ற குறைபாட்டை நான் அடிக்கடி இந்த மன்றத்திலேயே சொல்லி யிருக்கிறேன். அதற்கு அந்தந்த நேரங்களில் இருக்கிற பல சூழ்நிலை சந்தர்ப்பங்களை சுட்டிக் காட்டி அமைச்சர் அவர் களும் பதிலுரைத்திருக்கிறார்கள். ஆகவே, எப்படியிருந்தாலும் நல்ல முளைப்புத் திறன் உள்ள தரமான விதைகளை உபயோ கப்படுத்தாததன் காரணமாகத்தான் விவசாயிகள் நஷ்டம் அடைகிறார்கள். ஆகவே அரசு தரப்பிலே விதைகளை வாங்கி

[திரு. உ. சுப்பிரமணியன்]

விநியோகம் செய்கின்ற நேரத்தில், சரியான முறையில் முளைப்புத் திறன் கொண்ட விதைகளா என்று பார்த்து வாங்கி விநியோகம் செய்தால், பெரும் அளவிற்கு உற்பத்தியை அதிகரிக்கவும், விவசாயிகள் நஷ்டப்படுவதை தவிர்க்கவும் வழி ஏற்படும் என்று கூறிக் கொள்கிறேன்.

கடலையைப் பொருத்தவரையில் நல்ல வீரிய சக்தியுள்ள விதைகளாக கிடைப்பதில்லை என்று தெரிகிறது. நாட்டிலே மிக மிக தேவையான இன்றியமையாதப் பொருள்களில் ஒன்று நிலக்கடலை என்பது யாருக்கும் தெரியும். உள்நாட்டு உபயோகத்திற்கு மட்டுமல்லாமல், வெளிநாட்டிற்கும் பிண்ணாக்கு போன்றவைகளை ஏற்றுமதி செய்வதற்கு பெரும் அளவு அது பயன்படுகிறது. சோப்பு போன்ற பல பொருள்கள் உற்பத்தி செய்கின்ற தொழிற்சாலைக்கு கடலை எண்ணெய் அவசியம் தேவைப்படுகிறது.

ஆகவே அதன் உற்பத்தியைப் பெருக்குவதற்காக நவீன, வீரிய சக்தி கொண்ட, அதிகமான விளைச்சலைக் கொடுக்கக் கூடிய கடலை ரகங்களை உற்பத்தி செய்ய விவசாயிகள் மத்தியில் அதை பரவலாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு என்று அனைத்துக் கட்சியினரும், அனைத்து கட்சித்தலைவர்களும், எல்லாப் பகுதியினராலும் சொல்லப்படுகிற ஒரு உண்மை. ஆனால் சமுதாயத்தில் மிகவும் புறக்கணிக்கப்படுகிற ஒரு பகுதியினர் விவசாயிகள் என்று உண்மையையும் நாம் மறுக்க முடியாது. விவசாயிகள் மன நிம்மதியுடன், மன நிறைவாக அவர்கள் தொழிலில் ஈடுபட்டால்தான் இந்த நாட்டில் விவசாயத்தைப் பெருக்க முடியும். அதன் மூலம் விவசாய உற்பத்தியையும் பெருக்க முடியும். ஆகவே விவசாயிகளுக்கு பல்வேறு வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்கு மானிய உதவிகள் கொடுப்பது, கடன் சுமையைக் குறைக்கக்கூடியது போன்ற பல்வேறு அம்சங்கள் உள்ளன. இப்படிச் சொல்லும் போது, இது தினசரி கேட்கக்கூடிய குரலாயிற்றே என்று தயவு செய்து புறக்கணிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். வேறு பல தொழில்களுக்கு அரசிடமிருந்து கடன்கள் வாங்கி தொழில் செய்து தொழிலில் நஷ்டம் ஏற்பட்டால் அதற்கு ஈடுசெய்ய அரசாங்கம் வழிவகை செய்கிறது. தள்ளுபடி செய்ய வழிவகை செய்கிறது. நீண்டகாலத் தவணையில் திருப்பிச் செலுத்துவதற்கான வசதிகளை எல்லாம் செய்கிறது. ஆனால் ஏனோ தெரியவில்லை ——விவசாயிகளை மட்டும் யாரையோ உங்களுக்கு வேண்டாதவர்களை, உங்களை எதிர்ப்பவர்கள் செய்கிற காரியங்களை மனதில் கொண்டு நீங்கள் விவசாயிகளை துன்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கோள்கிறேன்.

1981 எப்ரல் 20]

[திரு. உ. சுப்பிரமணியன்]

க்ராப் இன்ஷுரன்ஸ் திட்டத்தைப் பொறுத்த வரையில், பயிர் பாதுகாப்புத் திட்டத்தைப் பொறுத்த வரையில் பலமுறை இங்கே பேசப்பட்டுள்ளது. நம் மாநிலத்தில் ஏதோ ஒரு குறிப்பிட்ட பகுதியில் அது அமலுக்கு இருந்து வருவதாக அறிகிறேன். அதில் எந்தளவிற்கு முன்னேற்றம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஏறக்குறைய நிரந்தரமாக, தொடர்ச்சியாக பல ஆண்டுகளாக வறட்சிக்கு இலக்கான பகுதிகளில் கட்டாயம் இந்த பயிர் பாதுகாப்பு உறுதிச் சட்டம் தேவைப்படுகிறது. அங்குள்ள மக்களிடையே கட்டாயமாக இன்ஷுரன்ஸ் செய்து கொள்ளவேண்டிய நிலைமையை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் தான் அவர்களுக்கு ஏற்படக் கூடிய இன்னல்களைத் தவிர்க்க முடியும்.

மற்றத் தொழில்களை நாம் எடுத்துக்கொண்டால் அவர்கள் கையில் பணத்தை வைத்துக்கொண்டு தொழில்கள் செய்கிறார்கள். ஆனால் விவசாயத்தைப் பொறுத்தவரையில் பணத்தை கையில் வைத்துக்கொண்டு விவசாயம் செய்வதில்லை. விவசாயம் செய்யும் நேரத்தில் பணத்திற்காக அலைகிறார்கள். எங்குமே பணம் கிடைக்கவில்லை என்றால் நகைகளை விற்று, தாலியை அடமானம் வைத்து அல்லது இருக்கக்கூடிய பொருள்களை விற்று விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். அப்படிச் செய்தும் மழை சரியாகப் பெய்யாது போனால் அல்லது இயற்கைச் சீற்றங்கள் காரணமாக பல்வேறுவிதமான இடைஞ்சல்கள் ஏற்படும்போது அதனால் ஏற்படுகிற நஷ்டத்தை ஈடு செய்ய விவசாயிகளுக்கு வழிவகை இல்லை. இருக்கிற நகைகள் அல்லது நிலங்களை இழக்கவேண்டிய நிலையில் இருப்பதால் இந்த அரசாங்கம் கண்டிப்பாக—பல்வேறு மாநிலங்களில், குறிப்பாக தென் மாநிலங்களில் அடிக்கடி வறட்சி, புயல், வெள்ளம் இவற்றிற்கு ஆளாகிற பகுதிகளில்—இந்த ஆண்டிலிருந்து க்ராப் இன்ஷுரன்ஸ் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள விவசாயத் துறை அதிகாரிகள் மக்கள் மத்தியில் அதிகமாக நெருங்கி தொடர்பு கொள்ளாத காரணத்தால் நவீன விவசாய முறைகள் பற்றி விவசாயிகள் அவ்வப்போது தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லை. ஆகவே அதற்கான தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத் துறையில் இருந்து வசதிகள் செய்திருந்தாலும் கூட நல்லமுறையில் அது பயன்படவில்லை, அந்த வசதிகளின் பலன் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வந்து சேரவில்லை. எனவே அதிகாரிகள் மக்களோடு ஒன்றி உறவாடி விவசாயப் பெருங்குடி மக்களும் அவர்கள் சொல்கின்ற கருத்துக்களை ஏற்று நவீன விவசாய முறைகளை விவசாயத்தில் புகுத்தி உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழி வகை காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

[திரு. உ. சுப்பிரமணியன்]

மின்சாரத்தைப் பொறுத்த வரையில் இது அதிகமாக இங்கே பேசப்பட்ட விஷயம். இருந்தாலும் அதைப்பற்றி திரும்பத் திரும்ப சொல்லித்தானாக வேண்டும். இப்போது மின்சார சப்ளை கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் கூட கொடுக்கிற நேரம் உகந்ததாக இல்லை என்பதை மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன். காரணம், மற்றத் தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் பாதுகாப்பான இடங்களில் நல்ல கட்டடங்களில் அவர்கள் தொழில் புரிகிறார்கள். எனவே அவர்கள் இருக்கிற இடங்களிலேயே மின்சாரம் வழங்கப்பட்டு அவர்கள் தொழில்கள் தங்குதடையின்றி நடைபெறுகின்றன. ஆனால் விவசாயிகளை எடுத்துக் கொண்டால் அவர்கள் காடுகரைகளில், பாம்புகள் பூரான்கள் போன்ற விஷ ஜந்துக்கள் வாழக் கூடிய இடங்களில் இரவில் செல்வது என்றால் பாதுகாப்பற்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், அதற்கு உறுதுணையாக விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் ஒரு மாற்று ஏற்பாடு செய்து பகலில் விவசாயிகளுக்கு விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கக் கூடிய வகையில் தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

கடன்களைப் பொறுத்த வரையில், 30—6—1981—க்குள் செலுத்திவிட வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. விவசாயி, தன்னால் கட்ட முடியவில்லை, வெள்ளாமை பொய்த்துவிட்டது, மழை பொய்த்துவிட்டது என்ற வகையில், கடன்களை கட்ட முடியாத நிலை பல இடங்களிலே இருக்கிறது: அதைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் அதைக் கட்டவேண்டுமென்று நீங்கள் சொல்வது எந்தவிதத்திலும் நியாயமில்லை. மேலும், சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பாகுபடுத்தி, எங்கேயாவது சிறிது அதிக நிலம் வைத்திருக்கிறார்களா என்ற கண்ணோட்டத்துடன், தமிழ்நாட்டின் சாதாரண வறண்ட பகுதிகளிலே இருக்கும் விவசாயிகளையெல்லாம் இப்படி வருமானம் வருகின்றவர்களாகக் கருதுவது எந்த விதத்திலும் நியாயமில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர். அங்கு பலர் அதிகமான நிலங்களை வைத்திருந்தாலும் கூட, வரி கட்ட முடியாமல், வரி பாக்கிக்காக தங்கள் நிலத்தை விற்கின்ற நிலைமை இருப்பதால், அவர்களையெல்லாம் பெரிய விவசாயிகள் என்று கருதாமல் அவர்களுக்கு சலுகை அளிப்பது அவசியம் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும், விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் இளைஞர்; துடிதுடிப்பானவர்.

[திரு. உ. சுப்பிரமணியன்]

இருப்பினும், விவசாயத் துறையில் இன்னும் அதிகக் கவனம் செலுத்தினால், பெரும்பாலான மக்கள் பயனடைவார்கள் ஆனால், அவர்கள் பல்வேறு வேலைகளில் ஈடுபட்டிருப்பதால் இந்த நாட்டிற்கு கிடைக்க வேண்டிய பலன் தடைபடுகின்றது என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். (குறுக்கீடு) அமைச்சர் அவர்கள் முழுக் கவனம் செலுத்தினால், தமிழ் நாட்டினுடைய விவசாயிகள் இன்னும் நல்லமுறையில் பயனடைவார்கள் என்ற நல்லெண்ணத்தோடு தான இதை நான் சொல்கிறேன். இதிலே பல்வேறு சர்ச்சைகளுக்குள் நான் ஈடுபடாமல், இந்த நாட்டு விவசாயிகள் பலன்பெறக்கூடிய வகையில் அவர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். அண்ணாதாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீது பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய உங்களுக்கு நன்றிகலந்த வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு முன்னாலே இந்த மன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் விவசாயிகளுடைய நிலைகளைப் பற்றி ஆழ்ந்த கவலையோடு, ஆழ்ந்த சிந்தனையோடு பல கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதிலே, குறிப்பாக, பிரதான எதிர்க் கட்சியிலே இருக்கின்ற மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திருவேங்கடம் அவர்கள், அவர்களுடைய பாணியிலே எங்களுடைய ஆட்சிக்காலத்திலேதான் இந்த தமிழ் நாட்டிலே உணவு நிலைமை தன்னிறைவு பெற்றது என்ற விளக்கத்தை இங்கே சொன்னார்கள். நான் மிக்க பணிவோடு என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னாலே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திருவேங்கடம் அவர்களுக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டை $7\frac{1}{2}$ ஆண்டுக்காலம் ஆண்டு கொண்டிருந்த காலத்திலே வேளாண்மைத் துறையிலே, உணவுத் துறையிலே தன்னிறைவு பெற்றது எங்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே என்று எடுத்துச் சொன்னார்கள். ஆனால், உணவுத் துறையிலே தன்னிறைவு பெற்ற உங்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் ஒரு படி அரிசி 8 ரூபாய்க்கு விற்றது, அந்தக் கொடுமையை தயவு செய்து மறந்துவிடக் கூடாது என்பதை நான் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு) தன்னிறைவு பெற்ற அந்த நேரத்திலேதான் அப்படி நிலைமை இருந்தது ; இதைக் குற்றமாக தயவு செய்து கருதக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி கடந்த 3 ஆண்டு காலமாக நடக்கிறது. இந்த 3 ஆண்டு காலத்திலே நடந்த நிகழ்ச்சிகளை இங்கே இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களும் நன்கு அறிவார்கள்.

[திரு. எம். அண்ணாதாசன்]

நீண்ட டலமாாலமாக, இந்தியா நாடு சுதந்திரம் பெற்று, விவசாயிகள் எந்த மாவிற்கு மேம்பாடு பெற்றார்கள்என்பதை தயவு செய்து எண்ணையார்க்க வேண்டும். இந்த நாட்டிலே உழவுத் தொழில் இல்லைாான்றால், மற்ற எந்தத் துறையிலும் மேம்பாடு அடைய முடியாது யாநிற நிலை வரையறுக்கப்பட்ட ஒன்றாகும்.

அதை அடிப்பனைர்நாக நாம் ஏற்றுக் கொண்டோமே ஒழிய அதை செயல் வடிவனடுமகொடுப்பதற்கு எந்த காலகட்டத்திலேயும் எடுத்துக் கொள்ளப்படாததை இங்கே இருக்கின்ற மாண்பு மிகு உறுப்பினர்கள் அனைவரும் மறந்து விடக்கூடாது. சுதந்திரம் பெற்று 34 ஆண்டுகளை நாம் தாண்டியிருக்கிறோம். ஆனால் இன்றைக்குச் சொல்கிறோம் விவசாயி வேதனையோடு கண்ணீர் வடிக்கிறான் என்று; அவனுடைய உழைப்பு வீண் விரயமாகி வீதியிலே திரிகிறான் என்ற நிலைமைகளைப் பேசிக் கொண்டிருக்கிறோம். நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், நாம் சுதந்திரம் பெற்றது எப்போது? ஆரம்ப காலத்திலே சொன்னோம், ''ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவுமே இல்லை. ; என்றும் நம் வாழ்விலே பஞ்சமே இல்லை'' என்று. ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார், மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்'' என்று மிகப் பெரிய அறிஞர்கள் எல்லாம் நமக்கு சொல்லிச் சென்றிருக்கிறார்கள். சுதந்திரம் பெற்றவுடன், கிராம இராஜ்யமே இராம இராஜ்யம், என்று அழகாக காந்தி அவர்கள் சொன்னர்கள். அந்த வழியிலே வந்தோர்கள் தான் இங்கே இருக்கிற நாமெல்லாம் ஆண்டு முடித்திருக்கிறோம், ஆண்டு கொண்டிருக்கிறோம் என்பதை தயவு செய்து மறந்துவிடக் கூடாது. அந்த நிலையில் விவசாயிகள் நிலைமைகளை அரசியல் கருத்துக்களோடு பார்க்காமல், கடமையுணர்ச்சியோடு நீங்கள் பார்ப்பீர்களேயானால், உண்மையான நிலை நிச்சயமாக தெரியும். இது போன்ற தேவைகளை கடந்த முப்பது ஆண்டுக் காலத்தில் ஆண்டவர்கள் செய்திருப்பார்களேயானால் நிச்சயமாகச் சொல்கிறேன், நீங்கள் சொல்கிற இந்த ஏழை எளிய விவசாயிகளுக்கு இந்த நிலைமைகள் இல்லாமல், நாங்கள் இப்பொழுது வேதனையோடு அணுகிக் கொண்டிருக்கிறோமே இந்த நிலைமையெல்லாம் இல்லாமல் விவசாயிகள் மேம்பாடு அடைந்திருப்பார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின்அரசு தான் சொன்னதை சொன்னபடியே பொறுப்பேற்றவுடன் நிறைவேற்றியது. நூறுகோடி ரூபாய்க்கு மேலான கடனை ஏழை விவசாயிகளுக்கு நீக்குகிறோம் என்று அறிவித்தார்கள் என்பதை மனிதாபிமான தன்மையோடு மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நூறு கோடிக்கு மேலாக எந்த கால கட்டத்தில் இந்த விவசாயிகளுக்கு நன்மை கிடைத்தது என்பதை தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

[திரு. எம். அண்ணாதாசன்]

எதிர்க் கட்சியிலே இருந்து கொண்டு, வேண்டாத வெறுப்பிலே பேசிவிடுவதன் காரணமாக நிலைமைகள் மாறாது அங்கே இருக்கிற ஏழை எளிய மக்கள் நிச்சயமாக மறந்துவிட மாட்டார்கள்.

ஆதியிலே சொன்னாரே காந்தி அவர்கள், ''கிராம இராஜ்ஜியமே இந்த நாட்டிலே முக்கியமான இராஜ்யம்'' என்று, அதை புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி தான் கிராமங்களிலே பல திட்டங்களை அமுல் படுத்துவதற்கும், அதனுடைய பலன் விவசாய பெருங்குடி மக்களுக்கு உடனடியாக வரக்கூடிய அளவிற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே பாராட்டாமல் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரையில் எத்தனையோ போராட்டங்கள் துவக்கப்பட்டு, பல கோரிக்கைகளை முன் வைத்த பெரியவர்கள் தான் கடந்த 30 ஆண்டு காலத்திலே மிக பொறுப்பான நிலைகளிலே இருந்தவர்கள். இப்போது அவர்கள் சொல்லும், ''உழுதவன் கணக்குப் பார்த்தால், உழக்குக் கூட மிஞ்சாது'' என்பதை அவர்கள் முன்பே சொல்லி, செயல்படுத்தியிருப்பார்களேயானால், நிச்சயமாக இந்த ஏழை விவசாயிகள் விவசாயத்திலே உழுது கணக்கு பார்த்திருக்க முடியும். ஆனால் காலந்தாழ்த்தி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே, அரசு ஏழை எளிய விவசாயிகளுக்கு, நடுத்தர விவசாயிகளுக்கு பல நன்மை பயக்கிற திட்டங்களை உருவாக்கியிருக்கிறது. ; உருவாக்கிக் கொண்டிருக்கிறது, என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு தமிழ்நாட்டிலே நமது தமிழினுடைய பாரம்பரியத்தை தெளிவாக பேசிக் கொண்டிருக்கிறோம். தமிழனுடைய மரபு மிக உயர்ந்த மரபு என்று சொல்கிறோம்.

[முற்பகல் 11-20]

தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மக்கள் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளைத தான் கொண்டாடுகிறார்கள். ஆறு மாதங்கள் கஷ்டப்பட்டு வெயில் என்றும் பாராது, கடுமையாக உழைத்து, நிலத்தை உழுது அதனுடைய பலன்களைப் பெறுவதற்கு முன்னாலே பொங்கல் திருநாள்

[திரு. எம். அண்ணாதாசன்]

என்று திருநாள் வருகிறது. அந்த நேரத்திலே விவசாயிகள், ஏழை எளிய மக்கள் பொங்கல் திருநாள் என்று கொண்டாடுவதற்கு கையில் பணம் இல்லாத நிலையில் அவர்கள் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். ஒரு மூட்டை நெல்லை 50 ரூபாய்க்கு என்று குத்தகை பேசுவதைப் போல் பேசி அப்போது கடனை வாங்கவேண்டிய நிலைமைக்குஅவர்கள் தள்ளப்படுகிறார்கள், திருநாளைக் கொண்டாடுவதற்காக பெற்ற கடனை திருப்பிக்கொடுக்கிற முறையிலே அவர்கள் அறுவடை வருகிறபோது முழுவதையும் இழந்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருந்து கொண்டிருப்பதால் பொங்கல் திருநாளை அவர்கள் கொண்டாடுவதற்கு 500 ரூபாய் வாங்கவேண்டிய சூழ்நிலை இருப்பதால் புரட்சித் தலைவர் அரசு அந்த ஏழை எளிய விவசாயிகள் தைத்திங்கள் பொங்கல் திருநாளைக் கொண்டாடுகிற வகையில் பணத்தைக் கொடுக்க அரசு சார்பிலே ஒரு புதிய திட்டத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்கள் மூலமாக தைத்திங்கள் பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதற்கு ஒரு விவசாயக் குடும்பத்திற்கு ஐநூறு ரூபாய் கடனாகக் கொடுத்து அவர்கள் எல்லாம் கஷடப்படாது பொங்கல் திருநாளைக் கொண்டாடுவதற்கான ஒரு சட்டத்தை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே உய்யக் கொண்டான்கால்வாய் என்ற பாசன முறை இயங்கிக்கொண்டிருக்கிறது. நம்முடைய அரசு வேளாண்மை மேம்பாடு அடைய வேண்டுமென்ற முறையிலே திட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்ற இந்த நேரத்திலே 32 வது மைல் வரைக்கும் இருபோக சாகுபடி செய்யப்படுகிறது. அதை 44 வது மைல் வரையில் வாழவந்தான் கோட்டை என்று இருக்கிற அந்த மிகப்பெரிய டாங்க் வரையில் நீட்டித்துக்கொடுத்து இடையிலே உள்ள 40 ஆயிரம் ஏக்கர்களும் இருபோக சாகுபடியைப் பெறக்கூடிய நிலைமையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேட்டுக் கட்டளைப் பாசனத்திற்கு ஒரு போகத்திற்கு அதுவும் தற்காலிகமாக தண்ணீர் கொடுக்கப்படுகிறது. அந்த வாய்க்காலிலே 150 கிராமங்கள் அடங்கிய பாசனப் பகுதிகள் இருப்பதால் தற்காலிகமாக என்று இருப்பதை நிரந்தரமாக மாற்றி ஒருபோக சாகுபடிக்கு ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை, வேளாண்மை பற்றிய மூலதனச் செலவு சம்பந்தமான மானியத்திலே வேளாண்மை உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் தீவிரப்படுத்துவதற்கும் பல்வேறு திட்டங்களை மத்திய அரசும் மாநில அரசும் கொண்டு வருகின்றன; தீவிர உணவு உற்பத்தித் திட்டம், அமோக விளைச்

1981 ஏப்ரல் 20]

[திரு. என். பழனிவேல்]

சல் திட்டம், தீவிர சாகுபடித் திட்டம் என்று எத்தனையோ பெயர்களிலேவிவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்து அரசுசெயல் பட்டு வருகிறது. தமிழகத்தில் 75 சதவீதம் மானம் பார்த்த பூமியாக இருக்கின்ற நிலையிலே நாம் இருக்கிறோம். இன்றைக்குநவீனப்படுத்துகின்ற திட்டத்தைத்தீவிரப்படுத்துவதன் மூலமாக அதைச் செயலுக்குக் கொண்டு வருகிற இந்த நேரத்திலே அடிப்படையான சாதாரண விவசாயிகளுக்கு அதனால் ஏதாவது நன்மைகள் கிடைத்திருக்கிறதா அல்லது அவர்கள் வாழ்வில் ஏதாவது முன்னேற்றம் ஏற்பட்டு இருக்கிறதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கோடிக்கணக்கான ரூபாய் வேளாண்மைத் திட்டங்கள் என்ற பெயராலே செலவு செய்தும்கூட அடிப்படையான நிலச் சீர்திருத்தங்கள் இல்லாத காரணத்தினாலே போடக்கூடிய திட்டங்கள் மேல்குடி மக்களுக்குத்தான் போய்ச் சேருகின்றதே தவிர, சிறு விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மைகளும் அவைகள் மூலமாகப் போய்ச் சேரவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் உலக வங்கி உதவியோடு விவசாய அபிவிருத்தித் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. யாருக்கு அது பலனளிக்கிறது என்ற கணக்கைப் பார்க்க வேண்டும். சாதாரண விவசாயிகளை அதன் பலன் கொஞ்சம் கூடத் தொடுவது இல்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தென்னை உற்பத்தி, வாழை உற்பத்தி என்றெல்லாம் பிரச்சாரம் செய்யப்பட்டு, விளம்பரம் செய்யப்படுகிறது. ஆனால், அந்த விளம்பரங்கள், நான் ஏற்கெனவே சொன்னதைப் போல வசதியுள்ள பெருநிலக் கிழார்களுக்குப் போய்ச் சேர்கிறதேயொழிய 1 ஏக்கர், 2 ஏக்கர், 4 ஏக்கர் வைத்துள்ள சாதாரண விவசாயிகளுக்குக் கிட்டுவது கிடையாது. இன்றைக்கிருக்கின்ற வேளாண்மைத்துறை அதிகாரிகள் பெரிய நிலப்பிரபுக்களிடத்திலே ஆலோசனை கூறுவதும், உதவி செய்வதுமாக இருக்கிறார்களே தவிர, சாதாரணமாக 1 ஏக்கர், 2 ஏக்கர், 4 ஏக்கர்கள் புஞ்சை நிலம் வைத்திருக்கின்றவர்களுக்கு ஆலோசனை கூறுவதும் கிடையாது; உதவி செய்வதும் கிடையாது. இதையெல்லாம் கணக்கில் கொண்டு எதிர்காலத்திலே சாதாரண அடித்தட்டிலே உள்ள மக்களுக்கு அதன் பலன்கள் போய்ச் சேருகின்ற வகையில் பார்த்துக்கொள்ள வேண்டும். பெரிய விவசாயிகள் டிராக்டர்கள் வைத்திருக்கிறார்கள். பெரிய, பெரிய இயந்திரங்களை வைத்திருக்கிறார்கள்; பத்து மோட்டார், இருபது மோட்டார் என்று வைத்திருக்கிறார்கள். அவர்கள் எந்த ரூபத்திலேயும், இந்தச் சலுகைகள் இல்லாமலேயே முன்னேற முடியும். ஆனால், சாதாரண விவசாயிகளுக்கு அரசாங்கம் செய்யக்கூடிய உதவிகள் போய்ச் சேருவது கிடையாது. அதைக் கணக்கில்கொண்டு வருங்காலத்திலே அரசு நடவடிக்கைகளைச் செய்தாக வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. என். பழனிவேல்]

விவசாயப் பண்ணைகள் இருக்கின்றன. அந்தப் பண்ணைகளில் தொடர்ச்சியாக, கடந்த 1974-ஆம் ஆண்டு முதல் 1980-ஆம் ஆண்டு வரையில் பார்க்கும் பொழுது ஒவ்வொரு ஆண்டும் நஷ்டக் கணக்கையே காட்டியிருக்கிறார்கள். இந்த ஆண்டு கூட சுமார் எண்பது இலட்சம் ரூபாய்க்கும் மேல் நஷ்டக் கணக்கைக் காட்டியிருக்கிறார்கள். ஆனால், அரசுப் பண்ணைகளில் பணி புரியக் கூடிய வேளாண்மை ஊழியர்களுக்குக் குறைந்த பட்சமாக நிர்ணயிக்கப்பட்ட கூலியே கூட கொடுக்கப்படுவதில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அரசு நிர்ணயித்துள்ள கூலியை, பண்ணைகளில் பணிபுரியக்கூடியவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு இயக்கத்தின் பலன்களும் சாதாரண மக்களைப் போய்த் தொடுவது கிடையாது. ஒரு சிலருக்கு சில பலன்கள் போயிருக்கலாமே தவிர, பெரும்பாலும் கூட்டுறவு இயக்கம் எந்த நோக்கத்திற்காக இருக்கிறதோ அந்த நோக்கம் நிறைவேறுகின்ற வகையிலே சாதாரண மக்களுக்கு எந்தவிதமான உதவியும் செய்வதில்லை. நான் ஏற்கெனவே சொன்னதைப் போல பெரிய விவசாயிகள்தான் அதன் பலன்களை முழுவதும் அனுபவிக்கிறார்களே தவிர, சிறு விவசாயிகள் அந்தப் பலன்களைப் பெறுவதில்லை. குத்தகை வார விவசாயிகள் இருக்கிறார்கள், அவர்களுக்கும் கூட்டுறவு மூலம் கொடுக்கப்படும்சலுகைகள் கிடைப்பதில்லை. வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் இந்தத் துறையைக் கையில் வைத்திருக்கின்ற முறையிலே இதில் சற்றுக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பூச்சி மருந்து, உரம் ஆகியவற்றின் விலையை மத்திய அரசு திடீர் திடீரென்று ஏற்றுகிறது. இதனால், சிறு விவசாயிகள் பேச்சு மூச்சு விட முடிவதில்லை. எனவே, சிறு விவசாயிகளுக்கு இதில் ஏதாவது உதவி செய்தாக வேண்டும். குறைந்த பட்சம் மானியமாவது கொடுத்து, தண்ட வரியிலே சிறு விவசாயிகளுக்குச் சலுகை முறையிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நுகர்பொருள் வாணிபக் கழகம், விவசாயிகளிடமிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்யாமல் இடைத் தரகர்களை அல்லது வியாபாரிகளை வைத்துக் கொள்முதல் செய்கிறார்கள். இதனால் விவசாயிகளுக்குப் போய்ச் சேர வேண்டிய பலன்கள் அவர்களுக்குச் சேராமல் இடைத் தரகர்களுக்கு ஒரு பகுதி போய்ச் சேர்ந்து விடுகிறது. ஆகவே, விவசாயிகளிடத்திலிருந்து நேரடியாக அந்தச் சங்கங்கள் கொள்முதல் செய்தால் விவசாயிகளுக்கு அந்தச் சலுகைகள் போய்ச் சேருவதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 20]

[திரு. என். பழனிவேல்]

கடலை, மிளகாயைப் பொறுத்த வரையிலும், பொள்ளாச்சி போன்ற இடங்களில் கடலை மிகவும் அதிகமாக விளைகிறது. அந்தப் பகுதிகளில் பூச்சிகளின் தாக்குதலினால் விவசாயிகள் ஒவ்வோராண்டும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி போன்ற இன்னும் பல பகுதிகளில், அதிகமாக உற்பத்தியாகின்ற பகுதிகளில் அந்தப் பூச்சிகளைக் கொல்லுவதற்கான செலவுகளை அரசாங்கமே ஏற்றுக்கொண்டு, இதைத் தேசீய பிரச்சினையாகக் கருதி, அந்தச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

அதே போல், இன்றைக்கு நமது நாட்டிலே மழை குறைச்சல் என்று அடிக்கடி வனத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொல்வார்கள். நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்வது, சிறு விவசாயிகளுக்கு மாங்கன்றுகள், தென்னங்கன்றுகள், இன்னும் கொய்யா கன்றுகள் போன்றவைகள் நீங்களே இனாமாகவே வாங்கிக்கொடுக்கலாம். அவர்கள் அவற்றைப் பயிரிட்டு, காப்பாற்றுவார்கள். மகசூலை அவர்கள் எடுத்துக் கொள்வார்கள். மழையும் தாராளமாகப் பெய்யும். ஆகவே, அத்தகைய கன்றுகளைச் சிறு விவசாயிகளுக்கு இலவசமாக வாங்கிக் கொடுக்க வேண்டும்.

அதே போல், இன்றைக்குப் பழ உற்பத்திக்கு அரசு போதிய உதவி செய்வது கிடையாது. அதற்கு அதிகமான உதவி செய்ய வேண்டும். பழ உற்பத்தி ஆண்டுக்காண்டு அதிகமாவதாகச் சொல்லப்படுகிறதே தவிர, பழத்தினுடைய விலையைப்பார்த்தால் சாதாரண மக்கள் பழத்தைக் கண்ணாலே பார்க்கும் நிலைமை தானிருக்கிறதே தவிர, வாங்கிச் சாப்பிடும் சூழ்நிலை இல்லை. ஒரு வாழைப் பழம் 50 காசுக்கு விற்கப்படுகிறது. ஆரஞ்சுப் பழம் 60 பைசாவுக்கு விற்கிறது. ஆகவே, சாதாரண மக்களுக்கும் பழம் குறைந்த விலையில் கிடைக்கும் வகையில், அதனைப் பயிர் செய்வதற்கும் ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாள் முதல் விவசாய இலாகாவைப் பிரித்து, ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு தலைமையிடம் வைத்துச் செயல்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு அரசு ஏதோ உத்திரவிட்டிருப்பதாக நான் அறிகிறேன். இப்பொழுது பழனி தாலுகாவிலே வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் எதுவும் இல்லை. 1981 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1 ஆம் நாளிலிருந்தாவது அந்த அலுவலகம் அங்கே செயல்படுமா என்றால் இல்லையென்ற தகவல்தான் கிடைத்திருக்

[திரு. ஏன். பழனிவேல்]

கிறது. அதற்குப் பதிலாக திண்டுக்கல்லில் ஒரு அலுவலகமும், வேடசந்தூரிலே ஒரு அலுவலகமும் ஏற்படுத்தப் போவதாகச் சொல்கிறார்கள். அந்த மாதிரி இல்லாமல், பழனி தாலுகாவில் இரண்டு துணை தாலுகா அலுவலங்ககள் இருக்கின்றன. ஒட்டன் சத்திரம் மிகப் பெரிய ஏரியா. ஆகவே, வேடச்சந்தூரிலே ஒரு அலுவலகம் ஏற்படுவதற்குப் பதிலாக, பழனி தாலூகாவிலே ஏற்படுத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், பழனியிலிருந்து திண்டுக்கல்லுக்கு 60 கிலோ மீட்டர் வரவேண்டும், பழனியிலிருந்து வேடசந்தூருக்கு போக வேண்டுமென்றாலும் 60 கிலோ மீட்டர் போக வேண்டும். ஆனால், வேடச்சந்தூரில் இருப்பவர்கள் திண்டுக்கல் போக வேண்டுமென்றால், 15 கிலோ மீட்டர்தான் செல்ல வேண்டும். ஆகவே, வேடச்சந்தூரில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள அந்தத் தலைமையலுவலகத்தை, பழனி தாலூகாவில் ஏற்படுத்த வேண்டும். அதுதான் அந்தப் பகுதி மக்களுக்கு உதவுவதாக இருக்கும். அவர்கள் அதிகாரிகளோடு கலந்து உரையாடவும், விவசாய ஆலோசனைகளைப் பெறவும், விவசாய உற்பத்தியைப் பெருக்கவும் உதவியாக இருக்கும். ஆகவே, அந்தத் தலைமையகத்தைப் பழனியிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பழனி தாலூகா, ஒட்டஞ்சத்திரம் பகுதியில் 5 இலட்சம் மூட்டைகள் வெங்காயம் தேங்கியிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அது சம்பந்தமாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன், எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதை நியாயமான விலைக்கு அரசு கொள்முதல் செய்ய வேண்டும். அல்லது நுகர் பொருள் வாணிபக் கழகம் அதை எடுத்து, அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 5 இலட்சம் வெங்காய மூட்டைகள் தேங்கி இருக்கின்றன. அமைச்சர் அவர்கள் தொலைபேசி மூலமாகவே தொடர்பு கொண்டு, இன்றைறே அப்பிரச்சினைக்குத் தீர்வு காண வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. எம். சின்னராஜ்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வறட்சிக் காலத்திலே புரட்சிகரமான நல்ல திட்டங்களை உள்ளடக்கி, வேளாண்மைத் துறையினுடைய மானியக் கோரிக்கையினை முன் வைத்திருக்கிற நமது அமைச்சர் அவர்களையும் நமது அரசையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று நம்மைப் பார்த்து, யாரையோ நினைத்து, நீங்கள் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளையெல்லாம் செய்யாமல் விட்டு விடாதீர்கள் என்று பரிந்துரை செய்த காங்கிரஸ் கட்சிப் பெரியவரைப் பார்த்து நான் ஒன்றை நினைவு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்று வேளாண்மை மானியக் கோரிக்கையினுடைய முதல் சில பக்கங்களிலேயே

1981 ஏப்ரல் 20]

[திரு. எம். சின்னராஜ்]

இரண்டு பெரும் நல்ல திட்டங்களையும், அரசினுடைய கொள்கை நோக்கங்களையும், அரசு கோடிட்டுக் காட்டியிருக்கிறதுஎன்பதை நீங்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். உங்களுக்கு விடுகிற சவாலாகவோ அல்லது உங்களை எதிர்த்து, நாங்கள் எங்கள் அரசியலை நடத்த வேண்டுமென்பதற்காக கூறுவதாகவோ நீங்கள் தயவுசெய்து எண்ணிவிடக்கூடாது. நடந்துவிட்ட பல விவசாயப் போராட்டங்களுக்குப் பின்னால், முதலமைச்சர் அவர்களுடைய தலைமையின் கீழ் ஒரு வேளாண்மை ஆலோசனைக் குழுவும், மதிப்பிற்குரிய மாண்புமிகு முனு ஆதி அவர்கள் தலைமையில், விவசாய உயர்மட்டக் குழுவும் போடப்பட்டிருக்கிறது என்பதையும், அதில் நீங்கள் யாரை மனதில் கருதி, யாரைப் பார்த்து, அஞ்ச வேண்டாம் என்று சொல்கிறீர்களோ அவர்களையும் கூட, அவருடைய சங்கத்தைக் கூட உறுப்பினராக்கி, நல்ல எண்ணத்தோடு தான் இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை நீங்கள் உணர வேண்டும்.

ஆகவே இவ்வளவு காழ்ப்புணர்ச்சிக்குப் பின்னால், இவ்வளவு தூண்டுதல் போராட்டங்களுக்குப் பின்னால், அரசு இவ்வளவு நிர்ப்பந்தத்திற்குப் பின்னால் கூட, அவர்களையும்கூட உள்ளடக்கி ஒரு உயர் மட்டக் குழுவை அமைக்கிறது என்றால் உண்மையிலேயே இந்த அரசு உழவுத் தொழிலிலே ஈடுபாடுள்ளவர்களின் மீதுள்ள அக்கறை காரணமாகத்தானே ஒழிய, நீங்கள் நினைக்கிற மாதிரி எந்தச் சூழ்நிலையிலேயும், எந்த நிர்ப்பந்தத்திற்கும் ஆட்படுகிற அரசு, புரட்சித் தலைவர் அரசு இல்லை என்பதை நீங்கள் உணர வேண்டும். ஆனால் அதற்கு மாறாக இன்று மத்திய அரசிடமிருந்து உழவர்களுக்குக் குறிப்பாக தமிழ்நாட்டு உழவர்களுக்கு உரியவற்றை நீங்கள் பெற்றுத் தந்திருக்கிறீர்களா என்றால் நிச்சயமாக எந்த ஒரு சாதாரண விவசாயி கூட அதை மறுத்துக் கூறிவிட முடியும். முதலிலே விவசாயிகளின் பிரச்சினையாக நம் நாட்டிலே எழுப்பப்படுவது கடன் சுமை தான். இன்று கூட்டுறவுக் கடன்களுக்கு வட்டிகள் தள்ளப்பட்டு எல்லா கடன்களும் சிறு விவசாயிகளுக்கு 100 கோடி ரூபாய் வரையில் தமிழக அரசு அந்தக் கடன் சலுகையைத் தந்து விட்ட பின்னால், உங்களைப் பார்த்து உங்களால் இயலக்கூடியவைகளை நீங்கள் செய்ய வேண்டும் என்று நாம் மைய அரசைக் கேட்டால் ஏதோ மத்திய அரசிடமிருந்து நாங்கள் உரிமைகள் கேட்பதாக நீங்கள் கூறக் கூடாது. உரிமை வேறு. இங்கே நாம் அனைவரும் சேர்ந்து பாடுபடும் விவசாயிகளுக்குச் செய்ய வேண்டிய கடமை வேறு. அந்தக் கடமை உணர்வோடு நான் கேட்கிறேன். நீங்கள் நடத்துகிற அந்த அரசு வங்கிகளாவது, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் குறைந்த பட்சம் வட்டியில்லாத கடன் அல்ல—4 சதவீத வட்டியில் அந்த விவசாயிகளுக்கு கடன் கொடுக்க முன் வரக் கூடாதா? அல்லது அவர்கள் பட்டிருந்த கடன்கள் திருப்பிச்

[திரு. எம். சின்னராஜ்]

செலுத்த முடியாமல் ஓரளவு வட்டியை நீங்கள் தள்ளுபடி செய்வதற்காகக் கூட அல்ல. காலந்தள்ளி கொடுப்பதற்காக இந்த வறட்சிக் காலத்தில் உங்களிடத்திலே ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

நீங்கள் சார்ந்திருக்கிற அந்த மைய அரசைக் கேட்டிருக்கிறீர்களா ? இன்றைக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் பணி புரியக் கூடிய ஒரு சாதாரண கிளார்க்கு, அல்லது ஊழியர்களுக்குக் கூட வட்டி இல்லாத கடன், வட்டி இல்லாத முறையில் ஒரு இலட்சம் ரூபாய் அவர்களுக்கு வீடுகட்டிக் கொள்வதற்காகக் கொடுக்கிறார்கள். அப்படி அதன் அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படுகிறது. அப்படி இருக்கும்போது வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு குறைந்த பட்சம் வட்டியில்லாமல் ஏன் நீங்கள் கடன் கொடுக்க முன் வரக்கூடாது ? அதே போல இன்றைக்கு இருக்கின்ற இடுபொருள் விலைகள்.

விவசாயிகளுக்குத் தேவையான உரத்தின் விலையை நிர்ணயிப்பது யார்? நாம் மின்சாரத்தை உழவர்களுக்கு எவ்வளவோ கோடி ரூபாய் நஷ்டத்தில் வழங்குகிறோம். உங்களுடைய பட்ஜெட் மிக நீண்ட பட்ஜெட், மிக அதிகமான நிதி ஆதாரம் பெற்றது மத்திய அரசு. ஆகையினாலே நீங்கள் அவர்களுக்கு தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு இந்திய உழவர்களுக்கு ஓரளவுக்கு சப்சிடி ரேட்டில், குறைந்த மானிய விலையில் அவர்களுக்கு கொடுப்பதற்கு ஏன் முன் வரக்கூடாது ? அதேபோலத்தான் பூச்சிக் கொல்லி மருந்துகள், இதர இடுபொருள்கள் எல்லாம் மத்திய அரசு பார்த்துத்தான் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அதேபோல மறு முனையில் விளைகின்ற பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் கடமை மத்திய அரசுக்கு நிரம்ப இருக்கிறது என்பது நாம் அறிந்த உண்மையாகும். இதில் கட்சிக் கண்ணோட்டமோ, அரசியல் கண்ணோட்டமோ இல்லை என்பதை ஒப்புக் கொள்வீர்கள். மத்திய அரசினுடைய தயவில்தான் விலை நிர்ணயிக்கப்படுகிறது. மைய அரசுதான் கரும்பு விலையை நிர்ணயிக்கின்றது. நெல் விலையை நிர்ணயிக்கின்றது. பருத்திக் கொள் முதலை அதிகப்படுத்தி, ஏற்றுமதியை விரிவாக்கி அதை விளைவிக்கிற அந்த விவசாயிகளுக்கு உரிய விலை கொடுக்க வேண்டும். ஆகவே இவைகளை எல்லாம் இன்றைக்கு இருக்கிற அரசியல் அமைப்பிலே மட்டுமல்லாமல், நிர்வாக அமைப்பிலே கூட, உழவர்களுக்கு உண்மையிலேயே அவர்களுடைய பிரச்சினைகளுக்கு நிவாரணம் தேட முடியும் என்றால், நிச்சயமாக அது மத்திய அரசாங்கத்தினுடைய பரந்த உள்ளம் அவர்களுடைய நல்ல உணர்வு வேண்டும். அவர்களுக்கு விவசாயிகள்பால், ஈடுபாடு இல்லை, அக்கறை இல்லை என்று கூற மாட்டேன். இருக்கிற அந்த எண்ணம், அந்த உணர்வுகள் விரிவாக்கப்பட வேண்டும்.

[திரு. எம். சின்னராஜ்]

தமிழக அரசு தனக்கு இருக்கின்ற நிதி ஆதாரங்களை வைத்துக்கொண்டு முடிந்த அளவு நிவாரணங்கள் தந்துவிட்ட பின்னால் ஏதோ தேர்தல் காலங்களில் நாங்கள் வாக்குறுதி கொடுத்துவிட்டோம் என்பதற்காக நீங்கள்தான் அதை நிறைவேற்ற வேண்டும், எங்களுக்கு அந்த பொறுப்பில்லை, உணர்வில்லை என்று நீங்கள்தான் அந்த உணர்வை செயல்படுத்த வேண்டும் என்றால், அது எங்களுக்கு இழப்பாக இருக்காது, உங்களுக்கு, உங்கள் கட்சிக்கு அது இழப்பாக இருக்கும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நமது திட்டத்தில் முதல் திட்டமாக நமது வேளாண்மை அமைச்சர் தந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதும், போற்றத்தக்கதும் ஆகும். 'பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டம்' என்கிறபோது அந்தத் திட்டத்தின் கீழ் பல நிலைகளில் பணி புரிந்து வருகிற சிறப்புப் பணியாளர்களை ஒருங்கிணைத்துப் பயிற்சிப் பணியில் உள்ள இதர பணியாளர்களுடன் அவர்களை ஒருங்கிணைத்து, விவசாயிகள் ஈடுபட இருக்கின்ற தொழிலில் கிட்டத்தட்ட 800 அல்லது 1,000 விவசாயக் குடும்பத்திற்கு ஒரு பணியாளர் என்ற முறையில் அமைத்துத் தருகிற புரட்சிகரமான திட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த இருக்கிறது. இதன் வாயிலாக மாண்புமிகு திருவேங்கடம் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறைபாடு நீங்குவதற்கு வழி ஏற்படும்.

(முற்பகல் 11-40)

இந்த வறட்சி நிலையிலும் கூட வேளாண்மைப் பொருள்கள் உற்பத்தி அரசு கருதியுள்ள குறியீட்டை எய்துகிற அளவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், துறை அதிகாரிகள் துணையோடு நடவடிக்கை மேற்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அதற்கான வகையில் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பிலும் கூறியுள்ளார் என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையில், வேளாண்மைத் தொழிலாளர்கள் பிரச்சினையானாலும் சரி, அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் பிரச்சினையானாலும் சரி, அதைத் தீர்ப்பதற்கு நம்முடைய அரசு பல நல்ல திட்டங்களைத் தீட்டிக்கொண்டு இருக்கிறது, அதன் மூலம் அவர்களை பிரச்சினையிலிருந்து காப்பாற்றி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு ஆராய்ச்சிப் பிரிவுகள் சேர்க்கப்பட்டு அதன் மூலம் அந்தப் பல்கலைக் கழகத்தின் பணிகள்

[திரு. எம். சின்னராஜ்]

விவசாயிகளுக்கு பலன் அளிக்கின்ற வகையில் அமைக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். அந்த ஆராய்ச்சிப் பணியாளர்கள் பட்டியலில் வேதியல் ஆராய்ச்சியாளர்கள் (கெமிஸ்ட்ஸ்) விடப்பட்டு இருக்கிறார்கள். அந்தத் துறையில் இருப்பவர்கள் அதை ஒரு குறைபாடாகக் கருதுகின்றனர். ஆகவே, அந்த ஆராய்ச்சிப் பணியாளர்கள் பட்டியலில் இந்த கெமிஸ்ட் போன்றவர்களையும் சேர்த்துக் கொள்ள நம்முடைய அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் பணி பல்கலைக் கழகத்தில் இருந்தாலும், கோவை பல்கலைக் கழகத்தில் இருந்தாலும், அவர்களுடைய சேவை அரசுக்குத்தான் கிடைக்கிறது என்கிற வகையில் இந்த மாற்றத்தைச் செய்ய அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பல்கலைக் கழகம் குறித்து இன்னொரு கருத்தையும் சொல்ல விரும்புகிறேன். அந்தப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்கிறார். அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரி இருப்பதில் எனக்கு வேறுபாடு இல்லை. ஆனால் ஒரு பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருப்பது பொருத்தமுடையது அல்ல என்பது என்னுடைய கருத்தாகும். அந்தப் பல்கலைக் கழகத்தில் பெரும் பெரும் ஆராய்ச்சியாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களுக்குத் தலைவராக ஒரு விஞ்ஞானி இருப்பது தான் பொருத்தமாக இருக்கும். நிர்வாக முறைகளுக்கு வேண்டுமானால் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை வைத்துக் கொள்ளலாம், அல்லது ஒரு அக்கௌண்ட்ஸ் அனுபவம் உள்ள அதிகாரியை வைத்துக் கொள்ளலாம். ஆனால், பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக ஒரு பெரும் விஞ்ஞானி இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். அப்படி ஒரு விஞ்ஞானி நியமிக்கப்பட்டால் பல நேரங்களில் அங்கேயுள்ள ஆராய்ச்சியாளர்களிடையே ஏற்படுகின்ற காழ்ப்புணர்ச்சி குறைந்துவிடும். மேலும் அங்கே நடைபெறுகின்ற ஆராய்ச்சிகளும் நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கும்.

அண்மையில் ஏற்பட்ட ஒப்பந்தம் காரணமாக அங்கேயுள்ள ஆசிரியர்கள் அரசைப் பெரிதும் பாராட்டுகின்றனர். அதே நேரத்தில் அங்கேயுள்ள மாணவர்கள் ஒரு புதிய குரலை எழுப்பி இருக்கிறார்கள். பீல்ட் அசிஸ்டென்ட்டுகளுக்கு டெபுடி அக்ரிகல்சுரல் ஆபீஸர் என்கிற ப்ரமோஷன் கொடுப்பதற்காக வைக்கப்பட்டு இருந்த 10 சதவீத ஒதுக்கீட்டை தற்போது அரசாங்கம் 25 சதவீதம் என்று உயர்த்தி இருக்கின்றது. அது முன்புபோலவே இருக்க வேண்டும் என்று அவர்கள் (மாணவர்கள்) கோரிக்கை வைத்து இருக்கிறார்கள். இந்த ஒதுக்கீடு அதிகரிப்பின் மூலம் அவர்களுக்குக் கிடைக்கும் பதவி வாய்ப்பு குறைந்துவிடும், ஆகவே, அதைக் குறைக்க வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டு

[திரு. எம். சின்னராஜ்]

இருக்கிறார்கள். அதைத் தவிர்ப்பதற்காக அரசும், மாண்புமிகு அமைச்சர் அவர்களும் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் ஐ.ஆர்.டி.பி. (I. R. D. P.) மற்றும் ஹில் ஏரியா டெவலெப்மென்ட் போன்ற திட்டங்களை நிறை வேற்றுகிறபோது, ஆணைக்கட்டி, சிறுவாணி, பாலமலை போன்ற மலைப்பகுதிகளும் தொண்டாமுத்தூர் தொகுதியில் உள்ளன— சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. அந்தப் பகுதியில் இருளர்கள் என்ற மலை ஜாதியினர் வசிக்கின்றனர். ஆகவே, அந்த மக்க ளுக்குப் பயன்படும் வகையில், அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். எத்தனையோ திட்டங்கள் எடுத்துக் கொண்ட போதிலும், அந்தப் பகுதி எந்தத் திட்டத்தின் கீழும் எடுத்துக் கொள்ளப்படுவது இல்லை என்பதால், அந்தப் பகுதிகளை மலைவாழ் மக்கள் அபி விருத்தித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவும், வேளாண்மை உற்பத்தி பெருகவும், அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடிக்கிறேன், வணக்கம்.

*திரு. சோ. அழகசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவ ரவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியத்தின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு பொதுவாக ஒரு பெரும்பகுதி மக்கள், ஏறத்தாழ 3 கோடி மக்களுக்கு அதிகமாக நம்பி இருக்ககூடிய இந்த விவசாயத் தொழில் இன்றைக்கு எந்த நிலையில் இருக்கிறது என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு வேளாண்மைத் துறை விவசாயத்தில் நல்ல விதைகளைக் கொடுத்து, என்னென்ன விதைகளை பயன் படுத்த வேண்டும், எந்த, எந்த மாதிரியான உரங்களை பயன்படுத்த வேண்டும்; எந்த எந்த பருவங்களில் என்ன என்ன செய்ய வேண்டும் என்பது போன்ற பல நல்ல ஆலோசனைகளை வழங்கிவந்து, அதன் மூலமாக விவசாயிகள் நல்லமுறையில் உற்சாமகாகப் பணியாற்றி, உற்பத்தியை கடந்தகாலத்தில் பெருக்கியிருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் கடந்த காலத்தில் இதன்மூலம் அதிகமாக உற்பத்தி செய்தார்கள், வெகுவாக உற்பத்தியில் ஊக்கம் காட்டினார்கள். அந்த ஊக்கம் தொடர்ந்து அவர்களுக்கு இருந்துவர, விவசாயி

[திரு. சோ. அழகர்சாமி]

கள் வைத்த பல நியாயமான கோரிக்கைகள் நிறைவேறாத காரணத்தால் உற்பத்தியின் வேகம் எந்த அளவுக்கு மேலே சென்றதோ அதே அளவுக்கு இன்றைக்கு சரிந்துகொண்டு வருகிறது என்பதை உங்களுடைய புள்ளிவிவரங்களே காட்டு கின்றன. நெல் உற்பத்தியில் அரசின் குறிக்கோள் 23.20 இலட்சம் ஹெக்டேர் இருத்தற்குப் பதிலாக இன்றைக்கு 19.04 இலட்சம் ஹெக்டேர்தான் இருக்கிறது. அதைப்போல சிறு தானிய உற்பத்தியைப் பொறுத்தவரையில் டார்கெட் 6.55 இலட்சம் ஹெக்டேர். ஆனால் அது 5.38 இலட்சம் ஹெக்டேராக குறைந்திருக்கிறது. அதைப்போல பருத்திக்கு சரியான விலை கிடைக்காத காரணத்தால் பருத்தி சாகுபடி செய்யும் பரப்பு குறைந்திருக்கிறது என்பதை உங்கள் புள்ளி விவரம் காட்டுகிறது.

அது மட்டுமல்ல, எந்த விவசாயமாக இருந்தாலும், அது சரியாக நடைபெற வேண்டுமென்றால் அதற்கு வேண்டிய கடன்வசதி, பாசன வசதி, மின்சார வசதி இவை கிடைப்பது மிகவும் முக்கியமாகும். அதோடு உற்பத்தியான பொருட் களுக்கு நியாயமான விலையும் கிடைக்க வேண்டும். எந்த வசதிகளும் இன்றைக்கு சரியாக கிடைக்கவில்லை; நியாயமான விலையும் கிடைக்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு பெரிய நெருக்கடியில் இன்றைக்கு விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்தியா பூராவிலும் மிகப்பெரிய அளவில் நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது. அதனால் மேலும் மேலும் விவசாய உற்பத்தி குறையும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த விவசாய உற்பத்திக்கு பாதிப்பு ஏற்பட்டுகிறது என்றால் இதை நம்பி யிருக்கிற ஆலைத் தொழிலும் பாதிக்கும். அதனால் தொழி லாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அரிசி, சிறுதானியங்கள் போன்ற உணவு தானியங்கள் உற்பத்தி குறைந்தால் அதனால் இந்த நாட்டிலுள்ள பெரும்பகுதி மக்கள் பாதிக்கப்படுவார்கள். தமிழ்நாட்டுக்கும் பெரும் நெருக்கடி அதனால் ஏற்படும். அதைத் தடுக்க என்ன செய்ய வேண்டுமென்பதை இந்தத் துறை உன்னிப்பாக கவனிக்க வேண்டும். உரிய கவனம் செலுத்தி, சரிந்து வருகின்ற உற்பத்தியைப் பெருக்குவதற்கு, சரிவை சரி செய்வதற்கு சிறந்த முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டில் தமிழ்நாட்டில் எப்போதும் இல்லாத அளவுக்கு கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்று முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். நாமும் அதைப் பற்றி இந்த சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறோம். இப்படிப்பட்ட வறட்சி நேரத்தில், விவசாயத்தில் ஈடுபட்டிருக்கக்

1981 ஏப்ரல் 20]

[திரு. சோ. அழகர்சாமி]

கூடியவர்கள். கடுமையான நெருக்கடியில் சிக்கி இருக்கும்போது 1972-க்கு முன்னால் இருந்து வாங்கிய கடனை எல்லாம் இப்போது செலுத்த வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். 1972-லிருந்தே பல்வேறு காரணங்களால் கடனை சரியாகக் கட்ட முடியவில்லை. எல்லாவற்றையும் சேர்த்து இந்த நேரத்தில் உடனடியாகக் கட்டச் சொன்னால் எப்படி முடியும்? இதைப்பற்றி எனக்கு முன்னால் பேசிய திரு. திருவேங்கடம் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள். கெடுபிடி நடவடிக்கை; ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது பல்வேறு இடங்களில். கஷ்டநிலையில் இருக்கும் விவசாயிகள் மீது ஜப்தி நடவடிக்கை எடுப்பதன் மூலம் மேலும் மேலும் உற்பத்தி குறைவதற்குத்தான் வழி ஏற்படும். அதனால் இந்த நாட்டுக்கு கடுமையான பாதகம் ஏற்படும் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இன்றைக்கு அரசு பல சலுகைகளை அறிவித்து இருக்கிறது. இருந்தாலும் அந்த சலுகைகளின் பலன்கள் அந்த விவசாயிகளுக்கு சிறந்தமுறையிலே கிடைக்கவில்லை. இதற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கம் ஆராயவேண்டும். 5 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு சலுகை என்று சொன்னால், மதுரை, திருநெல்வேலி, தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் புன்செய் காட்டில் இருக்கிற 5 ஏக்கர் நிலம் தஞ்சை போன்ற மாவட்டங்களில் இருக்கின்ற 5 ஏக்கர் நன்செய் நிலத்திற்கு சமமாகாது. ஆகையால் 5 ஏக்கர் என்று சொல்லும்போது, அதை 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று அறிவிக்க வேண்டும்; 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை உள்ளவர்களுக்கு முழுமையான கடன் ரத்துச் சலுகை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கம் கடந்த காலத்தில் சில சலுகைகளை அளித்திருக்கிறது. கடந்த காலத்தில் கடனைக் கட்டாமல் இருந்தவர்களுக்கு அந்த சலுகை கிடைத்திருக்கிறது. ஆனால் ஒழுங்காக கடனைத் திருப்பிக் கட்டியவர்களுக்கு, வட்டிக்குமேல் வட்டி, அபராத வட்டி எல்லாம் சேர்த்து கட்டியவர்களுக்கு, தங்களுடைய உடைமைகளை அடமானம் வைத்து கடனைக் கட்டியவர்களுக்கு அந்த சலுகை கிடைக்கவில்லை. அதைப்பற்றி இங்கே இப்போது பேசவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், கடனை கட்டியவர்களுக்கும் அரசாங்கம் அறிவித்த சலுகை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதோடு எல்லா விவசாயிகளுக்கும் எல்லா வட்டிகளையும் ரத்து செய்து பல ஆண்டு தவணையில் கடன் பாக்கியைச் செலுத்த ஏற்பாடு செய்து உதவி செய்தால்தான் விவசாயம் சரியாக, சீராக நடக்கும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திரு. சே.ா. அழகர்சாமி[

அடிக்கடி அரசு பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறது. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் ஒரு விவசாய குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11–50]

அதேமாதிரியாக நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே விவசாய நலக்குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு மேலாக நம் முடைய சட்டமன்றத்தின் முன்னாள் தலைவராக இருந்த திரு. முனு ஆதி அவர்களுடைய தலைமையில் ஒரு உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் குழுக்கள் எல்லாம் இதுசம்மந்தமாக ஆலோசனை செய்து கொண் டிருக்கிறார்கள். இந்த நிலைமையிலே கூட்டுறவுக் கடன் களை எப்படி வசூல் செய்யவேண்டும் என்பது பற்றியும், இப்போது வசூல் செய்ய இயலுமா என்பது பற்றியும் மின்சாரக் கட்டணத்தை வசூலிப்பது போன்று அதாவது 1 ப்ளஸ் 1 என்ற முறையிலே பழைய பாக்கியில் ஒரு மாதக் கட்டணத்தை நடப்பு மாதக் கட்டணத்தோடு வசூலிக்கவேண்டும் என்று ஏற்படுத்தி இருப்பது போன்று இந்த கூட்டுறவுக் கடன்களை யும் மொத்தமாக வசூலிக்காமல் பகுதி பகுதியாக வசூலிக்க முடியுமா என்றெல்லாம் பரிசீலிக்கவேண்டும். வட்டி யைத் தள்ளலாமா, அபராத வட்டியைத் தள்ளலாமா, அல்லது அசலைத் தள்ளிவிடவேண்டுமா என்பன போன்றவற்றை எல்லாம் உயர்மட்ட குழு முடிவு செய்கின்ற வரையில் ஜப்தி நடவடிக்கைகளை எல்லாம் நிறுத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆளும் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் பேசுகின்றபோது பெரிய விவசாயி களிடமிருந்து கடனை வசூல் செய்யவேண்டும் என்று சொன்ன தாகக் கேட்டேன். ஆனால் பெரிய விவசாயியாக இருந்தாலும், சிறிய விவசாயியாக இருந்தாலும் அவர்களுடைய நிலையினை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். நேற்று கூட நான் பழனி தாலுகா, ஒட்டன் சத்திரம் வட்டாரத்திலே இரண்டு மூன்று இடங்களுக்குச் சென்று பார்த்தேன். அங்கே பத்து ஏக்கர் நிலத்திலே கிணற்றிலே தண்ணீர் இல்லாத காரணத்தால் போடப்பட்ட கரும்புகள் எல்லாம் காய்ந்து 10,000 ரூபாய் 15,000 ரூபாய் நஷ்டம் அடைந்திருக்கிறார்கள். ஆகவே அவர்கள் எல்லாம் உடனடியாகக் கடனைக் கட்டவேண்டும் என்று சொன்னால் அவர்களால் எப்படிக் கட்ட முடியும்? அவர்களிடம் கட்டுவதற்கு கையிலே காசு கிடையாது. ஆகவே உயர்மட்டக் குழு இதுபோன்ற இடங்களுக்கெல்லாம் நேரிலே சென்று அவர்களிடம் எந்த முறையிலே வசூல் செய்வது

1981 ஏப்ரல் 20]

(திரு. சோ. அழகர்சாமி)

அவர்களுக்கு துன்பம் இல்லாத வகையிலே நிவாரணம் அளிப்பது, எப்படி வசூல் செய்வது, எத்தனை ஆண்டுகளில் என்பன போன்றவற்றைக் கண்டறிந்து முடிவுக்கு வரவேண்டும். வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்திற்காகவே அரசால் பல முறை ஒத்திவைக்கப்பட்டு வந்த கடன்களை எல்லாம் மொத்தமாகக் கட்டவேண்டும் என்றால் அவர்களால் எப்படிக் கட்ட முடியும்? அதுவும் அந்தக் கடன்களை ஜூன் மாதத்திற்குள் கட்டவேண்டும் என்று உத்தரவுகளைப் போட்டிருப்பது சரியா? ஆகவே இந்த உயர் மட்டக் குழு அந்தக் கடன்களை எப்படி வசூல் செய்வது என்பதைப் பொறுத்தவரையில் ஒரு முடிவு சொல்கின்ற வரையில் எல்லாக் கடன் வசூல்களையும், ஜப்தி போன்ற நடவடிக்கைகளையும் அரசு நிறுத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பொறியியல் துறையைப் பொறுத்தவரையில் டிராக்டர்கள், புல்டோசர்கள் போன்றவற்றின் எண்ணிக்கை நம்முடைய மாநிலத்திலே மிகவும் குறைவாக இருக்கின்றது. அது போதாது. இன்றைய தினம் இங்கே விவசாயத்திலே ஈடுபட்டிருப்பவர்கள் உழவு மாடுகள் போன்றவற்றை வைத்து உழ முடியவில்லை. சிறு சிறு நிலம் வைத்திருப்பவர்கள் டிராக்டர் வைத்துதான் உழவேண்டும் என்றால் அவர்கள் தனியாரிடத்திலே இருந்துதான் டிராக்டர் வாடகைக்கு வாங்கவேண்டி இருக்கின்றது. அதற்கு அவர்கள் 75 ரூபாய் ஒரு ஏக்கருக்கு கேட்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தின் ஊராட்சி ஒன்றியங்களிடம் இருக்கின்ற டிராக்டர்கள் எல்லாம் பழுதடைந்து உபயோகமற்ற நிலையிலே இருக்கின்றன. ஆகவே உடனடியாக அவற்றை எல்லாம் பழுது பார்த்து குறைந்த கட்டணத்தில் விவசாயிகளுக்கு வாடகைக்கு விடுகின்ற வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, விவசாயப் பொறியியல் துறையிடம் அதிகமான டிராக்டர்களை வாங்கி கொடுத்து விவசாயிகளுக்கு அவற்றை முறையாகக் குறைந்த வாடகைக்கு விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து நிலச் சீர்திருத்தம், மண்வளப் பாதுகாப்பு மற்றும் இதர காரியங்களைச் செய்வதற்கு எந்தத் துறையாக இருந்தாலும் கருவிகள் மிகமிகக் குறைவு. அந்தக் கருவிகளுக்காக மனுப்போட்டு விவசாயிகள் கேட்டால் அவை கிடைப்பதற்கு வருடக்கணக்கில் ஆகின்றன. இன்றைக்குச் சொல்லப்பட்டிருக்கின்ற குறிப்பின்படி நம்மிடத்தில் 148 புல்டோசர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் அவைகளுக்கெல்லாம் வயது ஆகிவிட்ட காரணத்தால் அவை வேலைக்கு உதவாத நிலையில் இருக்கின்றன. இப்போது புதிதாக 5 வாங்குவதற்கு திட்டமிட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது போதாது. அதிகமாக வாங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

(திரு. சோ. அழகர்சாமி)

அடுத்து இன்றைக்கு சிறு சிறு விவசாயிகளால் அதாவது 3, 4 ஏக்கர் வைத்து விவசாயம் செய்கின்றவர்களால் கிணறு வெட்ட முடியாது. சாதாரணமாகக் கிணறு வெட்டவேண்டும் என்றால் 20,000 ரூபாய் தேவை. ஆகவே அரசாங்கமே சிறிய பாசனத் திட்டத்தின் மூலம் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொடுத்து அதிகமான நிலப்பரப்புக்கு நீர் பாய்ச்சக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்து தண்ணீர் தீர்வையை வசூல் செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யலாம். குழாய்க் கிணறுகளை அமைப்பதற்குரிய வகையிலே அவற்றிற்குத் தேவையான கருவிகளை அரசு வாங்கி வைத்துக்கொள்ளவேண்டும்.

அடுத்து வேறு எந்த மாநிலங்களையும் விட நம்முடைய தமிழ் மாநிலம் விசேஷமானது. வேறு மாநிலங்களில் பாசன வசதியைப் பொறுத்த வகையில் சீரான நல்ல இயற்கை வசதிகள் உள்ள மாநிலங்களாக இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில் கிணறு மூலமாகப் பாசனம் பெறக் கூடிய வாய்ப்புத்தான் அதிகம். 8½ இலட்சம் பம்ப் செட், 2 இலட்சம் ஆயில் எஞ்சின் மற்றும் 12 இலட்சம் கிணறுகள் ஆகியவற்றின் மூலமாகத்தான் நம்முடைய விவசாயிகள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். 25 இலட்சம் ஏக்கர்களுக்குக் குறையாமல் கிணற்றுப் பாசனத்தினை நம்பித் தான் நம்முடைய விவசாயம் நடக்கின்றது. இந்த நிலைமையினை வைத்துக்கொண்டே நம்முடைய விவசாயிகள் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறக்கூடிய வகையிலே உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே நமக்கு பிரதானமான பாசனவசதி கிணற்றுப் பாசனம் தான். இதை வைத்துத்தான் இவர்கள் தங்களது கடுமையான உழைப்பையும் பயன்படுத்தி விவசாய உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறார்கள்.

ஆகவே ஒவ்வொரு விவசாயியும் 20,000, 30,000 செலவு செய்து, அரசாங்கத்திடமிருந்து பெறும் கடன் பற்றாமல் மேற்கொண்டு வெளியிடங்களிலேயிருந்தெல்லாம் கடன் வாங்கி கிணறுகள் வெட்டி கிணற்றுப் பாசனம் மூலம் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்வதில் நாம் மிக விசேஷமான அக்கறையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதேபோல மின்சாரத்தைப் பொறுத்த மட்டில், பல இடங்களிலிருந்தும் குறைபாடுகள் வருகின்றன. போகிற இடங்களிலே எல்லாம் அதைப்பற்றித்தான் புகார்கள் சொல்கிறார்கள். இரவு நேரங்களிலே மின்சாரம் தருகிறார்கள். தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை என்று சொல்கிறார்கள். இரவு நேரத்திலே மின்சார சப்ளை விடுவதினால், கரும்பு தோட்டத்

(திரு. சோ. அழகர்சாமி)

திற்கு தண்ணீர் பாய்ச்ச முடிவதில்லை. ஏனென்றால் அங்கே பாம்புகள் இருக்கும். பாட்டரிகளின் உதவிகள் வேவை, அதே போல சோளம் போன்ற பயிர்களுக்கும், பருத்தி போன்ற பயிர்களுக்கும் இரவிலே தண்ணீர் பாய்ச்ச முடியாது. ஆகவே, பகல் நேரங்களில் ஒரு 6 மணி நேரத்திற்கு குறையாமல், விவசாயத்திற்கு மின்சாரத்தைக் கொடுப்பதற்கு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டு பெற்றுத் தரவேண்டும். இரு துறைகளும் தனித் தனி அமைச்சர்களின் பொறுப்பில் இருப்ப தால் விவசாயத் துறை அமைச்சர், மின்துறை அமைச்சரிடம் கேட்டு பெற்றுத் தர வேண்டும். தொழிற்சாலைகளுக்கு வேண்டு மானால், இரவிலே மின்சாரம் கொடுக்கலாம். அல்லது ஜென ரேட்டர்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஆகவே, பகல் நேரங்களிலே 6 மணி நேரம் இரு பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் 6 மணி நேரம் காலை, மாலை என பிரித்து மின்சாரத்தைக் கொடுக்கவேண்டும். அதற்கான ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக விளை பொருள்களுக்கு நியாயமான விலை என்ற பிரச்சனையை எடுத்துக் கொண்டால், இன்றைக்கு நம் முடைய மாநிலத்திலே பல இடங்களிலே விற்பனைக் கூடங்கள் இருக்கின்றன. மார்க்கெட்டிங் கமிட்டிகள் இருக்கின்றன. இந்த கமிட்டிகளுக்கு, நாடு பூராவும் சரியான விலையை நிர்ணயம் செய்யக் கூடிய அளவிற்கு அதிகாரம் கிடையாது. பொருள்களை வாங்கி விற்று, கமிஷன் ஏஜெண்டுகள் போன்று நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட முன்பு, மகாராஷ்டிர **மாநிலத்திலோ**, அல்லது வேறு எங்கோ இருப்பதைப்போன்ற ஒன்றை அதாவது ஸ்டேட் காட்டன் டிரேடிங் கார்ப்பொரேஷன் மாதிரி ஒரு கார்ப்பொரேஷன் அமைத்து, பருத்தி விளை பொருள்களையும், எண்ணெய் வித்துப் பொருள்களையும் வாங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதாக அல்லது செய்ய விருப்பதாக ஒன்றை சொல்லி வந்தார்கள். அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அதேபோல இப்படி இடைத்தட்டிலே உள்ள வர்த்தக சூதாடிகள் கொள்ளை அடிக்கிற நிலைமையை போக்கி விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களுக்கு நியாயமான விலையை கொடுக்கக் கூடிய ஒரு நல்ல முறையைக் கொண்டு வரவேண்டும். முதல மைச்சர் அவர்களிடத்தில் கேட்டாவது இதற்கான ஒரு நல்ல முறையை கொண்டு வரக்கூடிய ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. சோ. அழகர்சாமி)

அடுத்தபடியாக ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் என்ற ஒரு திட்டம் இருக்கிறது. 376 ஊராட்சி ஒன்றியங்களிலும் இந்தத் திட்டம் செயல்படுகிறது என்று சொல்லப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக ஆகக் கூடிய செலவிலே 50 சதவீதம் மத்திய சர்க்காரும், 50 சதவீதம் மாநில சர்க்காரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நல்ல திட்டமானது, சாதாரண சிறு சிறு விவசாயிகளுக்கு உபயோகப்படும் அளவில், அவர்கள் வாங்கக் கூடிய முக்கியமான சில பொருள்களுக்கு, மூன்றில் ஒரு பங்கு அல்லது சற்று பெரிய விவசாயியாக, 5 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் வைத்திருப்பவர்களுக்கு நாலில்ஒரு பங்கு மானியமாகக் கொடுக்கக்கூடிய அளவிற்கு—அதாவது அவர்கள் வாங்கும் முக்கியப் பொருள்களுக்கு, விவசாய சம்பந்தமான முக்கியப் பொருள் களுக்கு-மானியம் கொடுக்கக் கூடிய வகையில் இந்தத் திட்டம் இருந்தாலும் கூட, இந்தத் திட்டம் சரியாக செயல்படுவது இல்லை. ஏனென்றால் மானிய உதவியை கொடுப்பதற்கு பிராஜக்ட் ஆபீசர்கள் தனியாக இருக்கிறார்கள். அதை வாங்கி விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக முயற்சி செய்யவேண்டும். இப்படி பல சிக்கல்கள். இதன் காரணமாக, காலா காலத்தில் கொடுக்கப்படவேண்டிய மானியம் கொடுக்கப்படுவதில்லை.

மத்திய சர்க்கார் ஒதுக்கியுள்ள அந்த பணத்தை இப்படி காலா காலத்தில் செலவழிக்க முடியாமல், அடுத்த ஆண்டில் அந்தத் தொகையை சரண்டர் பண்ணக் கூடிய நிலைமைஏற்படுகிறது என்று அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கூறிக் கொள்வதோடு, இன்றைக்கு நான் தலைவராக இருக்கும் ஒரு சொசைட்டிக்கு கூட 30,000 ரூபாய் மானியம் ஓராண்டாக வரவேண்டியிருக்கிறது. செய்ய வேண்டியது எல்லாம் செய்தாகி விட்டது. ஆடுகள் வாங்கி விட்டார்கள். மாடுகள் வாங்கி விட்டார்கள். மானியத்திற்காக மனு கொடுக்கப்பட்டும் கூட, இன்று வரையில் கிடைக்காத சூழ்நிலை இருந்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இது மாதிரி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிறு விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டிய உதவிகள் காலா காலத்தில் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அதற்காக சிறு விவசாயிகளைக் கொண்ட கமிட்டிகளை ஆங்காங்கே மாவட்ட அளவிலே அமைத்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேமாதிரி கவர்னர் உரையிலே கூட நிலங்களை தரிசு போட்டால், அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். எந்த விவசாயியும் நிலத்தை வேண்டுமென்றே தரிசு போட மாட்டான். பல இடங்களை விவசாயம் செய்ய முடியாத வகையில் அப்படிப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் மீது எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? அவர்கள் ஏதாவது

(திரு. சோ. அழகர்சாமி)

பயிர் செய்தால் ஏதாவது வருமானம் வருகிறதா? என்ற முறையில், சில இடங்களில் சவுக்கு போன்ற மரங்களைப் பயிரிடு கிறார்கள். விறகுக்காவது ஆகுமே—நஷ்டம் ஏற்படாமலாவது இருக்குமே என்று அப்படி போடுகிறார்கள். ஆகவே, வீட்டுக்கு ஒரு நபருக்கு ஒரு மரம் நட வேண்டும் என்று சொல்லப்படுகிற இந்தக் காலத்தில், இந்தச் சவுக்கு மரங்களை போட்டிருப்பவர் களை, தரிசாக வைத்திருக்கிறார்கள் என்று சொல்லி தடுக்காமல் அவர்களுக்கு வேண்டிய உற்சாகத்தை ஊட்டி, எந்த மகசூலை செய்தால் லாபகரமாக இருக்குமோ அதை செய்து கொள்ள அவர்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

அடுத்தபடியாக, பயிர் இன்ஷுரன்ஸ் பற்றி இதற்கு முன்னால் பல தடவை இங்கே எடுத்துச்சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் க்ராப் இன்ஷுரன்ஸ் திட்டத்தைப் பற்றி எந்தவிதமான நட வடிக்கையும் இப்பொது சொல்லப்படவில்லையே ஏன்?

நம்முடைய அரசாங்கத்தினால் நடத்தக்கூடிய விவசாயப் பண்ணைகளில் வேலை பார்க்கக்கூடிய ஊழியர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்குவதால் நாம் முன் உதாரணமாக இருக்கவேண்டும். அவர்களுக்குண்டான நியாய மான கூலி கொடுக்கப்படவேண்டும். அப்படி அவர்களுக்கு நியாயமான கூலி, உரிமைகள் கொடுக்கப்படாமல் இன்றைக்கு புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அரசுப் பழப்பண்ணையில் 150 பேர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள செங்கம் விவசாயப் பண்ணையில், அதேபோல் கோவில்பட்டியில் உள்ள விவசாயப் பண்ணையில் வேலை பார்க்கிற தொழிலாளர் களுக்கு நியாயமான கூலி கிடைக்காத ஒரு நிலை ; வேலைநீக்கம். ஆகவே ஒரு முன் உதாரணமாக இருந்து அரசுத் துறையில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

இன்று நீலகிரியில் உருளைக்கிழங்கு பயிருக்கு மோசமான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. அதையாவது காக்க வேண்டிய உதவியைச் செய்யவேண்டும். அதேபோல் கோவை மாவட்டத் தில் நிலக்கடலைபயிருக்கு அதிகமாக பூச்சி விழுகிறது. இன்று வேளாண்மைக்காக 66 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. இன்னும் அதிகமான தொகை ஒதுக்கப்படவேண்டும். பூச்சி விழுவதையும் முழுமையாகத் தடுக்கவேண்டும் என்றால் அதற்கு அரசாங்கமே

(திரு. சோ. அழகர்சாமி)

தனது பொறுப்பில் ஏற்பாடு செய்யவேண்டும். கடலைக்கு ஏற்படுகிற நோயினைத் தடுக்க ஏரியல் ஸ்பேரியிங் மூலம் மருந்து கள் தெளித்து நோயைத் தடுத்து நிறுத்தவேண்டும். (மணியடிக்கப் பெற்றது)

பயிர்பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் கொண்டு வரவேண்டும் அடுத்து ஆளும்கட்சியினரும் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். வறட்சி நேரத்தில் கெடுபிடி செய்வதை ஐப்தி போன்ற நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி உயர்மட்டக் குழு கூடி கடன் சம்பந்தமாக ஒரு முடிவு எடுக்க வேண்டும். முடிவு எடுத்து கொஞ்சம் கொஞ்சமாக பெரிய விவசாயிகளின் கடன்களை தவணை முறையில் திரும்பப்பெற்று சிறிய விவசாயிகள் கடன்கள் பூராவையும் ரத்துச்செய்ய வேண்டும். அப்போதுதான் விவசாய உற்பத்தி பெருகும். ஆகவே அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. தா. வீராசாமி: மாண்புமிகு சட்டப்பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண்கள் 20, 48 இவற்றின்கீழ் ரூ. 69,02,14,000 கோரப்பட்டுள்ளது. இம்மானி யக் கோரிக்கைகள் மீது எனக்கு பேசுகிற வாய்ப்பினை அளித்துள்ள தங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உழவர் உலகத்தார்க்கு அச்சாணி என்று கூறுவார்கள். அப்படிப்பட்ட வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற வேளாண் பெருங்குடி மக்களின் முக்கியத்து வத்தை உணர்ந்து நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கும் வகையில் திட்டங்கள் தீட்டி நல்லமுறையில் ஒரு திட்டத்தை இந்த மன்றத்தின் முன் அளித்திருப்பதற்காக அமைச்சர் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித் துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் அத்தனைபேர்களும் இந்த அரசின் வேளாண்மை கொள்கையையும் திட்டங்களையும் பல் வேறு விதமாக பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய நண்பர் திருவேங்கடம் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் பசுமைப்புரட்சி இந்த மாநிலத்தில் ஏற்படுத்தப் பட்டது என்பதை இங்கே தெளிவாகச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் ஆட்சிப்பொறுப்பு ஏற்பதற்கு முன், பட்டினி, பசி, வறுமை நிறைய இருந்தது என்பதை உறுப்பினர் கள் அறிவார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்குப் பிறகு பசி, பட்டினி தாண்டவமாடியது என்பதை உறுப்பினர்கள்

[திரு. தா. வீராசாமி]

மறுக்கமாட்டார்கள். அதற்குப் பிறகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற பசுமைப்புரட்சியை நாட்டில் முனைப்பாக நடைமுறைப்படுத்தி, சென்ற ஆண்டு தமிழகத்திலிருந்து 50,000 டன் அரிசி வெளிநாடு களுக்கு அனுப்புகிற அளவிற்கு தமிழ்நாட்டை தன்னிறைவு பெற்ற மாநிலமாக, உபரி மாநிலமாக ஆக்கிய பெருமை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு உண்டு என்பதைக் குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், இந்த ஆண்டு 1981—82ஆம் ஆண்டில் 91 இலட்சம் டன் அளவிற்கு உணவு உற்பத்தி பெருகும் வகையில் திட்டம் தீட்டி இருக்கிறார் கள் என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடக் கடமைப்பட் டிருக்கிறேன். அதற்கு மேலாக 22 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்கிற திட்டத்தையும், பருத்தி 4.8 லட்சம் பேல் உற்பத்தி செய்கிற திட்டத்தையும், இன்று நாட்டுக்கு தந்திருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது உள்ளபடியே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் இத்துறையின் பொறுப்பேற்றிருக்கிற வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களையும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே இதுவரை இல்லாத ஒரு புதிய திட்டத்தை பயிற்சி மற்றும் தொடர்பு வழி திட்டம் என்பது இந்த நாட்டிலே நடைபெற இருக்கின்றது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதன் பயனாக, இன்று வேளாண்மை பெருங்குடி மக்கள் வேளாண்மைத் தொழிலிலே முன்னேற்றம் அடைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இன்று 800 முதல் 1,000 விவசாயப் பெருங்குடி மக்கள் குடும்பங்களை ஒரு உதவி விவசாய அலுவலர் சந்திக்க முடியும். விரிவாக்கப் பணியாளர்கள் தங்களது தொடர்ந்த, முறையான பயிற்சி முறை மூலமாகவும் திட்டமிட பெற்ற தொடர்பு வழி மூலமாகவும் செய்கின்ற இந்தத் திட்டம் நாட்டிலே 1-7-1981 முதல் நடைபெற இருக்கின்றது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையிலே, இன்று ஒவ்வொரு வட்டங்களிலும் ஒரு வேளாண்மை உதவி இயக்குநர் நியமித்து, வேளாண்மை சீரும் சிறப்புமாக இந்த நாட் டிலே நடைபெறுவதற்கு இங்கே வழிவகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கும் மேலாக, தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம், தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகம் போன்ற கழகங்கள் இன்று தமிழ்நாட்டிலே வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கு வதற்காக நல்லமுறையில் பணியாற்ற இருப்பதற்காக, இந்தக் கழகங்களுக்கும், இந்தத் துறைக்கும் நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. த. வீராசாமி]

இங்கே பேசியவர்கள் இன்று இந்த அரசு எப்படியெல்லாம் வேளாண்மையை வளர்ப்பதற்காக, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு காரியங்கள் செய்து வருகின்றது என்பதைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற வகையிலே, தமிழகத்திலே உயர்மட்டக் குழுவை நியமித்து, மற்றத் தொழில்களிலே ஈடுபடுபவர்கள் வளர்ந்து வருகின்ற இந்த நேரத்திலே, வேளாண்மை தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களும் அதைப்போல்வாழ வேண்டுமென்பதற்காக, அதைக் கண்டறிவதற்காக, அவர்கள் குறைகளைப் போக்குவதற்காக, இன்னல்களைத் துடைப்பதற்காக இன்றையதினம் உயர்மட்டக் குழுவை அமைத்து, அதற்கான காரண காரியங்களை அறிந்து, விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு 'ரெமுனரேடிவ் பிரைஸ்' அதாவது லாபகரமான விலை பெறுவதற்காக இந்தக் குழுவை அமைத்திருப்பதற்காக நான் இந்த நேரத்திலே இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று இந்த அரசு கூட்டுறவுத் துறையிலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல பல சலுகைகளை அளித்து, கோடிக் கணக்கான ரூபாயை இந்த அரசு அளித்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே, தமிழக அரசைப்பொறுத்தவரை, மின்சாரத் துறையாக இருந்தாலும், கூட்டுறவுத் துறையாக இருந்தாலும் அல்லது நிலச் சீர்திருத்தம் செய்கின்ற வகையிலும், நிலங்களை நல்ல முறையிலே செய்தால், உற்பத்தி பெருகும் என்பதற்காக பல நல்ல நிலச்சீர்திருத்த சட்டங்களை இந்த அரசு நிறைவேற்றிக் கொண்டுவருகிறது என்பதை நன்கு அறிவார்கள். அந்த வகையிலே இந்த வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் அத்தனை பேரும் நல்ல பலனை அடைவார்கள் ; அதற்காக இந்த அரசு, இந்த துறை நல்லமுறையிலே சீரும் சிறப்புமாக பணியாற்றிக் கொண்டு வருகிறது. அதற்காக நான் இந்த அரசை மனதாரப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஒருசில கோரிக்கைகளை இங்கே எடுத்துவைக்க நான் முன் வருகிறேன். இன்று நம்முடைய தமிழகமானது, வேளாண்மைத் துறையில் பருவ மழை பொய்த்து, இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்பட்டிருப்பதை நன்கு அறிவோம். அந்த வகையிலே, இந்த வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் அந்தந்த நிலமைக்கேற்ப பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்களுடைய நலனைக் காப்பதற்காக, இன்று நம்முடைய நாட்டிலே இருக்கின்ற

[திரு. த. வீராசாமி]

விவசாயக் கிடங்குகளிலே அதிகமான ஸ்டாக் வாங்கி வைக்கப்படுகின்றது. அதை மேலும் அதிகரிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்று விதைப் பண்ணைகளில் விவசாயிகளிடமிருந்து விதைகளை வாங்குகிறார்கள். அப்படி விதைகளை வாங்கும் போது, தரம் பிரித்த பிறகுதான், அதற்கான தொகையை விவசாயிகளுக்கு பட்டுவாடா செய்கிறார்கள். அதனால், கால தாமதம் ஆகிறது. எனவே, இங்கே இருக்கும் உதவி விவசாய அலுவலர்கள், நேரடியாக விவசாயிகளிடமிருந்து விதைகளை வாங்கியவுடனேயே, அந்த விதைகளுக்கான தொகை யைப் பட்டுவாடா செய்ய வேண்டும், அதற்குப் பிறகு தரம் பிரிக்கின்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10.]

அதற்கு பிறகு இங்கே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தாவர இயல் பேராசியர் டாக்டர் சிங் அவர்கள் ஒன்றைச் சொன் னார்கள். இசையினால் தாவரங்கள் வளர்கிறது; இசை யினால் உற்பத்தி பெருகுகிறது என்று ஆராய்ச்சி செய்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் சொன்ன கருத்தினை நடைமுறையிலே நாட்டில் வேளாண்மைத் துறையில் செயல் படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கிராமங்களில் வயல்வெளிகளில் வானொலிப் பெட்டிகளை அமைத்து இசையைப் பரப்பி, நெல் பயிர், வாழை, கரும்பு போன்ற பயிர்களை வளரச் செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப்பற்றி ஒன்றை குறிப்பிட கடமை பட்டிருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தை தென்னாட்டின் நெற் களஞ்சியம் என்று சொல்வார்கள். அங்கே அறுவடையின் சமயத்தில் வட கிழக்கு பருவ மழை வந்து விடுகிறது. இதனால் விவசாயப் பெருங்குடி மக்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். கிராமங்களில் களங்கள் கட்டப்படுகின்றன. கட்டப்படுகின்ற களங்கள் பெரிய அளவில் அமையவில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஊராட்சி ஒன்றியத்தில் உபரிநிதியிலிருந்து பணத்தை பெரிய அளவிலே வழங்கி அங்கே இருக்கிற வேளாண்மைப் பெருங்குடிமக்கள் பயன் படுத்துகிற அளவிலே பெரிய களங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. த. வீராசாமி]

மேலும் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் நெடுஞ்சாலைகளில் பஸ்ஸோ, லாரியோ, கார்களோ செல்ல முடியாத அளவிற்கு விவசாய மக்கள் சாலைகளை ஆக்கிரமித்துகொண்டிருக்கிறார்கள். குறுக்கே வைக்கோல் போரை போட்டு விடுகிறார்கள். போக்கு வரத்திற்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நெடுஞ்சாலைப் பக்கத்தில் இருக்கின்ற புறம் போக்கு நிலங்களை எடுத்து பெரிய களங்களை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கிற அவர்களின் விளை பொருள்களுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். இன்று மாநிலங்கள் மாற்றான் தாய் பிள்ளைகள் போல நடத்தப்படுகின்ற நேரத் திலே ஒன்றைப் பணிவோடு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு எங்கோ இருக்கிறவர்கள், நெல்லைப் பயிரிடாதவர்கள், நெல் என்பதையே தெரியாத வர்கள், விலை நிர்ணயம் செய்கின்ற பொறுப்பிலே இருக்கிற ஒரு அவல நிலை இன்று நாட்டிலே இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். நெல்லை உற்பத்தி செய்யக்கூடியவர்கள், வேளாண்மைத் துறையிலே வல்லுநர்களாக இருக்கக் கூடியவர்கள், அந்தத் துறையிலே உள்ள சிரமங்களை அறிந்தவர்கள் தான் அந்தக் குழுக்களிலே இடம் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். அந்த வகையிலே இந்த மாநில அரசு மத்திய அரசிடத்தில் வலியுறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு மேலாக நான் குறிப்பிட விரும்புவதெல்லாம், விவ சாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை வியாபாரத்திற்காக சந்தைக்கு நெடுந்தூரம் எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கிராமப் பகுதிகளிலே, "அக்ரிகல்சுரல் மார்க்கெட்" என்று சொல்லக்கூடிய விவசாய விற்பனைக்கூடங்களை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விற்பனைக் கூடங்களிலே நல்ல விலை விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய வகையிலே நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

[பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

தஞ்சை மாவட்டம் தென்னாட்டினுடைய நெற்களஞ்சியம் என்று சொல்வார்கள். இன்று தமிழகத்தைக் காக்கின்ற பொறுப்பு, தமிழகத்திற்கு உணவளிக்கின்ற பொறுப்பு, தஞ்சை மாவட்டத் திற்கு இருக்கிறது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். வேளாண்மையையே நம்பியிருக்கிற மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரியை அமைக்கவேண்டுமென்று மாண்புமிகு

[திரு. த. வீராசாமி]

வேளாண்மை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டு கொள்கிறேன். அந்த மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் அல்ல. அந்த மாவட்டத்தில் உள்ள மக்கள் வேளாண்மையை நம்பியிருக்கிறார்கள். அவர்கள் வேளாண்மைத் தொழில் நுட்பங்களை தெரிந்து கொள்ள வேண்டுமென்றுச் சொன்னால், வேளாண்மையிலே இருக்கிற உயர்மட்ட அதிகாரிகளுடன், ஸ்தல பணியாளர்களுடன் ஆராய்ச்சிப் பணிகளை நன்கு தெரிந்துக் கொள்ள வேண்டுமென்றுச் சொன்னால், தஞ்சை மாவட்டத்திலே ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டிய அவசியத்தை அமைச்சர் அவர்கள் நன்கு உணர்வார்கள் என்று நம்புகிறேன். எனவே, தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, அமர்கிறேன், வணக்கம்.

திரு. பி. முகமது இஸ்மாயில் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றிருக்கிறபோது நான் இரண்டு கருத்துக்களை மட்டும் இந்த மன்றத்திலே வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். இங்கே பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் பயிர்ப் பாதுகாப்புச் சட்டத்தைத் தொட்டுவிட்டு விட்டு விட்டார்கள். பயிர்ப் பாதுகாப்புச் சட்டம் உடனடியாகக் கொண்டு வரப்பட்டு அமல் நடத்தப்பட வேண்டுமென்று இந்த அரசாங்கத்தை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இயற்கையின் சீற்றத்தினால் பாதிக்கப்படுகிற ஏழை விவசாயிகளுக்கு எந்த நல்லெண்ண அரசு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும் அவர்களுக்கு ஏற்படுகின்ற இழப்பை முழுமையாக ஈடுகட்ட முடியாது என்பதை உணர்ந்திருக்கிறது. எனவே, பயிர்ப்பாதுகாப்புச் சட்டம் ஒன்றுதான் விவசாயிகளுக்கு அவ்வாறு ஏற்படுகின்ற இழப்பை முழுவதுமாக ஈடுகட்டுவதாக அமைய முடியும் என்பதால் அதைக் கருத்திலே கொண்டு பயிர்ப்பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மை விளை பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வது பற்றி இங்கே பேசப்பட்டது. விளைபொருட்களுக்கு விலையை நிர்ணயம் செய்து விட்டதாலேயே விவசாயப் பெருங்குடிமக்களுக்கு அது நன்மை செய்துவிடாது. இங்கேமத்திய அரசு நிர்ணயித்த விலையை அதிகப்படுத்த முடிவு எடுத்திருக்கிறோம் என்று பெருமையுடன் பேசிக் கொள்ளலாம். விலையை அதிகமாக உயர்த்திவிடுவதால் மட்டும் விவசாயிகளுக்கு நன்மைகள் வந்து விடாது. இங்கே அரசு நிர்ணயித்த விலையிலே அரசுப் பொறுப்பிலே இருக்கின்ற நிறுவனங்கள் விளைபொருட்களை வாங்குவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சாதாரணமாக அறுவடைக் காலங்களிலே விளைபொருட்களுக்கான விலையை அரசு நிர்ணயம் செய்ததற்குப்

[திரு. பி. முகமது இஸ்மாயில்]

பிறகு விளைபொருட்களைக் கொண்டு வருகின்ற விவசாயிகளிடமிருந்து வாங்குவதற்கு அரசுப் பொறுப்பிலே இருக்கின்ற நிறுவனங்கள் தயக்கம் காட்டுகிறகாரணத்தினாலே வெளியிலே மார்க்கெட்டிலே இருக்கின்ற கீழான விலைக்கு விற்க வேண்டிய நிலைமைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு நிர்ணயித்த விலைக்கு வாங்குவதற்கு அரசுப் பொறுப்பிலே உள்ள நிறுவனங்கள் தயாராக இல்லாத காரணத்தினால் விவசாயப் பெருங்குடி மக்கள் வெளி மார்க்கட்டிலே கொண்டுபோய் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசு நிர்ணயித்த விலையிலே விவசாயிகள் விற்க முன்வருகிறபோது அரசுப் பொறுப்பிலே உள்ள நிறுவனங்கள் அதை வாங்குவதற்கு முன் வர வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்களின் துயர் துடைப்பதற்காக, உயர்மட்டக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த கமிஷனில் 9 அமைப்புகள்தான் இடம்பெற்றிருக்கின்றன என்று செய்திகள் வந்திருக்கின்றன. அரசியல் கட்சிகளைச் சார்ந்த, ஏனைய அமைப்புக்களும் அந்தக் குழுவிலே இடம்பெறக் கூடிய முறையிலே, எல்லா அமைப்புகளைச் சேர்ந்தவர்களுக்கும் அதிலே இடம் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

விவசாய யூனிவர்சிடியைக் கொண்டு வருகிற போது கன்னியாகுமரி மாவட்டத்திலே அதை நிறுவுவது வசதியாக இருக்கும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே உள்ள பத்மநாபபுரத்திலே அரசாங்கத்திற்குச் சொந்தமான 98 ஏக்கர் நிலம்—பலர் குடியேற்றம் செய்திருந்தார்கள், அதை அரசு அகற்றி திரும்பப் பெற்றிருக்கிறது—அரசாங்கத்தின் கையிலே வந்திருக்கிறது. இன்றைய தினம் அங்கே அந்த இடத்தை ஹார்டிகல்சருக்காகக் கொடுத்திருப்பதாகச் செய்திகள். ஆகவே, அங்கே விவசாய யூனிவர்சிடி அல்லது அந்தக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கான வசதிகள் இருக்கின்றன. ஆகவே, அங்கே அதை ஏற்படுத்துவதற்கான நிலைமைகளை ஆராய வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நான் முடிக்கிறேன்.

[பிற்பகல் 12-20]

*திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்: மாண்புமிகு சட்டபேரவைத் துணைத் தலைவரவர்களே, வேளாண்மைத்துறை மானியக்கோரிக்கையிலே பேசுகின்ற வாய்ப்புக்கொடுத்தமைக்காக முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, காந்தி-காமராஜ்

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக் களைக் கூறிக்கொள்ள விழைகிறேன். விவசாயம் ஒரு நாட்டின் முதுகெலும்பு என்றால் அது மிகையாகாது. தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காகப் பலவகையான சட்டங்கள் போடப்பட்டிருக் கின்றன; ஆனால், விவசாயிகளைப் பொறுத்த வரையில், அத் தகைய சட்டங்கள் இன்றைய தினம் இல்லை என்பதை வருத்தத் தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்துவதற்காகப் பல சங்கங்களை அமைத்திருக்கிறார்கள். அவர்கள் கூறியுள்ள சில நியாயமான கோரிக்கைகளை இந்த அரசு ஏற்றுக்கொண் டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன். மேலும், சில கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதையும் நான் சுட்டிக்காட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளின் சில கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன.

தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களின் பலன் பெரிய விவசாயி களுக்குத்தான் சாதகமாக இருக்கிறது என்றும், சிறிய விவசாயி களுக்கு அந்தக் கடன் தள்ளுபடியின் நன்மைகள் கிட்டவில்லை என்றும் கூறப்படுகிறது. அதைப்போல, கூட்டுறவு விவசாயக் கடன் சங்கங்களில் வசதி படைத்தவர்களுக்கு ஒரு சலுகையும், வசதியில்லாதவர்களுக்கு ஒரு சலுகையும் என்ற நிலைமையிருக்கி றது. இவையெல்லாம் களையப்பட வேண்டிய குறைகள்—களை யப்பட வேண்டும். மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தக் குறை களையெல்லாம் நிச்சயமாகக் களைவார்கள் என்று நம்புகிறேன். அவர்கள் அமைச்சர் மட்டுமல்ல; கம்பன் காவியத்தை சுவை படப் பேசுகின்ற ஆற்றல் மிக்க பேச்சாளரும் கூட. கம்பன், தசரத மன்னனின் அமைச்சர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள், என்று சொல்லும் பொழுது '' தம்முயிர்க்குறுதி எண்ணார் தலைமகன் வெகுண்டபோதும், வெம்மையைத் தாங்கி நின்று நீதி விடாது நின்று உரைக்கும் வீரர் '' என்று சொல்கிறார்கள் நம்முடைய அமைச்சரவர்கள் நீதிவிடாது நின்று உரைக்கும் வீர ராக இருக்கிறார் என்பதை அண்மைக் கால நிகழ்ச்சிகளிலிருந்து கண்டு கொண்டு வருகிறோம். எனவே, இந்தக் காரியங்களை அவர்கள் நிச்சயமாகச் செய்வார்கள் என்று நாங்கள் நம்புகி றோம்.

வேளாண்மைத் துறையிலுள்ள தோட்டக் கலைத் துறை 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்டது. இந் தக் குறுகிய காலத்தில் இத்துறை நல்ல பணி செய்துள்ளது. 1979–80 இல் 40 திட்டங்களே அமுல் செய்யப்பட்டன. 1980–81-இல் 65 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. 1981-82இல் 80 திட்டங்கள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. ஒவ் வொரு மாவட்டத்திலும் ஒரு பெரிய பழப்பண்ணை நிறுவப்

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

பட்டுள்ளது. 1980–81 இல் உதகமண்டலத்தில் ஒரு மலர்க் காட்சியும், குன்னூரில் பழக் காட்சியும் இத்துறையால் முதன் முறையாக நடத்தப்பட்டு சுமார் ஒரு இலட்சம் ரூபாய் அரசுக்கு வருமானம் கிடைத்துள்ளது. இவைகள் பாராட்டுக்கு உரியவை கள். இத்துறை இன்னும் சிறப்புறப் பணியாற்ற சில யோசனை களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தற்சமயம் மலைப்பிரதேச அபிவிருத்தித் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் சுமார் 62 இலட்சம் ரூபாயில் செயல்பட்டு வருகிறது. இது போன்ற மலைப்பிரதேச அபிவிருத்தித் திட்டங் கள் மற்ற மலைப்பிரதேசங்களிலும் செயல்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக, கன்னியாகுமரி, இராஜபாளையம், ஜவ்வாது மலைப் பிரதேசங்களில் நடத்தப்படலாம். தோட்டக் கலைத் துறையினர் மிளகாய், வெங்காயம், மஞ்சள் போன்ற பயிர்களின் அபிவிருத்திக் காகத் தனித் திட்டங்கள் போட வேண்டும்.

தோட்டக் கலைப் பயிர்களைப் பாதுகாப்பதற்காகப் பூச்சித் தடுப்பு முறைகளுக்கான தனித் திட்டம் போடுதல் மிகவும் நல்லது. பயிர்ப் பாதுகாப்பு அணி (பிளான்ட் ப்ரொடக்ஷன் ஸ்குவாட்) தோட்டக்கலைப் பயிர்களுக்கு மிகவும் அவசியம் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னைக்கு வேண்டிய அலங்காரச் செடிகள் உற்பத்திச் செய்து கொடுப்பதற்கு ஒரு நாற்றுப் பண்ணை சென்னையிலே அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். பழச் செடிகள், அலங் காரச் செடிகள் மற்றும் நாற்றுகள் விற்பனை செய்ய ஒரு பெரிய விற்பனைக் கூடம் அமைக்க வேண்டும்.

தோட்டக் கலைத் துறையின் பணிகளை நன்கு செயல்படுத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் தோட்டக்கலை அலு வலர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

அதேபோன்று, தோட்டக் கலை இயக்குநர் அலுவலகம் தர்ம புரியிலே இருக்கிறது. அதிகாரத்தைப் பரவலாக்க விரும்புவதை நாங்கள் வரவேற்கிறோம் என்பதோடு அங்கே தர்மபுரியில் இருந்து ஒவ்வொரு காரியத்திற்கும் இங்கே சென்னைக்கு வரவேண்டிய தாக இருப்பதால் அதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்வதற்கு என்ன செய்யலாம் என்பதை அரசு ஆராய முயல வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு விவசாயிகளைப் பொறுத்த வரையிலே பல சங்கங்கள் இருந்தாலும்கூட, சிறு சிறு சங்கங் களாக அவர்கள் இயங்கி வந்தாலும் கூட அவர்களுடைய சிறு குறைகளை நாம் நிவர்த்தி செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 20]

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

பயிர்ப் பாதுகாப்புச் சட்டம் இன்றைக்கு விவசாயிகளுக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். ஏகப்பட்ட ரூபாய்களைக் கடனாக வாங்கி வாழைத்ள் பயிரிட்டு அதன் பலன் கைக்குக் கிடைக்கின்ற நேரத்திலே சூறாவளிக் காற்று வந்து அந்த வாழைகளையெல்லாம் நாசமாக்குகின்ற சூழ்நிலைகளைப் பார்க்கிறோம். அண்மையிலே எனது ஊரான கடிப்பாவூரில் ஒரு வாழைத் தோட்டம், கிட்டத்தட்ட 8,000 வாழைகள் சூறைக்காற்றால் நாசப்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்கு விவசாயிகள் பயிர்ப் பாதுகாப்புச் சட்டம் விவசாயிகளுக்கு அவசியம் தேவை என்பதை உணர்ந்து அந்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, மானாவாரியாக, வானம்பார்த்த பூமியாக 75 சதவீதம் நிலம் இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் அரசே தன் சொந்தப்பொறுப்பில் கிணறுகளை வெட்டிக்கொடுத்து, உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயல வேண்டும். இன்று விவசாயிகள் சில சங்கங்கள் வைத்திருந்தாலும், அவர்கள் எளியவர்கள். எனவே அவர்களை அலட்சியப்படுத்தக் கூடாது.

ஏனென்றால், ஆட்சியில் இருப்பவர்கள் எளியவர்களை எப்போதுமே அலட்சியம் செய்யக் கூடாது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரும்புகின்ற முறையிலே சொல்லிக் கொள்வேன். இராமாயணத்தில், கிஷ்கிந்தா காண்டத்தில், அரசியல் படலத்தில், சுக்ரீவனுக்கு அரசு நெறிகளைப் போதிக்கும் இராமன்,

சிறியரென்றிகழ்ந்து நோவு
செய்வன செய்யில் மற்றிந்
நெறி யிகழ்ந்து யானோர் தீமை
யிழைத்தலால் உணர்ச்சி நீண்டு
குறியது ஆம் மேனி ஆய
கூனியால் குலவு தோளாய்
வெறியன எய்தி நொய்தின்
வெந்துயர் கடலில் வீழ்ந்தேன்

என்று சொல்வதாகக் கூறப்பட்டுள்ளது. பிள்ளைப் பருவத்திலே விளையாட்டுத்தனமாய் கூனியின் முதுகில் மண் உருண்டையை எறிந்ததானது, மாபெரும் துயரக் கடலில் தான் விழுவதற்குக் காரணமாயிற்று என்று இராமன் சுக்ரீவனுக்கு உபதேசிக்கிறான். ஆட்சியிலே இருப்பவர்கள் எளியவர்களை அலட்சியப் படுத்தக் கூடாது என்பதற்கு, தனது அந்த அனுபவத்தைச் சுட்டிக்காட்டி, சுக்ரீவனுக்கு இராமன் அரசியல் நெறி கூறுகிறான். அதைப்போல் இந்த அரசு செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்]

வேளாண்மை சிறப்பாக இயங்குவதற்காக குளங்களை ஆழப்படுத்த வேண்டும், தூர்ந்து கிடக்கும் கால்வாய்கள் வெட்டப்பட வேண்டும். அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டிக் கொண்டு தானிருக்கிறது என்றாலுங்கூட, தீட்டுகின்ற திட்டங்கள் சரியாக நடைபெறுகின்றதா, துரிதமாக வேலை செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது.

ஆறு கண்ட இடங்களில் எல்லாம் அணைகள் கட்டியவர் பெருந்தலைவர் காமராஜர், தூர்ந்து போன கால்வாய்களை எல்லாம் வெட்டியது இந்த அரசுதான் என்று மக்கள் சொல்கின்ற வகையிலே இந்த ஆட்சி அமைய வேண்டுமென்று கூறி, மானியக் கோரிக்கையை வரவேற்று அமைகிறேன், வணக்கம்.

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்ற வேளாண்மைத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையின் மீது, எங்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நம்முடைய மரியாதைக்குரிய மத்திய நிதி அமைச்சர் அவர்கள் தான் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையிலே 1980–81 ஆம் ஆண்டு விவசாயத்திற்காக, மத்திய, மாநில திட்டங்களுக்காக, ரூபாய் 925 கோடியும், 1981–82-ஆம் ஆண்டு ரூபாய் 1,047 கோடியும் இன்றைக்கு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, பெரிய நடுத்தர நீர்ப்பாசன வசதிக்காக, 1981 ஆம் ஆண்டு ரூபாய் 1,213 கோடியும், 1981–82-ஆம் ஆண்டு ரூபாய் 1,408 கோடியும் இன்றைக்கு ஒதுக்கீடு செய்து, பாரத நாடு பூராவும் விவசாயத் துறையிலே முன்னேற்றம் அடைய வேண்டுமென்ற சீரிய கொள்கையின் அடிப்படையிலே, இலட்சிய நோக்கத்தோடு, ஒரு புதிய, புரட்சிகரமான திட்டங்களை அருமை தலைவி இந்திரா காந்தி அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்த வேண்டுமென்ற முனைப்போடு, இந்தத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று நான் பெருமையோடு இந்த மன்றத்திலே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரை, மத்திய அரசாங்கத்தை நல்ல வேளையாக, அமைச்சர் அவர்கள் பல்வேறு இடங்களிலே, பல்வேறு வகையாகக் குறைகள் சொன்னாலும், அவருடைய மானியக் கோரிக்கையின் மீது விவாதம் நடக்கிற நேரத்தில், அவருடைய கோரிக்கைகளிலே எந்தவிதமான குற்றச்சாட்டுகளோ, அல்லது குறைபாடுகளோ இல்லை என்பது எனக்கு வியப்பை மட்டுமல்ல, மகிழ்ச்சியைத் தருகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம், மத்திய அரசாங்கத்தைப் பற்றி வெளியிலே பேசுவது வேறு. உண்மையிலே, மத்திய அரசைப் பாராட்டாமலிருக்க வேண்டுமென்பதற்காக— ஞன், உண்மையிலே பாராட்ட வேண்... னதிலே

[திரு. நா. சுந்தரராஜ்]

இருந்தாலும், வெளியிலே சொல்ல முடியாத நிலைமையிலேதான் இன்றைக்கு இந்த அறிக்கையிலே அதைப்பற்றி எந்தவிதமான குறையும் காணாதது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது.

இன்றைக்குப் புதிதாக உலக வங்கியின் மூலமாகப் பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டம் என்ற ஒரு திட்டம், 1980 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருவதாகவும், அதற்கு ரூபாய் 34.48 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும், சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே, 70 சதவீதம் உலக வங்கி மத்திய அரசாங்கத்திற்கு இனாமாகக் கொடுப்பதாகவும், மீதமுள்ள 30 சதவீதம் யார் மூலமாக, எப்படி செலவழிக்கப்படுகிறது என்ற குறிப்புகள் அதிலே சொல்லப்படவில்லை யென்றாலும், 30 சதவீதம் மைய அரசாங்கம் கொடுக்கிறதா? அல்லது மாநிலம் ஏற்றுக் கொள்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. அதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஆக, இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையிலே ஒரு புறத்திலே மத்திய அரசாங்கத்தின் மூலமாக உலக வங்கி கொடுத்தாலும், அதிலே நடைமுறையிலே பல்வேறு வகையான சிக்கல்கள் இருக்கின்றன. காரணம், அதிலே யார் பயிற்சி பெறுகிறார்களோ, அவர்களிடம் பயிற்சி பெறாத 800-லிருந்து 1,000 வரை உள்ளவர்களுக்கு மட்டும்தான் முழுமையான பயிற்சி அளிக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு எந்தவிதமான பயிற்சியும் அளிக்கப்படவில்லை. ஆனால், அதிலே சம்பந்தப்பட்ட எந்த அதிகாரியையாவது கேட்டால், எனக்குத் தெரியாது, நீங்கள் வேறு யாரையாவது கேளுங்கள், அல்லது பயிற்சி பெற்றவர்களிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லக் கூடிய நிலைமைகள் ஒருபுறம் இருக்கின்றன.

(பிற்பகல் 12—30)

அதேபோல இன்றைக்கு அந்த இலாகாவில் கிட்டத்தட்ட 6 இலாகாவினுடைய இயக்குநர்களை புதிதாக நியமனம் செய்து இருக்கிறீர்கள். இன்றைக்கு உங்களுடைய அரசாங்கத்திலே என்ன காரியங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னால், மேலதிகாரிகளுக்குப் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கோடு, கீழே இருப்பவர்களைப் பற்றிக் கவலைப் படாமல், இலாகாவில் உள்ள திட்டங்கள் முழுமையாக செயல் படுகின்றனவா என்று கவலைப்படாமல், பெரிய அதிகாரிகளுக்குப் பொறுப்புகள் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இன்றைக்கு இலாகாக்களை டிசென்ட்ரலைஸ் என்ற முறையிலே— எப்படிக் காவல் துறையைப் பொறுத்தமட்டில் 3, 4, 5 என்று ஐ.ஜி.க்கள் நியமனம் செய்யப்பட்டு, யாருக்குமே எந்தவிதமான அதிகாரமும் இல்லாமல் இருக்கிறார்களோ அதேபோல—விவசாய இயக்குநரகத்தைப் பொறுத்து 6 இயக்குநர்களைப் போட்டு,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[திரு. நா. சுந்தரராஜ்]

அவர்களுக்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லாமல் இன்றைக்கு செயல்பட முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. காரணம் அவர்களுக்கு எந்தப் பணி செய்வது என்றே தெரியவில்லை. ஒருங்கிணைந்த திட்டத்தின் அடிப்படையிலே ஒரு குறிப்பிட்ட அதிகாரியிடத்திலே சென்று தென்னை மரத்திற்கு என்ன மருந்து வைப்பது, தென்னை மரத்தில் வருகின்ற பூச்சியை எப்படிக் கொல்வது என்று கேட்டால் அவர் எனக்குத் தெரியாது, இது சம்பந்தமாக உள்ள அதிகாரிகளைப் போய் கேளுங்கள் என்று சொல்லி, அவரைக் கேட்டால், அடுத்தவர்களிடம் போய் கேளுங்கள் என்று சொல்லுகின்ற அளவுக்கு இன்றையதினம் இந்த இலாகா இருக்கிறது. அதைப்போலத்தான் இன்றைக்குக் கிராமங்களிலே இருக்கக் கூடியவர்கள் சரியாக வாழ வழி காட்ட அதிகாரிகள் தவறிவிட்டார்கள் என்று குறிப்பிடக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோலத்தான் இன்றைக்குக் நமது அரசாங்கம் பல்வேறு கமிஷன்களைப் போட்டிருக்கிறது. கமிஷன் என்று சொன்னாலே நம்முடைய அரசாங்கத்திலே இருக்கக் கூடியவர்களுக்கு ஒரு அலர்ஜி. கடந்த காலத்தில் மத்திய அரசாங்கம் கமிஷன் போடவில்லை என்று சொன்னால் தமிழ்நாடு தனிநாடாகப் போய்விடும் என்று சொன்னோம். ஆனால் இன்றைக்குக் கமிஷன்கள் போட்டு அதன் மூலமாக ஏதாவது சாதனைச் செய்யப் போகிறோம என்று சொன்னால், நிச்சயமாக இல்லை. முதலமைச்சர் தலைமையிலே விவசாய ஆலோசனைக் குழு, விவசாய நலக் குழு, அமைச்சர் அவர்கள் தலைமையிலே, இன்னொரு குழு, முன்னாள் சபாநாயகராக இருந்தவர்—அன்றைக்கு அமைச்சராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டவர்—வரமுடியாத காரணத்தால் இன்றைக்கு அமைச்சர் அந்தஸ்தில் அவர் தலைமையில் விவசாயிகள் சம்மந்தமான பிரச்சினைகளை அலசி, ஆராய்ந்து, ஆலோசனை வழங்குவதற்காக நியமனம் செய்திருக்கிறோம். என்ன காரியம் நடைபெற்றிருக்கிறது. ஏதாவது தேவையான ஆலோசனைகள் வழங்கப் பட்டிருக்கிறதா பிரயோசனமாக ஆலோசனைகள் வழங்கப் பட்டிருக்கின்றவா என்று சொன்னால் இதுவரையில் இல்லை. காரணம் முதலமைச்சருக்கு வேலை நிறைய இருக்கின்றது. அமைச்சருக்கு வேறு வேலை இருக்கின்றது. இந்த முன்னாள் சபாநாயகருக்கு ஒரே ஒரு முதல் கூட்டம் நடத்திவிட்டு, இது பூர்வாங்க கூட்டம்தான் என்று சொல்லிவிட்டு போய் விட்டார். ஆனால் கிராமங்களிலே என்ன நடைபெறுகிறது. குறிப்பாக தென்னாற்காடு, வடார்காடு மாவட்டத்தில் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே முன் நின்று கிராமத்திலே விவசாயிகள் என்று ஒரு ஜாதி இருக்கிறதா. அதை ஒழித்தே தீறுவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டு காவல் துறையினரின் துணையோடு கிராமங்களுக்குச் சென்று அடித்து நொறுக்கி

[திரு. நா. சுந்தரராஜ்]

வீடுகளை ஜப்தி செய்து கதவுகள், நிலைகளைக் கூட பிடுங்கக் கூடிய நிலை இருக்கின்றது. இன்னும் சொல்லப் போனால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் கூட ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தார். தாலி முதலியவை களைப் பறிக்கின்ற அவல நிலைதான் இந்த நாட்டில் நடை பெறுகிறது. அதைத் தடுப்பதற்கு உங்களாலே முடியவில்லை என்றால், விவசாயிகள் நலன்களைப் பாதுகாக்கிறோம் என்று போட்டிருக்கிறீர்களே கமிஷன்கள், நியமனம் செய்யப் பட்டிருக்கின்ற குழுக்கள், அதற்காக கோடிக்கணக்கான ரூபாய் களை செலவழிக்கின்றீர்களே, உங்கள் மூலம் இந்தப் பிரச்சினை களைத் தீர்த்து முடியவில்லை என்று சொன்னால் நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம் இந்தக் குழுக்கள் எல்லாம் தேவைதானா? சாதாரண விவசாயிகளுக்கு அவனுக்கு ஆக்கமும், ஊக்கம் அளிக்கின்ற வகையிலே அவனுக்கு உரம் அளித்து, ஏதாவது சப்சிடி கொடுங்கள், உரிய நேரத்தில் மின்சாரம் கொடுக்க வழி செய்யுங்கள். அவர்களுக்கு ஆலோசனை சொல்வதற்கு சாதாரண கிராம அதிகாரிகள் போதும். ஆனால் இதற்கெல்லாம் எந்தவிதமான உதவியும் செய்யமாட்டோம். ஆனால் வாங்கிய கடனைத் திருப்பித், தா, மழை பெய்தாலும் பெய்யாவிட்டாலும் பரவாயில்லை. வறட்சி தாண்டவம் ஆடினாலும் பரவாயில்லை, உங்களுக்குக் குடிப்பதற்கு தண்ணீர் இல்லை என்றாலும் பரவாயில்லை. ஆனால் நீ வாங்கிய கடனை திருப்பித் தா என்று சொல்லி அவன் ஏழை விவசாயியா, நடுத்தர விவசாயியா, பணக்கார விவசாயியா என்று வரைப்படுத்தி அவன் ஏழை என்று சொன்னால், இல்லை நீ பணக்கார விவசாயிதான் என்று சொல்லி அவனை மிரட்டி அவனிடம் இருந்து வாங்குகின்ற, அவனிடம் இருந்து பறிக்கின்ற, அவனிடம் இருந்து பிடுங்கு கின்ற சூழ்நிலையைத்தான் இன்றைக்குக் கிராமத்திலே இருக்கிறது என்பதை நான் மிக்க வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, இந்திராகாந்தி அவர்கள் 20 அம்சத் திட்டம் கொண்டு வந்தார்கள். அவர்கள் கொண்டு வந்த நேரத்தில் குறிப்பாக ஏழை விவசாயிகளுக்கு, விவசாயக் குடியில் கிராமங்களிலே வேலை பார்க்கின்ற அந்த விவசாயி களுக்கு நியாயமான கூலி வழங்கப்படவேண்டும் என்பது ஒரு திட்டம். ஆனால் போன 77 ஆம் ஆண்டு அல்லது 80ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். இந்திரா காந்தி மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு நீங்கள் ஆளுநர் உரையிலே சொன்னீர்கள். இந்திரா காந்தி அவர்கள் கொண்டு வந்த 20 அம்சத் திட்டத்தை ஆதரிக்கிறோம். அதை முழுமையாக செயல் படுத்துவோம் என்று சொன்னீர்கள். ஆனால் 20 அம்சத் திட்டத்திலே ஒரு திட்டம்தான் குறைந்த பட்சக் கூலி

[திரு. நா. சுந்தரராஜ்]

நிர்ணயம். ஆனால் அதைச் செயல்படுத்துவதற்கு வழி இந்த அரசாங்கத்திற்குத் தெரியவில்லை. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இதைச் செய்ய இருக்கிறோம், பரிசீலிக்கிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, செயுல்படுத்துவதற்கான வழிகளை இதுவரையில் காட்டவில்லை, செயல்படுத்தவும் முடியவில்லை.

மின்சார இணைப்பு கேட்டு மனு செய்கிறவர்கள் 90 நாட்களுக்குள் பம்ப் செட்டுகள் வாங்கி வைக்கவில்லையென்றால் அவர்களுடைய மனு ரத்து செய்யப்படும் என்று சொன்னார்கள். ஆனால் மின்சார இணைப்புக்கோரி மனு செய்தவர்கள் பம்ப் செட்டுகள் வாங்கி வைத்துக்கொண்டு எத்தனையோ 90 நாட்கள் கழிந்த பின்பும் இன்றைக்கும் அவர்களுக்கு இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கும் நிலைமை இருக்கிறது. ஆனால் அப்படி வாங்கி வைக்காதவர்களின் மனுக்கள் 90 நாட்கள் கழித்த பின்பு ரத்து செய்யப்பட்டிருக்கிறது உங்களுடைய ஆட்சியில் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்கெட்டிங் கமிட்டி என்ன பணிசெய்கிறது என்று தெரியவில்லை. தற்போது விவசாயமும் இல்லை, வாங்கி விற்கப் பொருளும் இல்லை. இப்படிப்பட்ட நிலையிலும் அந்த மார்க்கெட்டிங் கமிட்டிக்கு ஒரு விவசாயி தலைவராக இல்லாமல் ஒரு வியாபாரி தலைவராக இருக்கின்ற காரணத்தால் பல்வேறு தவறுகள் அங்கே நிகழ்கின்றன. ஒரு விவசாயி அதன் தலைவராக இருந்தால், இந்தப் பொருள் உற்பத்தி செய்ய என்ன செலவாகும், எந்த அளவிற்கு விலை வைத்தால் விவசாயிக்கும் லாபம் வரும், மக்களுக்கும் நல்ல முறையில் நியாயமான விலையில், அந்தப் பொருட்களைக் கிடைக்கச் செய்ய முடியும் என்பது தெரியும். நான் விவசாயிதான் தலைவராக இருக்கவேண்டும் என்று சொன்னபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டார்கள், அண்ணா தி.மு.க. வினர் என்ன பாவம் செய்தார்கள், அவர்கள் இதற்குத் தலைவராக இருப்பதில் என்ன தவறு என்று கேட்டார்கள். விவசாயிகளைப் போட்டு இருந்தால் விவசாயிக்கு லாபம் வருகின்ற வழியைக் கடைப்பிடிப்பார்கள். ஆனால் தனிப்பட்ட நபர்களைப் போட்டதன் காரணமாக அவர்கள் தங்களுடைய லாபத்தையே குறிக்கோளாக வைத்து, தனிப்பட்ட முறையில் கொள்ளை லாபம் அடித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலைமை நீடிக்கவிடக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கு நோக்கிப் பாயும் நதிகளை எல்லாம் நம்முடைய தமிழ்நாட்டிற்குத் திருப்பி, கோவை, முகவை, நெல்லை,

1981 ஏப்ரல் 20]

[திரு. நா. சுந்தரராஜ்]

மதுரை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களுக்குத் திருப்பி அந்தப் பகுதியில் நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தித் தரப்படும் என்று சொன்னார்கள். ஆனால், அதற்காக எந்த அளவிற்கு அரசு முயற்சி எடுத்துக்கொண்டது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. 1977 ஆம் ஆண்டில் இருந்து இப்படிப் பேசிக்கொண்டு வருகிறோம். அதற்கான வகையில் எந்த அளவிற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, அதனுடைய விவரம் என்ன, அதனுடைய முடிவு என்ன, விளக்கம் தெரிவிக்கப்படவில்லை. நமக்குத் தேவையான தண்ணீர் 85 டி. எம். சி. மேற்கு நோக்கிப்பாயும் நதிகள் மூலம் உற்பத்தியாகும் தண்ணீர் கடலில் கலப்பது ஏறத்தாழ 1,400 டி. எம். சி. கேரள அரசாங்கத்தோடு பேசி இந்த 85 டி.எம்.சி. வாங்கமுடியாதா? காவிரியில் இருந்து கிடைக்கின்ற தண்ணீரையே சரியாக வாங்குவதற்கு இயலாத நிலையில் உள்ள நீங்கள், இதில் எந்த அளவிற்கு வெற்றி பெறப்போகிறீர்கள் என்பது தெரியவில்லை. இன்றைக்குப் புதிதாகச் சொல்கிறார்கள். மத்திய அரசாங்கத்தை எதிர்த்து, காங்கிரஸ் ஆட்சி செய்யாத மாநிலங்கள் எல்லாம் போராட்டம் நடத்த வேண்டும் என்கிற அடிப்படையில் அதற்கு ஆதரவு திரட்டுவதற்காக மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு அவர்கள் இங்கே வரப்போகிறார்கள்.

திரு. என். சங்கரய்யா: இந்தப் பிரச்னைக்கும், திரு. ஜோதிபாசு அவர்கள் வருகின்ற பிரச்னைக்கும் சம்பந்தம் இல்லை. அவர்கள் வருவது மாநிலங்களுக்குத் தேவைப்படுகின்ற அதிகாரங்கள் குறித்து. அதைத் தெரிந்து அவர்கள் பேச வேண்டும். இல்லையென்றால் நாங்கள் சொல்கிற பதிலை அவர்கள் பெறுவதற்குத் தயாராக இருக்கவேண்டும் அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் மானியத்தின் மீது மட்டும் பேசி முடித்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: அவர் வருகின்ற நேரத்தில், கேரளத்தில் இருக்கின்ற இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களோடு கலந்து பேசி, தமிழ் நாட்டுக்கு அந்த மேற்கு நோக்கிப் பாயும் தண்ணீரை விடுவதற்கு முயற்சி எடுக்கவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். அதற்கு நாங்களும் உதவிகரமாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: மேற்கு நோக்கிப் பாயும் நதிகளை திருப்பி விடுவதைப் பற்றிய பேச்சு வார்த்தையில்

[திரு. என். சங்கரய்யா]

சுமுகமான நிலை இருந்து வருகிறது என்று மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால், திரு. சுந்தரராஜ் அவர்கள் சார்ந்து இருக்கின்ற கட்சி ஆளுகின்ற கருநாடக மாநிலத்தில் இருந்து பெறும் காவிரி நீர்தான் பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் கருநாடக மாநில முதலமைச்சர் திரு. குண்டு ராவ் அவர்களுக்கு இது குறித்துச் சொல்லி அந்தப் பிரச்சினையைத் தீர்த்தால் நல்லது. காவிரிப்பிரச்சினை தான் இன்றைக்குப் பிரதான பிரச்சினையாக இருக்கிறது என்பதைத் தமிழ் நாடு நன்கு அறியும்.

[பிற்பகல் 12-40]

திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் தன்னால் முடியவில்லை என்பதற்காக எங்கள்மீது பழிபோட பார்க்கிறார்கள்; அது தேவையில்லை.

திரு என். சங்கரய்யா: துணைத் தலைவரவர்களே, அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன். இந்த காவேரி நீர் பங்கீடு சம்பந்தமாக எத்தனையோ முறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டிய கூட்டத்தில் பல்வேறு கட்சிகள் கலந்து கொண்டு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் தமிழக அரசின் சார்பில் பதில் அனுப்பப்பட்டிருக்கிறது. மேற்கு நோக்கிப் பாயும் நதிநீரை கிழக்கே திருப்பிவிடுவதுபற்றி சுமுகமாக பேச்சுவார்த்தை நடப்பதாகச் சொல்லப்படுகிறது. இங்கே சுமுகமாக நடக்கவில்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி முதலமைச்சர் குண்டுராவ் அவர்கள் தமிழ் நாட்டுக்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட தரமுடியாது என்று சொல்லியிருக்கிறாரே; அவரோடு பேசி அதற்குத் தீர்வு காணலாம் இல்லையா? அதைவிட்டுவிட்டு, பிரச்சினையைத் திசைதிருப்பப் பார்க்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சொல்லும்போது குண்டுராவ் பற்றிச் சொன்னார்கள். நான் அந்தப் பிரச்சினைக்குள் போகவில்லை. ஆனால் மேற்குநோக்கிப் பாயும் இந்த நதிகள் சம்பந்தமாக கேரள சட்டமன்றத்தில் 'தமிழ் நாட்டுக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கூட கொடுக்க முடியாது' என்று சொல்லி அது அங்கே ரிக்கார்டில் பதிவாகி இருக்கிறது. நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்கள் தமிழ்நாட்டுக்கு அந்த நீர் கிடைக்க முயற்சி செய்து, சம்பந்தப் பட்ட அமைச்சரிடம் பேசி, அதற்கு ஒரு ஏற்பாடு செய்வாரா?

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவரவர்களே, அது இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர் பேசித் தீர்க்கக்கூடிய பிரச்சனை அல்ல. கலைஞர் அவர்கள் எத்தனையோ ஆண்டு இங்கே முதலமைச்சராக இருந்தார்கள். அப்போது தீர்க்கப்படாத பிரச்சனைகள் எல்லாம் இப்போது நீண்டு கொண்டிருக்கின்றன என்பது அனைவருக்கும் தெரியும். இந்தப் பிரச்சினையில் நான் குறிப்பிட விரும்புவது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சொல்வது என்னவென்றால் நியாயமான அடிப்படையில், இந்தியா பூராவும் ஒரே நாடு என்ற முறையில் பல்வேறு மாநிலங்களின் தேவையை ஒட்டி அத்தனை மாநிலங்களுக்கும் நதிநீர் பிரிக்கப்பட வேண்டுமென்பது எங்கள் கொள்கை. அத்தவகையில் எங்களுடைய கருத்துக்கள் இருக்கும்.

திரு. துரைமுருகன் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். துணைத் தலைவரவர்களே, எங்கள் கட்சித் தலைவரைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதனால் நான் சொல்கிறேன். டாக்டர் கலைஞர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் இருந்த பிரச்சனை தீர்க்கப்படாமல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வராது. ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் உங்கள் கட்சியின் சார்பில் பேசும்போது சொல்லுங்கள்.

திரு. என். எஸ். வி சித்தன் : சார், கர்நாடக முதலமைச்சர் குண்டுராவ் பற்றி சொல்லியிருக்கிறார்கள். கர்நாடக முதலமைச்சர் ஒரு சொட்டுத்தண்ணீர் கூட கொடுக்க முடியாது என்று சொன்னதாகச் சொன்னார்கள். அது அவைக்குறிப்பில் இடம் பெறலாமா?

திரு. என். சங்கரய்யா : இந்தப் பிரச்சனையை ஆரம்பித்தது காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர்தான், விவசாயிகள் பிரச்சனையைப் பற்றி பேசும்போது அவர்கள் இந்தப் பிரச்சனையை எழுப்பியதால் அதற்குப் பதில் சொல்ல வேண்டிய அவ்சியம் ஏற்பட்டது. நதிநீர் பங்கீடு என்பது அனைத்து மாநிலங்களுக்கும் நியாயமான முறையில் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று.

திரு. என். எஸ். வி. சித்தன் : சார், அவர் பேசியது சரியா? (கையை நீட்டிப்பேசினார்) இன்னொரு மாநில முதலமைச்சரைப் பற்றி அவர் இங்கே பேசலாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் கையை நீட்டிப் பேசக் கூடாது, அது அவைக்கு மரபு அல்ல.

திரு. துரைமுருகன் : சார், பாயின்ட் ஆஃப் கிளாரிஃபிகேஷன் நான் இந்தப் பிரச்சினை பற்றி ஒன்றும் சொல்ல விரும்பவில்லை (குறுக்கீடு) மாண்புமிகு சங்கரய்யா அவர்கள் சொன்னதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டாமா? தமிழ்நாடு சர்க்கார் ரிப்போர்ட் அனுப்பவில்லை என்று மத்திய சர்க்கார் சொல்லி யிருக்கிறது. அதைச் சொல்ல வேண்டாமா? எங்கள் தலைவரைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு பதில் சொல்ல வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதையெல்லாம் உங்கள் கட்சியின் சார்பில் பேசும்போது சொல்லலாம். இப் போது உட்காருங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவரவர்களே, இன்னும் ஒரு பிரச்சினையை மட்டும் இங்கே தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். அந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமானது. தமிழ்நாடு அரசு வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கம், தமிழ்நாடு அரசு வேளாண்மைத் துறை உயர் அலுவலர் கள் சங்கம்—இந்த இரண்டு சங்கங்களும் சேர்ந்து சில கோரிக்கை களை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகள் நிறைவேறாத தால் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24 ஆம் நாள் அன்று முதல் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் அவர்களுடைய பிரதிநிதிகள் வந்துசென்னை கடற்கரையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்த இருக்கிறார்கள். அந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்பவர்கள் யார், யார் என்று பார்த்தால் சென்னை செங்கற் பட்டு மாவட்டங்கள் சார்பில் திரு சி. சங்கரநாராயணன், எம். எஸ்., கூடுதல் வேளாண்மை இயக்குநர், சென்னை; தென்னாற்காடு மாவட்டத்தின் சார்பில் திரு. எஸ். பாண்டிப் பெருமாள், பி.எஸ்.ஸி. (விவ.), இயக்குநர், வேளாண்மை விற் பனைத் துறை, வடாற்காடு மாவட்டத்தின் சார்பில் திரு. ஆர். பாலசுப்பிரமணியன், பி.எஸ்.ஸி. (விவ), இயக்குநர், தோட்டக் கலைத் துறை.

அடுத்து திரு. எம்.ஆர். ஆறுமுகவேலு, இயக்குநர், விதை சான்றளிப்புத்துறை, அடுத்து திரு. எஸ். முத்துசாமி, மாநிலத் தலைவர் தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை உயர் அலுவலர் கள் சங்கம். இதுபோன்று பல்வேறு இடங்களில் நடைபெறு கின்றன. ஆகவே மாநில அரசுக்கு எதிராக நடைபெற்ற போராட் டத்திற்கு உறுதுணையாக இருக்கக்கூடியவர்கள் அதிகாரிகள் என்றால் அவர்களுக்கு இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை. இந்த இலாக்காவில் அமைச்சர்களிடத்திலே அந்த அதிகாரி களுக்கு நம்பிக்கை இல்லை. அதற்குக் காரணம் உங்களுடைய செயல் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அதன் காரணமாகத் தான் அந்த இலாக்காவின் தலைமைப் பொறுப்பிலே இருக்க

[திரு. நா. சுந்தரராஜ்]

கூடிய டைரக்டர்கள் போன்றவர்கள் கூட உண்ணாவிரதம் போன்றவற்றைத் தொடங்கி வைக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே இந்த அரசாங்கத்தின் மீது சந்தேகப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

அடுத்ததாக எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் வல்லத்திராகோட்டையில் மகாத்மா காந்தி பண்ணை இருக்கின்றது. அந்தப் பண்ணையிலே இருக்கக்கூடிய இரண்டு டிராக்டர்களிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் டீசல் எண்ணெயைத் திருடிவிட்டார்கள் என்பதற்காக அவர்களைக் கையும் களவுமாகப் பிடித்து சூப்பிரண்டின் முன்னாலே நிறுத்தினார்கள். அவர்கள் முன்னிலையில் டிராக்டர்களின் டிரைவர்கள் அவர்களை அடித்தார்கள். அப்படி அடித்ததோடு மட்டுமல்லாமல் அவர்கள் மீதே வழக்கு தொடர்ந்து அந்த வழக்கின் முடிவிலே அந்த இரண்டுபேரையும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டதற்கு பிறகும் அங்கே இருக்கின்ற அதிகாரி இவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் என்னவென்றால் அங்கே நடைபெறுகின்ற ஊழல்கள் எல்லாம் இந்த இருவருக்கும் தெரிந்துவிட்ட காரணத்தால் மீண்டும் வேலைக்கு இவர்களை எடுத்துக் கொண்டால் அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளைப் பற்றி மேலதிகாரிகளுக்கு ரிப்போர்ட் செய்து புகார் செய்து அதன்மூலம் தங்களுடைய பதவிக்கு ஆபத்து வந்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாகத்தான் அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். ஆகவே அங்கே நடைபெறுகின்ற தவறுகளைப்பற்றி விசாரித்து அவற்றைக் களைந்து அதிலே சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதை எல்லாம் தெரிந்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய பல்வேறு பயிர்களில் புகையான்போன்று படை படையாக பல்வேறு பூச்சிகள் வந்திருக்கின்றன. கடலையிலே கூட ஒரு பூச்சி படை படையாக வந்திருக்கின்றது. இந்தப் படைகளையே சந்திக்க முடியாத நீங்கள் எந்தப்படையைச் சந்திக்கப்போகிறேன் என்று வீராவேசம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே இப்படி வீராவேசம் பேசி உங்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, இதனுடைய உள் பிரச்சினைக்கு நான் போகவிரும்பவில்லை. ஒரே ஒரு கருத்தை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களிடம் விளக்கம் கேட்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்றபோது இருந்த பல விரும்பத் தகாத பிரச்சினைகள் இப்போது தீர்ந்திருக்கின்றன என்று சொன்னார்கள்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே இருந்த பல பிரச்சினைகள் நீடிக்கின்றன என்று தான் நான் சொன்னேன்.

* திரு. வி. இருள்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அருமைச் சகோதரர் திருவேங்கடம், அவர்கள் அளித்த கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் நான் இங்கே எடுத்து வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சரவர்கள் அன்புச் சகோதரர் திரு. காளிமுத்து அவர்கள் இந்தத் துறையில் இன்னும் கொஞ்சம் அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் என்னுடைய கருத்துக் களை நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிக்குப் பிறகு, தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிநடைபெற்ற சமயத்தில் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த சமயத்தில் தான், வெளிமாநிலங்களிலிருந்து உணவைப்பெற்று நம்முடைய உணவுத்தேவையைப்பூர்த்தி செய்யக்கூடிய நிலமையிலிருந்து தமிழ கத்தைதன்னிறைவு மாநிலமாக மாற்றியதோடு மட்டுமல்லாமல் வெளிமாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு உணவு உற்பத்தியை அதிகப்படுத்தினார்கள். அவர்கள் முதலமைச்சராக இருந்த சமயத்தில்தான் விவசாயிகள் 'நாங்கள் வாங்கிய கடன் களை நாங்களே முன்வந்து தீர்த்துவிட்டோம்' என்று எண்ணு கின்ற அளவுக்கு அப்போதைய நிலைமைகள் இருந்தன. ஆனால் அண்மைக் காலத்தில் கடந்த மூன்றாண்டு காலமாக விவசாயத் துறையில் உற்பத்தி பாதிக்கப்பட்டு போதுமான உணவு இல்லாத காரணத்தால் ஆந்திர மாநிலத்தைக் கெஞ்சிக் கேட்கக்கூடிய நிலைமையிலே தமிழகத்தினைத் தள்ளி விட்டிருக்கின்ற ஒரு கேவலமான நிலைமை இன்றையதினம் ஆட்சியிலே இருப்பவர்கள் காட்டக்கூடிய ஒரு மெத்தனமான நிலையின் காரணமாகத்தான் நேர்ந்துள்ளது என்பதை நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-50]

இன்றையதினம் ஆந்திராவிலே இருந்து அரிசி வரவில்லை என்றால், தமிழ்நாடு பஞ்சப் பிரதேசமாக காட்சியளிக்கும். தமிழ்நாட்டிலே அரிசி பஞ்சம் வந்துவிடும் என்ற நிலைமை இருக் கிறது. இதற்கு முக்கியமான காரணம், இவர்களுடைய ஆட்சியில் விவசாயத்திற்கு உரிய முக்கியப்பங்கினை, அதிகமான கண்ணோட் டத்தினை இவர்கள் செலுத்தவில்லை என்று நான் இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு விவசாயிகளுடைய பிரச்சினைகள் தீர்க்கப்படுவதற்காக அவர்கள் முயன்றார்கள் இல்லை என்று சொல்லவில்லை. 1978-ல் நவம்பர் மாதத்தில் உயர் மட்டக் குழு ஒன்றைக் கூட்டினார்கள். இன்றைக்கு இருக்கக் கூடிய அமைச்சர்களில் பெரும் பாலானவர்கள், அன்றைக்கு முதலமைச்சர் கூட்டிய கூட்டத்தில் கலந்துக் கொண்டார்கள். அந்தக் கூட்டத்திலே கலந்துக் கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே எங்களுடைய கருத்துக்களை நாங்கள் எடுத்து வைத்தோம். தமிழ் நாடு விவசாய சங்கத்தினுடைய நிலைமைக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காரணத்தினாலே, ஆட்சியை நடத்துவது எவ்வளவு சிரமம் என்பது எங்களுக்குத் தெரியும். ஆகவே, வரி கொடா இயக்கத்தைச் நாங்கள் ஆதரிக்க மாட்டோம். வரி இல்லாமல் எந்த அரசாங்கமும் இயங்க முடியாது என்று அன்றைய தினம் நாங்கள் சொன்னோம்.

அதோடு மட்டும் அல்ல, மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்வதிலே கூட 1 பிளஸ் 1 என்ற முறையிலே வசூல் செய்யலாம் என்று கூட, அன்றைய தினம் 1978 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் தேதியோ, 22 ஆம் தேதியோ நடைபெற்றக் கூட்டத்தில், எங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்தோம். விவசாயக் கடன்களும், மின்சாரக் கட்டணங்களும் வசூல் செய்யப்படவேண்டும் என்ற எண்ணத்திலேதான் அன்றையதினம் முடிவுகள் எடுத்தோம். நான் இப்போது கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட இங்கே இருக்கிறார்கள். கடந்த $2\frac{1}{2}$ ஆண்டு காலமாக தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு சங்கங்கள் எல்லாம் மூடப்பட்டுள்ள நிலைமைக்கு யார் காரணம்? நீங்கள் தானே காரணம். இன்றையதினம் ஜப்தி நடவடிக்கைகளையெல்லாம் மேற்கொண்டிருக்கிறீர்களே, இந்த நடவடிக்கைகள் எல்லாம் தேவையற்ற நிலைமைகளாக இருந்திருக்காதா? இன்றைக்கு போலீசாரை வைத்து வசூல் செய்கின்ற நிலைமை இல்லாமல், அன்றைக்கு அதிகாரிகளை வைத்து, இதை நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக வசூல் செய்யுங்கள் என்ற உத்தரவு போட்டிருப்பீர்களேயானால், இதை முதலிலேயே, அந்த சமயத்திலேயே வசூல் செய்திருக்கலாமே கொஞ்சம் கொஞ்சமாக.

ஆனால் இன்றைய தினம் வசூல் செய்யப்படாமல் இருக்கக் கூடிய கடன் மட்டும் கூட்டுறவுத் துறையிலே 240 கோடி என்றும், மின்சாரத் துறையிலே, நமது பேரவையிலே மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளபடி இப்போது 30 கோடியிலிருந்து வசூல் செய்யப்பட்டு, 1 பிளஸ் 1 என்ற முறையிலே மாறுதல் செய்யப்பட்டு, இன்னும் 95 ஆயிரம் பேர்கள் தான் அந்த 1 பிளஸ் 1-ஐக் கூட கட்டாமல் இருக்கிறார்கள் என்ற

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி)

நிலைமையைச் சொன்னார்கள். இவைகளுக்கெல்லாம் யார் காரணம்? ஆட்சியிலே இருக்கக் கூடிய நீங்கள் மத்திய வங்கிகளுக்கு உத்தரவு இட்டீர்களா ? கடந்த $2\frac{1}{2}$, 3 ஆண்டுகள் காலமாக—ஏதாவது வசூல் செய்யுங்கள்—என்று உத்தரவு போட்டீர்களா? அல்லது நிலவள வங்கிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறீர்களா '' வசூல் செய்ய வேண்டும், அந்த பொறுப்பை உங்கள் பேரில் பிக்ஸ் செய்வோம் என்று '' அனுப்பியிருக்கிறீர்களா ?

சிவப்பு விளக்கைப் போட்டதற்குப் பிறகுதான், விவசாயச் சங்கத்தார்கள் கோபித்துக் கொள்வார்கள், ஆகவே எந்த விதமான நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று சொன்ன தற்கு பிறகு தான், அந்தந்த நிலவள வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு கடன்கள் போன்றவைகளெல்லாம் வசூல் செய்யப்படாமல், இன்றைய தினம் யாராலும் தீர்க்கக்கூட முடியாத அளவிற்கு பெரும் பிரச்னையாக இருக்கின்றன. ஆகவே அப்படி இருப்பதற்கு, உங்களுடைய மெத்தனமும், ஆளக் கூடியவர்களின் திறமையற்ற தன்மையுமே காரணம் என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும் என்று கேட்க விரும்புகிறேன்.

கூட்டுறவு சங்கங்கள் கலைக்கப்பட்டுவிட்டது. பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட்டு விட்டன. கிராம மணியக்காரர்கள் எல்லாம் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். மார்க்கெட் கமிட்டிகள் எல்லாம் கலைக்கப்பட்டு விட்டது. அதேபோல பஞ்சாயத் யத்துக்கள் என்று இன்றைய தினம் எதுவும் கிடையாது. மு பெல்லாம் வெள்ளைக்காரர்கள் சிவில் நிர்வாகத்தை நடத்தினார்களே, கவர்னர்களையும், கலெக்டர்களையும் வைத்துக் கொண்டு, அதே போல புரட்சித் தலைவர் அவர்கள் கலெக்டர்களை வைத்துக் கொண்டு துரைத்தனம் செய்ய விரும்புகிறார்களே தவிர, மக்களுடைய பிரதிநிதிகளைக் கொண்ட ஆட்சியை நடத்தவில்லை. மக்களுடைய பிரதிநிதிகள் கூட்டுறவுச் சங்கத்திலே இருந்திருப்பார்களேயானால், அவர்கள் அந்தந்தக் கிராமத்திலே நிலுவையிலே இருக்க கூடிய கடன்களை கட்ட வேண்டும் என்ற பொறுப்புணர்ச்சியோடு இருந்திருப்பார்கள். ஆகையினால் இவைகளையெல்லாம் கலைக்கச் செய்து, ஏற்படும் பிரச்னைகளையெல்லால் சரி செய்ய முடியாத அளவிற்கு நிலைமையைக் கொண்டு சென்றிருக்கிறார்கள் என்றால், அதற்கான பொறுப்பு இன்றையதினம் ஆட்சியிலே இருக்கக்கூடிய முதலமைச்சர் அவர்களையே சாரும் என்பதை என்னுடைய குற்றச்சாட்டாக நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றும் நான் இங்கே சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். கடன் நிவாரணத்தில் நீங்கள் சரியான கொள்கையை கடைப் பிடிக்கவில்லை. அண்மையில் பேரறிஞர் அண்ணா அவர்

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி)

கள் நினைவுநாள் விழாவில் முதல் அமைச்சர் அவர்கள் அந்தச் சிலைக்கு முன்னால் என்ன அறிவித்தார்? ஐந்தாண்டுகளில் விவசாயிகளின் கடன்களை ரத்து செய்துவிடுவோம், 240 கோடி ரூபாயை ஐந்தாண்டுகளில் ரத்து செய்துவிடுவோம் என்று அவர்கள் பேசியது பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வந்ததே, அதை நம்பினார்கள் விவசாயிகள். புரட்சித் தலைவர் அவர்கள் முதல் அமைச்சர், அவர்கள் எல்லாக் கட்டணங்களையும் ரத்து செய்யப்போகிறேன் என்று சொல்லிவிட்டார்கள் என்ற நிலையில் உங்கள் உறுதிமொழிகளைக் கொடுத்த காரணத்தால்தான் இப்படிபட்ட நிலை வந்துவிட்டது. அந்த நிலைமையிலிருந்து நீங்கள் தப்பமுடியாது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இப்போது திடீர் என்று வசூல் செய்ய ஆரம்பிக்கிறீர்கள். எப்படி வசூல் செய்கிறீர்கள் என்பதைப்பற்றி உறுப்பினர்கள் எல்லோரும் எடுத்துக் காட்டினார்கள். நீங்கள் இனம் பிரித்துப் பேசுகிறீர்கள். பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று சொல்கிறீர்கள். அப்புறம் விவசாயிகள், விவசாயிகள் அல்லாதார் என்று சொல்கிறீர்கள். விவசாயிகள், விவசாயிகள் அல்லாதார் என்றும் சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்றும் சொல்லி நாட்டிலே குழப்பத்தைத்தான் உண்டுபண்ணியிருக்கிறீர்களே தவிர உள்ளபடியே இந்தக் கடன்களை வசூலிக்கவேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு இருந்திருக்குமானால் கடந்த மூன்று ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாக எளிதாக இதை வசூல் செய்திருக்கலாம். ஆனால் உங்களால் முடியாத அளவிற்கு நிலை வந்த பிறகு போகிறபோக்கில் எதையாவது செய்துவிட்டு போய்விடுமோ என்று இன்றைக்கு ஆட்சியில் உள்ளவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கில்லை.

மின்சாரக் கட்டணம் பாக்கி 36 கோடி ரூபாய் இருக்கிறது என்று சொன்னார்கள். அதை எந்தக் காரணத்தால் 1 ப்ளஸ் 1 என்று ஆக்கியிருக்கிறீர்கள்? அந்த 1 ப்ளஸ் 1 என்பது சிறிய விவசாயிகளுக்கும் பெரிய விவசாயிகளுக்கும் பொதுவாகத்தான் இருக்கிறது. அப்படி பொதுவாக இருக்கும்போது இந்த 1 ப்ளஸ் 1 என்ற நிலை சாதாரணக் கூட்டுறவுக் கடன்களாக இருந்தாலும் சரி, நிலவள வங்கிக் கடன்களாக இருந்தாலும் சரி, இன்ஸ்டால் மென்டில் பிரிக்கப்பட்டு இவற்றை ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக கட்ட வேண்டும் என்ற நிலையை ஏன் ஆராயக் கூடாது? திடீரென்று ஒரு விவசாயியைப் பார்த்து ரூபாய் 24,000 இருக்கிறது என்றால், நேற்றைய தினமோ அல்லது இன்றைய தினமோ, கங்கப்பா அவர்கள், வட ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், ஏழு தினங்களுக்குள்ளாக கட்டிவிட வேண்டும், இல்லை என்றால் கடுமையான விளைவுகள் வரும் என்று பத்திரிகைகளில் தன் போட்டோவைப் போட்டு அவர்கள் விளம்பரப்படுத்துகிறார்கள் என்றால் இதைவிட கேவலமான ஒரு நிலை, இதை விட கொடுந்

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

தன்மையான ஆட்சி நடக்கக்கூடிய நிலை இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தவிர, வேறு எந்த மாநிலத்திலும் நடைபெறாது என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். யார் ஆளுவது, வெள்ளைக்காரன் ஆளுகிறானா ? மக்கள் பிரதிநிதிகள் ஆளுகிறார்களா ? இப்படி கலெக்டர்களுக்கெல்லாம் நீங்கள் சாம்ராஜ்ய தளபதியாக அதிகாரத்தை கொடுத்துவிட்டு அவர்கள் எதை வேண்டுமானாலும் செய்யலாம், எப்படி வேண்டுமானாலும் செய்யலாம், ஐப்தி செய்யலாம், வீடுகளில் உள்ள பொருட்களை எடுக்கலாம் என்ற நிலைமையை நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள் என்றால் உங்களுக்கு ஆளத் தெரியவில்லை என்பதைத் தவிர வேறு என்ன சொல்ல முடியும்.

விவசாயிகள் செலுத்த வேண்டியது 200 கோடி ரூபாயாக இருந்தாலும் சரி, 240 கோடி ரூபாயாக இருந்தாலும் சரி கூப்பிட்டுப் பேசுங்கள். முனுஆதி அவர்களுக்கு குழுத் தலைவர் பதவி கொடுத்தது பற்றி குறை சொல்லவில்லை. உயர்மட்டக் குழு என்று அமைச்சர் அந்தஸ்த்தில் ஒரு குழு தலைவர் பதவி போடுவது என்றால் அன் எம்ப்ளாய்மெண்ட் ப்ராப்ளத்தை சால்வ் செய்திருக்கிறீர்களே தவிர, உள்ளபடியே முனுஆதி அவர்கள் தலைமையில் உள்ள குழு நிச்சயமாக விவசாயிகள் பிரச்சினைகளைத் தீர்க்குமா ? மாதந்தோறும் இப்படி கூட்டத்தைக் கூட்டுவதால் பிரச்சினைகளை எளிதாக்க முடியுமா? முதல் அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழு இருந்து அந்தக் குழுவைக் கூட்டி வருகிறவர்கள், மற்றவர்களை அழைத்துப் பிரச்சினைகளை அணுகுங்கள் என்று நாங்கள் பல்வேறு முறை சொல்லியிருக்கிறோம். ஆனால், அவர்கள் கேளாக்காதினராக இருந்து வந்திருக்கிறார்கள். அதனால், பிரச்சினைகள் அதிகமாக வந்துவிட்டது என்று குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். (மணியடிக்கப் பட்டது).

திரு. க. அன்பழகன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த விவாதம் இரண்டு நாட்கள் நடைபெறுவதாக இருந்து ஒரு நாளாக குறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கட்சி சார்பில் பேசுகிறபோது 1.30-க்கு விவாதத்தை முடித்துக்கொள்ள வேண்டும் என்று இன்றைய தினம் எதிர்பார்க்க முடியாது. இரண்டு நாள் விவாதத்தை ஒரு நாள் என்று குறைத்திருப்பதால் மேலும் ஒரு அரை மணி நேரம் விவாதத்தை நீட்டிப்பது அவசியம். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எதிர்க்கட்சி என்ற முறையில் அதிகமாகப் பேச வாய்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களுக்கும் இன்று பத்து, பதினைந்து நிமிடங்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள்.

TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 20]

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அரசாங்கத்தை அட்டாக் செய்து பேசுவதால் டைமைக் குறைக்கிறீர்கள் என்று நான் எண்ணக் கூடாது (குறுக்கீடுகள்).

[பிற்பகல் 1—00]

வரி கட்டாதவர்களை இன்று கேவலமான முறையில் பத்திரிகைகளில் அரசாங்கச் செலவில், ஆயிரக்கணக்காக ரூபாய் செலவு செய்து விளம்பரப்படுத்துகிறார்கள். சில நாட்களுக்கு முன்பு பத்திரிகைகளிலே ஓநாய் என்றும், ஆடு என்றும் பிரசுரமாகியிருந்தது. "ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுததாம்" என்று பிரசுரமாகியிருந்தது. யார் ஓநாய்கள் ? விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் ஓநாய்களா? பெரிய விவசாயிகளிடமிருந்து 80 கோடி ரூபாய் கடன் இருக்கிறது என்றும், கிட்டத்தட்ட 7 இலட்சம் பேர்கள் பெரிய விவசாயிகள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இந்த 7 இலட்சம் பேர்களும் ஓநாய்களா ? அரசாங்கம் இப்படிப் பட்ட ஒரு அறிவிப்பை செய்திருக்கிறது. இப்படி இவர்களை எல்லாம் ஓநாய்கள் என்றால், இன்கம்-டாக்ஸ் கட்டாதவர்கள் எல்லாம் ஓநாய்கள் இல்லையா ? இன்கம்-டாக்ஸ் கட்டாதவர் களையெல்லாம் ஒரு லிஸ்ட் போட்டு, இவர்கள் எல்லாம் பெரிய ஓநாய்கள் என்று சொல்லலாம் அல்லவா ? ஆகவே, இத்தகைய முறையில் ஈடுபடக்கூடாது. இது விவசாயிகள் மனதைப் புண்படுத்துவதாக இருக்கிறது என்பதை நான் சொல் லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். உணவு உற்பத்தித் துறையில் இந்தத் தமிழ்நாட்டிலே வறட்சி வந்திருக்கிறது. இந்த வறட்சி வந்திருக்கின்ற சமயத் திலே கூட, 1974-லே வந்தபோது, தஞ்சை மாவட்டத்திலே உற் பத்தி என்ன இருந்தது ? இன்றைக்கு என்ன இருக்கிறது ? என் பதைப் பார்த்தோமானால், நிச்சயமாக அண்ணா தி.மு.க. ஆட்சி யில் உணவு உற்பத்தி குறைந்துவிட்டது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைய தினம் காலையில் மாண்புமிகு தொழிலமைச்சர் கரும்பு நடுகின்றவர்களுக்கு இவ்வளவு விலை கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். 12 மாத காலம் கரும்பு பயிரிட ஆகும். ஆனால், அதை ஒரே நாளில் திடீரென்று விளைவிக்க முடியாது. அதை மந்திரக் கோலால் செய்ய முடி யாது. அன்றைய தினம் கூட நீங்கள் 125 ரூபாய் கேட்டிருக் கிறோம் என்று சொன்னீர்களே தவிர, நடுகின்ற சமயத்தில் அன்றைய தினம் 175 ரூபாய் அல்லது 200 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று மாநில அரசு மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்திருக்குமானால், தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 5 அல்லது 6 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்கின்ற அளவுக்கு

திரு. வி. (கிருஷ்ணமூர்த்தி)

வந்திருக்கும். ஆனால், இன்றைய தினம் 3 இலட்சம் டன்னாக அளவு குறைந்திருக்கிறது. எனவே, இதிலேயும் மெத்தனம் காட்டியிருக்கிறீர்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஜப்பான் நாடு சென்றிருந்தபோது நான் ஒன்றைப் பார்த்தேன். என்னவென்றால், ஜப்பானிலே அரிசி விலை கிலோ ரூபாய் 10, 12-க்கு விற்கப்பட்டது. ஆனால், பக்கத்திலே உள்ள தாய்லாந்திலே கிலோ அரிசி ரூபாய்2-க்கு கிடைத்தது. 2-ரூபாய்க்கு கிடைக்கிறது என்பதற்காக, அவர்கள் அங்கிருந்து இறக்குமதி செய்வதில்லை. அவர்கள் நிலத்திலேயே உற்பத்தி செய்ய வேண்டுமென்பதற்காக, இறக்குமதி செய்யவில்லை. அந்த கொள்கை அங்கே வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அம்மாதிரியான கொள்கை இங்கே வகுக்கப்படவில்லை. பாமாலின் ஆயில், மற்ற ஆயில்கள் இறக்குமதி செய்து வருவதன் காரணமாக, மணிலா உற்பத்தி, அந்த எண்ணைவித்து உற்பத்தி வருஷா வருஷம் பிளக்சுவேஷன் ஆகியிருக்கிறது. நிரந்தரமான கொள்கை இங்கே இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மின்சாரத்தைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் தனியாகச் சொன்னேன்; அதுபோல, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களிடத்திலும் சொன்னேன்; மின்துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொன்னேன். விவசாயத்திற்கு மின்சாரம், கொடுப்பதிலே பிரியாரிடி கொடுக்க வேண்டும். 30 சதவீதம் கட் என்று சொல்லுகிறார்கள். அந்த 30 சதவீதமும் சரியாக கொடுப்பதில்லை. அவ்வாறு சரியாக கொடுக்காத காரணத்தினால், 70 சதவீதம், 60 சதவீதம் மின்சாரம் கூட சரியாக கொடுக்கப்படுவதில்லை. ஆனால், தி. மு. க. ஆட்சி இருந்த சமயத்திலேகூட, இரவு நேரத்தில் மின்சாரம் கிடைத்தது; பகல் நேரத்தில் 4 மணி நேரம் கிடைத்தது. ஆனால், இன்றைய தினம் வெறும் 6 மணி நேரத்திற்குக்கூட மின்சாரம் கொடுக்கப்படவில்லை. இதனால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு இந்த அரசாங்கத்தின் பேரிலே தனிப்பட்ட முறையில் வழக்குகள் தொடரக்கூடிய நிலைக்கு இன்றைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

It is the part of contract. If there is failure on the Government the Agriculturists are going to file suits for non-supply of electricity. ஆகவே, விவசாயத்திற்கு மின்சாரத்தை அதிகமாகக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால், ஏற்கெனவே நடப்பட்ட நெல்கள் காய்ந்து, உற்பத்தி குறைந்துவிடும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(வி கிருஷ்ணமூர்த்தி)

நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இங்கே பூச்சித் தொல்லைகளினால் விவசாயம் பாதிக்கப்படுகிறது அதற்கு கிராப் இன்ஷூரன்ஸ் திட்டம் இல்லை. கூட்டுறவுத் துறையில் இருப்பதும், சரியாக செயல்படவில்லை. பல இடங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில், விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு 2,000 ரூபாய், 3,000 ரூபாய் செலவில் பயிர்செய்து, பிறகு கடைசியில் மின்சாரம் இல்லாமல், தண்ணீர் இல்லாமல் மக்கி, காய்ந்து, கெட்டுவிடுகிறது. அதைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை மாநில அரசு ஏற்க வேண்டும். அப்படி ஏற்கவில்லை என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்தப் பேரவையிலே ஜப்தி நடவடிக்கையைப் பற்றி அடிக்கடி சொல்வார்கள். ஆனால் அவர் அப்படி சொல்வதற்கும், செய்வதற்கும் சம்பந்தமில்லை. அதற்கு பல உதாரணங்களை என்னால் சொல்ல முடியும். ஜப்தி நடவடிக்கை கடந்த 3 ஆண்டு காலமாக நடைபெற்று வந்திருக்கிறது. ஜப்தி நடவடிக்கையைப் பற்றி மந்திரிகள் ஒரு புறம் பேசுகிறார்கள். அதிகாரிகள் எங்களுக்கு உத்தரவு இல்லை என்று சொல்கிறார்கள்.

We do not have instructions.

என்று டி.ஆர்.வோ., தாசில்தார் ஆகியோர் சொல்லுகிறார்கள். தவிர, அவர்கள் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்று பார்த்துதான் செய்கிறார்கள். நான் ஓரிரு உதாரணங்களைச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். காரணம் இவர்கள் எந்த நிலைக்கு ஜப்தி செய்கிறார்கள் என்றால், முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார் என்ற காரணத்தினால் இவைகளைச் சொன்னால் இதற்கு ஒரு நிவாரணமாகிலும் கிடைக்காதா? என்ற நப்பாசையில்தான் இதைச் சொல்ல விரும்புகிறேன். என்ன செய்கிறார்கள்; தாய்க்குலம் வாழ வேண்டும் என்று சொல்கிறார்கள். பொன்னேரி வட்டத்தில் அழிவிவாக்கம் என்ற கிராமத்தில் பத்மாசினி அம்மாள் என்ற ஒரு விதவை தாய்; பணம் கட்டவில்லை என்ற காரணத்தால் அதிகாரிகள் 1981 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 30-ஆம் நாள் அன்று கிராமத்திற்கு போகின்றார்கள். மிரட்டுகின்றார்கள். போலீஸ் அதிகாரிகளோடு போயிருக்கிறார்கள். தகாத வார்த்தைகளை பேசியிருக்கிறார்கள். அங்கே இருக்கிற டிராக்டரைப் இழுத்து வந்து விட்டார்கள். அந்த அம்மாள் அந்த குடும்பத்திற்குத் தலைவி; விதவைத் தாய்; கணவன் இறந்து 15 ஆண்டுகளாய் அந்த குடும்பத்தைப் காப்பாற்றி, பொறுப்பிலே இருக்கக்கூடிய பத்மாசினி அம்மாள்................(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்து விடுங்கள். அதிக நேரம் ஆகிவிட்டது.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி : துணைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடத்திலே முடித்து விடுகிறேன். என்னுடைய தொகுதியிலே பைத்தான்பாடி என்ற கிராமத்திலே கோபால படையாச்சி என்பவர் ஒரு சாதாரண 20 ஏக்கர் நிலம் வைத்திருக்கிற நிலச்சுவான்தார். அவர்கள் வீட்டிற்கு அதிகாரிகள் போயிருக்கின்றார்கள். போய் கடைசியில் என்ன செய்கின்றார்கள்? அங்கே இருக்கிற மேசை, நாற்காலிகளை ஜப்தி செய்து, தமுக்கடித்து அவமானப் படுத்தவேண்டுமென்ற காரணத்தாலே இவற்றைச் செய்திருக்கிறார்கள். இது சரியா? அதைப்போல பக்கத்திலே சென்ற வாரத்திலே மாளிகை மேட்டிலே கொண்டா ரெட்டியார் என்கிற அந்த ஊரினுடைய...... (குறுக்கீடுகள்). முக்கியஸ்த்தர் வீட்டில் ஏழு மூட்டை நெல்லை ஜப்தி செய்தார்கள்......................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதோடு முடித்து விடுங்கள். நேரம் ஆகிவிட்டது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்பு ஒரு முறை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆயிரக்கணக்கான காவல் துறையினர் இராணுவ வீரர்கள் போலச்சென்றார்கள் என்று சொல்லி, அதை இல்லையென்று சொன்ன பிறகு, நான் அப்படிக்கேள்விப்பட்டேன் என்று பின்னால் மாற்றியதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நினைவு படுத்துகிறேன். ஆனால் அந்த தாயிடம் கேவலமாகப் பேசினார்கள் என்பதெல்லாம் கற்பனையாக இருப்பது என்பதை மட்டும் இங்கே சொல்லி இதை எந்த ஆதாரத்தை வைத்து இங்கே படித்தாலும் அதை நிரூபிக்க அவரால் முடியாது என்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ; தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு முன்னால் சொல்கிற சமயத்தில், ஆதாரமில்லாமல் பேசமாட்டேன். பத்மாசினி அம்மாள் அவர்கள் எங்களுடைய கட்சியின் தலைவருக்கும், எனக்கும் எழுதியிருக்கிறார்கள். அவர்களுடைய கடிதத்தில் எழுதியிருக்கிறார்கள்...(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் அந்த கடிதத்தைப் பார்க்கவில்லை. என்னிடம் நீங்கள் காட்டவில்லை. அப்படியிருக்கும்போது நீங்கள் படிக்க முடியாது.

தி. வி. கிருஷ்ணமூர்த்தி : தலைவர் அவர்களே, ஆதாரமாகத்தான் படிக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : முதலமைச்சர் சொன்னதற்குப் பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பதில் சொல்லி விட்டு முடித்து விடுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். கடலூரிலிருந்து மின்சாரத்தை வெட்டுகின்ற சமயத்தில் ஆயிரக்கணக்கான போலீஸ் போனது என்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு அவர்கள் சொன்னார்கள், 200 போலீஸ் நல்லாத்தூருக்குப் போனது என்று சொன்னார்கள். இந்த 200, 300 போலீஸ் போனதை ஒத்துக் கொண்டார்களே, அதுவரை நன்றி. ஒரு விவசாயினுடைய மின்சாரத்தை துண்டிப்பதற்காக 200 போலீஸை அழைத்துக் கொண்டு போனது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைத் தவிர வேறில்லை. அதேபோல் பத்மாசினி அம்மாள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்து விடுங்கள். நேரம் இல்லை.

திரு. க. அன்பழகன் : நேரம் இல்லை. நேரம் இல்லை என்று சொல்லி அதிலேயே தாங்கள் நேரத்தைப் போக்குகிறீர்கள். அவர்கள் சொல்கிற கருத்தின் சொற்றொடரை முடித்தாக வேண்டும். முதலமைச்சரே குறுக்கிட்டுச் சொன்னபோது ஒரு உறுப்பினர் தன்னுடைய கருத்தை சொல்கிறபோது, அப்படியே குற்றச்சாட்டை ஒத்துக் கொள்ளுங்கள் என்று பொருள் அல்ல. சாதாரணமாக அமைச்சர் மறுப்பு சொல்லக்கூடும். இரண்டு வார்த்தைகளைச் சொல்லி முடிக்க முடியாமல் ஒவ்வொரு முறையும் தாங்கள் குறுக்கிடுகிற காரணத்தாலேயே நேரம் அதிகமாகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு இன்டசின்ட்டாக புதிதாகச் சொல்கிறார். இப்போது பத்மாசினி அம்மாள் என்று ஆரம்பித்திருக்கிறார்கள். அதனால்தான் முடித்துவிடுங்கள் என்று சொன்னேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இன்னும் 10 நிமிடம் உட்கார்ந்தால் என்ன ? ஏன் அவசரப்படுகிறீர்கள் ? முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கருத்துக்களைச் சொல்ல அனுமதிக்கக் கூடாதா? பிரதான எதிர்க்கட்சியின் சார்பிலே வைன்ட் அப் செய்து பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுத்த நேரம் தான் உங்களுக்கும் கொடுக்க

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் பார்க்க வில்லை.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே இவைகள், எல்லாம் ஏதோ அரசாங்கத்தின் மீது பெரிய பழி, பெரிய குற்றச் சாட்டு என்று கருதிக் கொண்டு, ஆதாரம் காட்டுங்கள் என்று கேட்கவேண்டிய அவசியம் இல்லை. அவர் ஏதோ மனச்சாட்சிக்கு ஏற்ப அவருக்கு வந்த கடிதத்தின் விஷயத்தை சொன்னால், முதலமைச்சர் அவர்கள் அப்படி இருக்குமானால் நான் விசாரிக் கிறேன்; இல்லையென்று எனக்குத் தெரிகிறது என்று சொன் னால் அது தீர்ந்து போய்விடும். நீங்கள் ஏதோ ஆதாரமே படிக்கக்கூடாது என்று சொல்வதன் மூலமாக அரசின் மீதுபெரிய குற்றச்சாட்டு, பெரிய பழி என்று கருதுவதானால் தான் ஆதார மெல்லாம் கொண்டு வரவேண்டும். இப்போது அவர் கடிதத்தைத் தான் சொல்கிறார். அதை விளக்கம் என்ற முறையிலே அனு மதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தை கேட்கவில்லை என்பதையும், ஆதாரத்தை காண்பிப்பதாலே கூட அது உண்மை யாக இருக்க முடியாது என்று சொன்னேன் என்பதையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். விவாதம் என்று வந்தால் இருக் கின்ற ஆதாரங்களை சொல்லும் பொழுது, அங்கே நடைபெற்ற பேச்சு வார்த்தைகளை எல்லாம் இங்கே சொல்லி குறிப்பேட் டிலே ஏற்றுவது, வெளியே கொண்டு வர விரும்புவது, அது சரியல்ல என்ற காரணத்தாலே தான் ஆதாரமாக உண்மையென்று சொல்லுங்கள் என்று கேட்கிறோம். ஆதாரம் இருக்கிறது என் றால் உங்களிடம் காட்டிவிட்டு அனுமதி பெற்று படிப்பது என் பதில் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; நான் முதலில் அதைத் தான் சொன்னேன். முன்னாலேயே பேசி விட்டீர்கள். ஓரிரு 'இன்சிடென்டுகள்' சொல்லியிருக்கிறீர்கள். அது லெட்டராக இருந்தாலும் என்னிடம் காட்டி விட்டு தான் படிக்க முடியும். இது சம்பந்தமாக லெட்டரில் இருக்கிற வார்த்தைகள் எல்லாம் நீங்கள் பேச முடியாது.

(பிற்பகல் 1—10)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தங்களுக்கு அதிக நேரம் கொடுத்தாகிவிட்டது. எல்லாத்தலைவர்களும் பேசிய நேரத்தை விட அதிகமாக நேரம் கொடுத்திருக்கிறது.

[பேரவைத் துணைத்தலைவர்]

முடியும். வைன்ட் அப் முடிந்தாகிவிட்டது. நீங்கள் பன்னிரண்டே முக்காலுக்கு ஆரம்பித்து முடிக்கிறேன் முடிக்கிறேன் என்று சொல்லி இப்போது 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. முடித்து விடுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பத்மாசினி அம்மாள் அவர்களே எதிர்க்கட்சித் தலைவருக்கும், எங்கள் தலைவருக்கு—எங்களுக்கும் எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் குற்றச்சாட்டு மாதிரி லெட்டரை கையிலே வைத்துக் கொண்டு படிக்கிறார், அது முறையல்ல.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : கீழே போட்டு விட்டு வேண்டுமானால் பேசுகிறேன். சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது.

*டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும் பொழுது அவர்களாகவே வலிய ஒரு கடிதத்தை தங்களிடத்திலே அனுமதி பெறாமல் படித்திருப்பாரானால் அது இந்த அவையிலே நாம் வகுத்துக் கொண்டிருக்கிற முறையை மீறியது ஆகும். ஆனால் அவர் தகவலாகத்தான் சொன்னார். நான் உள்ளேயிருந்து கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். அந்த இடத்திலே போலீசார் ஜப்தி செய்யச் சென்றபோது அதிகாரிகள் அங்கிருந்த அம்மையாரை கேவலமாக பேசினார்கள் என்று சொன்னார்கள். முதலமைச்சர் குறுக்கிட்டு அப்படிப் பேசியதற்கு ஆதாரம் இல்லை என்று சொன்னார்கள். அவர் சொன்னதற்குத்தான் கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னாரே தவிர வேறு இல்லை. ஆகவே இந்தப் பிரச்சினையை அதோடு விட்டு விடலாம். அவரும் கடிதத்தைப் படிக்கத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : முடித்து விடுங்கள். எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுத்ததைவிட உங்களுக்கு அதிக சலுகை கொடுக்க முடியாது. எல்லா உறுப்பினர்களுக்கும் 15 நிமிடங்கள்தான் கொடுத்திருக்கிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் கன்க்லுட் பண்ணுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : கடைசியாகப் பேசுகிற உறுப்பினர்களுக்கு 10 நிமிடங்கள் கொடுத்து முடித்த மானியங்கள் எல்லாம் இருக்கின்றன. தாங்கள் அரை மணி நேரம். எடுத்துக் கொண்டீர்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இந்த அமைச்சரவை ஆளுவதற்கு லாயக்கு அற்றது என்பதைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : இந்த வார்த்தை யைச் சொல்வதற்கு இவ்வளவு கஷ்டப்பட்டு..................

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : இந்த அமைச்சரவையினால் விவசாயம் கெட்டுவிட்டது, விவசாயம் அழிந்து விட்டது என்ற குற்றச்சாட்டைச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மை துறை மானியக் கோரிக்கையின் மேல் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் நல்ல எண்ணங்களை, ஆலோசனைகளை, அறிவுரைகளை வழங்கியிருப்பதற்காக என் னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நூற்றாண்டு விழாக் கொண்டாடுகிற இந்தத் துறை மேலும் சிறப்புறவும், வலிவுறவும் உள்ள பல நல்ல கருத்துக்கள் இங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. வேளாண்மைத் துறை என்று தனி யாக இருந்தாலும் வேளாண் பெருமக்களுடைய பிரச்சினைகள் என்பவை இந்தத் துறையினுடைய எல்லைக் கோட்டிற்குள் மட்டு மில்லாமல் மின்சாரத் துறை, வருவாய்த் துறை, பாசனத் துறை, கூட்டுறவுத் துறை ஆகிய பல துறைகளிலே பாய்ந்து பரவியிருக் கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே ஒட்டு மொத்தமாக அமைச்சரவை, பெரும்பான்மையாக இருக்கின்ற வேளாண் பெரு மக்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டும், சிக்கல்களைப் போக்க வேண்டும் என்கின்ற தூய நன் நோக்கோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக் கிறேன்.

அரசாங்கத்திற்கு முறையாகப் பிரச்சினைகளை, அதனுடைய கனபரிமாணங்களையெல்லாம் தெரிவித்து உரிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதற்காகத்தான் அந்தக் குழு உருவாக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இங்கே குறிப்பிடுகின்ற பொழுது சிறிய விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று பிரிப்பதேகூட கூடாது என்ற வகை யிலே ஒன்றைச் சொன்னார்கள். ஆனால் வேளாண் பெருமக்க ளுக்குச் சலுகைகளை நாம் வழங்குகின்ற பொழுது அப்படிப் பிரித்துத்தான் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் சலுகை யாருக்குத் தேவையோ அவர்களுக்கு அரசாங்கத்தாலே செய்ய முடியும். அண்ணன் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் டாக்டர் கலைஞர் அவர்களிடத்திலேயோ அல்லது பேராசிரியர் அவர் களிடத்திலேயோ கேட்டால் கூடச் சொல்லியிருப்பார்கள்.

'' பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அது நோக்கி வாழ்வார் பலர் ''.

[திரு. கா. காளிமுத்து]

என்பது குறள். ஆகவே, வெறும் பொதுக் கண்ணோட்டத்தோடு, விவசாயிகள் என்று ஒட்டு மொத்தமாகப் பார்க்காமல், சிறு விவசாயிகள் யார், இந்தத் துறையிலே பாதிக்கப்பட்டு, பொட்டுப் பூச்சிகளாய் காலங் காலமாக நெளிந்து கொண்டிருப்பவர்கள் யார். சமுதாயத்தின் பாதாளப் படிக்கட்டிலே இருப்பவர்கள் யார் என்று கண்டறிந்தால்தான் அவர்களுக்குரிய வசதிகளை அரசாங்கத்தாலே செய்ய முடியும். அந்த அடிப்படையிலேதான் அரசு பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதிலும் வறட்சியும், புயலும் வேளாண்மையைப் பாழ்படுத்துகின்ற இரட்டைக் குழந்தைகள் என்பதை நீங்கள் அறிவீர்கள். வேளாண் துறையினுடைய நூறாண்டுக்கால வரலாற்றை நாம் எடுத்துப் பார்ப்போமேயானால் ஒருமுறை வறட்சி தாக்குதல் என்றால் அதனால் பத்து இலட்சம் டன் உணவுப்பொருள்கள் விளையாமல் போகின்றது என்கிற அளவிற்குக் குறிப்புகள் இருக்கின்றன.

ஆனால் கொஞ்சம் தொலைநோக்கோடு இந்த அரசு, குறிப்பாகப் புரட்சித் தலைவரவர்கள் கடந்த ஜூனிலே மேட்டூர் அணையிலேயிருந்து தண்ணீரை திறந்துவிடச் செய்த காரணத்தினால் நாம் இப்பொழுது வறட்சியினாலே ஏற்பட்ட தாக்குதலையும் சமாளித்துத் தன்னம்பிக்கையோடு நிமிர்ந்து நிற்கிறோம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, ஒரு வறட்சி தாக்குகின்ற பொழுது அனைத்துக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து, மாநிலத்தினுடைய பொதுப் பிரச்னை என்கின்ற வகையிலே அதை அணுகி வறட்சிக்கு அறைகூவல் விடத்தக்க அளவிற்கு காரியங்களை ஆற்றினால்தான் மக்களுடைய மனத்திலே நிம்மதி பிறக்கும். அந்த வகையிலே, ஏற்பட்டுள்ள வறட்சி சமாளிக்க முடியாதது அல்ல; சந்திக்க முடியாதது அல்ல; அதை நாம் தன்னம்பிக்கையோடு சந்தித்துத் தமிழகத்து வேளாண் பெருமக்களைப் பாதுகாக்க முடியும் என்கின்ற நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

இங்கே மின்சாரத்தை வேளாண்மைக்கு வழங்குவதிலே இருக்கின்ற சிக்கல்களை, சில மனக்குறைகளை நம்முடைய அண்ணன் திரு. அழகர்சாமி அவர்கள் கோடிட்டுக் காட்டினார்கள். நான் மின்சாரத் துறை அமைச்சரவர்கள் தந்திருகின்ற தகவலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மின்சாரத்தை வேளாண்மைக்கு வழங்குவதில் ஒரு முறையை வகுத்துக்கொண்டு, மாதத்திலே பத்துநாட்கள் காலையிலே என்றும், அடுத்த பத்து 4 நாட்கள் மாலையிலே என்றும்,

[திரு. கா. காளிமுத்து]

அதற்குகடுத்த பத்து நாட்கள் இரவிலே என்றும் வழங்கப் பட்டுக் கொண்டிருந்த நிலைமைகள் சிலயிடங்களுக்குப் பொருந் தாது; ஒத்து வராது என்றால் அதனை அங்கங்கே இருக்கிற திட்ட மேற்பார்வைப் பொறியாளர்களே கவனித்து உரிய நடவடிக்கையை எடுக்க, விவசாயப் பெருமக்கள் விரும்புகின்ற வகையிலே மின்சாரத்தை வழங்க முயற்சி மேற்கொள்ளப்படும் என்று மின்சாரத் துறை அமைச்சரவர்கள் தெரிவித்த அந்தத் தகவலை நான் இப்பொழுது சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, வறட்சியாலே பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்தத் துறையின் சார்பாக, எண்ணெய் வித்துக்கள் துறையினுடைய சார்பாக ஒரு நல்ல அறிவிப்பை அந்த மக்களுக்குப் பயனளிக்கத்தக்க வகையிலே இப்பொழுது தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சிறு விவசாய களுக்கு இலவசமாக நெல், சிறுதானியம், பயறு வகைகள், பருத்தி விதைகள் ஆகியவற்றை இலவசமாக வழங்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. இதற்கென 2,000 டன் நெல் விதைகளும், 100 டன் சிறு தானிய விதைகளும் வாங்கிட ரூபாய் ஐம்பது இலட்சம் தனியாக ஒப்புதல் அளிக்கப்பட்டி ருக்கிறது.

ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 75 அளவிற்கு நெல் விதைகள் அல்லது ரூபாய் 25 அளவிற்கு சிறுதானிய விதைகள் அல்லது ரூபாய் 50 அளவிற்குப் பயறு வகை விதைகள் அல்லது ரூபாய் 75 அளவிற்கு பருத்தி விதைகள் சிறுவிவசாயிகளுக்கு இலவசமாக வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. நிலக்கடலை விதைகள் முதல்கட்டமாக 500 டன் விதைகள் கொள்முதல் செய்ய ரூபாய் 32 இலட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 1—20]

மானிய விலையில் இவ்விதைகளை விநியோகிப்பது பற்றி அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது. மற்றும் உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகியவற்றை 25 விழுக்காடு மானிய விலையில் வழங்குவதற்கு மத்தியக் குழுவிற்குப் பரிந்துரை செய்யப் பட்டிருக்கிறது. அதன் அறிக்கை வரப் பெற்றதற்குப் பிறகு, அது பற்றி மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டி ருக்கிறேன்.

1981 ஏப்ரல் 20]

[திரு. கா. காளிமுத்து]

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் குறிப்பிடுகிறபோது உலக வங்கியிலே 70 விழுக்காடு பெறுகிறீர்கள். அதிலே மீதி 30 விழுக்காடுகளைத் தருவது யார்? மத்திய அரசா, மாநில அரசா என்கிற வகையிலே ஒரு கேள்வியைக் கிளப்பினார்கள். நான் அதுபற்றிய விளக்கத்தைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். திட்ட மதிப்பீட்டின் மொத்தத் தொகையில் உலக வங்கி 70 விழுக்காடு மத்திய அரசுக்கு அளிக்கும். அந்த 70 விழுக்காட்டில் 70 சதவீதம் மாநில அரசுக்குக் கிடைக்கும். அதாவது, இத்தொகை உலக வங்கி அளிக்கும் மதிப்பீட்டில் 49 விழுக்காடு ஆகும். மீதி 51 விழுக்காடு தொகையை மாநில அரசு ஏற்கும். இந்த 49 விழுக்காடில் மானியம் 30 விழுக்காடும், கடன் 70 விழுக்காடும் ஆகும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பல்வேறு குறைகளை இந்த நேரத்திலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். நம்முடைய உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் தஞ்சை மாவட்டத்திலே வேளாண்மைப் பல்கலைக் கழகம் அமைக்கவேண்டும்; கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். திரு. இஸ்மாயில் அவர்கள் அதற்கு கன்னியாகுமரிதான் சரியான இடம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால், நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புவது, தமிழகத்தினுடைய வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலேயிருந்து ஆண்டு ஒன்றுக்கு 400 பட்டதாரிகள் வெளியேறுகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆகவே, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்குத்தான் நம்மால் இயலும். புதிதாக பட்டதாரிகளை உற்பத்தி செய்து, அவர்கள் வேலை வாய்ப்பு நிலையங்களுக்கு முன்னாலே ஏக்கப் பெருமூச்சோடு நின்று கொண்டிருக்கிற நிலையைத் தோற்றுவிக்க அரசு விரும்பவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பல்வேறு நல்ல ஆலோசனைகளை, பேசிய உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அண்ணன் திரு. அழகர்சாமி அவர்கள் தெரிவித்ததைப் போல, இந்த மாநிலத்தின் சார்பாகப் புதிதாகப் பருத்திக் கழகம் தொடங்குவதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறது. ஏற்கனவே நான் தெரிவித்ததைப் போல, இந்தச் சட்டமன்றத் தொடர் கூட்டம் முடிந்ததற்குப் பிறகு மராட்டிய மாநிலத்திலே அவர்கள் அமைத்திருக்கிற அந்தப் பருத்திக் கழகத்தின் சட்ட திட்ட

[திரு. கா. காளிமுத்து]

விதிகளை முழுமையாகப் பார்த்து. புரிந்து கொண்டு அந்த அடிப்படையிலே நம்முடைய மாநிலத்திலே அமைப்பதற்கு நாம் முன் வருவோம் என்பதனை மீண்டும் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே உரத்திற்கு மானிய விலை கொடுக்கக்கூடாதா என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கேட்டார்கள். அதிலே அழுத்தமாகக் கேட்டது, நம்முடைய உறுப்பினர் திரு. சுந்தர ராஜ் அவர்களும் அண்ணன் திரு. சுப்பிரமணியம் அவர்களும். ஆனால், உரத்தினுடைய விலையை நிர்ணயிக்கின்ற உரிமை மைய அரசுக்கு இருக்கிறது என்பதையும், அந்த விலையைக் கூட்டவோ, குறைக்கவோ மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை என்பதையும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் சார்பாகத்தான் நாம் சில உரங்களுக்கு மானியம் தருகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் மத்திய சர்க்கார் 50 விழுக்காடு, மாநில சர்க்கார் 50 விழுக்காடு என்கிறவகையில் கொடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக் கிறேன்.

வேளாண்மைத் துறை பல்வேறு கிளைகளாகப் பிரிந்ததன் மூலம், அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதன் மூலம், நல்ல பணி ஆற்றி இருக்கிறது என்பதை, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பல இடங்களிலே தொடங்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். அது பற்றிய புள்ளி விரங்களை இங்கே நான் எடுத்துக் காட்ட முடியும். நேரம் இல்லாத காரணத்தினால், அதைக் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன். திரு. சுந்தரராஜ் அவர்கள் பேசுகின்றபொழுது ஒரு கருத்தினை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த மானியக் கோரிக்கையின் விளக்கக் குறிப்பில் மைய அரசைப் பற்றிக் குறை கூறவில்லை. அதற்காக நான் மகிழ்ச்சி அடை கிறேன் என்று குறிப்பிட்டார்கள் அதிலேயிருந்து என்ன தெரிகிறது என்றால், இந்த அரசு அனாவசியமாக மைய அரசைப் பற்றி குறை கூறக்கூடிய அரசு அல்ல என்பதை நான் முதலிலேயே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

அருமை அண்ணன் திரு. சுப்பிரமணியன் அவர்கள் பேசு கின்றபோது ஒரு அறிவுரையை எனக்கு வழங்கினார்கள். நான் அதைக் கட்சிக் கண்ணோட்டத்தோடு [illegible] ணுகவில்லை. என்னுடைய அருமை அண்ணன் திரு. திரு[illegible]மூர்த்தி அவர்களும் வழங்கினார்கள். இந்தத் துறையின் [illegible] அதிகமான கவனம் தேவை என்று அவர்கள், குறிப்பிட்டார்க[illegible]. அந்த அறிவுரையை

1981 ஏப்ரல் 20]

[திரு. கா. காளிமுத்து]

அன்புரையை நான் எடுத்துக்கொள்கின்றேன். ஆனால், அருமை அண்ணன் திரு. சுப்பிரமணியன் அவர்களுக்கு நான் குறிப்பிட விரும்புகிறேன், அரசியல் கூட்டத்திலே பேசுகிற ஒரே காரணத்தினாலே, அமைச்சர்கள் பொதுக் கூட்டங்களிலே பேசுகின்ற ஒரே காரணத்தினாலே, அவர்களுடைய துறையைப் புறக்கணித்துப் போய் விடுகிறார்கள், அந்தத் துறையிலே கவனக் குறைவாக இருக்கிறார்கள் என்பது பொருள் அல்ல.

அவர்கள் பேசும்போது இன்னொன்றையும் கூட சுட்டிக் காட்டினார்கள். தேவையற்ற சர்ச்சையிலே வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சிக்கிக்கொள்ளவேண்டாம் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். தேவையற்ற சர்ச்சை தேவை இல்லாத சர்ச்சை என்று இப்பொது பேசுவது தேவையற்றது என்று நான் கருதுகிறேன். ஆனால் ஒன்றைத் தெரிவிக்க விரும்பு கிறேன். சர்ச்சைகளே இல்லாவிட்டால் ஜனநாயகம் சவக் குழிக்குப் போய்விடும் என்பதை மட்டும் நான் பணிவோடு தன்னடக்கத்தோடு அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இங்கே உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சில அதிகாரிகள் உண்ணாவிரதத்தைத் துவக்கி வைக்கிறார்கள் என்கிற வகையிலே குறிப்பிட்டுக் கூறினார்கள். இது பற்றிய தகவலை அரசுக்குச் சொன்னதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அது பற்றி எந்தவிதமான தகவலும் அரசுக்குக் கிடைக்கவில்லை. ஆனால் அதை அடிப்படையாக வைத்துக் கொண்டு அதிகாரிகள் இந்த அரசாங்கத்தின் மேலே நம்பிக்கை இழந்துவிட்டார்கள் என்று அவர்கள் குறிப்பிட்டுக் கூறுகின்றார்கள். நான் ஒன்றை குறிப்பிட விரும்புகிறேன். சில அதிகாரிகளுடைய நம்பிக்கையைக் கொண்டு ஆளுகின்ற அரசு இந்த அரசு அல்ல. நாட்டு மக்களிலே அழுத்தப்பட்ட மக்களை அல்லது ஏழை எளிய மக்களிலே பெரும்பான்மையான மக்களுடைய அன்பை, ஆதரவை அடிப்படையாகக் கொண்டுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இயங்குகின்றது. ஆக அதை அந்த வகையிலே அசைத்துப் பார்ப்பதற்கு யாராலும் முடியாது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆனால், மத்திய அரசை ஆளுகின்ற ஒரு இயக்கத்தின் சார்பாக, இங்கே பிரதிநிதியாக இருக்கின்ற எனது அன்புச் சகோதரர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சில அதிகாரிகள் அரசாங்கத்திற்கு எதிராக இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு, மன நிம்மதியோடு புன்னகையோடு பொறுப்போடு தெரிவித்து இருப்பது சரியானதல்ல, முறையானதல்ல என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அசாம் மாநிலத்தில் காவல் துறை அதிகாரி ஒருவர் டிஸ்மிஸ் செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டார்கள். அப்படியானால் அதிகாரிகளுடைய ஆத

[திரு. கா. காளிமுத்து]

ரவை, நம்பிக்கையை மத்திய சர்க்கார் இழந்துவிட்டது என்பது அதனுடைய பொருளல்ல என்பதை இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வருமான வரி கொடுக்காதவர்களை எல்லாம் விளம்பரப் படுத்தவேண்டும் என்று விளம்பரப் படுத்துகிறார்கள். அதைப் போல இந்தச் சர்க்காரை ஏமாற்ற வேண்டும் என்பதற்காகவே, இந்த சர்க்காரைப் பதம் பார்ப்பதற்காகவே, சிறு விவசாயிகளுடைய வாழ்விலே அக்கறை செலுத்திக்கொண்டிருக்கின்ற இந்த அரசாங்கத்திற்கு அறைகூவல் விடவேண்டும் என்பதற் காகவே வசதி இருந்தும் வாய்ப்பு இருந்தும் பணத்தைக் கட்டாமல், கடனை கட்டாமல், தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற அல்லது மக்களுடைய அரசாங்கத்தை அழிக்கின்றவர்களை, அப்படிப்பட்ட பெரிய விவசாயிகளுடைய பெயர்களை விளம் பரப்படுத்துவதிலே, ஊருக்கும் உலகத்துக்கும் அம்பலப்படுத்து வதிலே என்ன தவறு இருக்கிறது என்பதுதான் எனக்குப் புரிய வில்லை.

அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். வேளாண் மைத் துறையை நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். கவனிக்கிறோம். அதிலே புதியான் பூச்சிகள் இருக்கின்றன. எத்தனை எத்தனையோ பூச்சிகள் வருகின்றன. அந்தப் பூச்சிகளையே உங்களாலே அழிக்க முடியவில்லை என்று கேட்டார்கள். அவர்கள் கேட்டதை நான் இந்த அளவுக்கு நிறுத்துகிறேன். ஏனென்றால் பிரச்சினை பெருகக்கூடாது என்பதற்காக. ஆனால் ஒன்று, வேளாண்மைத் துறை சார்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன். பயிர், பச்சைகளை அணுகி வருகிற பூச்சிகள் எப்படிப்பட்ட வல்லமை படைத்ததாக இருந்தாலும் அதை அழிக்கின்ற ஆற்றல் இந்த அரசுக்கு, இந்தத் துறைக்கு இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்து, நீங்கள் வெட்டுத் தீர்மானங்களின் மூலம் வலியுறுத்திக் கூறிய நல்ல எண்ணங்களை இந்தத் துறை புரிந்துகொண்டிருக்கிறது என்பதை நான் பணி வோடு தெரிவித்து, ஆகவே அவைகளைத் திரும்பப் பெற்று, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது இப்போது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 20—வேளாண்மை.

திருவாளர்கள் சு. பாலன், ரா. கிருஷ்ணன், தி. கா. நல்லப்பன் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் — பேரவை முன்னுள்ள கேள்வி.

" மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 66,23,36,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண் 48 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

திருவாளர்கள் சு. பாலன், கே. ஆர். சுந்தரம் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்னும் தலைப்பின் கீழ் ரூ. 2,78,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21 ஆம் நாள் காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

144. கோரிக்கை எண் 20—வேளாண்மை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

145. 1981–82 ஆம் ஆண்டில் வேளாண்மைத்துறை பற்றிய செயல்வினை முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

146. தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் பற்றிய ஆய்வுரை, 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

147. தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

148. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகம் பற்றிய ஆய்வுரை 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

149. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வன (திருத்த) சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1981).

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[47. ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

வேளாண்மை.

உலக வங்கியின் உதவி பெற்ற பெரியார் வைகை நவீனத் திட்டத்தின் பகுதியாக 'பயிற்சி மற்றும் தொடர்பு வழித் திட்டம்' 1980-ல் மதுரை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் சில பகுதிகளிலும் ஒரு முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவீர்கள். இத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு, முறைப்படியும், ஒழுங்காகவும் தட்ப வெப்ப நிலைகளுக்குப் பொருந்தும் வண்ணம் இன்றைய நுட்பங்களைக் கையாண்டு பயிரிடும் முறைகளைப் பற்றி அறிவுரைகள் வழங்க வேண்டி, விரிவாக்கப் பணியை அரசு திருத்தி அமைத்துள்ளது.

இத்திட்டம் செயல்படும் பகுதிகளில், இதன் செயலாக்கத்தை நுணுகி ஆய்ந்த பிறகும், இத்திட்டத்தின் கீழுள்ள முக்கிய அம்சங்களைக் கருத்திற் கொண்டும், மாநில அளவில் பயிற்சி மற்றும் தொடர்பு வழித்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட வேளாண்மை விரிவாக்கப் பணித்திட்டம் தயாரிக்கப்பட்டது. இதைக் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ள முடிவு எடுக்கப் பட்டது. மேலும் வாஷிங்டன்னில், உலக வங்கி நிறுவனத்துடன் வெற்றிகரமாக பேச்சுவார்த்தை நடத்தி மேற் கூறிய திட்டத்தை அமுலாக்குவது என முடிவெடுக்கப்பட்டது.

இத்திட்டம் 1-7-81-ல் இருந்து இரண்டு ஆண்டு கால அளவில் அமுலாக்கப்பட இருக்கிறது. முதலாண்டில் செங்கல்பட்டு, தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தர்மபுரி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் நீலகிரி ஆகிய எட்டு மாவட்டங்களில் முழுமையாக இத்திட்டம் செயல்படும். மீதமுள்ள வடஆற்காடு, தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, சேலம், பெரியார், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டம் இரண்டாவது கட்டமாக 1-7-1982-ல் இருந்து செயல்பட இருக்கிறது.

இத்திட்டத்தை நிறைவேற்றப் பன்னாட்டு அபிவிருத்திக் கழகம், அன்னிய நாட்டுப் பண மதிப்பில் தனது உதவியை அளிக்கும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பு இந்தியப் பண மதிப்பில் ரூ. 36.48 கோடி ஆகும். இத்திட்டத்திற்குரிய சுமார் 70 சதவீதம் செலவு பன்னாட்டு அபிவிருத்திக் கழகத்தின் உதவியாக இந்திய அரசுக்குக் கிடைக்கும்,

[1981 ஏப்ரல் 20

தமிழகத்தில் வேளாண்மை முன்னேற்றத்திற்கும், தோட்டப் பயிர் உற்பத்திப் பெருக்கத்திற்கும் உதவி புரியும் வகையில் இத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் வேளாண்மை, மற்றும் தோட்டக்கலை விரிவாக்கப் பணியைப் புனரமைத்தல் மற்றும் வலுப்படுத்தல் ஆகிய நோக்கங்களோடு, ஐந்து வருட கால அளவில் முழு நேர கிராம விரிவாக்கப் பணியாளர் மற்றும் விரிவாக்கத் தலைமையிடத்திற்குமிடையே ஒரு வழி நிர்வாகத்தின் கீழ் நிறுவ இருக்கிறது. ஒருங்கிணைந்த பகுதி விரிவாக்கப்பணியாக, வேளாண்மை இயக்கச் சிறப்புப் பயிர்த் திட்டத்தின் கீழ் உள்ள பணியாளர்களை ஏற்கனவே பயிற்சிப் பணியிலுள்ள பணியாளர்களுடன் ஒன்று சேர்ந்து, தனிப்பட்ட ஒரே பணியாக அமைத்தல்: வேளாண்மை மற்றும் தோட்டக்கலை ஆராய்ச்சிப் பணிகளுக்கும் விரிவாகக்ப் பணிச் செயற்திட்டத்திற்குமிடையே ஆக்கப்பூர்வமான தொடர்பினை அதிகப்படுத்துதல்; முறையான திறனாய்வு முறைகளை வகுத்தல்: இத்திட்டத்தின் மேற்சொன்ன அம்சங்களைச் செயற்படுத்தத் தேவையான கூடுதல் பணியாளர்களை வழங்குதல், அதற்கான செலவுகள், கருவிகள், வாகனங்கள் பயிற்சி வசதிகள் மற்றும் கிராம வீட்டு வசதி ஆகியவை அளித்தல் அவசியமாகிறது.

தற்பொழுது அடிப்படை விரிவாக்கப் பணியாளர் பணியாற்ற வேண்டிய பகுதியும், அவர் தொடர்புகொள்ள வேண்டிய விவசாயிகளின் எண்ணிக்கையும் மிக அதிகமாக உள்ளபடியால் தற்பொழுதுள்ள பணியாளர்களைக் கொண்டு அவர்களுக்கேற்ற அளவில், குறைந்த அளவு எண்ணிக்கை கொண்ட விவசாயிகளோடுதான் தொடர்பு கொள்ள முடிகிறது.

போதுமான பணியாளர்களை வழங்குவதால் அடிப்படைக் கிராமப் பணியாளர் 2 முதல் 4 கிராமங்களில் மக்கள் தொகைக்கேற்றவாறு 800 முதல் 1000 விவசாயக் குடும்பங்களைச் சந்திக்க முடியும். விரிவாக்கப் பணியாளர்கள் தங்களது தொடர்ந்த, முறையான பயிற்சி முறை மூலமாகவும் திட்டமிடப் பெற்ற தொடர்பு வழி மூலமாகவும் சிறு விவசாயிகளை உள்ளடக்கிய தொடர்பு விவசாயிகள் மூலம் முன்னேற்றம் கண்டுள்ள பண்ணை நுட்ப முறைகளை விளக்கிக் காட்ட முடிகிறது. கருத்துப் பரிமாற்றங்களினால் வயல் வெளிப் பிரச்சினைகள் வேளாண் விஞ்ஞானிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு அப்பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காணப்பட இருக்கிறது.

உரிய துறையில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களின் துணையோடு, இந்தப் பயிற்சி மற்றும் தொடர்பு வழி அம்சமானது, உரிய தேவையான மாற்றங்களோடு, உயர்மட்ட அளவில், நல்ல அறிவியல் ரீதியில் உருவாக்க உள்ளது.

1981 ஏப்ரல் 20]

ஆர்வமும் அறிவும் மிக்க விவசாயிகளையும் நல்ல உயர்நிலை உற்பத்தியையும், மற்றும் உயர்தர விரிவாக்கப் பணியையும் ஏற்கனவே இம்மாநிலம் பெற்றுள்ளதை உலக வங்கியே ஆமோதித்துள்ளது.

திருத்தியமைக்கப்பட்ட விரிவாக்கப் பணித் திட்டத்தின் அறிமுகத்தால் மேலும் இவ் விரிவாக்கப் பணி விவசாயிகளுக்கு நல்ல முறையில் பணி செய்யவும் உற்பத்தியைத் தீவிரப்படுத்தவும் ஆகிய ஒரு முன்னேற்ற நிலையை நாம் எதிர்பார்க்கலாம்.

1980 ஆம் ஆண்டில், தென் மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழை காலத்தே பெய்யாமல் இருந்ததாலும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சி நிலையாலும் தமிழகத்தின் வேளாண்மை உற்பத்தி சற்றே பின்னடைந்தது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவீர்கள். உழவர் பெருமக்களின் தேவைகளை நிறைவேற்றிட, வறட்சியால் பாதிக்கப்பட்ட பதினொன்று மாவட்டங்களிலும் வறட்சி நிவாரணப் பணிகளை அரசு ஏற்கெனவே மேற்கொண்டு விட்டது. இருப்பினும் கடந்த வருடங்களில் உற்பத்தியை அதிகரிக்க நாம் மேற்கொண்ட முயற்சிகளின் பயனாக, நம் மாநிலம் முதன் முறையாக 66,000 பேல்கள் எம்.சி.யூ.5 மற்றும் வரலட்சுமி வகை பருத்தியை சோவியத் யூனியன் பிலிப்பைன்ஸ் மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திட வழி வகுத்தது. ஏற்கனவே, பருவ நிலை சாதகமாக இருந்துள்ள ஆண்டுகளில், அரிசி உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு எய்தியுள்ளதால், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரிப்பதையே தற்பொழுது முக்கிய குறிக்கோளாகக் கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. வேளாண்மையை நவீன மயமாக்கும், ஆதிலும் குறிப்பாக சிறு விவசாயிகளின் பண்ணைகளை நவீனமயமாக்கும் கொள்கையினை உள்ளடக்கிய, முன்னுரிமை கொண்ட ஊரக வளர்ச்சித் திட்டங்களை செயலாக்கியதன் மூலமும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை அபிவிருத்தி செய்ததின் மூலமும், தேவையான உள்ளமைப்புகளை உருவாக்கியதாலும், நம் மாநிலம் வேளாண்மை முன்னேற்றத்தில் புதிய வரலாற்றினை ஏற்படுத்தவுள்ளது.

தீவிர உணவு உற்பத்தித் திட்டங்களான, அமோக விளைச்சல் திட்டம், தீவிர விவசாய சாகுபடித் திட்டம், பயறு அபிவிருத்தி திட்டம் முதலியவற்றை மட்டுமின்றி, பருத்தி மற்றும் கரும்புக்கான தீவிர சாகுபடித் திட்டங்களையும், வேளாண்மைத்துறை தொடர்ந்து நிறைவேற்றி வருவதுடன் அதற்கு உறுதுணையாக குறிப்பிட்ட காலத்தில் தேவையான இடுபொருட்களையும் வழங்கி வருகிறது.

இவையன்றி, சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளிடையே தற்கால வேளாண் தொழில் நுட்பங்களைப் பரவச் செய்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம், மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகிய ஊரக வளர்ச்சித் திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்கென திட்ட ஒதுக்கீட்டிலிருந்து குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி, ஒரு சிறப்புப் பகுதித்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

சமீப காலங்களில், வேளாண்மையில் தீவிர முன்னேற்றம் ஏற்பட்டுள்ள இத்தருணத்தில், வேளாண்மை, கால்நடை அபிவிருத்தி, மீன் வளம் மற்றும் கோழிவளர்ப்பு ஆகிய அனைத்தையும் முழுமையான கண்ணோட்டத்தில் பார்த்தல் அவசியமாகிறது. எனவே புதிய வகை மாதிரிகளை உருவாக்கி அவைகளை நடைமுறைப்படுத்தி நிலத்திலிருந்து மிக அதிகப்படியான பலனைப் பெறும் நோக்கத்தோடு, வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் "சார்ட்" அமைப்புடன் கலந்தாலோசித்து அத்தகைய உகந்த சூழ்நிலைகளை செயல் விளக்கங்கள் மூலம் தெளிவுபடுத்த ஓர் முன்னோடித் திட்டம் 1981-82 ஆம் ஆண்டு துவங்கப்பட உள்ளது.

வேளாண்மை மற்றும் உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் பல்வேறு துறைகளின் பணிகளை ஒருங்கிணைத்து சிறந்த முறையில் இயங்குவதை உறுதிப்படுத்துவதற்காக வேளாண்மைத்துறையின் இணையாளர் மற்றும் செயலாளரை வேளாண்மை உற்பத்தி ஆணையாளராக அரசு நியமித்துள்ளது. கீழ்க்கண்ட துறைப் பிரிவுகளின் பணிகளை மேற்பார்வையிடுவதும் வழிமுறைப்படுத்துவதும் வேளாண்மை உற்பத்தி ஆணையாளரின் முக்கிய பணிகள் ஆகும்.

(1) வேளாண்மை.

(2) பால் பெருக்கம்.

(3) கால்நடை வளர்ச்சி.

(4) உணவு உற்பத்தி.

(5) சிறுபாசனம்.

(6) வறட்சிப் பகுதிகள் மேம்பாட்டுத் திட்டம்.

(7) சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம்.

(8) ஆயக்கட்டு மேம்பாட்டு அமைப்பு.

1981 எப்ரல் 20]

மேலும், வேளாண்மை வளர்ச்சி தொடர்பான பல்வேறு துறைகள் அரசின் தன்னுரிமை பெற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பணிகளையும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் பணியையும் ஒருமுகப்படுத்தும் அலுவலராகவும் இவர் பணிபுரிவார்.

முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு, வேளாண்மை, வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட தொழில்கள், கால்நடை அபிவிருத்தி மற்றும் கடன் வசதி ஆகியவற்றில் உள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து, இவை தொடர்பான பரிந்துரைகளை வழங்க ''வேளாண்மை ஆலோசனைக் குழு'' ஒன்றினை அமைத்து அரசு அண்மையில் ஆணை பிறப்பித்துள்ளது. மேலும், வேளாண் மக்களின் நலனுக்குகந்த திட்டங்கள் தீட்டவும், வேளாண் பொருட்களுக்கு உற்பத்தி செலவினை ஒட்டிய விலை நிர்ணயம் செய்யவும் ''விவசாயிகள் நலக் குழு'' ஒன்றினையும் மாநில அளவில் வேளாண் துறை அமைச்சர் தலைமையின் கீழ் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது, இது போன்று குழுக்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளர் தலைமையின்கீழ் அமைக்கப்படும்.

விவசாயிகளின் பிரச்சினைகளை ஆய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்ய அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக விவசாய சங்கத்தின் செயலாளர் திரு. முனுஆதி அவர்களைத் தலைவராகவும் சில விவசாய சங்க சார்பாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர்மட்டக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. இது கடன்கள், வட்டி விகிதம், விவசாயத் தொழில் முன்னேற்றம், கால்நடை மற்றும் பயிர் பாதுகாப்பு, இடு பொருள்கள், விளை பொருள்கள் ஆகியவற்றின் விலைகள், மின்சாரம், வரி வசூல் முதலியன தொடர்பான பிரச்சினைகளை ஆயும்.

1980—81 ஆம் ஆண்டின் சாதனைகள்.

பருவ நிலைகள் *1980-81:—*

1980-81 ஆம் ஆண்டில், ஆரம்ப முதலே மாறுபட்ட மற்றும் எதிர்பாராத பருவமழை நிலைகள் இருந்தன. வடக்குக் கடற்கரை மாவட்டங்களில் தென்மேற்குப் பருவமழை கிட்டத்தட்ட இயல்பான நிலையில் இருந்த போதிலும் இப்பருவ மழை புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை எவ்வித பலனுமின்றி கடந்து சென்று விட்டது. பருவ மழையின் இந்நிலையற்ற போக்கு மானாவாரிப் பயிர்கள் பயிரிடுவது, குறிப்பாக 2·35 இலட்சம் ஹெக்டேரில் நிலக்கடலையும், 2·90 இலட்சம் ஹெக்டேரில் சோளப் பயிறும் பாதிக்கப்பட்டது. எனவே, நிலக்

கடலை பயிரிட இயலாத நிலப் பரப்புகளில் கேழ்வரகு, சோளம், மற்ற சிறு தானியங்களான வரகு, சாமை ஆகிய பயிர்களை பயிரிடுமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப் பட்டனர். ஆனால், தொடர்ந்து நீடிக்கும் வறட்சி நிலையால், ராகி, சோளம், சிறுதானியங்கள் பயிரிட்ட நிலப்பரப்பும் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டது நமக்குஎதிர்பாராத வருத்தத்தைத் தந்துள்ளது. பருவ கால ஆரம்பத்தில் மேற்கு கரையோரத்தில் பெய்த நல்ல மழையின் காரணமாக, மேட்டூர் மற்றும் பவானி சாகர் நீர்த் தேக்கங்கள் நிரம்பியிருந்தது, இத்துயரங்களின் மத்தியில் ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருந்தது. இதன் பயனால் மேட்டூர் அணை காலத்தே திறந்து விடப்பட்டு, நல்ல குறுவை அறுவடைக்கு வழி வகுத்தது.

வடகிழக்குப் பருவ மழை தமிழகத்தில் அக்டோபர் இரண்டாவது வாரத்தில் தொடங்கிய போதிலும் சிலநாட்களுக்குப் பிறகு குறைந்துவிட்டது. சென்னை அதன் சுற்றுப் புறங்கள் மற்றும் தெற்கு மாவட்டங்களில் சில பகுதிகள் ஆகியவற்றைத் தவிர பொதுவாக வடகிழக்கு பருவமழை இம்மாதத்தில் இயல்பான நிலையைவிட குறைவாகவே இருந்தது. இதனால் சம்பா மற்றும் நவரை நெல் பயிரிடும் பரப்பு வெகுவாகக் குறைந்தது. தென் ஆற்காடு, வட ஆற்காடு, மற்றும் செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஏரிகளில் நீர் நிலை குறைவாக இருந்ததால் பெரும் பகுதி நவரைப் பருவப்பயிர் பயிரிட முடியவில்லை. மாற்றுப் பயிர் திட்டத்தினை மேற் கொண்டு அதிக நீர் தேவையுள்ள நெல் முதலிய பயிர்களை விடுத்து, குறைந்த நீர் தேவையுள்ள சிறு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள் ஆகிய பயிர்களை இப்பகுதிகளில் பயிரிட இத்துறை இப்பகுதி விவசாயிகளுக்கு அறிவித்தது. இதன் விளைவாக காரிப் பருவத்தில் இழந்த ஓரளவு பரப்பைக் குறிப்பாக சோளம், கம்பு முதலிய சிறு தானியப் பரப்பை ராபி பருவத்தில் ஈடு செய்ய முடிந்தது.

வடகிழக்குப் பருவமழை பரவலாக அதிலும் குறிப்பாக மாநிலத்தின் வட மாவட்டங்களில் பெய்ததின் காரணமாக சென்ற ஆண்டுகளைப் போலன்றி, கோடை காலத் திட்டத்தை செயல்படுத்த முடியாமல் போயிற்று.

சிறந்த விரிவாக்கப் பணியும், குறுவைச் சாகுபடியில் முதல் பருவத்தில் இதற்கு முன் கண்டிராத அளவிற்கு அறுவடை இருந்த போதிலும், பருவ மழை பரவலாக பொய்த்ததின் காரணமாக இவ்வாண்டு பொதுவாகவே எல்லாப் பயிர்களின் உற்பத்தியிலும் அதிக அளவு குறைவு எதிர்பார்க்கப்படுகிறது. விலை சரிவு காரணமாக பருத்தி பயிரிடும் பரப்பிலும் குறைவு ஏற்பட்டுள்ளது. ஆனால் கரும்புப் பயிர் நன்றாக இருப்பதுடன் சாதனை அளவு சிறிதளவு மிஞ்சக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

1981 எப்ரல் 20]

1981–82 ஆம் ஆண்டுக்கான குறிக்கோள்கள்:

இவ்வாண்டு இயல்பற்ற நிலையில் பெய்த பருவ நிலையை கணக்கில் கொள்ளாமல் வரும் ஆண்டு பருவ நிலை சாதகமாகவே இருக்கும் எனக் கருதியும் சென்ற ஆண்டுகளின் சாதனைகளை கருத்தில் கொண்டும், உணவு மற்றும் உணவு அல்லாத பொருட்களின் ஏற்றுமதியை கவனத்தில் கொண்டும், இதுகாறும் நாம் அடைந்து வந்துள்ள உற்பத்தி வேகத்தைத் தொடர்ந்து நிலைப்படுத்தும் முயற்சியாகவும், கீழ்க்கண்ட உற்பத்தி குறியீடுகள் 1981–82 ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளன:—

		இலட்சம் டன்கள்.
அரிசி	..	65·00
சிறு தானியங்கள்		22·80
பயறு வகைகள்		4·34
கரும்பு (வெல்லமாக)		22·70
		இலட்சம் பேல்கள்.
பருத்தி		4·80

நெல் மற்றும் சிறு தானியங்கள்:

மொத்த நெல் பரப்பும் உற்பத்தியும் முறையே 26·50 இலட்சம் ஹெக்டேர்கள் மற்றும் 65·00 இலட்சம் டன் என்ற அளவில் இருக்கும் நெல் பயிரிடும் பரப்பையும் உற்பத்தியையும் அதிகரிக்கும் முயற்சிகளில் அரசு தொடர்ந்து ஈடுபடும். அதே நேரத்தில் தற்பொழுது உள்ள முறையை விட மேலும் உகந்த பயிர் முறைகள் மற்றும் பயிர் கலவைகளை நிர்ணயிக்க ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத் திட்டங்கள் துவங்கப்பெற்றுள்ளன. இருபோகம் மற்றும் முப்போகம் பரப்பினை அதிகப்படுத்தியும் மானாவாரி சாகுபடி நுட்பங்களை அதிக பரப்பளவில் கடைப்பிடித்தும் இடுபொருட்களின் விநியோகத்தை சீர்படுத்தியும் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தஞ்சையில் நாம் குறுவையில் இதுவரை கண்டிராத அளவு சாகுபடியும் இத்திசையில் ஒரு நல்ல அறிகுறியே ஆகும். திருர் குப்பம் '9' நெல் ரகம் அதிக பரப்பளவில் பயிரிடப்பட்டதாலும் முன்னேற்ற சாகுபடி முறைகளை பின்பற்றி காலத்தே பயிர் செய்ததாலும் முதல் போக சாகுபடியில் எப்போதும் கண்டிராத அளவு உயர் விளைச்சலை அடைந்ததாக 1980–81 ஆம் ஆண்டு பயிர் அறுவடை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தஞ்சை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாவட்டத்தில் மட்டும் 1·69 இலட்சம் ஹெக்டேர் குறுவைப் பரப்பில் சராசரியாக ஒரு ஹெக்டேருக்கு 4 35 டன் நெல் மகசூல் கிடைத்தது. தொடர்ந்து இரண்டாவது ஆண்டும் மேட்டூர் அணையை காலத்தே திறந்ததால், இந்த அளவு மகசூலைப் பெற முடிந்தது. 1981–82 ஆம் ஆண்டிற்கு சிறு தானியங்களின் பரப்பு 19 55 இலட்சம் ஹெக்டேர் ஆகவும், உற்பத்தி 22·80 இலட்சம் டன் ஆகவும் அதிகரிக்கப்படும்.

நெல் மற்றும் சிறு தானியங்களின் அதிக உற்பத்திக்கு அமோக விளைச்சல் திட்டம் தொடர்ந்து முக்கிய அங்கமாக இருக்கும். இத்திட்டத்தின்கீழ் நெல் மற்றும் சிறு தானியங்கள் பயிரிடப் படும் பரப்பு முழுவதும் உயர் விளைச்சல் மற்றும் வீரிய ரகம் ரகங்களைக் கொண்டு பயிரிடப்படும். நெல் மற்றும் சிறு தானியங்களுக்கான குறியீடுகளான முறையே 23·20 இலட்சம் ஹெக்டேர்கள் மற்றும் 6·55 இலட்சம் ஹெக்டேர்களுக்கு எதிராக, பிப்ரவரி 1981 முடிய முறையே 17·04 இலட்சம் ஹெக்டேரிலும் 5·38 இலட்சம் ஹெக்டேரிலும் பயிரிடப் பட்டுள்ளன. வடகிழக்குப் பருவகாலத்தில் ஏறத் தாழ வறட்சி நிலைமை இருந்தால் அமோக விளைச்சல் கொண்டு பயிரிட திட்டமிட்ட நெல் மற்றும் சிறு தானியங்கள் பரப்பில் சிறிது குறைவு இருக்கும். 1981–82 ஆம் ஆண்டு அமோக விளைச்சல் திட்டத்தின்கீழ் 23·20 இலட்சம் ஹெக்டேர் நெற் பரப்பும் 7·30 இலட்சம் ஹெக்டேர் சிறு தானியங்கள் பரப்பும் சாகுபடிக்குக் கொண்டு வரப்படும்.

ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வரும் குறைந்த செலவில் அதிக உற்பத்தி பெறும் நுட்ப முறைகளை 1981–82 ஆம் ஆண்டு மேலும் தீவிரப்படுத்தி ஒவ்வொரு நிலப்பரப்பிலும் உற்பத்தித் திறன் அதிகப்படுத்தப்படும். உரங்கள் மற்றும் பூச்சி மருந்து களை சிறந்த ஆற்றலுடன் இடவல்ல ''கிரான்விடர் அப்ளிகேடர்'' கருவியும், பல்வேறு பண்ணைப் பணிகளைச் செய்யவல்ல '' பல நோக்கு கருவியும் '' மேலும் பரவலாக்கப்படும்.

இடுபொருட்கள் வழங்கு முறைக்கு தகுந்த உறுதுணையளிக் கும் இத்துறையின் கொள்கைக்கு ஏற்ப, கீழ்க்கண்ட அளவில் தர மான விதைகளை விவசாயிகளுக்கு இத்துறை விநியோகிக்கும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நெற்பரப்பில் தற் பொழுது பயிரடப்படும் ஏழு சதவிகித பரப்பிலிருந்து 1984–85 ஆம் ஆண்டு முடிவில் பத்து சதவீத அளவிற்கு படிப்படியாக உயர்த்தப்படும்.

1981 ஏப்ரல் 20]

	டன்கள்.
நெல்	9,500
கேழ்வரகு	174
சோளம்	161
வீரிய ஒட்டுச் சோளம் ..	147
வீரிய மக்காச்சோளம் ..	185
வீரிய ஒட்டுக் கம்பு ..	385

பயறு வகைகள் :

1985—86 ஆம் ஆண்டு இறுதியில் 6·40 இலட்சம் டன் பயறு உற்பத்தி பெறும் வகையில் ஆறாண்டு கால விரைவுத் திட்டம் ஒன்று, 1980—81 ஆம் ஆண்டு முதல் துவக்கப்பட்டுள்ளது.

1981—82 ஆம் ஆண்டு 13·04 இலட்சம் ஹெக்டேர் அளவிற்கு பயறு வகைகள் பயிராகும் பரப்பு அதிகரிக்கப்பட்டு, 4 34 இலட்சம் டன்னுக்கு உற்பத்தி அதிகரிக்கப்படும். 1980—81 பிப்ரவரி முடிய பயறு விதைகள் பெருக்கத் திட்டத்தின் கீழ் 16·4 டன் மூல விதை, 67·2 டன் ஆதார விதை மற்றும் 1,655 டன் சான்றிதழ் பெற்ற மற்றும் பெறாத விதைகள் உற்பத்தியாக்கப்பட்டன. 1981—82 ஆம் ஆண்டில் 22·5 டன் மூல விதை, 230 டன் ஆதார விதை மற்றும் 2,450 டன் சான்றிதழ் பெற்ற விதைகள் உற்பத்தி செய்யப்படும்.

தரமான விதைகள், சமச்சீர் உரமிடல், பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள், நுண்ணியிர் சத்துக்கள் இடல், போன்றவற்றின் பயன்களை முழுமையாக வேளாண் மக்களுக்கு விளக்கி காட்டுவதற்காக ஒரு ஏக்கர் செயல் விளக்க தளைகள் பயன்படுத்தப்படும். 709 எண்ணிக்கைக்கொண்ட இத்தகு செயல் விளக்கத் தளைகள் 1981 ஆம் ஆண்டு பிப்ரவரி முடிய நிறுவப்பட்டன. 1981—82 ஆம் ஆண்டில் 1,000 இடங்களில் ஒரு ஏக்கர் செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்படும். 1981—82 ஆம் ஆண்டில் 37,000 விவசாயிகட்கு பயிற்சி அளிக்கப்படும்.

மகசூலை அதிகரிக்கும் பொருட்டு விதைக்குமுன் விதையுடன் கலக்க விவசாயிகளுக்கு நுண்ணுயிர் பொட்டலங்கள் விநியோகிக்கப்படுகின்றன. 1,74,000 பொட்டலங்கள் என்ற குறியீட்டிற்கு எதிராக, 1981 பிப்ரவரி முடிய, சுமார் 1,81,247 பொட்டலங்கள்

விநியோகிக்கப்பட்டுள்ளன. 1981—82-ஆம் ஆண்டிலும் 1,74,000 இப்பொட்டலங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

பயிறு உற்பத்தியை அதிகரிக்க அண்மையில் கண்டுபிடித்துள்ள டை அமோனியம் பாஸ்பேட்டு கரைசல் தெளிப்பு பிப்ரவரி 1981 வரை 2,771 ஹெக்டேர்களில் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் 1981—82லும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு ஹெக்டேருக்கு ரூபாய் 10 வீதம் மானியம் வழங்கப்படும். சிறிய மற்றும் மிகச் சிறிய விவசாயிகளின் நலன் கருதி பயிறு உற்பத்திக்குரிய வழிமுறைகளை விளக்கிக் காட்டும் நோக்குடன் முன்னோடி செயல் விளக்க திட்டம், 1980—81 ஆம் ஆண்டில் சேலம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் செயலாக்கப்பட்டது. இத்திட்டம் 1981—82 ஆம் ஆண்டும் தொடரப்படும். பிப்ரவரி 1981 வரை, இத்திட்டத்தின்கீழ் 1,229 ஹெக்டேர்களில் செயல் விளக்க முறைகள் மேற்கொள்ளப்பட்டன. 11,741 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் 25 சதவிகித மானியத் தொகையில் வழங்கப்பட்டன. 167 பயிர் பாதுகாப்பு உபகரணங்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டன. 1981—82 ஆம் ஆண்டில் 1,300 ஹெக்டேர்களில் செயல் விளக்க முறைகள் மேற்கொள்ளப்படும். 3,333 ஹெக்டேர் பரப்பில் பயிர் பாதுகாப்பு மருந்துகள் 25 சதவிகித மானியத் தொகையில் வழங்கப்படும்.

மைய அரசின் ஆதரவு கொண்ட பயிறு வகைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழும் பிப்ரவரி 1981 வரை 955 ஹெக்டேர் பரப்பில் செயல் விளக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. 8,949 ஹெக்டேர் நிலப்பரப்பிற்கு பூச்சி மருந்துகள் 25 சதவீத மானிய விலையில் வழங்கப்பட்டன. 16,193 ஹெக்டேர் பரப்பில் ஒட்டு மொத்த மருந்து தெளிக்கப்பட்டது. மருந்து தெளிக்கும் செலவிற்கென ஹெக்டேர் ஒன்றுக்கு ரூபாய் 15 மானியம் வழங்கப்படும். இத்திட்டம் 1981—82 ஆம் ஆண்டும் தொடரப்படும்.

கரும்பு :

1980—81 ஆம் ஆண்டில் 1.70 இலட்ச ஹெக்டேர் கரும்பு பரப்பைக் கொண்டு சுமார் 20 இலட்சம் டன் வெல்லம் உற்பத்தியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது முறையே 1981—82-ல் 1.72 இலட்சம் ஹெக்டேராகவும், உற்பத்தி 22.70 இலட்சம் டன்களாகவும் இருக்கும். உற்பத்தியைப் பெருக்க அதிக விலைச்சல் மற்றும் அதிக அளவு சர்க்கரைச் சத்து கொண்ட இரகங்களை சாகுபடிக்கு கொண்டுவர வழிவகைகள் மேற்கொள்ளப்படும். முறைப்படி செயலாக்கப்படும் விதைப் பெருக்கத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் கரும்பு சாகுபடியாகும் மொத்த பரப்பில்

மூன்றில் ஒரு பங்கு இத்தகைய உயர் விளைச்சல் ரகங்களின்கீழ் கொண்டுவரப்படும். இதனைச் செயலாக்க தற்போதைய 50 அபிவிருத்தி மையங்கள் 1981–82 ஆம் ஆண்டு 63 மையங்களாக அதிகரிக்கப்படும். மேலும், முதல் கட்ட நாற்றங்காலுக்குத் தேவைப்படும் வெப்ப நேர்த்தி பெற்ற ஆதாரவிதைப் பொருட்களை உற்பத்தியாக்கி விநியோகிக்க, ஆறு வெப்பக் காற்று நிலையங்கள் உள்ளன.

இதுவன்றி தரமான விதைக் கரணைகள் கொண்டு பயிரிடுவதுடன் சமச்சீர் உரமிடல் பூச்சி மருந்துகளைக் கொண்டும் மற்றும் உயிரின முறைகளைக் கொண்டு கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றியும் பரிந்துரைக்கப்படும். ஒட்டுண்ணிகளை உற்பத்தி செய்து வெளியிடுவதற்கு 12 பிரதம ஒட்டுண்ணி வளர்ப்பு மையங்களும் 35 சிறு மையங்களும் உள்ளன.

1981 பிப்ரவரி வரை 6,791 ஹெக்டேர் பரப்பளவில் ஒட்டுண்ணிகள் வெளியிடப்பட்டது. 1981–82 ஆம் ஆண்டில் மொத்தத்தில், 10,000 ஹெக்டேர் பரப்பில் வெளியிடத்தக்க வகையில் 9 கூடுதல் மையங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், விவசாயிகள் நிலங்களில் கூட்டு செயல் விளக்கத் திடல்கள் அமைக்கப்படும்.

பருத்தி :

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தியின் தரத்தினை ஒத்த பருத்தியை அபிவிருத்தி செய்யும் பணி 1980–81 ஆம் ஆண்டு செயலாக்கப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டிற்கான திட்டமிடப்பட்ட 3.20 இலட்சம் ஹெக்டேர் பரப்புக்கு எதிராக 2.75 இலட்சம் ஹெக்டேர் பரப்பு எதிர்பார்க்கப்படுகிறது. 1981–82 இல் 3.50 இலட்சம் ஹெக்டேரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டு 4.80 இலட்சம் பேல்கள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய குறிக்கோளை அடைய, கோயம்புத்தூர், பெரியார், திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தீவிர பருத்தி அபிவிருத்தி திட்டம் மற்றும் இத்திட்டப் பகுதியை சேராத இறவை மற்றும் மானாவாரி பகுதிகளில் ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டமும் ஆக இரு திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களை அமுலாக்குவதன் வாயிலாக பருத்தியின் உற்பத்தியை அதிகரிக்க வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருந்திய சாகுபடி முறைகளைக் கையாளும் பொருட்டு மேற்கொள்ளப்படும் விரிவாக்க முயற்சிக்கு உறுதுணையாக, உயர் பருத்தி விதை ரகங்கள், உரங்கள் பூச்சி

மருந்துகள் போன்ற இடுபொருள்களும் கடனுதவியும் விவசாயி களுக்கு வழங்க வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பருத் தியின் தரத்தினை அபிவிருத்தி செய்யும் வகையிலும், பருத்தி உற்பத்தியில் '' தன்னிறைவு ''க்கு வழிவகை காண்பதும் நீண்ட இழைப் பருத்திக்கு அயல்நாட்டை நம்பியிருப்பதை குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.

1981–82 இல் தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 1.75இலட்சம் ஹெக்டேரிலும் ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 1.06 இலட்சம் ஹெக்டேரிலும், மேம்படுத்தப் பட்ட உழவியல் முறைகள், சமச்சீர் உரமிடல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் செயல்படுத்தப்படும். இதுபோன்ற தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 3,375 ஹெக்டேர் பரப் பிலும் ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 800 ஹெக்டேர் பரப்பிலும் விவசாயிகளின் நலன் கருதி அவர் களின் நிலங்களில் செயல்முறை விளக்கத் திடல்கள் அமைக்கப் படும். மேலும், இவ்விரு திட்டங்களின்கீழும் மானிய விலையில் 1,050 பயிர் பாதுகாப்புக் கருவிகள் விவசாயிகளுக்கு விநியோகிக் கப்படும். 1981–82 இல் ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்திக் திட்டம் தஞ்சாவூர், தருமபுரி மற்றும் தென் ஆற்காடு மாவட்டங் களுக்கு விரிவு படுத்தப்படும். உற்பத்தியை அதிகரிக்கும் முறை யில் தரமான விதை முக்கிய இணைப்பாகும். இறவை பரப்பில் 40 சதவீதத்திற்கும் மற்றும் மானாவாரி பரப்பில் 20 சதவீதத் திற்கும் விதைகள் வழங்குவதை இத் துறை மேற்கொண்டுள்ளது.

இதற்கென வைகை அணை விதைப்பண்ணையில் முதல் மற் றும் இரண்டாம் கட்ட மூல பருத்தி விதைகள் உற்பத்திக்காக ஒரு புதிய திட்டம் 1981–82 இல் 45 ஹெக்டேர் பரப்பில் செய லாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கோடைக்காலத் திட்டம் அமுல் படுத்தப்பட்டு 1980 ஆம் ஆண்டு கோடை பருவத்தில் 5,000 ஹெக்டேர் பரப்பில் பருத்தி பயிரிடப்பட்டது. 1981 ஆம் ஆண்டு கோடைப் பருவத்தில்6,000 ஹெக்டேர் பரப்பில் பருத்தி பயிரிட திட்டமிடப்பட்டுள்ளது. இது ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 10,000 ஹெக்டேர் பரப்பாக உயர்த்தப் படும்.

புகையிலை :

தஞ்சாவூர், பெரியார், கோயம்புத்தூர், மதுரை மற்றும் சேலம் மாவட்டங்களில் பெருமளவு புகையிலை பயிரிடப்படுகிறது. வாய்ப்புகையிலையின் தற்போதைய மகசூல் மற்றும் தரத்தினை உயர்த்தும் வகையில் நடவு முதல் அறுவடை வரை திருந்திய

சாகுபடி முறைகளைப் பிரச்சாரம் மூலமும், செயல் விளக்கங்கள் வாயிலாகவும் விளக்கிக் காட்டும் நோக்குடன் ஒரு திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு நல்ல தரமுள்ள வளமான புகையிலைக் கன்றுகளை வழங்கவும், அவர்களுக்குப் புகையிலையை பதப்படுத்தவும், விளைந்த புகையிலையை விற்பனைச் செய்யவும் உதவ இத்திட்டம் வழி வகுக்கிறது.

1981 பிப்ரவரி வரை 18,129 ஹெக்டேர் பரப்பில் புகையிலை பயிரிடப்பட்டு தீவிர சாகுபடி திட்டம் செயல்படும் இடங்களிலும் மற்றும் இதர இடங்களிலும் 85 செயல் விளக்கத் தளைகள் அமைக்கப்பட்டன. 1981–82 இல் 19,200 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்படுவதுடன் அவற்றில் 130 செயல் விளக்கத் தளைகளும் அமைக்கப்படும்.

மானாவரிச் சாகுபடி :

மானாவரிச் சாகுபடிக்கென நில மற்றும் நீர் பராமரிப்பிற்குகந்த பயிர்கள் மற்றும் ரகங்கள் தேர்ந்தெடுத்தல் சமச்சீர் உரமிடல், களை மற்றும் பூச்சி தடுப்பு முறைகள் பின்பற்றுதல் பின் அறுவடை நேர்த்தி ஆகிய இணைந்த முறைகள் கொண்ட உகந்த நுணுக்கங்களை உருவாக்கி அவைகள் வேளாண்மை மக்களிடையே பரப்பப்படும்.

1,000 ஏக்கர் அடங்கிய 116 நீர் தளப்பகுதி விளக்கத் தளைகள் 1980–81 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டன. 1981–82 ஆம் ஆண்டும் அதே எண்ணிக்கை கொண்ட தளைகள் அமைக்கப் பெறும். மானாவாரி பகுதிகளில் உற்பத்தித் திறனை அதிகரித்து அப்பகுதி விவசாயிகளின் பொருளாதாரத் தன்மையை மேம்படுத்தும் நோக்குடன் கோவில்பட்டி மற்றும் புதுக்கோட்டை பகுதிகளில் அமுலில் உள்ள ஒருங்கிணைந்த மானாவாரி வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் ரூ. 63·508 இலட்சம் செலவில் 1981–82 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், பெரியார், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

இடுபொருட்கள் விநியோகம் :

சரியான நேரத்தில், சரியான பகுதிகளில் இடு பொருட்கள் கிடைக்கச் செய்வது வெற்றிகரமான விவசாயத்திற்கு இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில் கொண்டே வேளாண் கிடங்குகள் மற்றும் தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாக விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு கிடைக்கச்

செய்வதை இத்துறை உறுதிப்படுத்துகிறது. இவ்விடு பொருட்களின் தரக்கட்டுப்பாடு அதற்கென நியமித்து இருக்கும் அலுவலர் மூலமாக கண்காணிக்கப்படுகிறது.

விதை மற்றும் விதைப் பொருட்கள் :

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும், வேளாண்மைத் துறையும், பல ஆராய்ச்சி நிலையங்களின் வாயிலாக நெல், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகளின் உயர் விளைச்சல் மற்றும் வீரிய ஒட்டு ரகங்களை உற்பத்தி செய்கின்றன. இந்த ரகங்கள் 46 அரசு விதைப் பண்ணைகளிலும் மற்றும் விதை மையங்களிலும் விதைப் பெருக்கம் செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

வேளாண்மைத் துறை ஆண்டுதோறும் நெல் மற்றும் சோளப் பயிரில் மொத்த சாகுபடிப் பரப்பில் 7 சதவீதத்திற்கும், கேழ்வரகில் 15 சதவீதத்திற்கும் வீரிய சோளம், கம்பு மற்றும் மக்காச் சோளம் போன்ற வீரிய ஒட்டுப் பயிர்களில் 30 சதவீதத்திற்கும் தேவையான விதையை வழங்கி வருகிறது. எஞ்சியுள்ள பரப்புக்கான விதைகள் விவசாயிகளுக்கிடையே மாற்று முறையிலும் மற்றும் தனியார் விதை விற்பனையாளர்கள் மூலமாகவும் விநியோகம் செய்யப்படுகிறது.

7,766 டன் நெல், 219 டன் கேழ்வரகு, மற்றும் சோள ரகங்கள், 477 டன் வீரிய ஒட்டுச் சோளம், மக்காச் சோளம் மற்றும் கம்பு விதைகள் 1981 பிப்ரவரி வரை இத் துறை மூலம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன.

1981–82 ஆம் ஆண்டில் 9,500 டன் நெல் விதைகளும் சிறு தானியத்தில் சிறிது அதிக அளவும், அதாவது 161 டன் சோள ரகங்கள், 174 டன் கேழ்வரகு, 147 டன் வீரிய ஒட்டுச் சோளம், 355 டன் வீரிய ஒட்டுக் கம்பு மற்றும் 185 டன் வீரிய ஒட்டு மக்காச் சோள விதைகள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

எரு மற்றும் இரசாயன உரங்கள் :

1980–81 ஆம் ஆண்டில் 12,500 ஆக இருந்த தனியார் மற்றும் கூட்டுறவு உர விற்பனை நிலையங்கள், 13,600 எண்ணிக்கை கொண்ட நிலையங்களாக உயர்த்தப்பட்டன.

1981 பிப்ரவரி வரை 2.78 இலட்சம் டன் தழைச் சத்து, 0.82 இலட்சம் டன் மணிச்சத்து, மற்றும் 1.06 டன் சாம்பல் சத்து உரங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டன. மக்கு

1981 ஏப்ரல் 20]

உரம், மற்றும் நீலப்பச்சை பாசி, இவற்றுடன் சேர்த்து உரங்களை சிக்கனமான அளவில் இடும்படி விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. உயிரின உர வகையினைச் சார்ந்த நீலப்பச்சைப் பாசி, இரசாயன உரங்களுடன் சேர்த்து நெற் பயிருக்கு இடுவதால், நெல்லின் மகசூல் அதிகரித்துள்ளது. இது குறைந்த செலவில் கிடைக்கும் தழைச் சத்தாகும். நீலப் பச்சைப்பாசி, ஹெக்டேர் ஒன்றுக்கு 20 முதல் 25 கிலோ தழைச் சத்தை அளிக்க வல்லது என்று கண்டறியப்பட்டுள்ளது. குறைந்த செலவில் தழைச் சத்து அளிக்கும் இதனைப் பெருக்கி நெற் பயிருக்கு அதிக பரப்பளவில் உரமாக இடுவதை பரவலாக்க திட்டமிடப்பட்டுள்ளது. அசோலா என்ற மற்றொரு உயிரின உரமும், தழைச்சத்து உரமாக முக்கியத்துவம் பெற்று வருகிறது. இதுவும் நெற்பயிருக்கு தழைச்சத்தை அளிக்க வல்ல ஓர் உரமாகும். ஆராய்ச்சி நிலையங்களிலும், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திலும் மேற்கொண்டுள்ள தொடக்க நிலை ஆராய்ச்சிகள் நல்ல முடிவைக் கொடுத்துள்ளதால் 1981–82 இல் மேலும் பெரிய அளவில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் செயல் விளக்கத் தளைகள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் 1981 பிப்ரவரி வரை 2.91 இலட்சம் நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்கள், 84.90 இலட்சம் டன் உள்ளூர் எரு, 3.28 இலட்சம் டன் கழிவு எரு, ஆகியன உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன.

உரமிடுதல் அவசியம், முக்கியமாக குறைந்த அளவு உரம் உபயோகப்படுத்தப்பட்ட பகுதிகள் மற்றும் பயிர்களுக்கு வலியுறுத்தப்படுவதன் வாயிலாக 1981–82 இல் உர விநியோகம் 3.65 லட்சம் டன் தழைச் சத்தாகவும், 1.10 இலட்சம் டன் மணிச் சத்தாகவும், மற்றும் 1.10 இலட்சம் டன் சாம்பல் சத்தாகவும் அதிகரிக்கப்படும். 3.5 இலட்சம் நுண்ணுயிர் கலவைப் பொட்டலங்கள், பயறு மற்றும் பசுந்தாள் உர விதைகளில் கலந்து உபயோகப்படுத்துவதற்கு, வழங்கப்படும். உள்ளூர் எரு, மற்றும் கழிவு எரு உற்பத்தித் திட்டம் உரிய கவனத்தைப் பெறும். ஒரு இலட்சம் ஹெக்டேர் நெல் பரப்பில் நீலப் பச்சைப் பாசி உபயோகிக்கப்படும். நீலப்பச்சைப் பாசியின் உற்பத்திக்குத் தேவையான உயிர்க்கரு பெருக்கத்திற்கு திட்டம் ஒன்று 1981–82 ஆம் ஆண்டு செயல்படுத்தப்படும்.

பயிர் பாதுகாப்பு :

1980–81 ஆம் ஆண்டில் பூச்சி பூசணங்களின் தாக்குதல் குறைவாக இருந்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டில் 55.12 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பூச்சியைக் கட்டுப்படுத்தவும், 15.80 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் நோயினை கட்டுப்படுத்தவும், 7,300 டன் தூள் மற்றும் 6 இலட்சம் லிட்டர் திரவ மருந்துகளை வாங்கி விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1981, பிப்ரவரி வரை, 0.33 இலட்சம் ஹெக்டேர் நெற் பயிரிலும், 0.11 இலட்சம் ஹெக்டேர் பயறு வகை பயிர்களிலும் அதிகளவு தாக்குதலுக்குள்ளாகும் பகுதிகளில் பூச்சிகளைக் கட்டுப்படுத்த, ஒட்டு மொத்த மருந்து தெளிப்பு மேற்கொள்ளப் பட்டது. இந்த திட்டம் 1981-82 ஆம் ஆண்டிலும் தொடரப் படும்.

நெற்பயிர் சாகுபடியாகும் குறிப்பிட்ட பகுதிகளில் தொடர்ந்து தாக்கி, அதிகளவில் சேதத்தினை ஏற்படுத்தும் பூச்சி, புகை யானாகும். இதனைக் கட்டுப்படுத்த பிப்ரவரி 1981 வரை, 17,900 ஹெக்டேர் பரப்பில் ஒட்டு மொத்த மருந்து தெளிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மருந்தடிப்பதற்கான செலவிற்காக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 7.50 மானியமாகவும், மருந்து விலையில் 50 சதவீதம் மானியமாகவும் இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்படும். 1981-82-லும் 20,000 ஹெக்டேர் பரப்பளவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

பூச்சி மற்றும் நோய்களை அடையாளம் கண்டு கொள்ளவும், பூச்சி மருந்துகள் மற்றும் பயிர் பாதுகாப்புக் கருவிகளை கையாளும் முறைகள்பற்றி தெரிந்துக் கொள்ளவும், கிராமப்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கும் ஒரு புதுமைத் திட்டம் 1981-82 இல் செயல்படுத்தப்படும்.

விவசாயிகளுக்கான கல்வி மற்றும் பயிற்சி

நமது மாநிலத்தில் 15 விவசாயிகள் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றில், இரண்டு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின்கீழும், ஒன்று தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர் துறையின்கீழும் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் வேளாண்மை மற்றும் அதனை ஒட்டி கல்வித் துறைப் பொருள்களில் சுமார் 30,000 விவசாயிகள் இந்நிலையங்களில் பயிற்சி பெறுகிறார்கள்.

கிராம இளைஞர்களையும், விவசாயிகளையும், நவீன சாகுபடி முறைகள், நவீன விவசாயக் கருவிகளை நல்ல முறையில் பயன்படுத்துதல் போன்றவற்றில் பயிற்றுவிக்க 13 விவசாயப் பள்ளிகள் உள்ளன. பயிற்சி கால அளவு ஒரு ஆண்டாகும். எட்டாவது வரை கல்வித் தகுதி பெற்ற 18 முதல் 30 வரை வயதுள்ள 30 விவசாயிகள் ஒவ்வொரு பள்ளியிலும் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பயிற்சியாளர்களுக்கு சமவெளிப் பகுதிகளில் மாதம் ரூ. 70 உதவிப் பணமும், மலைப் பகுதிகளில் மாதம் ரூ. 75 உதவிப் பணமும் வழங்கப்படுகிறது. இது இத்துறையில் தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் திட்டமாகும்.

1981 ஏப்ரல் 20]

முண் பரிசோதனை நிலையங்கள் :

மண்பரிசோதனையின் முடிவினை அடிப்படையாகக்கொண்டு அந்த நிலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற உர அளவினை பரிந்துரை செய்வதும், மண்ணின் உவர் களர் மற்றும் அமிலத் தன்மைகொண்ட நிலங்களை சீர்படுத்தும் வழிமுறைகளை விவசாயிகளுக்கு எடுத்துக் கூறுவதும் மண் பரிசோதனையின் நோக்கங்களாகும். மேலும் பாசன நீரின் தன்மையும் சோதிக்கப்பட்டு அதனை நல்லப்பலன் தரும் வகையில் பயன் படுத்தவும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

புதிதாக ஏற்படுத்தப்பட்ட பெரியார் மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்கள் எல்லாவற்றிலும் மண் பரிசோதனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மேலும் 15 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள் உள்ளன. அவற்றில், வறட்சி சார்பு பகுதி திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட 10 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களும் அடங்கும்.

1981 பிப்ரவரி வரை, 6·51 இலட்சம் மண் மாதிரிகள் பரி சோதிக்கப்பட்டன. 1981-82 ஆம் ஆண்டில் 8·5 லட்சம் மண் மாதிரிகளை பரிசோதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள் :

காஞ்சிபுரம், ஆடுதுறை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோவில் பட்டி, கோயம்புத்தூர் மற்றும் சேலம் ஆகிய ஏழு இடங்களில் பூச்சி மருந்து பரிசோதனை நிலையங்கள் உள்ளன. இந்த பரிசோதனை நிலையங்கள் ஆண்டொன்றுக்கு 14,760 பூச்சி மருந்து மாதிரிகளை பரிசோதிக்கும் திறன் உடையனவை ஆகும். இந்த பரிசோதனைக் கூடங்களின் உதவியோடு பூச்சி மருந்துகள் தரக் கட்டுப்பாடு தீவிரமாக அமுலாக்கப்படுகிறது.

உரப் பரிசோதனை நிலையங்கள் :

உர மாதிரிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரத்திற்கேற்றவாறு உள்ளனவா என அறிய கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப் பள்ளி மற்றும் கோவில்பட்டியில் நான்கு உர பரிசோதனை நிலையங்கள் உள்ளன. ஆண்டொன்றுக்கு சுமார் 8,000 மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்படுகின்றன.

விதைப் பரிசோதனை நிலையங்கள் :

தற்பொழுது, மதுரை, கோயம்புத்தூர், மற்றும் குடுமியாமலை ஆகிய இடங்களில் 3 விதைப் பரிசோதனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. மதுரையிலும் கோயம்புத்தூரிலும் உள்ள விதைப் பரிசோதனை நிலையங்கள் மாநில விதைப் பரிசோதனை நிலையங்களாகும். இவை இரண்டும் ஆண்டொன்றுக்கு 20,000 விதை மாதிரிகளை பரிசோதிக்கின்றன. குடுமியாமலையில் உள்ள பரிசோதனை நிலையம், விவசாயிகளிகளிடமிருந்து வருகின்ற மாதிரிகளை மட்டுமே பரிசோதிக்க ஏற்படுத்தப்பட்டதாகும். இந்தப் பரிசோதனை நிலையத்திற்கு ஆண்டொன்றுக்கு 5,000 மாதிரிகளென குறியீடு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

வேளாண்மை ஆராய்ச்சி :

விவசாயத்துறை 1981 ஆம் ஆண்டில் கோவில்பட்டி 2 பனிவரகு, ஆடுதுறை 3 உளுந்து, திண்டிவனம் 4 ஆமணக்கு, கோ. க. 8001 கரும்பு ஆகிய நான்கு புதிய பயிர் ரகங்களை வெளியிட்டது, அந்த ரகங்களின் சிறப்பான அம்சங்கள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன :—

1. கோவில்பட்டி 2 பனிவரகு :

இந்த ரகம் அகில இந்திய சிறுதானியங்கள் மேம்பாட்டுத் திட்டத்தின், திட்ட ஒருங்கிணைப் பாளரால் அறிமுகப்படுத்தப் பட்ட பி. வி. 1685 என்ற ரகத்திலிருந்து, தேர்வு செய்யப் பட்டதாகும். இந்த ரகம் அதிக விளைச்சல் தரும் தன்மையும் தமிழ்நாட்டில் மானாவாரியாகப் பயிரிடுவதற்கு ஏற்ற நன்மையும் உடையது. இது ஒரு வறட்சி தாங்கும் ரகமாதலால், குறைவாக மழை பெய்யக்கூடிய பகுதிகளில் கூட நன்றாக வளர்கிறது. இதன் வயது எழுபது நாட்கள். முக்கியத்துவம் மிக்க பூச்சிகள் மற்றும் நோய்களை எதிர்த்து தாங்கும் சக்தி இதற்கு உண்டு. இது குளிர் பட்டத்தில் சராசரி ஹெக்டேருக்கு 1,370 கிலோ தானியம் மகசூல் தந்துள்ளது. இது கலப்பு பயிராகவும் இரண்டாவது போக பயிராகவும் மானாவாரி சாகுபடிக்கு ஏற்றது.

2. ஆடுதுறை 3 உளுந்து :

இது திருநெல்வேலி உள்ளூர் ரகத்திலிருந்து தனி வழி தேர்வாக தேர்ந்தெடுக்கப்பட்ட ரகமாகும். இதன் வயது எழுபத்தைந்து நாட்கள். இந்த ரகம் சுருள் நச்சு மற்றும் சாம்பல் நோய்களை மிதமான அளவு எதிர்க்கும்

1981 ஏப்ரல் 20]

சக்தி கொண்டது. இந்த ரகம் நெல், தரிசு நிலங்களிலும், நெல் வயல் வரப்புகளிலும், மற்றும் மானாவாரி நிலங்களிலும், ஆக மூன்று வகைகளிலும் பயிரிட ஏற்றதாகும். இது தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஏற்ற ரகமாகும். இது சராசரியாக ஹெக்டேர் ஒன்றுக்கு 832 கிலோ மகசூல் தரவல்லது.

3. திண்டிவனம் 4 ஆமணக்கு:

இது, எஸ். ஏ. 2 என்ற ரகத்திலிருந்து, தன்னியல் வகை மாற்றத்தின் மூலம் பெறப்பட்ட ரகமாகும். இது ஒரு குட்டையான குறுகிய கால ரகமாகும். ஒன்று அல்லது இரண்டு கிளைகளை உடையதால் இந்த ரகம் நெருக்கமாக நடுவதற்கு உகந்ததாகும். கோடைப் பருவத்தில் இறவைப் பயிராக பயிரிடும் குறுகிய காலப் பயிர்களான உளுந்து, நிலக் கடலை ஆகியவற்றுடன் வரப்பு பயிராகவும், கலப்பு பயிராகவும் பயிரிட ஏற்றது. தமிழ்நாட்டில், ஆமணக்கு பயிரிடும் எல்லா மாவட்டங்களிலும் பயிரிட ஏற்றது. இது 50 சதவீத எண்ணெய்ச்சத்து உடையது. இதன் வயது 101 முதல் 113 நாட்களாகும். இது சராசரி ஹெக்டேர் ஒன்றுக்கு 679 கிலோ மகசூல் தரவல்லது.

4. கோ. க. 8001 கரும்பு:

இது பி. ஓ. ஜே. 284 என்ற ரகத்தினையும் சி.ஓ. 658 ரகத்தினையும் ஒட்டுச் சேர்த்து உருவாக்கப்பட்டதாகும். இந்த ரகம் நிறைய தூர் விடக் கூடியதும், சுலபமாக மேல் பட்டையை உரிப்பதற்கு ஏற்றதும், வறட்சியை தாங்கும் சக்தி கொண்டதும் ஆகும். இது மறுதாம்பு பயிரிலும் தரமுள்ளவை யாகவும் நல்ல மகசூல் தரவல்லதாகவும், இருப்பது இந்த ரகத்தின் சிறப்பியல்புகளாகும். முன்பட்டத்தில் அதாவது டிசம்பர் ஜனவரி பட்டத்தில், நடவு செய்ய ஏற்றதாகும். இடைக்கட்டத்தில் பயிரிட்டாலும் இது நிறைய சாறு தரும் ரகமாக உள்ளது. குருத்துப் பூச்சிகளை, மிதமாக எதிர்க்கும் தன்மை கொண்டது. இதன் வயது 300 முதல் 330 நாட் களாகும். இது ஹெக்டேர் ஒன்றுக்கு 94 டன் மகசூல் தந் துள்ளது. செங்கல்பட்டு, தென் ஆற்காடு மாவட்டங்களில் முன்பட்டத்தில் பயிரிட இது பரிந்துரை செய்யப்படுகிறது.

மாநில சட்டமன்ற அவைகளில் ஏற்கனவே அறிவிக்கப் பட்டதின் தொடர்ச்சியாக வேதியல் பிரிவும் குடுமியாமலை மையமும் தவிர, வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்கள், துணை நிலையங்கள் யாவும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர ஆணை பிறப் பிக்கப்பட்டுள்ளது.

1981–82 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் :

1981-82 ஆம் ஆண்டில், திட்டமிடப்பட்டுள்ள கூடுதல் விவசாய உற்பத்தியை அடையும் நோக்குடன் தற்பொழுது செயல்படுத்தப்படும் திட்டங்களுடன் கீழ்காணும் புதிய திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் பண்ணை அபிவிருத்திக்கு உகந்த வழிமுறைகளை வகுக்கும் முன்னோடித் திட்டம் :

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின், ''கார்ட்'' அமைப்பின் ஆய்வின் மேற்கொண்ட முடிவின்படி பண்ணை அபிவிருத்திக்காக மாவட்டங்களில் கடைபிடிக்க ஓர் முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும். நிலத்தை நல்ல முறையில் பயன்படுத்தி அதிகப்படுத்தி இலாபம் பெறுவதற்கான வகை மாதிரிகளை ஆய்வு செய்து, அவற்றினை செயல் விளக்கிக் காட்டுவது இத் திட்டத்தின் நோக்கமாகும். பண்ணை நிர்வாக முறைக்கும் கலப்புப் பண்ணைக்கும் ஏற்ற மாதிரிகளை உருவாக்க தகுதியான நுட்ப முறைகள் கையாளப்படும்.

அரசு விதைப் பண்ணைகளில் நீர்ப்பாசன வசதியைப் பெருக்குதல் :

குறிப்பிட்ட நிலப்பரப்பில் மகசூலைப் பெருக்கவும் பயிர்த் திறனை அபிவிருத்தி செய்யவும், தற்பொழுது இயங்கி வரும் அரசு விதைப் பண்ணைகளில் நீர்ப்பாசன வசதியை அபிவிருத்தி செய்வது அத்தியாவசியமாகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு அரசு விதைப் பண்ணைகளில் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

விதைச் சுத்திகரிப்பு நிலையங்களை அபிவிருத்தி செய்தல் :

விதை சுத்திகரிப்பு நிலையங்களை வலுப்படுத்தும் பொருட்டு மேலும் 2 பெரிய விதை சுத்திகரிப்பு இயந்திரங்களும் 3 பருத்தி விதைப் பிரிக்கும் இயந்திரங்களும் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ளதற்கும், மேலும், புதிதாக ஏற்படுத்தப் போகும் விதை சுத்திகரிப்பு நிலையங்களுக்கும் மின் ஆக்கிகள் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது.

1981 ஏப்ரல் 20]

கருவிதை மற்றும் ஆதார விதைகளை சேமிக்க வெப்பம் மற்றும் ஈரத்தினை கட்டுப்படுத்தும் வசதிகளுடன் கூடிய விதைச் சேமிப்பு கிடங்குகளை ஏற்படுத்துதல் :

விதைப் பெருக்கம் திறமையாக செயல்படவேண்டுமெனில், ஆரம்ப சந்ததியான கருவிதை மற்றும் ஆதார விதைகளை சேமிப்பதில் அதிகளவு கவனம் தேவைப்படுகிறது. சோளம், கம்பு, மக்காச்சோளம், பயிறு வகைகளின் கருவிதை மற்றும் ஆதார விதைகளை சேமித்துவைக்க மிகவும் நவீன விதைச் சேமிப்பு முறை தேவைப்படுகின்றது. தற்பொழுதுள்ள விதைக் கிடங்குகளில் குளிர்சாதன வசதி, ஈரப்பசையினை ஈர்க்கும் சாதனம் போன்றவை இல்லாமலிருப்பதால், விதைகள் விரைவாக முளைக்கும் தன்மையை இழந்துவிடுவதுடன் சேமிக்கப்படுபவை பூச்சிகளாலும் தாக்கப்படுகின்றன. எனவே, அண்ணா பண்ணை, புதுக்கோட்டை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மேற்கண்ட சாதனங்களை பொருத்து வெப்பம் மற்றும் ஈரத்தினை கட்டுப்படுத்தும் விதை சேமிப்புக் கிடங்குகள்கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

விதை சேமிப்பு கிடங்குகள் மற்றும் விதை உலர்த்தும் களங்களை அமைத்தல் :

விஷப்புகையூட்டியும், அவ்வப்போது விதைகளை காய வைத்தும், மருந்தடித்தும், பயறுவகை விதைகளை பூச்சி தாக்குதலிலிருந்து காப்பாற்ற ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மத்திய சேமிப்பு கிடங்கு அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்சமயம் 2 விதை சேமிப்பு கிடங்குகள் மட்டுமே உள்ளன. படிப்படியாக, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சேமிப்பு கிடங்கு அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தஞ்சாவூர், வேலூர், கடலூர், மதுரை, திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களில் ஆறு விதை சேமிப்பு கிடங்குகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

கரும்பு விதைப் பெருக்க அபிவிருத்தித் திட்டம் :

கரும்பு பயிரின் மொத்தப் பரப்பில் மூன்றில் ஒரு பங்கு பரப்பிற்கு நோய்த் தாக்காத வளமான விதைக் கரணைகள் வழங்க நாற்றங்கால் திட்டம் முக்கியமானதொன்றாகும். தற்சமயம் இந்த நாற்றங்கால் திட்டம் விவசாயிகளின் நிலங்களில் முதல் கட்டம், இரண்டாம் கட்டம் மற்றும் வணிகரீதியான நாற்றங்கால் என்று மூன்று வகைகளில் செயல்படுகிற நாற்றங்கால் பயிர் முதிர்ச்சி அடையும் முன்பே அறுவடை செய்யப்படுவதால் ஓரளவு மகசூல் இழப்பு ஏற்பட்டு நிகர வருமானம் குறைகின்றது. இவ்விழப்பை ஈடு செய்ய 1981–82 ஆம் ஆண்டிலிருந்து விவசாயிகளுக்கு நாற்றங்கால் மானியம் வழங்க திட்டமிடப்பட்

டுள்ளது. ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 1,500 மானியமாக வழங்கப்படும். இத்திட்டம் 300 ஹெக்டேர் பரப்பில் செயல்பட உள்ளது. இத் திட்டத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு 30,000 ஹெக்டேர் பரப்பிற்கு தகுந்த நல்ல தரமான நாற்றுக்கள் வழங்க ஏற்பாடு செய்வதின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் மூன்று இலட்சம் டன் கரும்பு உற்பத்தி அதிகரிக்க வழிவகைகள் ஏற்படுகின்றன.

நீலப் பச்சைப்பாசி பெருக்கம்:

உயிரின உரங்களை உபயோகப்படுத்துதல் தாவரங்களின் உணவுத் தேவையில் ஒரு புதிய முறையாகும். நீலப் பச்சைப் பாசியை பெரும் பரப்பில் உபயோகப்படுத்தும் திட்டத்தின் வெற்றி நீலப் பச்சைப்பாசி உற்பத்திக்கான கருப்பொருளை அதிக அளவிலும் உடனடியாகவும் பெருக்கம் செய்து விவசாயிகளுக்கு வழங்குவதைப் பொறுத்தது ஆகும். இதற்காக 200 ஊராட்சி ஒன்றியங்களில் ஆண்டொன்றுக்கு 1,000 டன் நீலப் பச்சைப்பாசி கருப் பொருள் உற்பத்தி செய்யும் வகையில் நீலப் பச்சைப்பாசி சேமிப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

ஆசிரியர்களுக்கு பயிர் பாதுகாப்பு பற்றி பயிற்சி அளித்தல்:

ஒரு கிராமத்திற்கு ஒரு ஆசிரியர் வீதம் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு அதிக பட்சம் 20 ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு பூச்சி மற்றும் நோய்களை அடையாளம் காணவும் பூச்சி பூசண மருந்துகள், பயிர் பாதுகாப்புக் கருவிகள் ஆகியவற்றை உபயோகிக்கும் முறைகள் பற்றியும் செயல்முறை பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்ட ஆசிரியர்கள் பூச்சி மற்றும் நோய் தென்பட்டவுடன் விவசாயிகளை எச்சரிப்புடன் அவர்களுக்கு அதனைக் கட்டுப்படுத்தும் முறைகளையும் பயிர் பாதுகாப்பு கருவிகளை உபயோகிக்கும் முறைகளைப்பற்றியும் எடுத்துக் கூறுவர்.

கரும்பு பயிருக்காக ஒன்பது புதிய ஒட்டுண்ணி உற்பத்தி நிலையங்கள் ஆரம்பித்தல்:

கரும்பு பயிர்களை தாக்கும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தி கரும்பு உற்பத்தியைப் பெருக்க ஒன்பது புதிய ஒட்டுண்ணி உற்பத்தி நிலையங்களை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. கரும்பினைத் தாக்கும் தண்டுப் புழுக்களை சிறந்த முறையிலும், சிக்கன முறையிலும் அழிக்க வல்ல டிரைக்கோசிரம்மா ஆண்டிராலிகம் என்ற ஒட்டுண்ணியை உற்பத்தி செய்து உடனடியாக கரும்பு பயிரிடும் பரப்புகளில் விடுவதற்கு, இத்திட்டம் வகை செய்யும். இந்த

1981 ஏப்ரல் 20]

புதிய நிலையங்களை ஏற்படுத்துவதன் வாயிலாக ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் 10,000 ஹெக்டேர் பரப்பில் பூச்சியைக் கட்டுப்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

தஞ்சாவூர் தர்மபுரி மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம்

பருத்தி உற்பத்தியில் முழு அளவு அபிவிருத்தி காணவும், எம்.சி.யு. 7, கே. 1 எச்.சி. பருத்தி விதைகளை கொள்முதல் செய்து விநியோகிக்கவும் தஞ்சாவூர் மாவட்டத்தில் நெல் தரிசு நிலங்களில் ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளது. இதுபோன்று தருமபுரி, தென்னாற்காடு மாவட்டங்களிலும் பருத்தி பயிரிடும் பகுதிகளில் தற்பொழுது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி பருத்தியின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஒருங்கிணைந்த பருத்தி அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்படும்.

வைகைப் பண்ணையில் முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்ட பருத்தி மூல விதைகளை உற்பத்தி செய்தல்

பருத்தி விதைகள் உற்பத்திக்கென ஒதுக்கி வைத்துள்ள வைகைப் பண்ணையில் மூல குணங்களை நிலை நிறுத்தவும் உற்பத்தியில் பல கட்டங்களை தவிர்க்கவும் பருத்தி விதையின் முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்ட மூல விதைகள் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நீலப்பச்சைப் பாசியின் உற்பத்தியை தீவிரப்படுத்தும் திட்டம்

நீலப் பச்சைப்பாசியை பெருமளவில் உற்பத்தி செய்யதேவைப்படும் கருப்பொருளின் தேவையை ஈடுகட்ட ஆராய்ச்சி நிலையங்களில் கூடுதலாக 127 டன் நீலப் பச்சைப்பாசி கருவை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறை.

வேளாண்மைத் துறையிலிருந்த வேளாண்மைப் பொறியியல் பிரிவை தனித் துறையாக ஆக்கி தலைமைப் பொறியாளர் ஒருவரை தலைமையாகக் கொண்டு இத்துறை 1981 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31 ஆம் தேதி முதல் சென்னையில் இயங்கி வருகின்றது. இத்துறை வேளாண்மை மற்றும் வேளாண்குடியினரின் முன்னேற்றத்திற்காக பின் வரும் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நிலச்சீரமைப்பு :

வேளாண்மை பொறியியல் துறை தன்னிடமிருக்கும் 150 புல்டோசர்களையும், இருநில சமன்படுத்தும் டிராக்டர்களையும், 100 டிராக்டர்களையும் கொண்டு உழவர்களின் வயல்களில் நில சமன்படுத்துதல், உழுதல், சேடை அடித்தல் போன்ற பணிகளைச் செய்து வருகின்றது. இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகரித்து அவற்றை முழுமையாக பயன்படுத்தும் பணி 1981–82ஆம் ஆண்டிலும் தொடரும்.

நிலச் சமன்படுத்துதல் :

1980–81ஆம் ஆண்டில் சுமார் 68,800 ஹெக்டேர் நிலப் பரப்பு நிலச்சமன் செய்யப்பட்டது. 1981–82 ஆம் ஆண்டில் 72,000 ஹெக்டேர் பரப்பில் இப்பணியை நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

டிராக்டர்களை வாடகைக்கு விடுதல்:

1981ஆம் ஆண்டு பெப்ரவரி முடிய, 73,000 மணி நேரக் குறியீட்டுக்கு எதிராக 83,700 மணிக்கு டிராக்டர்கள் வாடகைக்கு விடப்பட்டன. 1981–82ஆம் ஆண்டு 73,000 மணிக்கு டிராக்டர்கள் வாடகைக்கு விட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

சிறு பாசனத் திட்டங்கள்

அதிக நிலங்களில் நிலையான பாசன வசதி கிடைக்கும் பொருட்டு நிலத்தடி நீரைப் பயன்படுத்த செயற்படுத்தப்படும் திட்டங்களும், அத்திட்டங்களில் 1981ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் வரை அடைந்துள்ள சாதனைகளும் பின்வருமாறு :—

1. தனியார் குழாய்க் கிணறு திட்டம்—4,712 குழாய்கள்.

2. கிணறுகளில் துளையிடும் திட்டம்—2,839 கிணறுகள்.

3. வடிமுனைக் குழாய்க் கிணறு திட்டம்—2,550 கிணறுகள்.

4. பாறைப்பகுதிகளில் கிணறுகளை ஆழப்படுத்தும் திட்டம்—3,149 கிணறுகள்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 20]

1981–82ஆம் ஆண்டில் 4,700 தனியார் குழாய்க்கிணறுகள் தோண்டவும், 2,350 கிணறுகளில் துளையிடவும், 2,800 வடிமுனை கிணறுகள் தோண்டவும் மற்றும் 2,800 கிணறுகளை ஆழப் படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நில பௌதிக ஆய்வு :

வேளாண்குடியினர் குழாய் கிணறுகள் அமைக்க தகுந்த இடத்தை கண்டுபிடிப்பதில் சிரமப்படுகின்றனர். இதற்கு ''ரெஸிஸ்டிவிடி மீட்டர்'' என்னும் நில பௌதிக ஆய்வுக் கருவியை வாடகைக்கு அளித்து தொழில் நுட்ப ஆலோசனை களும் வழங்கப்படுகின்றன. இதனால் நீர் ஊற்று சரியில்லா இடத்தில் குழாய்க் கிணறுகள் அமைப்பதால் குழாய்க்கிணறுகள் இறைக்காமல் பழுதடையும் நிலையினை தவிர்க்க இயலும்.

மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் :

பயிர் வளர்ச்சிக்குத் தேவையான இயற்கையின் செல்வங் களான மண் மற்றும் நீரினை பாதுகாப்பதும், அதனை திறம்பட நிர்வகித்து பயன்படுத்துவதும் மண்வளப் பாதுகாப்பு திட்டங் களின் முக்கிய நோக்கங்கள் ஆகும். தேசிய வளர்ச்சிக்கு மண் வளப் பாதுகாப்பு திட்டங்களின் இன்றியமையாமை உணரப் பட்டு மாநிலங்களில் மண் வளப் பாதுகாப்பு திட்டங்களை தீவிரப் படுத்த மத்திய அரசு முன் வந்துள்ளது.

மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படும் திட்டங்கள் :

1. மலை மற்றும் சமவெளி பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு :

மண்வளப் பாதுகாப்புத் திட்டங்களின் முக்கிய நோக்கம் நீர் மற்றும் காற்றினால் மண்ணரிப்பு ஏற்பட்டு நிலங்கள் பய னற்றுப் போவதை தடுப்பதும், மண்ணின் ஈரத்தை காத்து உணவு உற்பத்தியைப் பெருக்குவதும் ஆகும். நீர் வருவாய்ப் பகுதிகளாக நிலங்களை பிரித்து அப் பகுதியில் மண் வளப் பாதுகாப்பு பணிகளான சமஉயர வரப்பிடல், மலைப் பகுதி களில் படிக்கட்டு, படுக்கையாக நிலங்களை அமைத்தல், சம உயர கற்சுவர்கள் கட்டுதல், வண்டல் அடித்தல், ஓடை யரிப்பினை தடுத்தல், நிலத்தை சீர்த்திருத்தல், சமன்படுத்துதல், நீர் நிர்வாகம் போன்றவற்றை ஒருங்கிணைத்து மண் வளப் பாதுகாப்பு பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. 1980–81ஆம் ஆண்டில் 85 நீர் வருவாய் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்பு பணிகள் நிறைவேற்றப்பட்டன.

இம்மண்வளப் பாதுகாப்பு திட்டங்களின் இலக்குகளும், சாதனைகளும் பின்வருமாறு :—

ஆண்டு.	சாதனைகள்.	
	திட்டம் நிறைவேற்றப் பட்ட பரப்பு.	திட்டச் செலவு.
(1)	(2)	(3
	(ஹெக்டரில்)	(இலட்சம் ரூபாய்களில்).
1979–80	43,563	146.11
1980–81, பிப்ரவரி வரை ..	41,484	127.10

1981–82 ஆம் ஆண்டில் 50,000 ஹெக்டர் பரப்பில் மண் வளப்பாதுகாப்பு பணிகளை நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

ஓடையரிப்பு நிலமீட்பு :

ஓடையரித்த நிலங்கலை மீட்டு பயன்படுத்துவதும், இதர நிலங்கள் ஓடையரிப்பால் பரவலாக பாதிக்கப்படுவதைத் தடுப்பதும் ஓடையரிப்பு நிலமீட்பு திட்டங்களின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டங்கள் தென் ஆற்காடு மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் நிறைவேற்றப்பட்டுவருகின்றன. இத்திட்டத்தின் இலக்குகளும் சாதனைகளும் பின்வருமாறு :—

ஆண்டு.	சாதனைகள்.	
	மீட்கப்பட்ட நிலப் பரப்பு.	திட்டச் செலவு.
(1)	(2)	(3)
	(ஹெக்டேரில்.)	(இலட்சம் ரூபாய்களில்).
1979–80	226	5.21
1980–81 பெப்ரவரி வரை ..	1,058	7.73

1981–82 ஆம் ஆண்டில், 1,200 ஹெக்டேர் பரப்பில் ஓடையரிப்பு திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

1981 ஏப்ரல் 20]

சாத்தனூர் அணைக்கட்டு பாசனப் பகுதிகளில், காவேரி பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகத் திட்டங்கள்:

1967–68ஆம் ஆண்டு முதல் காவேரிப் பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகத் திட்டங்கள் செயல்படுகின்றன. வயல்வழி நீர் பாசனத்தை தடுப்பதும், பாசன நீரின் உபயோகத்தை கட்டுப் படுத்தி திறம்பட நிர்வகிப்பதும் இத்திட்டத்தின்முக்கிய நோக்க மாகும். தஞ்சை மாவட்டம் மாயவரத்தில் உள்ள செயற் பொறியாளரின் கீழ் மாவட்ட முழுவதும் உள்ள நான்கு நீர் நிர்வாக உப கோட்டங்கள் பணியாற்றி வருகின்றன. நீர் நிர்வாகத் திட்டத்தை இம்மாவட்டத்தில் வலுப்படுத்தும் பொருட்டு மேலும் இரண்டு உப கோட்டத்தை ஏற்படுத்த 1980ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அரசு அனுமதி அளித்தது. காவேரிப் பாசனப் பகுதிகளில் நீர் நிர்வாகத் திட்ட சாதனைகள் பின் வருமாறு:—

ஆண்டு.	நீர் நிர்வாகம் செய்யப்பட்ட பரப்பு.	திட்டச் செலவு.
(1)	(2)	(3)
	(ஹெக்டேர்).	(இலட்சம் ரூபாய்களில்.)
1979–80	4,160	21.20
1980–81 பெப்ரவரி முடிய ..	3,925	22·509

1981–82 ஆம் ஆண்டில் காவேரிப் பாசனப் பகுதிகளில் 6,000 ஹெக்டேர் பரப்பில் நீர் நிர்வாகத் திட்டங்கள் செயல்படுத்தப் படும். சரியான வாய்க்கால் வடிகால்களை வயல்களில் அமைப் பதும் நிலத்தை சீர்திருத்தி சமப்படுத்தி திருத்தி அமைப்பதும் சாத்தனூர் அணைக்கட்டு பாசனப் பகுதி திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இதனால் பாசன நீர் விரயமாவது தடுக்கப்படுகிறது. சாத்தனூர் அணைக்கட்டு பாசனப்பகுதி களில் நீர் நிர்வாகப் பணிகளைச்செய்ய வடஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலையில் ஒரு உப கோட்டம் இயங்கி வருகின்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 20

இத்திட்டத்தின் இலக்குகளும் சாதனைகளும்.

ஆண்டு.	இலக்கு.	சாதனைகள். நீர் நிர்வாகப் பணிகள் நிறைவேற்றப் பட்டபரப்பு.	சாதனைகள். செலவு.
(1)	(2)	(3)	(4)
	(ஹெக்டேர்).	(ஹெக்டேர்).	(ரூபாய் இலட்சத்தில்).
1979–80	400	452	5.43
1980–81 ..	400	450	4.41

(1981 ஆம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் முடிய).

1981–82 ஆம் ஆண்டில் 400 ஹெக்டேர் பரப்பில் நீர் நிர்வாகத் திட்டம் நிறைவேற்றப்படும்.

இராமநாதபுரம், தர்மபுரி போன்ற வறட்சியால் பாதிக்கப்படும் பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் :

இத்திட்டங்களின் மூலம் கீழ்க்காணும் நிலப்பரப்புகளில் மண் வளப்பாதுகாப்புப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

ஆண்டு.	சாதனைகள். பரப்பு.	சாதனைகள். திட்டச் செலவு.
(1)	(2)	(3)
	ஹெக்டேர்.	(ரூபாய் இலட்சத்தில்).
1979–80	7,973	29.92
1980–81	7,395	30.94

(பெப்ரவரித் திங்கள் முடிய)

1981–82 ஆம் ஆண்டில் 10,000 ஹெக்டேர் பரப்பில் இத்திட்டங்கள் நிறைவேற்றப்படும்.

குந்தா, கீழ்பவானி, நதி நீர் பள்ளத்தாக்கு திட்டப்பகுதிகளில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மண்வளப் பாதுகாப்புப் பணிகள் :

மண்வளப்பாதுகாப்பு பணிகள், தடுப்பு அணைகள், தடுப்பு சுவர்கள் கட்டுதல் போன்றவைகளை செயல்படுத்தி அணைக்

1981 ஏப்ரல் 20]

கட்டுகளில் மண்படிவதை தடுப்பது இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இது மத்திய அரசின் உதவியைப்பெற்ற திட்டமாகும்.

இத்திட்டத்தின் சாதனைகள்.

ஆண்டு.	பரப்பு (ஹெக்டேர்)	கட்டு மானங்களின் எண்ணிக்கை	தடுப்புச் சுவர் (மீட்டர்)	செலவு (இலட்சம் ரூபாய்கள்.)
(1)	(2)	(3)	(4)	(5)
1979–80 ..	1,125	297	520	34.35
1980–81 ..	652.49	169	2,844	32.76
(1981 பெப்ரவரி முடிய)				

ரூ. 46.13 இலட்சம் செலவில் 1,872.50 ஹெக்டேர் பரப்பில் மண் வளப்பாதுகாப்பு பணிகளை நிறைவேற்றுவதும் 259 தடுப்பு அணைகள் கட்டுவதும் 6400 மீட்டர் நீளமுள்ள நிலசரிவு தடுப்பு சுவர் கட்டுவதையும் இலக்காக கொண்டு நதிநீர் பள்ளத்தாக்கு பணிகள் 1981–82 ஆம் ஆண்டில் நிறைவேற்றப் படும்.

1981–82 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களும் பணிகளும்.

இத்துறையிலுள்ள 148 புல்டோசர்களில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டவை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டவை. இவைகளுக்கான ஆயுட்கால அளவிற்கு மேல் பணி யாற்றியதால் இவைகள் பயனற்று போய்விடும் நிலையில் இருக்கின்றன. எனவே, இந்த புல்டோசர்களை வேலையிலிருந்து நிறுத்த வேண்டியிருப்பதால் இந்தியாவிலேயே தயாரிக்கப்படும் புதிய புல்டோசர்களை படிப்படியாக வாங்க திட்டமிடப்பட்டு உள்ளது. முதற்கட்டமாக 5 புதிய புல்டோசர்கள் வாங்கப்படும்.

இத்துறை 250 பி. எஸ். ஐ. ஹேமர் டிரில்கள் நான்கினை தன்னிடத்தே கொண்டுள்ளது. இவை கடும் பாறைப்பகுதி யில் 6'' விட்டமுள்ள குழாய்க் கிணற்றினை மணிக்கு 25 அடி என்ற வேகத்தில் துளையிடும் சக்திமிக்கது. தற்போதுள்ள வறட்சி நிலையில் இவ்விறைவு விசைத் துளைக்கருவிகள் மிக்க வேகத்தில் குழாய்கிணறுகளை தோண்ட உதவும். எனவே மேலும் 250 பி.எஸ்.ஐ. ஹேமர் டிரில் ஒன்றினை வாங்க திட்ட மிடப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர், பெரியார், சேலம், வடஆற்காடு, தென் ஆற்காடு, தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் கிணறுகளில் துளைக்கிணறுகள் அமைக்க வேண்டிய பணிகள் தீவிரப் படுத்தவேண்டியுள்ளது. எனவே, கிணறுகளில் துளையிட ஐந்து வேகன் டிரில் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இத்துறையில் தற்சமயம் வெளிநாட்டிலிருந்து வாங்கப்பட்ட 12 விசை துளைக் கருவிகள் உள்ளன. இந்த விசைத் துளைக் கருவிகள் தொடர்ந்து இயங்க உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட புதிய இஞ்சின்கள் பொருத்தப்படவேண்டும். எனவே, 3 விசைத் துளைக் கருவிகளில் இருக்கும் எஞ்சின்களை எடுத்துவிட்டு, நம் நாட்டிலேயே தயாரிக்கப்படும் எஞ்சின்களை பொருத்தி இவ்வியந்திரங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

வண்டல் நிலப்பகுதிகளில் சுழல்விசைத் துளைக்கருவிகளுக்கு அதிக தேவை ஏற்பட்டுள்ளது. ஆனால் இவற்றின் விலை மிகவும் அதிகமாக உள்ளது. தற்சமயம் இத்துறையிலுள்ள பெர்குசன் விசைத் துளைக் கருவிகளுடன் புதிய சாதனங்களை இணைப்பதன் மூலம் இவற்றினை சுழல் விசைத் துளைக் கருவியாக மாற்ற முடியும். ஒரு பெர்குசன் சுழல் துளைக் கருவியை சுழல் விசைத் துளைக்கருவியாக மாற்ற திட்டமிடப்பட்டுள்ளது.

தற்சமயம் குடுமியாமலையிலுள்ள வேளாண்மைப் பொறியியல் பயிற்சி நிலையத்தில் கருவியை இயக்கும் ஊழியர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் வேளாண்மை இயந்திரங்களைப் பற்றிய பயிற்சி அளிக்கப்படுகின்றன. இந்த பயிற்சி நிலையத்தால் அனைத்து வேளாண்மைப் பொறியியல் கருவிகள் பற்றியும், மண்வளப் பாதுகாப்பு, நீர் நிர்வாகம், நிலத்தடி நீர் எடுத்தல் போன்ற பலவகை துறைகளிலும் பயிற்சி அளிக்க முடிவதில்லை. எனவே, தற்போதைய பயிற்சி நிலையத்தினை தகுந்த பயிற்சியாளரையும், கருவிகளையும் கொண்டு வலுப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 200 ஹெக்டேர்க்கும் அதிகமான நிலங்களுக்கு பாசனவசதியை தரக்கூடிய ஏரிகள் சுமார் 490 உள்ளன. பெரும்பான்மையான ஏரிகளில் பாசன நீரை பயன்படுத்தும் திறன் குறைந்தனவாக உள்ளது. சரியான நிலையில் பயிர்களுக்கு பாசனநீர் பயன்படுத்த முடிவதில்லை. எனவே, இந்த ஆண்டு பாசன நீர் நிர்வகிக்கவும், இந்த ஏரிகளின் பாசன பகுதிகளை அபிவிருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும் பயிர் வளர்ச்சியை அதிகரிக்கவும் இயலும்.

1981 எப்ரல் 20]

பெரியார் வைகை பாசனப்பகுதிகள் நவீனப்படுத்தும் திட்டம் உலக வங்கியின் உதவியோடு பொதுப்பணித்துறை யினரால் 1977–78 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. இப்பணி பிரதான பாசன கால்வாய்களை நவீனப்படுத்துவதாகும். இந்த பாசனப்பகுதிகளில் வயல் வழி நீர்ப்பாசனம் செய்வது பெரிய பிரச்சினை ஆகும். இதனால் பயிர் வளர்ச்சி பாதிக்கப்படு கின்றது. பாசன நீர் அதிக அளவில் விரயமாகின்றது. எனவே, இத்திட்டத்தில் பாசன நீர் நிர்வாகிக்கவும், பாசனப் பகுதியில் வடிகால் வாய்க்கால் வசதியை ஏற்படுத்தி தரவும் திட்டமிடப் பட்டுள்ளது. சுமார் 6,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் நீர் நிர்வாகம், நில சீர்திருத்தப்பணிகள் செய்யப்பட உள்ளது.

எண்ணெய் வித்துத் துறை.

எண்ணெய் வித்துக்கள் மற்றும் சமையல் எண்ணெய் ஆகிய வற்றின் உற்பத்தியை பெருக்கும் பொருட்டு தனியாக ‘எண் ணெய் வித்துத் துறை’ ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இத்துறை 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாள் முதல் இயங்கி வருகிறது. இத்துறையின் முக்கிய நோக்கம், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை பெருக்குவது, தென்னை அபிவிருத்தியை அதிகரிப்பது முதலியவை ஆகும். எண்ணெய் வித்துப் பயிரிடுதல் பகுதியை அதிகரிக்க வாய்ப்பு இல்லை என்னினும் அவற்றின் ஊடு பயிர்களின் பரப்பளவு அதிகரிக்கப்படும்.

1980-81ல் சாதனைகள்.

சென்ற ஆண்டின் வறட்சி காரணமாக எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி அதிக அளவு பாதிக்கப்பட்டது. 1980–81 ராபி பருவத் தில் நீர்த்தேக்கம் குறைந்து இருந்தது. எனினும் கீழ்க்காணும் குறியீட்டை அடைய முடிந்தது.

கடலைப் பயிர்	..	7.08	இலட்சம் டன்.
எள்	..	0.32	இலட்சம் டன்.
ஆமணக்கு ..	..	0.04	இலட்சம் டன்.
சூரியகாந்தி		0.07	இலட்சம் டன்.
மொத்தம்	..	7.51	இலட்சம் டன் எண்ணெய் வித்துக்கள்.
தென்னை ..	..	121.6	கோடி காய்கள்.

1981–82 ஆம் ஆண்டிற்கான குறியீடு.

போதிய அளவு எண்ணெய், எண்ணெய் வித்துக்கள், தென்னை உற்பத்தி பெருக கீழ்க்காணும் உற்பத்தித் திறன் திட்டமிடப் பட்டுள்ளது :—

1. கடலைப் பயிர்	..	14.45	இலட்சம் டன்.
2. எள்		0.71	இலட்சம் டன்.
3. ஆமணக்கு	..	0.05	இலட்சம் டன்.
4. சூரியகாந்தி		1.50	இலட்சம் டன்.
மொத்தம்	..	16.71	இலட்சம் டன்.
5. தென்னை		127.31	கோடி காய்கள்.

மேற்படி உற்பத்தியை அடைய கையாளப்படவிருக்கும் வழிமுறைகள் பின்வருமாறு :—

(அ) 4,500 டன் உயர்ரக விதைகள், 50 டன் எள், 900 டன் சூரியகாந்தி மற்றும் 23 டன் ஆமணக்கு (தரமுள்ள விதைகள்) அடிப்படை, கருவிதை மற்றும் பல பண்ணைகளில் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு அளிக்கப்படும். இதைத்தவிர செயல் விளக்க 'மினிகிட்' பாத்திகள் அமைத்து விவசாயிகளுக்கு தக்கமுறையில் விவரிக்கப்படும். பயிர்பாதுகாப்பு முறைகளும் 27,700 ஹெக்டேர்களில் பயன்படுத்தப்படும். எண்ணெய் வித்துப் பயிரிடும் விவசாயிகளுக்கு 1110 டன் நுண்நூட்டச்சத்து மற்றும் 15,000 டன் ஜிப்ஸம், எண்ணெய் வித்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு அளிக்கப்படும்.

(ஆ) 33.5 இலட்சம் நெட்டை மற்றும் நெட்டை குட்டை ரகத் தென்னங்கன்றுகளை பழைய மற்றும் புதிதாக அமைக்கப் பட்டுள்ள நாற்றங்கால்களில் உற்பத்தி செய்து வினியோகிக்கப் படும். மேலும் 20,000 ஹெக்டேர்களில் தென்னை வளர்ப்பு அதிகரிக்கப்படும். இதனால் தென்னை மகசூல் 128 கோடி காய்களாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னை செயல்விளக்கப்பாத்திகள் அமைத்து, தென்னை வளர்ப்போரை இப்பாத்திகளுக்கு அழைத்துச்சென்று தென்னை வளர்ப்பில் அவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப்படும். செம்பனை சாகுபடியை ஊக்குவித்து. பாமலின் எண்ணெயில் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்காக உள்ள திட்டம் ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. இத்திட்டம், இம்மரங்களின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வளர்ச்சிக்குத் தகுதியான பருவநிலைகள் கொண்டுள்ள, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் முயன்று பார்க்கப்படும். இந் நாட்டுக்குப் புதியதான இதன் சாகுபடி கேரளம் மற்றும் அந்தமான் ஆகிய இடங்களில் மட்டுமே, காணப்படுகிறது. இம்மாநிலத்தின் உணவு எண்ணெயின் உற்பத்தியைப் பெருக்க, சிறு மற்றும் வழக்கத்தில் இல்லாத புதிய எண்ணெய் வித்துப் பயிர்களின் மீதும் அதிக கவனம் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

தோட்டக் கலைத் துறை.

தமிழகத்தில் சுமார் 6·6 லட்சம் ஹெக்டேர் பரப்பில் பல்வேறு தோட்டக் கலைப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. 1980–81 ஆம் ஆண்டில் ரூபாய் 77·11 லட்சம் மதிப்பீட்டில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் உட்பட 25 புதிய திட்டங்கள் உருவாக்கப்பட்டு இத்துறையினால் அமுல் படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் தோட்டக்கலை, மற்றும் மலைப் பயிர்கள் உற்பத்தியை ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கீழ்க்கண்ட அளவு பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது :—

விளக்கம் :

	தற்போதைய உற்பத்தி அளவு (லட்சம் டன்).	ஆறாம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் உற்பத்திக் குறியீடு (லட்சம் டன்).	1981-82 ஆம் ஆண்டில் உற்பத்தி குறியீடு (லட்சம் (டன்).
பழங்கள் :			
1 வாழை	12·31	14·38	12·54
2. மா	5·33	6·80	5·67
3. எலுமிச்சை வகைகள்.	0·46	0·62	0·46
4. பிறவகைப்பழங்கள்.	0·10	0·13	0·10
காய்கறிகள் :			
1. உருளைக்கிழங்கு.	0·83	1·04	0·85
2. சர்க்கரைவள்ளிக் கிழங்கு.	0·55	0·80	0·55
3. வெங்காயம் ..	2·75	3·52	2·80
4. பிறவகைக் காய் கறிகள்.	2·00	2·58	2·09

பழங்கள் மற்றும் மலைப் பயிர்களின் விளைச்சலைப் பெருக்கிடத் தக்க உயர் ரக நாற்றுகள் உற்பத்தி செய்திடவும் காய்கறி உற்பத்தியைப் பெருக்க, சான்றிதழ் பெற்ற தரமான காய்கறி விதைகள் உற்பத்தி செய்திடவும் தோட்டக்கலைத் துறை முனைப்புடன் இயங்கி வருகிறது. தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றி மிகப் பெரும் பழப்பண்ணைகள், அரசுப் பழப் பண்ணை நாற்றங்கால்கள் அமைப்பதும், வணிகமுறையில் மலர்ப் பயிர்கள் சாகுபடி செய்வதும், மலைப்பயிர்களான டீ, காபி, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், கோகோ போன்ற பயிர்களை மேம்படுத்துவதும், மற்றும் மலை வாழ் பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு ஒருங்கிணைந்த மலைவாழ் பழங்குடி மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதும் இத்தோட்டக்கலைத் துறையின் பிற பணிகளாகும்.

1980—81 ஆம் ஆண்டின் சாதனைகள் :

பழப் பண்ணை நாற்றங்கால் :

பெரியார் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் அமைந்துள்ள பன்னிரண்டு பழப்பண்ணை மற்றும் நாற்றங்கால்களிலிருந்து அதிக மகசூல் தரும் உயர்ரகப் பழக்கன்று நாற்றுக்கள் நியாய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. தென்னாற்காடு மாவட்டத்தில் கண்டியான் குப்பத்திலும், சென்னையில் மாதவரத்திலும் புதிதாக இரண்டு அரசு பழப்பண்ணை நாற்றங்கால்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதனால் அரசு பழப்பண்ணை நாற்றங்காலின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது. 1980—81 ஆம் ஆண்டில் மட்டும் நடவுக்கேற்ற 13·24 லட்சம் நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

தரமான உயர் ரக நாற்றுக்களை உற்பத்தி செய்திட மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லுக்கருகே சிறுமலைப் பகுதியில் சுமார் 200 ஹெக்டேர் பரப்பில் புதிதாக மற்றுமொரு பழப் பண்ணை தொடங்கப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் வல்லத்திராக்கோட்டையில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட ஆயிரம் ஏக்கர் பழப்பண்ணை சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

வாழை :

1980—81 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் சின்னக் கல்ராயன் மலைப்பகுதியில் சுமார் 100 ஏக்கர் பரப்பில் உயரிய வாழைக் கன்றுகள் உற்பத்தி செய்ய ஒரு வாழைத்தோட்டம் அமைக்கப்பட்டு வருகிறது. இதனால் உயரிய வாழைக் கன்றுகள் உற்பத்தி செய்யும் வாழைத் தோட்டங்களின் எண்ணிக்கை தமிழகத்தில் மூன்றாக உயர்ந்துள்ளன. 1979—80 ஆம் ஆண்டு

1981 ஏப்ரல் 20]

ஒரு ஹெக்டேரில் சராசரியாக 21.84 டன் வாழை விளைச்சல் கணக்கிடப்பட்டுள்ளதையொட்டி, வாழை உற்பத்தியில் நாம் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறோம் என்பது புலனாகும்.

மா :

சாதகமாயிருந்த பருவநிலை, உரிய நேரத்தில் எடுக்கப்பட்ட பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள், தீவிர உழவியல் முறைகள் ஆகியன மூலம் 1979–80 ஆம் ஆண்டு ஹெக்டேருக்கு 16,000 கிலோ மா உற்பத்தி கணக்கிடப்பட்டு ஒரு நல்ல சாதனை ஏற்படுத்தப்பட்டது. மா பயிரிடும் பரப்பு வருடந்தோறும் அதிகரித்து வருகிறது. 1980–81 ஆம் ஆண்டு 47,000 ஒட்டு மாங்கன்றுகள் தோட்டக்கலைத் துறை மூலமாக விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளது.

எலுமிச்சை :

வைரஸ் நோய் தாக்கி எலுமிச்சை மரங்கள் திடீரென்று பட்டுப் போய் விடுவதைத் தடுத்திட 1980–81 ஆம் ஆண்டு, வைரஸ் நோய் தடுப்பு எலுமிச்சை கன்றுகள் உற்பத்தித் திட்டம் ரூபாய் 2.50 லட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டம் குடுமியான் மலையில் உள்ள வெப்ப மண்டல தோட்டக் கலைப் பண்ணையில் செயல்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் எலுமிச்சை கன்றுகள் வினியோகம் செய்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்னாசி :

அன்னாசிப் பழ உற்பத்தியில் 'கியூ' என்னும் ரகத்தை அறிமுகப்படுத்தியதின் மூலம் சேலம் மாவட்டம் கொல்லிமலையில் மட்டும் சுமார் 1,600 ஹெக்டேர் பரப்பில் அன்னாசி உற்பத்தி செய்யப்பட்டது. கொல்லிமலையில் உள்ள அன்னாசி நாற்றங்காலிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப் பாறையில் உள்ள அன்னாசி நாற்றங்காலிலும் இந்த ரக அன்னாசி நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வினியோகிக்கப்பட்டன. 1980–81 ஆம் ஆண்டு 3.21 லட்சம் அன்னாசிக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு வினியோகம் செய்யப்பட்டன.

முந்திரி :

தமிழகத்தில் 95,000 ஹெக்டேர் பரப்பில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 10,410 டன் முந்திரி உற்பத்தியாகிறது. முந்திரியில் அதிக மகசூல் பெற்றிடவும்,

சாகுபடி பரப்பை விரிவுபடுத்திடவும் முந்திரி அபிவிருத்தித் திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1979–80-ல் ரூபாய் 4.12 லட்சம் இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1980–81 ஆம் ஆண்டு இத்தொகை ரூ. 12 லட்சமாக உயர்த்தப்பட்டது. உயர் விளைச்சல் பெற்றிட, தொழில் நுட்பங்களை விளக்கி, கட்டுக்கோப்பு சாகுபடி முறைகளை விவசாயிகளுக்கு தெரிவிக்க 1,200 செயல் விளக்கப் பாத்திகள் இத்திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்டன.

காய்கறிகள்.

ஆண்டொன்றுக்கு 50 முதல் 60 டன் வரையிலான சான்றிதழ் பெற்ற காய்கறி விதைகள் நம் தேவையாகும். இத்தேவையில் ஒரு பகுதியை நிறைவேற்றிட மாநிலத்தில் மூன்று இடங்களில் காய்கறி விதை உற்பத்தி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1980–81-ல் தேவகோட்டை மற்றும் வல்லத்திராக்கோட்டை ஆகிய இடங்களில் மேலும் புதிதாக இரண்டு காய்கறி விதை உற்பத்தி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நகர் காய்கறி அபிவிருத்தித் திட்டம் ஒன்றும் இத்துறையால் செயல்படுத்தப் பட்டு வருகின்றது. நகர் வாழ் மக்கள் தங்கள் வீட்டுப் புறக் கடையில் காய்கறி சாகுபடி செய்வதை ஊக்குவிப்பதும், வீட்டுத் தோட்டங்கள் அமைத்திடவும், பழச் செடிகள் பயிரிட வும் தக்க தொழில் நுணுக்கங்களை நகர் வாழ் மக்களுக்கு விளக்குவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். பெருகிவரும் தேவையை உணர்ந்து சென்னை நகரில் மேலும் 20,000 வீடு களுக்கு இத்திட்டத்தை விரிவுபடுத்த கூடுதலாக மூன்று காய்கறி விதை விநியோகக் கிடங்குகள் 1980–81-ல் திறக்கப்பட்டுள்ளன.

மலர்கள்.

மலர் சாகுபடியை விரிவுபடுத்திட 1980–81 ஆம் ஆண்டு, ரூபாய் 6.07 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஒரு திட்டம் செயல் படுத்தப்பட்டது. கூடுதல் பரப்பில் சாகுபடி செய்ய முன் வருவோருக்கு, வரையறுக்கப்பட்ட பரப்பளவுக்கு 50 சத மானிய விலையில் இடு பொருட்கள் வழங்கப்பட்டன. 50 செயல் விளக்கப் பாத்திகளும் அமைக்கப்பட்டன. புதிய பூந்தோட்டம் அமைக்கவும், மலர்க் கண்காட்சி நடத்திடவும், தோட்டக்கலை சங்கங்கள் அமைத்திடவும் நிதி உதவி வழங்கப்பட்டது.

மலைப் பயிர்கள்.

ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் மலைப் பயிர்கள் முன்னேற்றத்திற்கு உதவிட மலைப் பயிர்கள் பிரிவு ஒன்று 1980–81-ல் மதுரை மாவட்டம் பண்ணைக்காட்டில் அமைக்கப்

1981 ஏப்ரல் 20]

பட்டது. இந்த நாற்றுப் பண்ணை ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், கோகோ, மிளகு பயிரிடத் தேவையான நாற்றுக்களை உற்பத்தி செய்து, தென் மாவட்ட மக்களின் தேவையை நிறைவேற்றும்.

பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மலைப் பகுதியில், தோட்டக் கலை மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டம் நீங்கலாக, மதுரை, சேலம், வடாற்காடு, திருச்சிராப்பள்ளி, பெரியார் மாவட்டங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. ஜவ்வாது மலை, கொல்லி மலை, சேர்வராயன் மலை, பச்சமலை, தாளவாடி மலை, கீழ்ப்பழனி மலைப் பகுதிகளில் இத்திட்டம் செயல்பட்டுவருகின்றது. இத்திட்டத்தின் மூலம் இடு பொருட்கள் 50 சத மானிய விலையில் விவசாயி களுக்கு வழங்கப்படுகிறது. 1980–81 ஆம் ஆண்டில் 2,787 ஹெக் டேர் பரப்பில் பலவகையான தோட்டக்கலைப் பயிர்கள் சாகு படிக்குக் கொண்டு வரப்பட்டன.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

பழங்குடியினர் துணைத் திட்டம் 1976–77 ஆம் ஆண்டி லிருந்து வட ஆற்காடு, தென் ஆற்காடு, தர்மபுரி, சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரு கின்றது. 1,500 மலை வாழ் மக்களின் குடும்பங்கள் தேர்ந் தெடுக்கப்பட்டு அவர்களது வாழ்க்கை நிலையை அறிந்து, தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியின் மூலம் அவர்கள் முன் னேற்றம் பெற்றிட விதைகள், உரங்கள், நாற்றுகள் மானிய விலையில் வழங்கப்பட்டன. தோட்டக்கலை வளர்ந்துள்ள இடங்களுக்கு இப்பழங்குடி மக்கள் சுற்றுலா சென்று வர வசதி செய்யப்பட்டது. நவீன சாகுபடி முறைகளில் பழங்குடியினருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

நீலகிரி மாவட்டம் முழுவதும் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன் பெறுகிறது. ஏற்கனவே செயல்பட்டு வரும் 9 திட்டங்களோடு, கூடுதலாக 8 புதிய திட்டங்கள் 1980–81-ல் அமுல் படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பதினேழு திட்டங்களும், இஞ்சி, காபி, டீ, ஏலம், ஜாதிக்காய், கிராம்பு, மிளகு, உருளைக்கிழங்கு, கமலா ஆரஞ்சு, முட்டைகோஸ் முதலிய பயிர்களின் மேம்பாட்டுக்காக இயங்கி வருகின்றன. இவற்றோடு, மண்வளப் பாதுகாப்பிலும் கவனம் செலுத்தப்பட்டு நீண்ட கால அடிப்படையில் திட்டங்கள் செயலில் இருந்து வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கூனூரில், பழங்களை பக்குவப்படுத்தும் நிலையம் ஆண்டுக்கு 25 டன் பழங்களை பக்குவப்படுத்தும் அளவுக்கு வலுப்படுத்தப் பட்டுள்ளது. நீலகிரி பருவ நிலை, முட்டைகோஸ் விதை உற்பத் திக்கு ஏற்றதாக இல்லை. எனவே நீலகிரி விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய 986 கிலோ செப்டம்பர் ரக முட்டை கோஸ் விதைகள் காஷ்மீரில் உற்பத்தி செய்யப்பட்டது.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை மாவட்டங்கள் இத் திட்டத்தினால் பலனடைந்து வருகின்றன. சுமார் 800 ஹெக் டேர் நிலப்பரப்பு மித வெப்ப பழங்கள் மற்றும் வாசனைப் பயிர்த் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. மலை வாழ் சாகுபடி செய்யப்பட்டிருந்த இடங்களில் கமலா ஆரஞ்சு தற்போது சாகுபடிக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் ஆண்டு தோறும், 75 ஹெக்டேர் நிலப்பரப்பிற்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்படுகிறது. 20,000 கமலா ஆரஞ்சு நாற்றுகள், மங்களங்கொம்பில் உள்ள அரசு நாற்றங்காலிலிருந்து விவசாயிகளுக்கு உற்பத்தி செய்து வழங்கப்பட்டுள்ளது கர்நாடக மாநிலத்திலிருந்து மொட்டுக் கட்டிய கமலா ஆரஞ்சு நாற்றுகள் வரவழைக்கப்பட்டு, நீலகிரி மற்றும் கீழ்பழனி மலையில் விவசாயி களுக்கு வினியோகம் செய்யப்பட்டது.

வறட்சிப் பகுதி மீட்புத் திட்டம்.

தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களில் இத் திட்டம் செயல்படுகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் 16 ஹெக்டேர் பரப்பில் நேமம் என்னும் இடத்தில் ஒரு பழத்தோட்டமும், தர்மபுரி மாவட்டத்தில் ஜீனூர் என்னுமிடத்தில் 15 ஹெக்டேர் நிலப்பரப் பில் ஒரு பழத் தோட்டமும், அமைக்கப்பட்டுள்ளது. இப் பழப் பண்ணைகள் இவ்விரு மாவட்டங்களின் புதிய திட்டங்களாகும்.

மலர்க் கண்காட்சி.

உதகமண்டலம், அரசு தாவரப் பூங்காவில் மலர் கண்காட்சி யும், கூனூரில் பழக் கண்காட்சியும், வேளாண்மைத் தோட்டக்கலை சங்கங்கள் மூலமாக இதுவரை நடை பெற்று வந்தது. இவற்றை தோட்டக்கலைத் துறை ஏற்று நடத்தி ரூபாய் 1.72 லட்சம் வருமானம் ஈட்டியது.

பயிற்சி மற்றும் பார்வையிடுதல் திட்டம்.

பெரியார், வைகை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல் படுத்தப்படும் இத்திட்டம், கொடைக்கானல், வட்டத்தில் தோட் டக்கலைத் துறை மூலமாக நடைபெற்று வருகிறது. வேளாண் மைத்துறை, தோட்டக்கலைத் துறை திட்டங்கள் அனைத்தும் இத்திட்டத்தின் வழியாக செயல்படுத்தப்படுகிறது.

புதிய ரகங்கள் :

சாதாரண பீச் ரகத்தில் மரத்திற்கு 5 முதல் 8 கிலோ மகசூல் கிடைக்கும். இத்துறையின் மூலமாக புதிதாக வெளியிடப்பட்ட ''பிளாரிடாசன்'' என்ற உயர் விளைச்சல் ரகம் மரம் ஒன்றுக்கு 16 கிலோ மகசூல் கொடுக்க வல்லது.

ஒரு பலா மரத்தில் சாதாரணமாக 14–18 பழங்கள் மட்டுமே கிடைக்கும். ஆனால் இத் துறையால் புதிதாக வெளியிடப்பட்டுள்ள ''பர்லியார் 1'' என்ற தேர்வு ரகத்திலிருந்து 27 பழங்கள் கிடைக்கும். தமிழ்நாடு முழுவதும் பயிரிட ஏற்ற இந்த ''பர்லியார் 1'' பலா ரகம், மணமும், இன்சுவையும் கொண்ட பழங்களை உடையது.

மரம் நடுதல் :

''ஒரு குழந்தை—ஒரு மரம்'' என்ற முழக்கத்துடன் தமிழகம் எங்கும் பள்ளிக் குழந்தைகளை இத்திட்டத்தில் ஈடுபடுத்தி பழ மரங்கள், தீவனம் அல்லது எரிபொருளாகப் பயன்படும் மரங்கள் நடப்பட்டன. 1980–81 ஆம் ஆண்டில் சுமார் 45 இலட்சம் மர நாற்றுக்கள் நடப்பட்டுள்ளன.

1981-82 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள் :

மணமும் சுவையும் நிறைந்த ''பர்லியார் 1'' பலா வகையும், அதிக மகசூல் ஈந்திடும் ''பிளாரிடாசன் பீச்சும்'' அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படும்.

சென்னை நகரில் வீட்டுக் காய்கறித் தோட்டத்தினை விரிவுபடுத்தி காய்கறி சாகுபடியினை உயர்த்திட வட சென்னையில் தோட்டக்கலைத் துறை இடு பொருள் விநியோகக் கிடங்குகள் திறந்திட ரூ. 3.42 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

சென்னை மாநகரில் செயல் பட்டு வரும் வீட்டுக் காய்கறித் தோட்டத் திட்டத்தினைப் போன்று மதுரை மாநகரில் ரூ. 3.52 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் ஒரு திட்டம் செயல் படுத்தப்படும்.

நீலகிரி மாவட்டம் நீங்கலான மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் இராமநாதபுரம், கோயம்புத்தூர், தர்மபுரி மாவட்ட மலைப்பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்படும். இதற்கென ரூ. 3.44 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் விதைகள், நாற்றுகள், பழக்கன்றுகள், உரங்கள், பயிர்பாதுகாப்பு மருந்துகள் ஆகியன சாகுபடியாளர்களுக்கு 50 சத மானிய விலையில் வழங்கப்படும்.

மத்திய தோட்டக்கலை பயிற்சிமையம் ஒன்றினை குடுமியான் மலையில் தொடங்கவும், ஆறு உழவர் பயிற்சி மையங்களில் தோட்டக்கலைத் துறை அலுவலர்களை நியமித்து தோட்டக் கலை பற்றிய சிறப்புப் பயிற்சிகளை விவசாயிகளுக்கு மேற் கொள்ளவும், திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கென ரூபாய் 3.95 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

சென்னையிலுள்ள மத்திய பாலிடெக்னிக் வழங்கி வந்த தோட்டக்கலை டிப்ளோமா மற்றும் சான்றிதழ்கள் பயிற்சிகள் தோட்டக்கலைத் துறையினால் மேற் கொள்ள உத்தேசிக்கப்பட் டுள்ளது.

தமிழகத்தில் மலைப் பயிர்கள் அபிவிருத்திக்கென மதுரை மாவட்டம் பண்ணைக்காட்டில் அமைக்கப்பட்ட மலைப் பயிர்கள் நாற்றங்கால்கள் மையம் வலுப்படுத்தப்படும். இந்த மலைப் பயிர்கள் பிரிவு இராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், பெரியார், சேலம் மாவட்டங்களில் ரூபாய் 7.21 லட்சம் செலவில் விரிவு படுத்தப்படும்.

பெரியார் மாவட்டத்தில் ஒரு புதிய அரசு பழப்பண்ணை ரூபாய் 6.68 லட்சம் செலவில் ஆரம்பிக்கப்படும். இம் மாவட்டத் தின் தோட்டக்கலைப் பயிர்கள் நாற்றுகளின் தேவையை இப் பழப்பண்ணை நிறைவேற்றிடும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூர் வட்டத்தில் மிகப் பெரும் பழப் பண்ணை ஒன்று ரூபாய் 3.50 லட்சம் செலவில் நிறுவப்படும்.

தற்பொழுதுள்ள மரவள்ளிப் பெருக்கம் மற்றும் விரிவுத் திட்டம் மேலும் வலுப்படுத்தப்படும்.

மஞ்சள், வெற்றிலை, மல்லிகை, அபிவிருத்திக்கு 1981-82-ல் புதிய வழிமுறைகள் கண்டறியப்படும்.

உலக வங்கி நிதியுதவி பெற முந்திரி அபிவிருத்திக்கென ரூபாய் 13.75 கோடி அளவிலான மூலத் திட்டம் ஒன்று தயாரிக்கப் படும்.

விதைச் சான்றளிப்புத் துறை :

விதைச் சான்றளிப்புத் துறை 24-10-79 முதல் கோயம் புத்தூரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இத் துறை ஆரம்பமானதிலிருந்து விதைச் சான்றளிப்புப் பணிகளின் தரத்தையும் அளவையும் உயர்த்த எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY சட்டமன்றம் வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 ஏப்ரல் 20]

1980-81 ஆம் ஆண்டில், அதிகப் பணியாளர்கள் நியமிக்கப் பட்டு விதைச் சான்றிதழ் இயக்ககம் பலப்படுத்தப்பட்டது. சான்றளிப்புப் பெற்ற விதைகளைத் தயாரிக்க நல்ல வாய்ப்புகள் பெற்றுள்ள தென் மாவட்டங்களில் சான்றளிப்பின் கீழ் உள்ள பரப்பளவை அதிகப்படுத்த, பலப்படுத்தப்பட்ட இந்த சான்றிதழ் இயக்ககம் மிகவும் உதவும் என எதிர் பார்க்கப்படுகிறது. வட ஆற்காடு, செங்கல்பட்டு மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களைத் தவிர மற்ற பகுதிகளில் விதைச் சான்றளிப்பைப் பொறுத்தவரை பருவ நிலை சாதாரணமாகவே இந்த ஆண்டு இருந்தது. பாதிக்கப்பட்டமேற் கூறிய மாவட்டங்களில் நெல் குறைவாக விதைக்கப்பட்டது நெல் விதைப் பண்ணைகளில் ஏற்பட்ட குறைவு பருத்தி போன்ற மற்ற பயிர்களில் அதிகரிக்கப்பட்டு ஆண்டின் மொத்தக் குறியீடு அடையப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் சான்றளிக்கப்பட்ட விதைகளின் அளவான 8246 டன்களைவிட இந்த ஆண்டு 20 சதவிகிதம் கூடுதல் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்துறை சட்டரீதியான பணியாகிய விதைச் சான்றளிப்பைத் தவிர கீழ்க்கண்ட பணிகளிலும் தன் கவனத்தைச் செலுத்தும்:—

(1) பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், மற்றும் காய்கறிப் பயிர்களின் விதைகளை அதிக அளவில் சான்றளிப்பு அளிக்க வாய்ப்புகளை ஆராய்தல்.

(2) புதிய பகுதிகளில் சான்றளிப்புப் பெற்ற விதைகளை உற்பத்தி செய்தல்.

(3) சான்றளிப்புப் பெற்ற விதைகள் உற்பத்தி செய்யும் தொழில் நுணுக்கங்களை விதை உற்பத்தியாளர்களுக்கு தெரிவித்தல்.

இம்மூன்று நிலைகளிலும், இத்துறை வெற்றியடைந்துள்ளது. பயறு வகைகள் மற்றும் காய்கறிப் பயிர்களில் சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்வதில் மேலும் ஊக்கம் காணப்படுகிறது.

அரசு விதைப் பண்ணைகளில் மட்டுமே சான்றளிப்புப் பெற்ற விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு வந்த தருமபுரி போன்ற மாவட்டங்களில் விதை உற்பத்தி கூடுதலாகி உள்ளது. சேலம், இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் பருத்தியிலும், மதுரை போன்ற மாவட்டங்களில் சிறு தானியப் பயிர்களிலும் சான்றளிப்பு செய்யப்படும் பரப்பு அதிகரித்துள்ளது.

வேளாண்மைத் துறையில் விதை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு சான்றளிப்புப் பெற்ற விதை உற்பத்தியில் தொழில் நுட்ப நுணுக்கங்களையும் பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது

அவினாசிவட்ட தனியார் விதை உற்பத்தியாளர்களுக்கு பருத்தி மற்றும் சிறுதானிய விதை உற்பத்தியில் பயிற்சி அளிக்கப்பட்டது.

துணை வேளாண்மை அலுவலர்கள் பயன்படுத்துவதற்கு விதைச் சான்றளிப்பு முறைகள் மற்றும் விதிகளைப்பற்றிய கையேடு ஒன்று தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டன. புதிய பயிர் வகைகளை சான்றளிப்பின் கீழ் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப் படும். உருளைக் கிழங்கு மற்றும் மலைப்பிரதேச காய்கறி விதைகளைச் சான்றளிக்க முன்னோடியான நடவடிக்கை எடுக்கப் படும்.

விதைச் சான்றளிப்பின் கீழ் உள்ள பரப்பை 12,800 ஹெக் டேரிலிருந்து 14,000 ஹெக்டேராக உயர்த்தத் திட்டமிடப் பட்டுள்ளது. இதன் மூலம் பருத்தி, பயறு வகைகள் மற்றும் காய் கறி பயிர்களில் அதிக பரப்பு சான்றளிக்கப்படும்.

வேளாண்மை விளை பொருள் விற்பனைத்துறை

1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளை பொருள் அங்காடி சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட வேளாண்மை விளை பொருள் விற்பனைத் துறை, வேளாண்மை உற்பத்தியாளர்கள் தங்கள் விளைபொருள்களை ஆதாயமான விலையில் விற்பனை செய்வதற்கு விற்பனைக் குழுக்கள் மூலம் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறது. விவசாயிகளுக்கும் வணிகர்களுக்கும் உபயோகமாக இருந்துள்ளமைதன ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் நிரு பித்துள்ளன. துணை விற்பனை கூடங்கள் உட்பட இவ்விற் பனைக் கூடங்களின் எண்ணிக்கை 1980–81 ஆம் ஆண்டில் 140 லிருந்து 245 ஆக அதிகரித்துள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் பழங்குடியினர் வாழுமிடங்களில் ஐந்து புதிய விற்பனைக் கூடங்களை வட ஆற்காடு மாவட்டம் ஜமுனாமந்தூர், ஆத்தனூர், புதூர்நாடு ஆகிய இடங்களிலும் சேலம் மாவட்டம் சோழக்காடு கருமன்துறையிலும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற் கென விற்பனைக் குழுக்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் அரசினால் உதவித்தொகை வழங்கப்படும். கடின உழைப்பின் காரணமாக பெருவாரியான ஒழுங்குமுறை கூடங்கள் தற்பொழுது நிலங் களையும், கட்டிடம் மற்றும் இதர வசதிகளையும் பெற்றுள்ளன. 25 ஒழுங்குமுறைக் கூடங்களின் மேம்பாட்டிற்கென 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 37.50 இலட்சம் மத்திய அரசினால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது நல்ல ஊக்கத்தை அளித்துள்ளது. இதில் முதல் தவணையாக ரூபாய் 25 இலட்சம் சம்பந்தப்பட்ட விற்பனைக் கூடங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவைகள் விற்பனை கூடங்களின் முன்னேற்றத்திற்கென உபயோகப்படுத்தப் பட்டுள்ளது. 1980–81-ல் இரண்டாம் தவணையாக ரூ. 12.50 இலட்சம் கேட்கப்பட்டுள்ளது. 1980–81 ஆம் ஆண்டில் மத்திய அரசு மேலும் ரூ. 10.50 இலட்சத்தை ஒன்பது விற்பனை கூடங்

களின் மேம்பாட்டிற்கென அனுமதித்துள்ளது. 1980–81-ல் முதல் தவணையாக ரூ. 7.50 இலட்சத்தை வழங்கியுள்ளது. பாக்கியுள்ள ரூ. 3 இலட்சத்தை 1981–82ல் வழங்கவிருக்கிறது.

தேசியக் கிராமக் கிடங்குகள் திட்டம் :

விவசாயிகள் எளிமையான முறையினால் தங்கள் பொருட்களை சேமித்து வைப்பதற்காக கிராமப் புறங்களில் கிடங்குகள் கட்ட மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது விவசாயிகள் தங்கள் பொருட்கள்மீது வங்கிகள் மூலம் கடன் பெறுவதற்கு வழிவகுப்பதோடு குறைந்த விலையில் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் நிலையையும் தவிர்க்கிறது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவில் மத்திய அரசு 25 சதவிகித தொகை மானியமாகவும், 25 சதவிகிதத்தை மாநில அரசு மானியமாகவும், மீதமுள்ள 50 சதவிகிதத் தொகையை வங்கிகளிடமிருந்து கடனாகவும் பெறப்படும். இத்திட்டத்தின் கீழ் ரூ. 337.38 இலட்சம் செலவில் 75 கிராமப்புற சேமிப்பு கிடங்குகள் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

உலக வங்கி உதவி :

இம்மாநிலத்திலுள்ள ஒழுகு முறை விற்பனைக் கூடங்களை மேம்படுத்த உலக வங்கி மூலம் ரூ. 102.11 கோடி நிதி உதவி பெறுவதற்காக ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மை விளை பொருள் அங்காடிகள் சட்டம் :

கடந்த இருபது ஆண்டுகளாக இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும்பொழுது ஏற்பட்ட சில குறைபாடுகளை களையும் பொருட்டும் விற்பனைக் குழுக்கள் இயக்கத்தின்மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்தவும், ஒரு சட்ட முன் வடிவு தயாரிக்கப்பட்டுள்ளது. விரைவில் இது சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

வணிகமுறைத் தரம் பிரிக்கும் திட்டம் :

விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயமானவிலை கிடைக்கச் செய்யவும், தரமான பொருட்களை நுகர்வோர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவில் அளிப்பதற்கும், விவசாயிகள் தரம் பிரிக்கும் திட்டத்தின் பயனையும், சிறந்த விற்பனை முறைகளையும் அறிந்து கொள்ள உதவும் இத்திட்டம் 1974-ல் கொண்டு வரப்பட்டது.

கீழ்காணும் 50 இடங்களில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது :

மாவட்டம்.	மையங்களின் எண்ணிக்கை.
திருச்சி	3
மதுரை	5
கோயம்புத்தூர்	5
வட ஆற்காடு	7
தென் ஆற்காடு	20
சேலம்	7
திருநெல்வேலி	1
செங்கல்பட்டு	2
மொத்தம் ..	50

தற்போது இத்திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட வேளாண்மை விற்பனைக் கூடங்களுக்கு வரும் பொருட்களை தரம் பிரித்து, அவைகளுக்கு வணிகமுறை தரம் பிரிப்பின்கீழ் அனுசரிக்கப் பட்டுவரும் விதிமுறைப்படி தரம் வழங்கப்படுகிறது.

கீழ்க்கண்ட இடங்களில் 25 வணிகமுறைத் தரம் பிரிக்கும் மையங்களை ஏற்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது :—

மாவட்டத்தின் பெயர்.	வணிகத் தரம் பிரிக்கும் மையங்களின் பெயர்.
1. செங்கல்பட்டு	(1) உத்திர மேரூர் (2) செங்குன்றம் (3) பொன்னேரி
2. வட ஆற்காடு	(1) வேட்டவலம் (2) காவேரிப்பாக்கம் (3) செய்யாறு
3. தர்மபுரி	(1) தர்மபுரி (2) ஊத்தங்கரை (3) அரூர்

மாவட்டத்தின் பெயர்.	வணிகத் தரம் பிரிக்கும் மையங்களின் பெயர்
4. கோயம்புத்தூர் ..	(1) சத்தியமங்கலம் (2) சிவகிரி (3) உடுமலைப்பேட்டை
5. தென் ஆற்காடு ..	(1) அவலூர் பேட்டை (2) சங்கராபுரம் (3) மணலூர் பேட்டை.
6. தஞ்சாவூர்	பாபநாசம்
7. திருச்சிராப்பள்ளி ..	(1) மணச்சநல்லூர் (2) திருச்சிராப்பள்ளி
8. மதுரை	நத்தம்
9. இராமநாதபுரம் ..	இராமநாதபுரம்
10. புதுக்கோட்டை ..	(1) அறந்தாங்கி (2) கந்தர்வகோட்டை (இப்போது தேனிக்கு மாற்றப்பட்டுள்ளது)
11. திருநெல்வேலி ..	(1) விளாத்திகுளம் (2) கோயில்பட்டி (3) கடம்பூர்

நெய் மற்றும் எண்ணெய் தரம் பிரிப்பு ஆய்வுக் கூடங்கள் :

உணவுப் பொருட்களில் கலப்படத்தைத் தடுக்கவும் பொது மக்களுக்குத் தரமான கலப்படமற்ற சுத்தமான பொருட்கள் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இத்திட்டம் செயல் படுகிறது. இந்த ஆய்வு, இவ்விலாகா அலுவலர்களால் செய்யப் பட்டு இதற்காகச் சிறிதளவு கட்டணம், அங்கீகாரம் பெற்ற உற் பத்தியாளர்களிடம் வசூலிக்கப்படுகிறது. இத்திட்டம், திட்டம் மற்றும் திட்டத்தில் சேரா வேலையின்கீழ் கீழ்கண்ட வகையில் செயல்படுகிறது.

இவ்வகையின்கீழ் 15 மாநில அக்மார்க் ஆய்வுக் கூடங்கள் பணிசெய்யும் குறிக்கோளுடன் செயல்பட்டு வருகின்றன. 1980–81 ஆம் ஆண்டில் புதிதாக 95 தரம் பிரிப்பு வணிகர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

1979–80 ஆம் ஆண்டில் திண்டுக்கல், காங்கேயம், கும்ப கோணம், தூத்துக்குடி மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் ஐந்து பரிசோதனை கூடங்களுக்கும் மற்றும் 1980–81 ஆம் ஆண்டில்

[1981 எப்ரல் 20

தேனி, காஞ்சிபுரம், வெள்ளக்கோயில், தஞ்சாவூர், சித்தோடு, திருவண்ணாமலை மற்றும் மார்த்தாண்டம் ஆகிய இடங்களில் மேலும் 10 பரிசோதனை கூடங்களுக்கும் ரூபாய் 9.7 இலட்சம் செலவில் அனுமதி வழங்கப்பட்டது. 1981–82-ல் மேலும் 6 அக்மார்க் சோதனைக் கூடங்கள் ஈரோடு, கோயம்புத்தூர், சென்னை, மதுரை, திருப்பூர் மற்றும் காங்கேயம் ஆகிய இடங்களில் ரூ. 10 இலட்சம் செலவில் துவக்க செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

கட்டிடங்கள் கட்டுதல் :

மதுரை சோதனை கூடத்தின் கட்டிட வேலை ஜன்னல் மற்றும் வாசல்கால் அளவு வந்துள்ளது. ரூ. 1.5 இலட்சம் அளவில் திட்டங்களும் மதிப்பீடுகளும் ஈரோடு கட்டடம் கட்டுமான வேலைக்கு தீட்டப்பட்டு வருகின்றன. ஏற்கனவே இருக்கும் கீழ்க்கண்ட பரிசோதனைக் கூடங்களுக்கு 1980–81 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(1) திருப்பூர்

(2) கரூர்

(3) திருநெல்வேலி

(4) விருதுநகர்

(5) சேலம்.

பருத்தி தரம் பிரிக்கும் நிலையம் :

இத்திட்டத்தின் நோக்கம் என்னவென்றால் உற்பத்தியாளர்கள் தரமான பருத்தியை உற்பத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் கூட்டு நிலையங்களிலும் உற்பத்தி செய்யப்படும் இடங்களிலும் பருத்தியின் தரத்தைப் பிரிப்பதாகும்.

தற்பொழுது உள்ள 10 பருத்தி தரம் பிரிக்கும் நிலையங்களில் 7 நிலையங்கள் மத்திய திட்டத்தின் கீழும் ஏனைய மூன்று நிலையங்கள் தேனி, திருப்பூர், மற்றும் ராசபாளையம் ஆகிய மூன்று இடங்களிலும் செயல்பட்டு வருகின்றன.

வர்த்தக தரம் பிரிப்பதற்கு பயிற்சி நிலையங்கள் நிறுவுதல் :—

வேளாண்மை உதவியாளர்களுக்கு வேளாண்மை பொருட்களை அக்மார்க் முறையிலும் வணிக முறையிலும் தரம் பிரிப்பது பற்றி பயிற்சி அளிக்க இந்தப் பயிற்சி நிலையம் 1–7–1974-ல் துவக்கப்பட்டது. விற்பனைக் கூடங்களுக்கு வரும் பொருட்களைத் தரம் பிரிக்கவும், விவசாயிகளுக்குத் தரம் பிரிப்பது பற்றிய நுணுக்கங்களைப் போதிக்கவும் இப்பயிற்சி வழி வகை செய்கிறது. இத்திட்டத்தின் குறியீட்டின்படி ஆண்டொன்றுக்கு 60 பணியாளர்கள் பயிற்சி பெற வேண்டும். 1980–81 ஆம்

1981 எப்ரல் 20]

ஆண்டில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் பணியாற்றும் மேற் பார்வையாளர்கள் மற்றும் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கும் இப்பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது

கரும்பு சாலை அபிவிருத்தி திட்டம்

சர்க்கரை ஆலைப் பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தலும் ஏற்கனவே உள்ள சாலைகளை சீர்திருத்தம் செய்வதுமே கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டம் கரும்பை உடனடியாக ஏற்றி வருவதற்கும், சர்க்கரை ஆலைகள் முழு அரவைத் திறனை அடைவதற்கும் அதனால் சர்க்கரை கட்டுமானத்தை அதிகப் படுத்துவதற்கும் உதவுகிறது. விளை நிலங்களிலிருந்து கரும்பை துரிதமாக ஆலைக்கு அனுப்புவதால் கரும்பு காயாமலும் எடை குறையாமலும் இருக்க உதவுகிறது.

கரும்பு செஸ் நிதியிலிருந்து, அரசாங்கம் ஒவ்வொரு ஆண்டும் கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் செலவு செய்யப்பட்ட தொகை பின் வருமாறு ;—

வருடம் (1)		ரூ. லட்சத்தில் (2)
1978—79	..	109.92
1979—80	..	150.00
1980—81	..	180.41

1978—79, 1979—80 மற்றும் 1980—81 ஆண்டுகளில் இத் திட்டத்தால் அடையப் பெற்ற சாதனைகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

வரிசை எண்ணும், வேலை விபரமும். (1)	சாதனை. 1978-1979 (2)	79-80 (3)	1980-81 (4)
1. சாலை அமைப்பு (கி.மீ.)	71.240	54.40	80.78
2. சரளைக்கல் பரப்புதல் (கி.மீ.)	78.395	59.57	70.14
3. தார் போடுதல் (கி.மீ.)	58.065	66.17	67.10
4. பாலங்கள் (எண்களில்)	9	6	4
5. குறுக்கு வடிகால்கள் (எண்களில்).	128	184	152
6. சிறு பாலங்கள் (எண்களில்) :	5	..	6

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1980-81 ஆம் ஆண்டில் மொத்தம் 13 கரும்புசாலைகள் ரூ. 204.47 இலட்சம் செலவில் மேற் கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1980-81 முதல் 1984-85 வரையிலான காலத்தில் கரும்பு சாலைகளை ரூ. 13 கோடி செலவில் அமைக்க ஒரு அடிப்படைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழக உதவியுடன் செயல்படுத்தப்படும் சிறு பாசனமல்லாத திட்டங்கள்.

விவசாய மறுநிதி மற்றும் வளர்ச்சிக் கழக உதவியுடன், சிறு பாசனமல்லாத தோட்டப் பயிர்களான காப்பி, தேயிலை, ரப்பர்; கோக்கோ, கிராம்பு, தென்னை, மா மற்றும் திராட்சை முதலிய வற்றைச் சாகுபடி செய்வதற்கான திட்டங்களும், மற்றும் பல நோக்குத் திட்டங்களான பால் பண்ணை, ஆடு வளர்ப்பு கோழி வளர்ப்பு மற்றும் கட்டை வண்டிகள் வழங்குதல் போன்ற திட்டங் களும் தீட்டப்பட்டுள்ளன. விவசாயிகள் அதிக வருமானம் பெறும் பொருட்டு தோட்டப் பயிர்கள் சாகுபடிக்கான திட்டங் களும், விவசாய வேலைகள் இல்லாத காலங்களில் பயன் பெறும் பொருட்டு பல நோக்குத் திட்டங்களும் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. நிலவள வங்கிகள் நில அடமானப்பிணை இல்லாமல் அரசின் உத்தரவாதத்தின் பேரில் மட்டும் நீண்ட காலக் கடன்களை வழங்குவதற்கு ஏதுவான வகையில் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மேற் கண்ட திருத்தங் களின் அடிப்படையின் பேரில், நிலமற்றவர்களுக்கு நில அடமானப் பிணை இல்லாமல் பல நோக்குக் காரியங்களுக்காக நில வள வங்கிகள் மூலம் நீண்ட காலக் கடன்கள் வழங்க ரூ. 5 கோடிக்கு அரசின் உத்திரவாதம் வழங்கப்பட்டுள்ளது.

பல நோக்குத் திட்டங்கள் செயற் படுத்தப்பட்டதில் இது வரை 559.14 இலட்சம் ரூபாய் அளவிற்கு நீண்ட காலக் கடன் கள் வழங்கப்பட்டுள்ளன. 1980-81-ல் இது வரை 205.31 இலட்சம் ரூபாய் அளவிற்கு 11 புதிய சிறு பாசனமல்லாத திட்டங் களுக்கு விவசாய மறு நிதி மற்றும் வளர்ச்சிக் கழகம் ஒப்புதல் வழங்கியுள்ளது. தற்போது 1,672.07 இலட்ச ரூபாய் அளவில் 83 சிறு பாசனமல்லாத பல நோக்குத் திட்டங்கள் செயல் பாட்டில் இருந்து வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் 1980—81ல் 250 இலட்ச ரூபாய் அளவிற்குக் கடன் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதில் 1981 பிப்ரவரி வரை 95.32 இலட்ச ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

செயல் பாட்டில் இருந்து வரும் திட்டங்கள் தவிர, 1460 இலட்ச ரூபாய் அளவில் 43 புதிய திட்டங்கள் தற்போது பல்வேறு நிலைகளில் தயாரிப்பில் இருந்து வருகின்றன. இத்

திட்டங்கள் அனைத்தும் 1981-82-ல் விவசாய மறு நிதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. இத்திட்டங்களின் கீழ் 1981—82-ல் 550 இலட்ச ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

கழிவு நீர் உபயோகத் திட்டம்.

நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள கழிவு நீரை உரத்திற்காகப் பயன்படுத்துவது, நகர கம்போஸ்ட் உரத் திட்டத்தின் ஓர் பகுதியாகும். இத்திட்டத்தில் வடிகால் முறையை மாற்றியமைத்தல் அல்லது வடிகால்கள் கட்டுதல், கழிவு நீரைச் சேகரித்து கழிவு நீர்ப் பண்ணையில் நீர்ப் பாசனத் திற்கு உபயோகப்படுத்தல் ஆகியவை அடங்கும். தற்போது 22 உள்ளாட்சி நிறுவனங்கள் கழிவு நீர்ப் பண்ணைகளை நடத்தி வருகின்றன.

கழிவு நீர்ப் பண்ணைகளில் புல் மற்றும் இதர பயிர்கள் பயி ராகின்றன. இப்பண்ணைகளை முறைப்படி பராமரிக்க உள். ளாட்சி நிறுவனங்களுக்கு தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கழிவு நீர்ப் பண்ணைகளில் 500 ஹெக்டர் பரப்பளவு வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் நகராட்சிகளுக்கு 1979–80 ஆம் ஆண்டு ரூ. 36.36 இலட்சம் வருமானம் கிடைத்துள்ளது.

கழிவு நீர் உபயோகத் திட்டத்தை 10 நிலையங்களில் செயல் படுத்தும் வகையில் மத்திய அரசு ரூ. 132.19 இலட்சம் செல வில் திட்டம் ஒன்றை செயல்படுத்த அனுமதி அளித்துள்ளது. அதில் 33 சதவீதமான ரூ. 43.62 இலட்சம் மூலதன செலவில் மானியத் தொகையாகும். இதில் ரூ. 41.23 இலட்சம் மத்திய அரசால் கொடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங் களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டமும், அதற்குரிய நிதியும் மத்திய அரசுத் துறை யிடமிருந்து மாநில அரசுக்குத் துறைக்கு 1979–80 ஆம் ஆண்டில் ருந்து மாற்றப்பட்டுள்ளது. மத்திய அரசு வழங்க வேண்டிய தொகையில் ஒரு பகுதி நிலுவையில் உள்ள காரணத்தினாலும், இத்தொகை 1979–80-க்கு முந்திய காலத்தை சேர்ந்ததாலும், அதை வழங்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

1978–79 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசால் அறிமுகப் படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் தலையாய குறிக்கோள் சிறு உழவர்கள், குறுநில உழவர்கள், குத்தகைக்காரர்கள், வேளாண் தொழிலாளர்கள், ஊரக கைவினைஞர்கள், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் அடங்கிய நலிந்த நிலையிலுள்ள எளியவர்களுக்கு ஆக்கபூர்வமான பயன்தரும் திட்டங்கள் வாயிலாக முழு வேலை வாய்ப்பினை நல்கவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் ஆகும்.

சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டம், சென்னை, தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் நீங்கலான அனைத்து மாவட்டங்களிலும் தெரிந்தெடுக்கப்பட்ட 167 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் தெரிந்தெடுக்கப்பட்ட 212 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்காகும் செலவினை 50:50 என்ற அடிப்படையில் மத்திய அரசும் மாநில அரசும் பகிர்ந்து வருகிறது.

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளர்கள் திட்ட அலுவலர்கள் தொடர்புடைய தொழில்நுட்ப அலுவலர்களின் உதவியுடன் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பினைத் தொடர்ந்து ஏற்பர்.

மத்திய அரசு சிறு உழவர் மேம்பாட்டு முகமைத் திட்டத்தையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தையும் ஒன்றாக இணைத்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் எல்லா வட்டாரங்களிலும் அதாவது 376 வட்டாரங்களிலும் 2–10–1980 முதல் செயலாக்க முடிவெடுத்துள்ளது. ஒவ்வொரு வட்டாரமும் இவ்வருடம் ரூ. 5 இலட்சமும் 1981–82–ல் ரூ. 6 இலட்சமும் ஒதுக்கீடு பெறும். இந்த ஒதுக்கீடு முன்னர் தனியாக செயல்படுத்தப்பட்டு வந்த சிறு பாசனத் திட்டங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் பகுதி திட்டங்களாகிய தொழில் வியாபாரம் மற்றும் பணிகள் ஊரக இளைஞர் சுய முயற்சியால் வேலை பெற பயிற்சி திட்டம் போன்ற திட்டங்களுக்கும் சேர்த்து ஆகும். எல்லா வட்டாரங்களிலும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு விட்டது.

1981 ஏப்ரல் 20]

1980–81 ஆம் ஆண்டில் வட்டாரம் ஒன்றுக்கு ரூ. 5 இலட்சம் வீதம் 376 வட்டாரங்களுக்கு மொத்த ஒதுக்கீடு ரூ. 1.880 இலட்சம் ஆகும் முந்தைய ஆண்டுத் தொகையையும் சேர்த்து பிப்ரவரி 1981 முடிய ரூபாய் 880.08 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசு திட்டத்தின் கீழ் 1981–82 ஆம் ஆண்டிற்கு வட்டாரம் ஒன்றுக்கு ரூ. 6 இலட்சம் வீதம் ரூ. 2,256 இலட்சமும் ஒதுக்கீடு செய்ய எண்ணியுள்ளது.

இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களுக்கான வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம்

வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டம் இம்மாநிலத்தில் இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல அபிவிருத்திப் பணிகள் மூலம் நீண்ட காலமாக வறட்சித் தாக்குதலுக்குட்பட்ட பகுதிகளை மேம்படுத்துவதும், இப்பகுதியிலுள்ள பொது மக்களின் முக்கியமாக ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வறட்சித் தாக்குதலினால் இவர்களுக்கு ஏற்படும் நலிவை ஓரளவு குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசும், மாநில அரசும் சமமாக பகிர்ந்து கொள்கின்றன.

மேற்கண்ட வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் ஏனைய பல தரப்பட்ட வளர்ச்சிப் பணிகளோடு தர்மபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு இதற்கான வேலைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மேலும், இம்மாவட்டத்தில் ஊத்தங்கரை தாலூகாவில் மாரம்பட்டி என்னும் இடத்தில் பாம்பாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

1980–81 ஆம் ஆண்டிற்கு ரூ. 639.965 இலட்சம் அளவில் பலதரப்பட்ட பணிகளை இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் நிறைவேற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட திட்டத்திற்கு 1981–82 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு ரூ. 720 இலட்சம் ஆகும். ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு (1980–81 முதல் 1984–85 வரை) இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 3,362.71 இலட்சத்திற்கும், தர்மபுரி மாவட்டத்திற்கும் ரூ. 2,205.79 இலட்சத்திற்கும் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

[1981 எப்ரல் 20

தமிழ்நாடு வேளாண் தொழற் கழகம்

தமிழ்நாடு வேளாண் தொழிற் கழகம், வேளாண்மை, கால் நடை பராமரிப்பு, மீன்வளம், கோழி வளர்ப்பு போன்றவை நவீன முறையில் வளர்ச்சி பெற உதவும் வகையில் அவை சார்ந்த தொழில்களையும் உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழில்களையும் ஊக்குவிக்கும் பொருட்டு 1966 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

இந்நிறுவனத்தின் தற்போதைய அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 400 இலட்சம் ஆகும். இதில் ரூ. 360 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு அரசு ரூ. 195 இலட்சமும் இந்திய அரசு ரூ. 165 இலட்சமும் செலுத்தியுள்ளன.

1980–81 ஆம் ஆண்டின் சாதனைகளும் 1981–82 ஆம் ஆண்டிற்கான குறிக்கோள்களும்—

உர விற்பனை—

பல்வேறு வகையான உரங்களை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டு, இக்கழகம் சென்னையிலுள்ள மெஸர்ஸ் சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ரிஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பலவிதமான உரங்களை விநியோகம் செய்யும் உரிமையைப் பெற்றுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் இவ் உரம் விற்பனையாளர்கள் மூலம் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், இக்கழகம் மங்களூர் பெர்டிலைசர்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட், பெங்களூர் என்ற நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் 'யூரியா' உரத்தையும் மெஸர்ஸ் இந்தியன் ஃபார்மர்ஸ் அண்டு பெர்டிலைஸர்ஸ் கோவாப்பரேடிவ் சொசைட்டி லிமிடெட் என்ற நிறுவனத்தின் உரக்கலவைகளையும் விநியோகிக்கும் உரிமையைப் பெற்றுள்ளது. 1981 பிப்ரவரி முடிய 18,163 டன் அளவுள்ள உரத்தை இக்கழகம் விநியோகம் செய்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டிற்கு 44,000 டன் அளவுள்ள உரத்தை விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

டிராக்டர்கள், பவர்டில்லர்கள், மேலும் உதிரிபாகங்கள் வீற்பனை.

இக்கழகம் விவசாயிகளுக்குத் தேவையான நல்ல உதிரி பாகங்களையும், டயர் மற்றும் டியூப்களையும், மின்கலங்களையும்,

தேவையான நேரத்தில், நியாயமான விலையில் சீராக, தனது விற்பனை நிலையங்கள் மூலம் விநியோகம் செய்து வருகின்றது. தற்பொழுது இக்கழகம் நமது மாநிலத்தில் ஒன்பது விற்பனை நிலையங்களும் பாண்டிச்சேரியில் ஒன்றுமாக மொத்தம் பத்து விற்பனை நிலையங்களைக் கொண்டுள்ளது. விவசாயிகளுக்கு தனது விற்பனை நிலையங்கள் மூலம் இப்பொருட்கள் நியாய மான விலையில் கிடைக்கும் பொருட்டு, இக்கழகம் உதிரிபாகங் கள், டயர் மற்றும் டியூப், மின்கலங்கள் ஆகியவற்றை தயாரிப்ப தில் புகழ்பெற்ற மற்றும் தரமான உற்பத்தியாளர்களிடமிருந்து விநியோக உரிமையைப் பெற்றுள்ளது.

இக்கழகம் 1979–80 ஆம் ஆண்டில் 44 டிராக்டர்களையும் 94 பவர்டில்லர்களையும் விற்பனை செய்துள்ளது. பிப்ரவரி 1981 முடிய 31 டிராக்டர்களையும் 69 பவர்டில்லர்களையும் விற்பனை செய்துள்ளது. 1981–82 ஆம் ஆண்டின் விற்பனைக் குறியீடாக 95 டிராக்டர்களும், 185 பவர் டில்லர்களும் நிர்ண யிக்கப்பட்டுள்ளன.

மீன்பிடி வலைத் தயாரிப்புத் திட்டம்.

நைலான் நூலினாலும், பாலிதின் நூலாலும் ஆண்டிற்கு 60 டன் அளவு மீன்பிடி வலைகளைத் தயாரிக்கும் நவீனத் தொழிற் சாலையை இக்கழகம் மீன்பிடி வலைகளைப் பின்னுவதற்காக கிண்டியில் அமைந்துள்ளது. இத்தொழிற்சாலை 1976 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் உற்பத்தியை துவக்கியது.

இந்த மீன்பிடி வலைத் தொழிற்சாலையின் 1979–80 ஆம் ஆண்டின் விற்பனை ரூ. 18.55 இலட்சம் ஆகும். 1981 பிப்ரவரி முடிய ரூ. 17.77 இலட்சத்திற்கு இவ் மீன்பிடி வலைகள் விற்பனை யாகியுள்ளன. 1981–82-க்கு ரூ. 26.40 இலட்சம் விற்பனைக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1981 பிப்ரவரி முடிய 18.82 டன் அளவுள்ள மீன்பிடி வகைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் 26 டன் அளவுள்ள மீன்பிடி வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலைப் புரத மாவுத் திட்டம், உடுமலைப்பேட்டை.

சிறு விவசாயிகள் தங்களது உற்பத்திக்கேற்ற விலையைப் பெறவேண்டி, கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் தேவை யான முக்கிய உணவாகிய இலைப்புரத மாவை லூசரின் என்ற புல்வகையைப் பக்குவப்படுத்துதல் மூலம் தயாரிக்கும் தொழில

கத்தை முன்னோடியாக உடுமலைப்பேட்டையில் இக்கழகம் அமைத்துள்ளது. இத்தொழிற்சாலையை ஏற்படுத்திய பிறகு விவசாயிகள் ஒரு டன் லூசரின் புல்லிற்கு ரூ. 110 விலை பெற முடிகின்றது. இத்திட்டத்தால் பிப்ரவரி 1981 முடிய 1317 டன் அளவு பக்குவப்படுத்தப்பட்டது. 1981-82 ஆம் ஆண்டில் 2,045 டன் அளவும் இவ் இலைப்புரத மாவு பக்குவப்படுத்தப் படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எண்ணெய் பிழிந்தெடுக்கும் திட்டம், போச்சம்பள்ளி.

ரூபாய் 62 இலட்சம் முதலீட்டில் போச்சம்பள்ளியில் அமைக்கப்பட்ட சூரியகாந்தி விதைகளிலிருந்து எண்ணெய் பிழிந்தெடுக்கும் தொழிற்சாலை 1978 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தனது வர்த்தக ரீதியிலான உற்பத்தியைத் துவக்கியது. தேவையான சூரியகாந்தி விதைகளைக் கொள்முதல் செய்யத் தேவையான எல்லா முயற்சிகளும் செய்த போதிலும், எண்ணெய் வித்துக்கள் கிடைக்காத காரணத்தால், ஆண்டொன்றுக்கு 12,000 டன் அளவிற்கு எண்ணெய் பிழியும் திறன் கொண்ட இத்தொழிற்சாலையை சுமார் 10 சதவீத அளவிற்கும் குறைவாகவே பயன் படுத்த முடிகின்றது. 1978–79 ஆம் ஆண்டில் டன் ஒன்றுக்கு விலையாக ரூ. 2,400 கொடுத்ததிலிருந்து போச்சம்பள்ளியில் இறக்கப்படும் எண்ணெய் வித்துக்களுக்கு இப்பொழுது விவசாயிகள் டன் ஒன்றிற்கு ரூ. 4,200 வீதம் விலையாகப் பெறுகின்றனர்.

இக்கழகத்தின் சுத்திகரிக்கப்பட்ட 'சனோலா' எண்ணெய் மிகவும் பிரசித்து பெற்றுள்ளது. வளர்ந்து வரும் நுகர்வோரின் தேவையை ஈடு செய்யும்பொருட்டு இக்கழகம் பாலிதின் பைகளில் சூரியகாந்தி எண்ணெயை நிரப்பி, விற்பனை செய்யும் பொருட்டு புதிய இயந்திரம் ஒன்றை வாங்கியுள்ளது. பாலிதின் நிரப்பப்பட்ட எண்ணெயின் விற்பனை முன்னோட்டம் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் துவக்கப்பட்டுள்ளது. கர்நாடகம் மற்றும் கேரளா முதலிய அண்டை மாநிலங்களிலும் 'சனோலா' எண்ணெயைக் கூடியவிரைவில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பூச்சிகொல்லி மருந்துகளுக்கான மூலப்பொருட்களைத் தயாரித்தல்.

மெஸர்ஸ் இந்துஸ்தான் இன்செக்டிசைட்ஸ் லிமிடெட் என்ற நிறுவனத்துடனும், ஆந்திரா, கர்நாடகம் மற்றும் கேரளா மாநிலங்களின் வேளாண் தொழில்கள் கழகங்களுடன் இக்கழகம் இணைந்து நடத்திவரும் இக்கூட்டுத் தயாரிப்பு நன்முறையில்

வளர்ந்து வருகின்றது. அமெரிக்காவிலுள்ள மெஸர்ஸ் ஸ்டாஃபர் கெமிக்கல் கம்பெனி என்ற நிறுவனத்துடன் தொழில் நுட்ப உதவிக்கான உடன்பாடு கையொப்பமாகியுள்ளது. இயந்திரங்கள் கிடைக்கக்கூடிய இடங்களை ஆராய்வதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

தாவர எண்ணெய் தொகுதி, புணக்குளம்.

இக்கழகத்தின் ரூ.90 இலட்சம் முதலீட்டில் புணக்குளம் என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலை நாள் ஒன்றிற்கு 60 டன் அளவுள்ள பிண்ணாக்கிலிருந்து எண்ணெயைக் கரைத்து எடுக்கும் திறன் கொண்டது. தொழிற்கூடத்தின் கட்டுமானப் பணிகள் மற்றும் இயந்திரங்களை நிறுவும் பணி முடியுந்தருவாயில் உள்ளது. கொதிகலனைத் தயாரித்து வழங்குவோரைத் தேர்ந்தெடுக்கும் பணிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. கரைத்து எடுக்கப்படும் எண்ணெய்க்கான விற்பனை வாய்ப்புகள் சரியாக அமையப்பெறின் இத்தொழிற்கூடம் 1981–82 ஆம் ஆண்டில் தனது உற்பத்தியைத் துவக்கும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம்.

தமிழ் நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் (என்கோஃபெட்) 1972 ஆம் ஆண்டு ஒரு மாநில கூட்டுறவு சங்கமாக அமைக்கப்பட்டது. வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்களும், மாவட்ட அளவிலான கூட்டுறவு வேளாண்மைப் பணிச் சங்கங்களும் இந்த இணையத்தைச் சார்ந்துள்ள அங்கங்களாக பணி புரிந்து வருகின்றன. இவ்விணையத்தின் முதன்மையான நோக்கங்கள் ஆவன :

(அ) விவசாயிகளுக்கு டிராக்டர்கள், ஆயில் எஞ்சின்கள், தெளிப்பான்கள் விசைக் கலப்பைகள் மற்றும் பாறை வெடிக்கும், கருவிகளை வாடகைக்கு விடுதல்.

(ஆ) விவசாய இயந்திரக் கருவிகளைப் பழுது பார்த்தல், பராமரித்தல்.

(இ) விவசாயத்திற்குத் தேவையான கருவிகள், உதிரிப் பொருட்கள், விதை, உரம், பூச்சி மருந்து ஆகியவைகளை நியாயமான விலையில் நல்ல தரமாக வழங்குதல் ஆகிய சேவைகள் புரிவது.

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 100 இலட்சம். 31—12—80 வரை ரூ. 31.80 இலட்சம் மதிப்புள்ள பங்குகள் வெளியிடப்பட்டு அதற்குரிய தொகை செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆண்டு காலத்தில் இந்த இணையம் ரூபாய் 6·78 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

தற்போதைய பணிகள்.

ஒருமுகப்படுத்தும் திட்டம் :

இத்திட்டத்தின் கீழ் தரமான டீசல் எஞ்சின் மற்றும் மின் சார மோட்டார் பம்பு செட்டுகள், அதன் உபகரணங்கள் ஆகிய வற்றைக் கட்டுப்பாடான விலையில் நிலவள வங்கி கடன்தாரர் களுக்கு இவ்விணையத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. 1980-81 ஆம் ஆண்டில் (1981 ஜனவரி முடிய) 669 டீசல் எஞ்சின் பம்பு செட்டுகளும், 154 மின்சார மோட்டார் பம்பு செட்டுகளும், ரூபாய் 25,34,624 மதிப்புள்ள 2,016 தெளிப்பான் களும் மற்றும் பிப்ரவரி 1981 வரை ரூபாய் 2,32,191 மதிப்புள்ள குழாய்கள் மற்றும் உபகரணங்களும் மலிவான விலையில் விவ சாயிகளுக்கு வழங்கப்பட்டன.

இதர வியாபார நடவடிக்கைகள் :

ரூபாய் 27,926 மதிப்புள்ள கச்சா இரும்புக் கம்பிகளை மாவட்ட சங்கங்களுக்கும், ரூபாய் 2,38,705 மதிப்புள்ள கோணிப் பைகளை மாநில விவசாய விற்பனை வாரியத்திற்கும், ரூபாய் 2,07,165 மதிப்புள்ள கைத் தெளிப்பான்களை மாவட்டச் சங்கங்களுக்கும் ரூபாய் 49,589 மதிப்புள்ள பட்டு நூல் உற்பத்தி உருளைகளை சேலம் பட்டுப் பூச்சி வளர்ப்புத் துறை இயக்கு நருக்கும் பிப்ரவரி 1981 வரை விற்பனை செய்துள்ளது. இது வரை 13,688 டீசல் எஞ்சின்களையும், மின்சார மோட்டார் பம்பு செட்டுகளையும் 8,811 தெளிப்பான்களையும் விவசாயி களுக்கு விற்பனை செய்துள்ளது.

வாடகைக்கு விடும், மற்றும் பழுதுபார்க்கும் நிலையங்கள் :

இவ்விணையத்தைச் சார்ந்துள்ள சங்கங்கள்/மையங்கள் மொத்தம் 231 டிராக்டர்களையும், 195 டிரெயிலர்களையும், 149 ஆயில் எஞ்சின்களையும், 314 விசைத் தெளிப்பான்களையும், 11 பாறை துளைக்கும் கருவிகளையும், ஒரு விசைக் கலப்பையை யும் கொண்டு விவசாயிகளுக்கு சகாய வாடகை விகிதத்தில்

1981 ஏப்ரல் 20]

பணிகளை மேற்கொண்டு வருகின்றன. சிறு விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் டிராக்டர் உழவிற்கான மானியம் இம்மையங்களின் மூலம் அளிக்கப்படுகின்றன.

இயந்திரக் கருவிகள், விவசாயப் பொருட்கள் விநியோகம் :

சிறு விவசாய மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், மற்றும் ஏனைய திட்டங்கள் மூலம் வழங்கும் மானிய உதவியுடன் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் தெளிப்பான்கள், சிறு விவசாயி உபகரணங்கள், மாட்டு வண்டிகள், மற்றும் விவசாயத் தேவைப் பொருட்கள் இவ்விணையத்தைச் சார்ந்துள்ள சங்கங்கள்/மையங்கள் மூலம் வினியோகம் செய்யப்படுகிறது.

பிப்ரவரி 1981 வரை ரூபாய் 137·30 இலட்சம் மதிப்புள்ள உபகரணங்களும், மற்ற விவசாயப் பொருட்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

உலோக தானிய சேமிப்பு குதிர்கள் வழங்குதல் :

1976 ஆம் ஆண்டு முதல் 1981 ஆம் ஆண்டு முடிய ரூ. 42 இலட்சம் தமிழ்நாடு வேளாண்மை பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையத்துக்கு உலோக தானிய சேமிப்பு குதிர்களை உற்பத்தி செய்து வழங்குவதற்காக கடனாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதிகப்படியாக உள்ள தானியங்கள், சேமித்து வைப்பதில் கெடாமல் இருக்க உலோகக் குதிர்களில் சேமித்து வைக்க இது விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும். 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் முடிய 11,554 குதிர்கள் சிறிய மற்றும் மிகச் சிறிய உழவர்களுக்கு மொத்த விலையில் முறையே 25 சதவிகிதம் மற்றும் 33⅓ சதவிகிதம் மானியத்துடன் வழங்கப்பட்டு உள்ளது.

எதிர்காலத் திட்டங்கள் :

சிறு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலை நம்பி வாழும் ஏழை எளியோருக்கு மேலும் நல்ல முறையில் உதவி புரியும் வண்ணம் தம்மைச் சார்ந்துள்ள சங்கங்கள்/மையங்களில் நிர்வாகப் பணியைச் சீரமைத்து அவைகளின் நடவடிக்கைகளை பரவலாக்க வகை செய்யப்பட்டு வருகிறது. 1981-82 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்களில் சில பின் வருமாறு :—

(அ) தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் வழங்கும் பயிர் கடன்கள் மூலம் விவசாயிகளுக்குத் தரமான, மலிவான விவசாயத் தேவைப் பொருட்களை விநியோகம் செய்ய அவ்வங்கிகளின் ஒத்துழைப்புப் பெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

(ஆ) விரைவில் விவ்சாய இடு பொருட்கள், பட்டு நூல் உருளைகள், மற்றும் பல உபகரணங்கள் ஆகியவற்றை சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மானிய உதவியுடன் வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு மையங்களின் மூலம் விநியோகம் செய்யத் திட்டமிடப் பட்டுள்ளது.

(இ) மாவட்ட சங்கங்கள், மாநில விவசாய விற்பனை வாரியம் இவைகளின் மூலம் தார்பாலின்கள் வழங்க திட்ட மிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகம்.

தமிழ்நாடு பண்ணைகள் கழகம் தரிசு நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வரும் நோக்குடன் துவக்கப்பட்டது. இக்கழகம் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பும் குடும்பங்களுக்கு பண்ணை களில் நிரந்தர வேலை வாய்ப்புக் கொடுத்து அவர்களுக்கு புனர் வாழ்வும் அளித்து வருகிறது. இதுகாறும் இக்கழகத்தின் பண்ணை களில் 1,043 குடும்பங்களுக்கு புனர் வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. சுமார் 1,500 உள்ளூர் விவசாயத் தொழிலாளர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

இக்கழகம் 1980 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதி வரை— 2,226·95 ஹெக்டேர் நிலப் பரப்பை சாகுபடிக்குக் கொண்டு வந்துள்ளது. மேலும் 919·46 ஹெக்டேர் பரப்பை சாகுபடிக்குக் கொண்டுவர செயற் குறிப்புகள் உள்ளன. இக்கழகத்தால் ஏற்கப்பட்ட நிலங்களில் தீவிர சாகுபடித் திட்டம் அமுல் செய்யப் பட்டது. இவ்வாண்டு 2,110 ஹெக்டேர் பரப்பைச் சாகுபடிக்குக் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது. 31—12—1980வரை 1,371·37 ஹெக்டேர் பரப்பில் நிலைப் பயிர்கள் உள்ளன.

சென்னை நகரின் காய்கறித் தேவையைக் கருதி காஞ்சீபுரம், மற்றும் நெய்வேலியில் அமைந்துள்ள இக்கழகத்தின் பண்ணை களில் காய்கறிகள் பயிரிடப்பட்டு நகரில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இக்கழகத்தின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏற்படும் இழப்பைத் தவிர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 1980-81-ஆம் ஆண்டில் நெய்வேலியில் தொழிலாளர் தேவையை சீர்படுத்தியதின் மூலம் அளவுக்கு அதிகமாக இருந்த 1 இலட்சம் வேலை நாட்கள் குறைக்கப்பட்டுள்ளன.

1981 ஏப்ரல் 20]

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

கல்வி :

1980-81 ஆம் ஆண்டின் சாதனைகள் :

மதுரை வளாகத்தில் இளமறிவியல் (மனையியல்) என்ற இளங்கலைப் பட்டப்படிப்பு துவங்கப்பட்டுள்ளது. அத்துடன் இளமறிவியல் (பட்டுப்புழு வளர்ப்பு) முதறிவியல் (உணவு ஊட்டம்), டாக்டர் பட்டம் (கால்நடை வினையியல்) ஆகிய பட்டப்படிப்புகளுக்கான பாடத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன. திருத்தியமைக்கப்பட்ட பாடத் திட்டங்களைக் கொண்ட வேளாண்மை, தோட்டவியல், மீன்வளவியல், கால்நடை மருத்துவ இயல், வேளாண் பொறியியல் ஆகிய பட்டப் படிப்புகளுக்கு பிளஸ் 2 மாணவர்கள் (கல்வி மற்றும் தொழிற் கல்வி) சேர்க்கப்பட்டு வருகின்றனர். கால்நடை மருத்துவ இளங்கலைப் பட்டப்படிப்பில், செயல் விளக்க அனுபவம் பெறும் பொருட்டு, மாணவர்களுக்கு ஆறுமாத பயிற்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இளங்கலை (வேளாண்மை) பட்டப்படிப்பில், மாணவர்களுக்கு கிராமியப் பயிற்சி வழங்கும் பொருட்டு, 9 மற்றும் 10 ஆம் பருவங்களில் ''கிராமிய அடிப்படைத் தத்துவம்'' பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதுபோல, இளங்கலை (தோட்டவியல்) பட்டப்படிப்பில் ''பண்ணைப் பயிற்சி'' திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாணவர்கள் ஒரு பருவத்திற்கு மலைத் தோட்டங்களில் தங்கிப் பயில வேண்டும். முதுகலைப் பட்டப்படிப்பை மேலும் வலிவாக்கும் பொருட்டு, 'ஆராய்ச்சி உதவித் திட்டம்' செயல் படுத்தப்பட்டது. அதுபோல் மூன்றாமாண்டு இளமறிவியல் (வேளாண்மை), இரண்டாமாண்டு வேளாண் பொறியியல் மாணவர்கள் (பண்ணைச் சாகுபடி) செயல் விளக்கப் பயிற்சி பெரும் பொருட்டு, ''ஊக்கத் திட்டம்'' ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக ஆசிரியர்கள் முதுகலைப் பட்டப்படிப்பு (டாக்டர் பட்டம்) பெறும் பொருட்டு, 'உள்ளீட்டு நியமன' வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

1981-82 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் :

முதறிவியல் (வேளாண் விற்பனை மற்றும் நிர்வாகம்), டாக்டர் படிப்பு (கால்நடை நோயியல், கொள்ளை நோயியல் பொது சுகாதாரம்) ஆகிய முதுகலைப் பட்டப் படிப்புகள்

தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் இளமறிவியல் (வனவளவியல்) என்ற இளங்கலைப் பட்டப் படிப்பு ஆரம்பிக்கப் படவுள்ளது. போதுமான கல்வித் தரத்தை உருவாக்கி, நிலை நிறுத்தும் பொருட்டு, சில குறிப்பிட்ட ஆசிரியர்கள், கற்பித்த லுக்கென்றே நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மட்டுமே பாடங்களை நடத்துவார்கள். சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில், முதுகலைப் பட்டப்படிப்பை மேலும் வளப்படுத்தும் பொருட்டு, உயிர் வேதியியல் துறை இன்னும் விரிவுபடுத்தப்பட் டுள்ளது. மேலும் மதுரை வளாகத்தில், வேலையிலுள்ள மற்றும் வேலையில்லாப் பட்டதாரிகளுக்குப் பயிற்சி வழங்கும் பொருட்டு, கோழி உற்பத்தி பயிற்சி நிலையம் ஒன்று நிறுவப்படும்.]

ஆராய்ச்சி

வேளாண்மை—1980–81 ஆம் ஆண்டின் சாதனைகள்.—

ஆராய்ச்சிகள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கும் பல்துறை நோக்கும், ஒருங்கிணையப் பெற்றவையாகத் தொடர்ந்து இருந்து வருகின்றன. முக்கியமாக, பயிர்த்திட்டங்களான பலபயிர்ச் சாகுபடி, தொடர் பயிர்ச் சாகுபடி, கரையோரப் பயிர்ச் சாகுபடி, பயறு மற்றும் எண்ணெய் வித்துக்களில் தீவிர ஆராய்ச்சி, நீர் நிர்வாகத்தில் செயல்முறை ஆராய்ச்சி, மானாவாரிச் சாகுபடி, குறைந்த செலவுத் தொழில் நுட்பங்கள், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு நிர்வாகம், உயிர் உரங்கள், சக்திக்கான மாற்று மூலங்கள் கண்டுபிடித்தல் ஆகியவற்றில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது.

பயிர் மேம்பாட்டின் கீழ், கோ. எச். 3 வீரிய சோளம், கோ 5 உளுந்து, 'மருதம்' தக்காளி, பி. கே. எம். 1 மா, பி. கே. எம். 1 சப்போட்டா, கோ. 1 முள்ளங்கி, கோ. 3 கீரை, 'திலகம்' மற்றும் 'புன்னகை' செம்பருத்தி ரகங்கள், வி. ஆர். ஐ. 1 முந்திரி ஆகிய பத்து ரகங்கள் வெளியிடப்பட்டன. மேலும், உயர் விளைச்சலும், பூச்சி நோய்த் தடுப்பும், வறட்சி, உவர்நிலத் தன்மை ஆகியவற்றிற்கு எதிர்ப்புத் திறனும் கொண்ட உறுதி அளிக்கக்கூடிய வளர்ப்பு ரகங்கள் பல்வேறு பயிர்களிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. டி. பி. ஐ. 591 என்ற நெல் வளர்ப்பு ரகம் உயர் விளைச்சலும், சன்னரக அரிசி கொண்டதாயும், தர்மபுரி சூழ்நிலைக்கு ஏற்றதாகவும் உள்ளது. த. நா. வே. ப. 7124, த. நா. வே. ப. (ஏடி) 98 மற்றும் ஐ. ஈ. டி. 6262 ஆகிய நெல் வளர்ப்பு ரகங்கள் பாக்டீரிய இலைக் கருகல், இலை மற்றும் துங்ரே வைரஸ் நோய்களுக்கு எதிர்ப்புத் தன்மை கொண்டவை. த. நா. வே. ப. 17005 நெல், உவர் நிலத்திலும், டி. பி. ஐ. 594 வளர்ப்பு ரகம், கார நிலத்திலும் அதிகநாள் தாக்குப் பிடிக்கும் தன்மை கொண்டனவாக உள்ளன.

1981 ஏப்ரல் 20]

நாட்டுப்புற இயல்புடைய சைட்டோ பிளாஷ்மீக் ஜனிக் ஆண் மலட்டுத் தன்மையுடைய கம்பு ரகமொன்று துருநோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்டதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. டி. ஜி. 14, மற்றும் எச். ஐ. 14 நிலக்கடலை பின்னிணைப்பு ரகங்கள் வறட்சியைத் தாங்கவல்லனவாக உள்ளன. எள்ளில் த. நா. வே. ப. 2 வளர்ப்பு ரகம், டி. எம். வி. 3 ஐ விட 34 சத வீதம் அதிக விளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

எம். சி. யூ. 7 ஐ விட அதிக விளைச்சல் தரவல்ல, ஈ. எல். எஸ் 525, ஈ. எல். எஸ். 527 மற்றும் ஆர். எப். 5—2 பருத்தி வளர்ப்பு ரகங்கள், நெல் தரிசுக்கு ஏற்றவையாக உள்ளன. ''வரலட்சுமி'' யைவிட அதிக விளைச்சல் தரவல்ல, டி. என். எச். பி. 124, டி. என். எச். பி. 37 வீரிய ரகங்கள் அனுசரணை ஆராய்ச்சியில் இருந்து வருகின்றன.

முள்ளில்லாமல் வளரும் மாற்றுவகைச் செடியொன்று புரோசோஷிஸ் ஜூலிப்பிளோரா என்ற வேலிச் செடியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது வீட்டைச் சுற்றி வேலியிடவும் விறகாகவும் உபயோகப்படுகின்றது.

வாழையில் சிவப்புப் பழத் தோலும், நடுத்தர உயரமும் குறைந்த வயதும், அதிக மறுதாம்புச் சக்தியும் உடைய ஒரு இரட்டைமய வாழை உருவாக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக வெங்காயத்தில் ஏசி. 885 என்ற வீரிய ரகம் உருவாக்கப்பட்டுள்ளது. அது, கோ. 3 ரகத்தை விட 22 சதவீத அதிக விளைச்சல் தருவதாகவும் ஹெக்டேருக்கு 19 டன் விளைதிறன் உடையதாகவும் உள்ளது. வருடத்திற்கு ஹெக்டேருக்கு 47 டன் இலைத் தீவனம் வழங்கக்கூடிய 'ஹவாயன் ஜயண்ட்' ரகத்தைச் சேர்ந்த தீவன மரம் உருவாக்கப்பட்டுள்ளது.

அங்கக மற்றும் அனங்கக ரசாயன, மண்ணைத் திருத்தும் பொருட்களின் திறன் குறித்து சோடிய மண்ணில் செய்த சோதனைகளிலிருந்து 50 டன் / ஹெக்டேர் சர்க்கரை ஆணைக் கழிவும், 40 சி. சி. / ஹெக்டேர் துத்தநாக சல்பேட்டும் கலந்த கலவை ராபியில் 74 சதவிகித அதிக விளைச்சலைத் தருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரும்புச் சத்துக் குறைவாயுள்ள நிலத்தில் 90 : 45 : 45கி.கி. ஹெக்டேர் என். பி. கே. க்கு மேல் 100 கி. கி. / ஹெக்டேர் இரும்பு சல்பேட்டும், 12.5 டன் / ஹெக்டேர் தொழு உரமும் இடப்பட்டபோது, சோளத்தில் 2153 கி. கி./ ஹெக்டேர் விளைச்சல் கிடைத்தது. அதாவது 49 சதவீகிதம் அதிக விளைச்சலாகும்.

பயிர் உற்பத்தி பற்றிய ஆய்வுகளிலிருந்து, தென்னையில் க்ரியோல்லா கோகோவை ஊடுபயிராகப் பயிரிட்டால், சிறந்த முறையில் கூடுதல் வருமானம் பெற வாய்ப்புள்ளதாக அறியப்படுகிறது. மண்ணில் ஈரக்கிடைக்கைச் சேமிப்பு பற்றிய ஆய்வுகளிலிருந்து முதல் ஊடு சாகுபடியில் சால்களைத் திறந்துவிட்டு, பிறகு நவம்பர் மாத மத்தியில் பார்களை அடைத்துவிடும் முறை மானாவாரிப் பருத்தியில் குறிப்பிடத்தக்க அளவு விளைச்சலை அதிகரிப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. பருத்தியில் 80 சதவீதம் காய் வெடிப்புள்ள சமயத்தில், ''கெமாய்டு'' என்ற ரசாயன இலை அடர்த்திக் குறைப்பானை 2.5 லிட். / ஹெக்டேர் தெளித்தால் 21.6 குவி. / ஹெக்டேர் அதிக விதை மகசூல் கிடைப்பதுடன் ஒரு வாரத்திற்கு முன்பே பயிர் முதிர்ச்சியடைந்து விடுகிறது. பூச்சிக்கொல்லி மருந்துகளை பொறுத்தவரை, நெல்லில் புகையானைக் கட்டுப்படுத்துவதில் பென்தியோகார்ப், ஐசோபென்பாஸ், எம்.ஐ.பி.சி. ஆகிய மூன்று மருந்துகளும் ஒரே மாதிரியாகவும் சிறந்த முறையிலும் செயல்படுகின்றன. மிளகாயில் மிதோமைல் 90 சதவீதமும் டபிள்யூ. பி. ஐ. 0.1 சதவீத அளவில் அதிக அழுத்தத்தில் தெளிப்பதன் மூலம், 72 மணி நேரத்தில் பச்சைபீச் அசுவினியை நூற்றுக்கு நூறு சதம் அழித்துவிட முடிந்தது. ஷினோசான் 0.1 சதவீதம் தெளிப்பதன் மூலம், நெல்லில் பழுப்புப் புள்ளி நோய் சிறந்த முறையில் கட்டுப் படுத்தப்படுகிறது. ரிடோமில், போர்டோக் கலவை, டகானில், டைடலால் ஆகிய மருந்துகள் வெற்றிலையில் அழுகல் நோயை மிகச் சிறந்த முறையில் கட்டுப்படுத்துகின்றன.

பல்வேறு குடும்பங்களுக்கு ஏற்ற வகையில், தகரச்சால் இல்லாத நிலைத்த மூடியிட்ட இயற்கை எரிவாயு சாதனங்கள் செங்கலைப் பயன்படுத்திக் கட்டப்பட்டன. உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே இந்த மாதிரிச் சாதனங்கள் உருவாக்கப்பட்டன. துண்டுகளாக நறுக்கப்பட்ட பார்தினியம், மாட்டுச் சாணம், மற்றும் பழைய கழிவு ஆகியவற்றை 1;4;1; என்ற விகிதத்தில் சேர்த்தபோது அதிக அளவு வாயு கிடைத்தது விவசாயத்திற்கும், குடும்பக் காரியங்களுக்கும் சூரிய சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு, சூரிய வெப்ப தானிய உலர்த்தி, சூரிய அடுப்பு மற்றும் காபினெட் உலர்த்தி போன்றவை உருவாக்கப்பட்டுள்ளன. பசுஞ் சாணத்திலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு புதிய கண்டுபிடிப்பு செய்யப்பட்டுள்ளது. அதாவது கோபார் சாண எரிவாயு சாதனத்தில் கார்பனை நேர்மின் முனையாகவும், துத்தநாகக் கொள் கலத்தை எதிர்மின் முனையாகவும், பசுஞ்சாணக் கழிவை பகுபொருளாகவும் பயன்படுத்தி இம் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது.

பட்டுப்புழு வளர்ப்பில், சிறந்த புழுத்தன்மை, கூட்டுப்புழுத் தன்மை, இழை நீளம் கொண்ட யூ. 5, யூ. 8 ஆகிய உறுதியான பட்டுப்புழு இனங்கள், கூட்டத் தேர்வு முறையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. 250:100:100 கி.கி./ஹெக்டேர் என்.பி.கே. இடு போது கன்வா-5, எம்.ஆர். 2. பல்லடம் நாட்டுரகம் ஆகிய முசுக்கொட்டை ரகங்கள் நிர்வாகச் சாகுபடி முறைகளுக்கு ஏற்ற தாகவும் அதிக இலைகள் தருவதாகவும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

வனவளத் துறையில், கதிரியக்க முறையில் யூகலிப்டஸ் மரத் தில் சடுதி மாற்றச் சந்ததிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மீன் வளர்ப்பு ஆராய்ச்சியில் பல்வேறு இனக் கலப்பு களையும், பல்வேறு இருப்பு அடர்த்திகளையும் வைத்துப் பரீட் சித்துப் பார்க்கும்போது, கலப்பு மீன் வளர்ப்பில், வரால் மீன் வகையை வளர்த்தால், களை மீன்களை அழித்து, நீரைச் சுத்த மாக வைத்திருக்க உதவுகிறது என அறியப்பட்டுள்ளது. மீனைப் பொறிகளின் மூலம் சிக்க வைக்கும் வலையைத் திருத்தியமைத்து, மீன்பிடிக்கும் வலையொன்றை மீன் வளத் தொழில் நுட்பத் துறை உருவாக்கியுள்ளது.

இந்த ஆண்டில், பயிர் வகைகள், கால்நடை உற்பத்தி, கிராமப் புற மேம்பாடு ஆகியவற்றில் தேசீய அளவிலும், மாநில அள விலும், 19-க்கும் அதிகமான கருத்தரங்குகள் நடத்தப் பெற் றுள்ளன. வேளாண்மை வளர்ச்சியிலும், கிராமப்புற மேம்பாட் டிலும் தற்போதுள்ள தடைகள் அவற்றைப் போக்குவதற்கான வழிமுறைகள் ஆகியன பற்றி ஆராயப்பட்டது. உயர் மகசூல் இரகங்கள் மற்றும் புதிய தொழில் நுட்ப முறைகளால் 40 முதல் 47 சதவீதம் வரை கூடுதல் வேலை வாய்ப்பு ஏற்பட் டுள்ளது என இதனால் தெரியவந்துள்ளது. கலப்புப் பயிர்ச் சாகுபடி, கலப்புப் பண்ணையம் ஆகிய முறைகள் சாகுபடியில் உள்ள சிரமங்களைக் குறைக்கவும், வருமானத்தை அதிகரிக்கவும் துணையாக உள்ளன. கத்தரி, மஞ்சள் ஆகிய வற்றில் விற்பனை விலையில், அவற்றை உற்பத்தி செய்வோருக்கு முறையே 37 சதமும் 69.18 சதமும் மட்டுமே பங்காகக் கிடைக் கிறது. ஆனால், இவற்றையே ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் போன்ற நிலையங்கள் மூலம் விற்பனை செய்தால், உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் பங்குச் சதவீதம் 42.22 சதம் முதல் 77.78 சதம் வரை கணிசமாக வேறுபடுகிறது. ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் சிறிய இடங்களில் இருந்தாலோ, நீண்ட தொலைவில் இருந்தாலோ அவ் விற்பனைக் கூடங்களுக்கு வந்து போவதில், விவசாயிகளுக்கு அவ்வளவாக உற்சாகம் இல்லை எனத் தெரிகிறது. நவீன அரிசி ஆலைகள் தங்களுக்குரிய செயல்

திறனில், 60 சதவீதம் அளவு வரையில்தான் பயன்படுத்துகின்றன. பெரிய விவசாயிகளில் 24 சத வீதத்தினர் முழு அளவிலும், சிறிய விவசாயிகளில் 53 சத வீதத்தினர் ஓரளவிலும், பரிந்துரைக்கப்படும் சாகுபடி முறைகள் பற்றி அறிந்துள்ளார்கள். செயல் முறை விளக்கம் செய்து காட்டப்படும் வயல்கள் தொலைவில் இருந்தால், அதைப் பற்றி அறிந்து கொள்வதில் விவசாயிகளுக்கு ஆர்வம் குறைந்திருக்கிறது.

கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை அறிவியல் ஆகியவற்றில் 1981–82-ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் :

கால்நடைச் சுகாதாரம் மற்றும் கால்நடை உற்பத்தி பற்றிய வட்டாரச் சிக்கல்களை ஆராய்வதற்கு முதன்மை தரப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் கால்நடை மருத்துவம், மற்றும் கால்நடைப் பராமரிப்புக்கான வட்டார ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கப்படும். வட ஆற்காடு மாவட்டத்தில் ஒன்றும், கோவை மாவட்டத்தில் ஒன்றுமாக இரு கோழி ஆராய்ச்சி நிலையங்கள் செயல்படத் தொடங்கும். கால்நடைகளைப் பாதிக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து, யோசனை கூற கால்நடை உற்பத்திப் பிரச்சினைகளுக்கான வட்டார ஆலோசனை மையம் ஒன்று உருவாக்கப்படும். பால் பண்ணை அறிவியல் துறையில் உள்ள பால் பண்ணைத் தொழில் நுட்பப் பிரிவை வலிமைப் படுத்துவதன் மூலம், பால்பண்ணை அறிவியல் ஆராய்ச்சி தீவிரப் படுத்தப்படும். கால்நடைப் பராமரிப்புத் துறை, தமிழ்நாடு பால்வள மேம்பாட்டு இணையம் ஆகியவற்றில் கால்நடை மருத்துவ நிபுணர்களுக்கு வேண்டிய பயிற்சித் தேவைகளைச் சமாளிக்க, சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் உள்ள உறைவிந்து சோதனைக்கூடம் வலிமைப்படுத்தப்படும். பொலி காளைகளின் விந்தை உறைய வைத்தல் பற்றிப் பல்வேறு கோணங்களில் ஆராய்ச்சிகள் செய்யவும், உறை விந்தைப் பெரிய அளவில், பயன்படுத்துவது தொடர்பான களப்பிரச்சினைகளை ஆராயவும் இதனால் ஆர்வம் ஏற்படும்.

விரிவாக்கக் கல்வி

1980–81-ம் ஆண்டின் சாதனைகள் :

செய்தித்தாள்களுக்கும், பத்திரிகைகளுக்கும், ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் அமைந்த சுமார் 600 பொதுக் கட்டுரைகள் அனுப்பப்பட்டுள்ளன. வேளாண்மை அறிவியலின் பல்வேறு துறைகளில், ஆறு தகவல் மடிப்பிதழ்கள்

1981 ஏப்ரல் 20]

ஐந்து புத்தகங்கள், பதினாறு சிறு புத்தகங்கள் ஆகியவை வெளியிடப்பட்டுள்ளன. 10,000 சந்தாதாரர்களைக் கொண்ட பல்கலைக் கழகத்தின் மாதத் தமிழ் இதழ் 'வளரும் வேளாண்மை,' அளவிலும், தரத்திலும் உயர்த்தப்பட்டுள்ளது. புதிய ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகளைத் தாங்கிய மாதச் செய்திமடல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. எட்டு, அஞ்சல் வழிப் பாடங்கள் நடத்தப் பெற்றன. இதில் 541 விவசாயிகள் பயன் பெற்றனர். பல்கலைக் கழகம் நிகழ்த்தும் வானொலிப் பண்ணைப் பள்ளி 1,514 விவசாயிகளையும், பிறரையும் கவர்ந்துள்ளது. பல்கலைக் கழக ஒலிப் பதிவு நிலையத்தில் 120-க்கும் அதிகமான பேச்சுக்கள் பதிவு செய்யப்பட்டு, அவை ஒலி பரப்புவதற்காக வானொலி நிலயத்துக்கு அனுப்பப்பட்டன. ''ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து பண்ணைக்கு'' என்ற திட்டத்தின் கீழ் பல்கலைக் கழகம் ஏழு மையங்களில் 3,000 குடும்பங்களை ஏற்றுச் செயல்பட்டு வருகிறது. கோவை, மதுரை, ஓசூர், ஒரத்தநாடு, ஆகிய இடங்களில் உள்ள உழவர் பயிற்சி நிலையங்கள் நவீன வேளாண்மை, மற்றும் கால்நடைப் பராமரிப்பு பற்றிப் பயிற்சி அளித்து, செயல் விளக்கங்களும் செய்துள்ளன. வேலூரில் தேசீய செயல் விளக்கத் திட்டத்தின் கீழ், நவீன பண்ணைத் தொழில் நுட்பங்கள் செயல் விளக்கம் செய்யப்பட்டன. வெளியீட்டுக்கு முந்திய 60 இரகங்கள் சோதனைக்காகப் போடப்பட்டுள்ளன. மதுரையில் ''பயிற்சி மற்றும் வருகைத் திட்டம்'' ஏற்படுத்தப்பட்டுள்ளது. அரசுக்கும், தனியார் நிறுவனங்களுக்கும் தேவைப்படும் விதைகளை வழங்குவதற்காக, பவானிசாகர் வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் இனப் பெருக்க விதை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் உள்ள விதை விற்பனை நிலையங்கள் சான்றிதழ் பெற்ற விதைகளை விவசாயிகளுக்கு விற்று வருகின்றன.

1981–82 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் :

பல்கலைக் கழகத்தின் அண்மைக்கால ஆராய்ச்சித் தகவல்களைப் பரப்புவதற்காக, தொலைக் காட்சி, விளம்பர வில்லைகள், அட்டவணைகள் ஆகியவற்றைக் கொண்ட இயங்கும் விளம்பர நிலையம் ஒன்றை அமைத்து, மாநிலம் முழுவதும் அதனைச் செயல்படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1980–81, 1981–82 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் பின்வருமாறு :—

பொருள்.	1980–81ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்).		
	திட்டம்.	திட்டத்தில் சேராதவை.	மொத்தம்
(1)	(2)	(3)	(4)
1. வேளாண்மை ..	70.00	260.00	330.00
2. கால்நடை மருத்துவம்	92.00	130.00	222.00
3. மீன்வள அறிவியல் ..	30.00	..	30.00

பொருள்.	1981–82ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (ரூபாய் இலட்சத்தில்)		
	திட்டம்.	திட்டத்தில் சேராதவை.	மொத்தம்
	(5)	(6)	(7)
1. வேளாண்மை ..	80.00	281.00	361.00
2. கால்நடை மருத்துவம்	95.53	137.00	232.53
3. மீன்வள அறிவியல் ..	35.00	..	35.00

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் மற்றும் பிற நிறுவனங்களிமிடருந்தும் இப்பல்கலைக் கழகம் தன் செயல் திட்டங்களுக்கு நிதி உதவி பெறுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS